

# அசைக்க முடியாத நம்பிக்கை

தேவனை எல்லா சமயங்களிலும், எல்லா காரியங்களிலும் நம்பும் சந்தோஷத்தைக் கண்டறியுங்கள்.

## ஜாய்ஸ் மேயர்

நியூயார்க் டைம்ஸின் சிறந்த விற்பனையாளர்.

நம்பிக்கையானது எப்போதுமே சுலபமானதாக இருக்கிறதில்லை. அநேகரைப் போன்று நீங்களும் உங்கள்தனிப்பட்டத் தேவைகள், குடும்பத் தேவைகள், பெருளாதாரக் கடமைகள் போன்றவற்றிற்கான பொறுப்புகளைக் கொண்டிருக்க கூடும். உங்கள் முன்னுரிமைகளை நீங்களே சொந்தமாகத் தீர்மானிக்கக்கூடும். உங்கள் காரியங்களை நீங்களே சமாளிப்பதில் பெருமிதம் கொள்ளலாம். அவற்றை பிறரிடம் ஒப்படைக்க மறுக்கலாம். ஏன்? ஏனென்றால், மக்கள் உங்களை கீழாக்கலாம், சுதந்திரமாக செயல்படுவது நல்லது என்று எண்ணிக் கொண்டிருக்கலாம்.

ஆனால் எவருமே அனுதின வாழ்வின் பொறுப்புகளை தனியாக சமாளிக்க இயலாது. அதனால் தான் ஒரு அன்பான, நம்பத்தக்க தேவன் இருக்கின்றார். அதற்காக நன்றி செலுத்துவோம். நாம் அவரைச் சார்ந்து இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடிய தேவன் பேரிலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அதை தழுவிக்கொள்ளும் காலம் இதுவாக இருக்கிறது.

ஜாய்ஸ் மேயர் நியூயார்க் டைம்ஸின் சிறந்த விற்பனையாளர். இவர் நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும், அவரை நம்புவதால் விளையும் அற்புதமான பலங்களை வெளிப்படுத்துகிறார். தனிப்பட்ட சொந்த அனுபவங்கள் மூலமாகவும், தேவனுடைய சத்தியத்தின் மூலமாகவும், உங்கள் சுய சார்பு என்கிற சுவற்றை உடைத்து, நீங்கள் எத்தகைய சவால்களை சந்தித்துக் கொண்டிருந்தாலும், அவற்றைக் கடந்து செல்ல உங்கள் இரட்சகரை அனுமதிக்க உதவுகிறார்.

நம்பிக்கை என்பது ஒரு கடமையல்ல, ஆனால் அது கிறிஸ்துவின் விசுவாசிகளாகிய நீங்கள் கொண்டிருக்கும் சிலாக்கியமாகும். அது வாழ்வை நிலையானதாகவும், சமாதானமானதாகவும், சந்தோஷமானதாகவும் மாற்றுகிறது. தேவனை நம்ப நீங்கள் கற்றுக் கொள்வதின் மூலம், ஆவிக்குரிய ரீதியாகவும், உறவுகளிலும், உணர்ச்சிகளிலும், பொருளாதாரத்திலும் இன்னும் அநேக காரியங்களிலும், அவருடைய சிறந்ததை உங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதிகளிலும். நீங்கள் பெற்றுக் கொள்ள உங்களை அனுமதிக்கின்றீர்கள்.

"அசைக்க முடியாத நம்பிக்கை" என்ற இந்த புத்தகமானது, தேவனை உங்கள் முழு இருதயத்தோடு நம்ப (நீதி 3:5) உங்களை உற்சாகப்படுத்தும், உதவி செய்யும். உங்கள் கடந்த கால வேதனை எதுவாயிருப்பினும், நிகழ்கால சூழ்நிலைகள் எவ்வாறாக இருப்பினும், எதிர்காலம் உறுதியற்றதாக இருந்தாலும், தேவனை முழுவதுமாக நம்பக் கற்றுக் கொள்வீர்களானால், இயேசு உங்களுக்கு அளிக்கும் சந்தோஷம் நிறைந்த வாழ்வை அனுபவிப்பீர்கள். மற்றவர் உங்களை கீழாக்கலாம்... ஆனால் தேவன் ஒரு போதும் விட்டு விட மாட்டார்.

# அசைக்க முடியாத
# நம்பிக்கை

# அசைக்க முடியாத நம்பிக்கை

தேவனை எல்லா சமயங்களிலும், எல்லாக்
காரியங்களிலும் நம்பும் சந்தோசத்தை கண்டறியுங்கள்

ஜாய்ஸ் மேயர்

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

Post Bag No. 1, Jubilee Hills, Hyderabad - 500 033

Copyright © 2017 by Joyce Meyer

Cover design by Amber Majors, author photograph by Chad Spickler.
Cover copyright © 2017 by Hachette Book Group, Inc.

Hachette Book Group supports the right to free expression and the value of copyright.
The purpose of copyright is to encourage writers and artists to produce the creative works that enrich our culture.

The scanning, uploading, and distribution of this book without permission is a theft of the author's intellectual property. If you would like permission to use material from the book (other than for review purposes), please contact permissions@hbgusa.com. Thank you for your support of the author's rights.

FaithWords
Hachette Book Group
1290 Avenue of the Americas, New York, NY 10104
faithwords.com
twitter.com/faithwords

First Edition: September 2017

FaithWords is a division of Hachette Book Group, Inc. The FaithWords name and logo are trademarks of Hachette Book Group, Inc.

The publisher is not responsible for websites (or their content) that are not owned by the publisher.
The Hachette Speakers Bureau provides a wide range of authors for speaking events.
To find out more, go to www.hachettespeakersbureau.com or call (866) 376-6591.

Unless otherwise noted, Scriptures are taken from *The Amplified Bible* (AMPC). *The Amplified Bible, Old Testament*, copyright © 1965, 1987 by The Zondervan Corporation. *The Amplified New Testament*, copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by Permission.

Scriptures noted (MSG) are taken from *The Message*: *The Prophets* by Eugene Peterson. Copyright © 2000 by Eugene H. Peterson. NavPress Publishing Group, P.O. Box 35001, Colorado Springs, CO 80935. Used by permission.

Scriptures noted (NIV) are taken from the *Holy Bible: New International Version*®. Copyright © 1973, 1978, 1984 by International Bible Society. Used by permission of Zondervan Publishing House. All rights reserved.

Scriptures noted (NKJV) are taken from the *New King James Version*.
Copyright © 1979, 1980, 1982 by Thomas Nelson, Inc., Publishers.

Scriptures noted (TLB) are taken from *The Living Bible*, Copyright © 1971. Used by permission of Tyndale House Publishers, Inc., Wheaton, Illinois 60189. All rights reserved.

Scriptures noted (NLT) are taken from the *Holy Bible*, New Living Translation,
Copyright © 1996. Used by permission of Tyndale House Publishers, Inc.,
Wheaton, Illinois 60189. All rights reserved.

Scriptures noted (GNT) are taken from the *Good News Translation—Second Edition*, Copyright © 1992, by the American Bible Society. Used by permission. All rights reserved.

Scriptures noted (CEV) are taken from the *Contemporary English Version*,
Copyright © 1995 by the American Bible Society. Used by permission.

Copyright © 2018 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Post Bag No. 1, Jubilee Hills, Hyderabad - 500 033

Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Unshakeable Trust - *Tamil (2019)*
*Find the Joy of Trusting God at All Times, in All Things*

*Printed at:*
Caxton Offset Private Limited
Hyderabad - 500 004

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | vii |
| அத்தியாயம் 1: | நம்பிக்கை என்பது என்ன? | 1 |
| அத்தியாயம் 2: | நம்பிக்கை இளைப்பாற செய்கிறது | 11 |
| அத்தியாயம் 3: | யாரை என்னால் நம்ப இயலும்? | 23 |
| அத்தியாயம் 4: | சுய சார்பின் மூடத்தனம் | 36 |
| அத்தியாயம் 5: | தேவனை நம்பி நன்மை செய் (பகுதி 1) | 48 |
| அத்தியாயம் 6: | தேவனை நம்பி நன்மை செய் (பகுதி 2) | 60 |
| அத்தியாயம் 7: | எப்பொழுதும் | 75 |
| அத்தியாயம் 8: | தேவன் நல்லவரானால் மக்கள் ஏன் வருத்தப்படுகின்றனர் ? | 89 |
| அத்தியாயம் 9: | தேவன் பாடுகளை அனுமதிக்கின்றாரா? | 102 |
| அத்தியாயம் 10: | நாம் பாடுபடுவதற்கான காரணங்கள் (பகுதி 1) | 115 |
| அத்தியாயம் 11: | நாம் பாடுபடுவதற்கான காரணங்கள் (பகுதி 2) | 128 |
| அத்தியாயம் 12: | பாடுகளின் மறுபக்கத்திலே | 141 |
| அத்தியாயம் 13: | அனுதினமும் | 154 |
| அத்தியாயம் 14: | அறியப்படாதது | 165 |
| அத்தியாயம் 15: | தேவனுடைய காத்திருக்கும் அறையிலே (பகுதி 1) | 175 |
| அத்தியாயம் 16: | தேவனுடைய காத்திருக்கும் அறையிலே (பகுதி 2) | 185 |
| அத்தியாயம் 17: | கடவுள் அமைதியாக இருக்கிறார் | 195 |
| அத்தியாயம் 18: | மாற்றம் ஏற்படும் சமயத்திலே தேவனை நம்புதல் | 206 |
| அத்தியாயம் 19: | நான் உண்மையாகவே மாற விரும்புகிறேன் | 218 |
| அத்தியாயம் 20: | மக்களை மாற்ற தேவனை நம்புதல் | 231 |
| அத்தியாயம் 21: | சந்தேகத்தை கையாளுதல் | 241 |
| அத்தியாயம் 22: | எவ்வளவு அனுபவம் உங்களுக்குண்டு? | 251 |
| அத்தியாயம் 23: | தேவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்தல் | 261 |

# முன்னுரை

தேவனை நம்புவதைப் பற்றி எழுதுவதைத் தவிர அதி முக்கியமான எந்த ஒரு கருத்தைப் பற்றியும் என்னால் யோசிக்க இயலவில்லை. இது அதிக முக்கியமானது. ஏனென்றால் நாம் தேவனை நம்பத் தெரிந்து கொள்ளும் போது அதனால் ஏற்படும் பலங்கள் எண்ணிலடங்காதது, ஆச்சரியமானது. தேவனைக் கனப்படுத்தும் மேன்மையான வழிகளில் ஒன்று அவரை நம்புவதாகும்.

இந்தப் புத்தகத்தின் தொடக்கத்திலிருந்தே, தேவன் பேரிலே கொண்டிருக்கும் நம்பிக்கையானது, நாம் அவருக்குச் செய்யும் கடனன்று, அது அவர் நமக்கு அளித்திருக்கும் சிலாக்கியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். நாம் தேவனை நம்ப அழைக்கப்பட்டிருக்கிறோம். அவ்வாறு நாம் செய்யும் போது, நாம் ஒரு சமாதானமான, சந்தோஷமான, பலனுள்ள வாழ்விற்கான கதவைத் திறக்கிறோம்.

நாம் செய்யும் அனைத்திலும், தேவன் மீதான நம்பிக்கை என்னும் ஆரோக்கியமான பகுதியை நாம் கலக்கும் போது, அது நம்மை கவலை, வருத்தம், பயம், பகுத்தறிதல் அல்லது நம்மை அழுத்தும் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு வாழும் ஒரு வாழ்வை வாழ நமக்கு உதவுகின்றது. உதாரணமாக இந்தப் புத்தகத்தை எழுத தேவனை நம்புகின்றேன். அப்படியென்றால் அவரை நம்புவதைப் பற்றி எனக்கு தெரிந்திருக்க வேண்டிய அனைத்தையும் நான் அறிந்திருக்கவில்லை. அவரின்றி இந்தப் புத்தகம் நன்றாக இருக்காது என்பதை உணர்ந்திருக்கின்றேன். எல்லா நேரங்களிலும், காரியங்களிலும் நாம் அவரைச் சார்ந்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்.

அவருடைய பிள்ளைகளின் எந்தக் காரியமும், அவர் ஈடுபடக்கூடாத படி சிறிதானதாக இருப்பதில்லை.

தனிப்பட்ட மனிதன் சுயத்தை சார்ந்தும், சுதந்திரமாக வாழும் தன்மையைக் கொண்டிருப்பதால், தேவனை எப்படி நம்பியிருப்பது என்பதைக் கற்றுக் கொள்ள கொஞ்ச காலம் அவகாசம் எடுத்துக் கொள்கிறது. நமது சில கடினமான அனுபவங்கள், மக்கள் எப்போதுமே நம்பத்தக்கவர்கள் அல்ல என்பதைக் கற்றுக் கொடுத்ததின் விளைவாகவே, நம்புவது நமக்கு கடினமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய வழிகளோ, மனிதர்களின் வழிக்கும் மேலானது, அவரின் தன்மையோ அவரால் பொய் சொல்லவோ, ஏமாற்றவோ இயலாது என்று அவரது வார்த்தை நமக்குப் போதிக்கின்றது.

இந்தப் புத்தகத்திலே எல்லைகளின்றி அவரை நம்பவும், பகுத்தறிவையும் கடந்த விசுவாசத்தை தேவன் பேரிலே கொண்டிருக்க உங்களால் இயலும் என்பதை சொல்ல விரும்புகிறேன். தேவன் பேரிலே முற்றிலுமான நம்பிக்கையே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். அது தேவனை கனப்படுத்துகின்றது என்பதற்க்காக மட்டுமல்ல, அதனால் நமக்கு ஏற்படும் பலங்கள் ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றதாக இருக்கிறது.

நாம் தேவனை நம்பும்போது, அது அவருக்கு பிரியமானதாக இருக்கின்றது. எபிரேயர் 11:6 சொல்லுகிறது "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." விசுவாசமும் நம்பிக்கையும் பிரிக்க இயலாதபடி இணைக்கப்பட்டிருக்கின்றது. விசுவாசமே, தேவனை நம் வாழ்வில் வரும் படி அழைக்கும் காரியமாக இருக்கின்றது. அது நம் வாழ்வில் அவர் பிரசன்னம் இருக்கும் படி பார்த்துக் கொள்கின்றது. அவருடன் நம்மை ஒரு வல்லமையான வழியிலே இணைக்கின்றது.

தேவனுடன் நாம் தொடர்பு கொண்டு மகிழவும், அவர் அளிக்கும் வாழ்வை நாம் பெற்றுக் கொள்வதைத் தடுக்க சாத்தான் என்ற ஒரு எதிரி இருக்கின்றான். அவன் நம்மை கவலை, பயம், பகுத்தறிதல்,

அழுத்தங்கள், சந்தேகங்கள் போன்ற அநேக காரியங்களால் நாம் தேவன் பேரிலே பற்று வைக்காமல், சுயநலமாய் வாழ வைக்கிறான்.

இந்த நிர்பந்தனைகளுக்கான ஒரே மருந்து, தேவனை முழுவதும் நம்புவதாகும், இந்தப் புத்தகத்தை வாசிக்கையிலே, உங்களுக்கான அனைத்தையும், எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா நேரத்திலும் தேவனிடம் ஒப்படைக்கும் படியன கிருபையை நீங்கள் பெற்றுக் கொள்ள ஜெபிக்கின்றேன்.

இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசிக்கையிலே கீழ்க்காணும் வேத வாக்கியத்தை உங்கள் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். (எரேமியா 17:7)

# அசைக்க முடியாத
# நம்பிக்கை

அத்தியாயம் 1

# நம்பிக்கை என்பது என்ன?

*“கவலையின் தொடக்கம் விசுவசத்தின் முடிவு மற்றும் விசுவாசத்தின் தொடக்கம் கவலையின் முடிவு”*

ஜார்ஜ் முல்லர்

நம்பிக்கைக்குரியது எதுவோ அல்லது எவரோ, ஏதாவதொரு சமயத்தில் நிரூபிக்கப்படும் பொழுது அதை நாம் நம்புகிறோம். அது நம் கவலைக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றது. எனவே நம்பிக்கை என்றால் என்ன? எப்படி நம்புவது என்பதைக் கற்றுக் கொள்வது மிக முக்கியமானதாகும். குறிப்பாக நாம் தேவனை கற்றுக் கொள்ள விரும்புகிறோம்.

நோவா வெப்ஸ்டரின் 1828 ம் ஆண்டு அகராதி, நம்பிக்கை என்ற சொல்லிற்கான அர்த்தத்தை இவ்வாறு கொடுக்கின்றது. “பற்றுறுதி, பிறரொருவரின் நேர்மை, வாய்மை, நீதி, நட்பு மற்றும் மனதை நிலைப்படுத்தியிருத்தல்.” அஅ (நீதி 29:25)

*நம்பிக்கையானது, நாம் பாரங்களினின்றும், சுமைகளின்றியும், கவலைகளின்றியும் வாழ*

நம்பிக்கையானது, நாம் பாரங்களற்ற, கவலையற்ற வாழ்வை வாழ உதவுகின்றது. ஏனென்றால், மற்றொருவர் நமக்காக அவற்றைப் பார்த்துக் கொள்வாரென்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது. நாம் எப்போதுமே ஒரு பாரமான சுமையைச் சுமந்து கொண்டிருக்கிறோம் என்று உணர்வதற்குப் பதிலாக, நம்முடைய ஆத்துமாவிலே ஒரு அற்புதமான பாரமின்மையை உணர்வோம்.

தேவன் பேரிலே நம்பிக்கை வைப்பதற்கும் அவர் பேரிலே நம் பாரங்களை வைப்பதற்கும் நாம் தீர்மானிக்க வேண்டும். சங்கீதக்காரனாகிய தாவீது அடிக்கடி தேவன் பேரிலே தன் நம்பிக்கையை வைப்பதைப் பற்றிப் பேசுகின்றார். 'வைப்பது' என்ற வார்த்தை ஒரு செயலைக் குறிக்கும் சொல்லாகும். இதை நாம் தேவனுடைய வார்த்தையிலே, நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவுறுத்தும் போது அதிகமாகப் பார்க்கின்றோம். அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்,சமாதானத்தின் பாதரட்சயைத் தரித்துக் கொள்ளுங்கள். அதே பேர் தேவன் பேரில் உங்கள் நம்பிக்கையையும் வையுங்கள் (கொலோ 3:14; எபே 4:24, எபே 6:15, நீதி 3:5)

வேதம் சொல்கிறது "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு. அவர் உன்னை ஆதரிப்பார்..." (சங்கீதம் 55:22). நான் பாரத்தை இறக்கி வைக்க விரும்புகிறேன். நாம் எப்போதும் கனமான இருதயத்தோடும், பாரமான மனதுடனும் வாழ்கின்றோம். ஆனால் தேவனோ நம்மை ஒரு சிறந்த வாழ்க்கை வாழ அழைக்கிறார். அவர் மேல் நம் நம்பிக்கையை வைக்கும் போது தான் நாம் அதை அனுபவிக்க முடியும். நோவா வெப்ஸ்டர் சொன்ன நம்பிக்கையென்பது மனதை நிலைப்படுத்துவது. அப்போஸ்தலனாகிய பவுல் கூட, அவரை விசுவாசித்தவர்கள் அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள் என்று சொல்லி இதில் உறுதிபடுத்துகிறார். (எபி 4:3)

நாம் உண்மையாலுமே தேவனை நம்புகிறோமா அல்லது நம்ப முயற்சிக்கின்றோமா என்பதைக் கண்டறியும் வழிகளில் ஒன்று, தேவனுடைய உண்மைத்தன்மையின் மேல் நம் ஆத்துமா நிலையாக இருக்கிறதா என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். நாம் தேவனை நம்புகிறோம் என்று சொல்லியும், கவலைப்படுவதின் மூலம் பாரத்தை தொடர்ந்து சுமந்து கொண்டிருப்போமென்றால் நான் தேவன் பேரிலே என் பாரத்தை வைத்து விடவில்லை. ஒருவேளை அதை நான் விரும்பலாம், அதற்காக முயன்று கொண்டிருக்கலாம், ஆனாலும் அதை இன்னும் செய்யவில்லை.

இதை விளங்கிக் கொண்டது, தேவன் பேரிலே நம்பிக்கை என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொள்ள எனக்கு உதவியது. அது வார்த்தைகளுக்கும் மேற்பட்டது. அது என்னுடைய சுமையின் பாரத்தை இறக்கிவிடுவதாகும். என்னுடைய ஆத்துமாவிற்கு (மனம், சித்தம், உணர்ச்சி) இளைப்பாறுதலை அளிக்கும் ஒரு தீர்மானத்தோடு செய்யும் செயலாகும். கற்கள் நிறைந்த ஒரு மூட்டையை நீங்கள் செல்லும் இடமெல்லாம் சுமந்து செல்கிறீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். வேலைக்குச் செல்லும் போதும், கடைக்குச் செல்லும் போதும், ஆலயத்திற்குச் செல்லும் போதும் சுமந்து செல்கின்றீர்கள். இப்போது அதை கீழே இறக்கி விடுவதாக நினைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு நன்றாக இலகுவாக உணர்வீர்கள். எல்லாம் எவ்வளவு எளிமையாக மாறி விடுகின்றது.

*உங்கள் பாரங்களை இறக்கி வைக்க நீங்கள் இன்றே தீர்மானிக்கலாம்.*

நம் பாரங்களை தேவனிடம் ஒப்படைக்காமல் அதை நம் மீது சுமந்து கொண்டு கவலைப்படுவது இப்படியாகத்தானிருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டுதானிருக்கிறோம். ஆனால் பாரத்தின் சுமையானது நம் மேல் அழுத்தம் கொடுக்கிறது. நம் வாழ்வைக் கடினமானதாக மாற்றி விடுகின்றது. தேவனை நம்புவதின் மூலம் உங்கள் பாரத்தை இறக்கி விட நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அப்படிச் செய்வதால் ஆனந்தம் அடைவீர்கள்.

தேவன் தங்களுடைய பிரச்சினைகளைப் பார்த்துக் கொள்வாரென்று அவரை நம்புவதாக சொல்லும் அனேகரை நான் பார்த்திருக்கிறேன். ஆனாலும் அவர்கள் பயத்துடனும், கவலையுடனும் தாங்கள் செய்ய வேண்டுவதென்ன என்பதை அறிய முயற்சிப்பதாகவும் கூறுகின்றனர். அவர்கள் தேவனை நம்ப வேண்டுமென்று விரும்புகின்றனர் ஆனாலும் அவரை இன்னும் நம்பவில்லை. அவர்கள் தேவனை நம்புகிறோமென்று கூறுகின்றனர், ஆனாலும் அனேக காயங்களைக் குறித்த கவலையினால் அவர்கள் பாரப்பட்டிருக்கின்றனர்.

தேவனோடுள்ள நம் உறவில் சிறப்பாக செயல்படுவதென்பது அவருடன் உண்மையாக இருப்பது, என்பதைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். அவர் உண்மையை ஏற்கனவே அறிந்திருக்கிறார், ஆனால் அதை எதிர் கொள்வது நமக்கு உதவி செய்யும். நான் கவலைப்பட்டு இருந்துகொண்டிருந்த போது, தேவனை நம்புகிறேன் என்று சொல்லிக் கொண்டு அனேக காலத்தை விரயமாக்கினேன். உண்மையான நம்பிக்கைக்கும் நல்ல பலன் இருக்கிறதென்பதை உணர்ந்து கொண்டது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. அது சமாதானத்தை - எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை உருவாக்கியது.

ஒருவனால் தேவமை முறிலுமாக நம்ப முடியவில்லைஎன்றால், அதைப் பற்றி தேவனிடம் நேர்மையாக இருப்பதே சிறந்ததாகும். மாற்கு 9-ஆம் அதிகாரத்திலே தன்னுடைய மகனுக்கு சுகத்தை தேடி அலைந்த ஒரு மனிதனின் கதை இருக்கிறது. அவன் இயேசுவிடம் தான் நம்புவதாகவும், அவனுடைய அவிசுவாசத்தை நீக்கும் படியாகவும் கேட்டான் (மாற்கு 9:24). அவனுடைய நேர்மையை நான் விரும்புவதுண்டு. நற்செய்தியென்னவென்றால் அவன் தன்னுடைய அற்புதத்தைப் பெற்றுக் கொண்டான். நம்மனைவருக்குமே சில சமயங்களிலே நம் விசுவாசத்தோடு சந்தேகமும் கலந்திருக்கிறது. நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம். தேவனை எப்போதும் அதிகமாக நம்பக் கற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் வளர்வதற்கு காலம் தேவை. தேவனை நம்பியும் இன்னும் பூரணமாகவில்லையே என்று கவலை கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

நான் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையைப் போதித்துக் கொண்டிருக்கிறேன், ஆனாலும் கடந்த ஆண்டில் தானே தேவனை நம்புவது என்ன என்பதை அதிகமாக தெரிந்து கொண்டேன். இந்தப் புத்தகத்திற்காகப் படிக்கும் போதும், ஆராய்ச்சி செய்யும் போதும் அதைப் பற்றி இன்னும் அதிகமாக கற்றுக் கொள்வேன் என்று நினைக்கிறேன்.

## தேவனுடைய குணாதிசயம்

மரியம்வெப்ஸ்டர்.காம் என்ற இணையதளத்திலுள்ள அகராதி, நம்பிக்கையை, “ஒன்றோ, ஒருவரோ சார்ந்து கொள்ளத்தக்கவர், நல்லவர், நேர்மையானவர், பலனளிக்கக் கூடியவர் என்பதைப் போன்று” என்று விளக்குகிறது. நம்பிக்கையானது நாம் நம்பும் ஒருவரின் குணாதிசயத்தைப் பற்றி என்ன அறிந்திருக்கிறோமே அதை சார்ந்ததாக இருக்கிறது. நாம் அந்த நபர் நல்லவர், நியாயமானவர், கனிவானவர், அன்பானவர், நம்பத்தக்கவர் என்று நம்மால் நம்ப முடியவில்லையென்றால், அவர் பேரிலே நம்மால் நம்பிக்கை வைக்க இயலாது.

தேவனுடைய குணாதிசயத்தைப் பற்றி முழுமையாக நான் கற்றுக் கொண்டது, என்னுடைய முழு நம்பிக்கையயும் நான் அவர் மேல் வைக்க எனக்கு அதிகமாக உதவியதை நான் கண்டு கொண்டேன். உதாரணமாக தேவன் நீதியுள்ளவர் என்ற அவரது குணாதிசயம் எனக்கு அதிக அறுதலைத் தருகிறது. அப்படியென்றால் அவர் எப்போதுமே தவறானவற்றைச் சரியானதாக மாற்றுவார்.

என் வாழ்விலே அநேக சந்தர்ப்பங்களிலே அவருடைய நீதியை அனுபவித்திருக்கிறேன். நீதியில்லாததொன்றை அனுபவித்துக் கொண்டிருப்பதாக நான் உணரும் போது, தேவன் அதை அவருடைய சொந்த வழியிலே, நேரத்திலே அதைச் சரியானதாக மாற்றுவாரென்று அவரை என்னால் நம்ப முடிகிறது. வாழ்க்கையானது எப்போதுமே நியாயமாக இருப்பதில்லை, ஆனால் தேவன் நியாயமானவர். நாம் அவர் பேரில் நம்பிக்கை வைக்கும் போது, நம் சுமையின் பாரத்தை இறக்கி வைக்கும் போது அவர் நமக்காக செயல் பட்டு, நம் சூழ்நிலையிலே நமக்கு நியாயம் கொண்டு வருகிறார்.

> தேவன் நியாயம் செய்வாரென்று அவரை நம்புவது, அதை நான் செய்ய முயல்வதிலிருந்து என்னை விடுவிக்கின்றது. தேவன் தம்முடைய வார்த்தையில் தெளிவாகவே பழிவாங்குதல் எனக்குரியதென்றும், அவரே அவர்

ஜனத்தின் சத்துருக்களுக்கு பதிலளிப்பாரென்று கூறுகிறார்.

எபி 10:30

தேவனுடைய நியாயத்தை நாம் அனுபவிக்க, நம் சூழலை தேவனிடம் ஒப்புக் கொடுக்க விரும்ப வேண்டும். நாமாகவே அதை தீர்த்துக் கொள்ள முயலுவதை மறுக்க வேண்டும். இது தான் கடினமானதொன்று!

நம்மைப் பராமரிக்க ஒப்புக் கொடுக்கும் வரை, நாமே நம்மை பராமரிக்க முயன்று பலனின்றி களைத்துப் போய் விடுகின்றோம். அதை நாம் செய்ய முயன்று அவருடைய உண்மைத்தன்மையை அனுபவிக்க தொடங்கும் போது, அவரை மீண்டுமாக நம்புவது எளிதாகி விடுகின்றது.

தேவனை நம்புவது ஒரு சவாலாக இருக்கக் காரணம், நாம் விரும்புவதை அவர் உடனடியாக கொடுப்பதில்லை. நாம் தேவனிடமிருந்து விசுவாசம் மற்றும் பொறுமையின் மூலம் தான் காரியங்களைப் பெற்றுக் கொள்கிறோம். காத்திருக்கும் சமயமானது நமக்கான ஒரு பரீட்சை. அது நம் விசுவாசத்தைப் புதிய அளவுகளுக்கு நேராக நடத்துகிறது.

தேவன் நல்லவர், இரக்கமுள்ளவர், பரிசுத்தமானவர், கனிவானவர், கிருபை மிகுந்தவர், உண்மையுள்ளவர், உண்மையானவர், அன்பானவர், எல்லா காலங்களிலும் ஒரே மாதிரியானவர். அவர் தமது வார்த்தையைக் காப்பாற்றுவாரென்று அவரைச் சார்ந்திருக்கலாம்.

நம்மை நேசித்து நமக்கு உதவும் வல்லமையை மட்டுமல்ல நமக்கு உதவவே விரும்புகிறார். நாம் விசுவாசிக்கும் ஒருவர் மீது நம்பிக்கை வைப்பது சுலபமானது. தேவன் உங்களுக்கும் எனக்கும் உதவ காத்துக் கொண்டிருக்கிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவரை நம்ப வேண்டும்.

என் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும் போது தேவன் உண்மையுள்ளவர் என்பதை என்னால் உறுதியாக கூற முடியும்.

அவரை நாம் பார்க்காவிட்டாலும், உணரா விட்டாலும் அவர் எப்போதுமே நமக்காக இருக்கிறார். அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதை தகுந்த நேரத்திலே வெளிப்படுத்துவார். காத்திருக்கும் காலம் நீண்டதாக இருக்கும் போது விட்டு விடாதீர். தேவனைத் தொடர்ந்து நம்பிக் கொண்டேயிருங்கள்!

தேவன் நம்ப நான் கடினமாக உணரும் போது, கடந்த காலத்திலே அவர் எனக்காக செய்த காரியங்களை நான் நினைவு கூறுவேன். அவர் அவ்வாறு மீண்டுமாக செய்வாரென்று மீண்டுமாக உறுதிபடுத்திக் கொள்கிறேன். நாற்பது ஆண்டுகளாக நான் என்னுடைய அனுபவங்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறேன். சமீபத்திலே 1970களில் எழுதியவைகளை படித்துக் கொண்டிருந்தேன். அதிலே நான் தேவனிடம் எனக்கு ஒரு டஜன் பாத்திரங்களை துடைக்கும் துணி வேண்டுமென்று கேட்டிருந்தேன். எனக்கும் டேவுக்கும் அதை வாங்க போதிய பணம் இருக்கவில்லை, அப்போது தான் நான் தேவனை நம்பும் இந்த பயணத்தை தொடங்கியிருந்ததால், ஒரு சிறு பிள்ளையைப் போன்று அதை அவரிடம் கேட்டேன். சில வாரங்களுக்குப் பிறகு, எனக்கு முன் பின் தெரிந்திராத ஒரு பெண் என் வீட்டிற்கு வந்தாள். அவர், சில பாத்திரங்களை துடைக்கும் துணிகளை என்னிடம் கொடுக்கும் படி தேவன் சொன்னார் என்றார். அப்போது எனக்கிருந்த மகிழ்ச்சியை சொல்ல முடியாது. நான் மிகவும் மகிழ்வுற்றேன். நான் தேவனிடம் அவைகளை கேட்டேன் என்று கூறிய போது அவர் மிகுந்த ஆச்சரியப்பட்டார். தேவனுடைய உண்மைத்தன்மைக்கு நான் பெற்ற அனுபவங்களில் இதுவும் ஒன்று. அதன் பின்னர் இவ்விதமாக ஆண்டுமுழுதும் அநேக முறை நடந்திருக்கிறது.

வேதாகமத்திலே, தாவீது கோலியாத் என்ற இராட்சதனைக் கொல்ல வேண்டியிருந்த் போது, அவன் தோற்றுப் போவான் என்று சொல்லி எல்லோரும் அவனை மட்டுப்படுத்தினார்கள் என்று வாசிக்கிறோம்.. ஆனால் அவனோ தேவனுடைய உதவியினால் சிங்கத்தையும் கரடியையும் கொன்றதை நினைத்துக் கொண்டான். அவனின் விசுவாசம் பலப்பட்டது. அவன் கோலியாத்தைக் கொன்றான் (1 சாமு 17:34-36)

உங்களுடைய சொந்த வாழ்விலே தேவனுடைய உண்மைத்தன்மையை அனுபவித்த சந்தர்ப்பங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அநேகமாக அது இப்போது கூட இருக்கலாம். அது உங்கள் விசுவாசத்தை ஊக்குவிக்கும். இப்போதிருக்கும் தேவைகளுக்குத் தேவனை இன்னும் அதிகமாக நம்ப உதவும். உண்மையான என்ற வார்த்தைக்கு நம்பத்தக்கது, சார்ந்திருப்பது என்ற விளக்கத்தைக் கேட்டிருக்கிறேன். நாம் தேவனைச் சார்ந்திருக்கலாம், அவரிலே சாய்ந்து கொள்ளலாம். அவர் நம்மை விட்டு விலகவும் மாட்டர், கைவிடவும் மாட்டார். எப்போதுமே நம்முடனிருப்பேனென்று வாக்களித்திருக்கிறார் (மத் 28:20).

நாம் தேவையிலிருக்கும் போது, நம்முடன் இருந்து நமக்கு உதவ அவரையே நம்ப வேண்டும் (எபி 13:5). நாம் சோதனைகளினூடே செல்லும் போதும் அவர் உடனிருக்கிறார் (1 கொரி 10:13). மற்றவர் நம்மைக் கைவிடும் போதும் அவர் நம்முடனிருக்கிறார். நமக்கு உண்மையாக இருக்கிறார் (2 தீமோ 4:16-17).

தேவனை நம்ப கற்றுக் கொள்வதற்கு அவருடைய ஒவ்வொரு குணாதிசயங்களைப் பற்றி அறிந்து கொள்வது அதிக பயனுள்ளதாக இருக்கும். இந்தப் புத்தகம் முழுவதும் அவருடைய குணங்களைப் பற்றி இன்னும் அதிகமாக பேசுவேன். ஆனாலும் இதைப் பற்றி நீங்களே தேடி அறிந்து கொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

## உறுதியான நம்பிக்கை

நம்பிக்கை என்பது மன உறுதியாகும். அது நம்மில் இருக்கும் போது வாழ்க்கை எவ்வளவு சுலபமாக இருக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் ஒன்றை செய்ய முடியும், என்று நம்புவதானது, நம் வாழ்வை சந்தோஷத்துடனும் நேர்மையான எதிர்பார்ப்புடனும் தைரியமாக வாழ வழி செய்கின்றது. இயேசுவின் விசுவாசிகளாகிய நமக்கு நம்முடைய நம்பிக்கை அவர் மேல் இருக்க வேண்டும்.

நம்மனைவருக்குமே சில பகுதிகளில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நம் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் தேவன் பேரிலே நாம் நம்பிக்கை வைப்பதின் மூலம் தைரியத்துடன் இருக்கலாம். உதாரணமாக நான் சில சமயம் என்னுடைய கருத்தரங்கங்களிலே போதிக்கும் போது நம்பிக்கையாக உணர்கிறேன். ஆனால் நான் அவ்வாறு உணராத தருணங்களும் இருக்கிறது. அத்தகைய தருணங்களிலே என் மேலல்ல, நான் எப்படி உணர்கிறேன் என்பதிலுமல்ல, கிறிஸ்துவின் மே என் நம்பிக்கை இருக்கும் வரைக்கும் நான் நம்பிக்கையுடன் இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அப்போஸ்தலாகிய பவுல், தன்னுடைய நம்பிக்கையை மாம்சத்தின் மேல் வைப்பதில்லை என்று மிகவும் தெளிவாக சொல்கிறார். அவருக்கு இயற்கையாகவே சில சலுகைகள் இருந்த போதும், அந்த வெளியரங்கமான காரியங்களின் மேல் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. நம் நம்பிக்கை கிறிஸ்துவில் இருக்கிறதென்று ஆணித்தரமாக சொல்கிறார். (பிலி 3:3). நம்பிக்கையானது நம்பப்படுகிறவரின் மேல் இருக்கும் உறுதியாகும். கிறிஸ்துவின் மேல் இருக்கும் நம்பிக்கை நம்மை சவுகரியமாக்குகிறது. நம்மில் சுலபமாக கிரியை செய்ய செய்கின்றது. ஏனென்றால் நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நம்மால் செய்ய முடியும் என்று விசுவாசிக்கின்றோம். உறுதியான நம்பிக்கையானது மன அழுத்தத்தையும், கவலையயும், பயத்தையும் வெளியேற்றுகின்றது.

> *நம்பிக்கையானது,*
> *நம்பப்படுகின்றவர் மீது*
> *கொண்டிருக்கும் உறுதியாகும்*

நாம் நம்பிக்கையை உணராமலிருக்கும் போது, நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்று சொல்கிறேன். இது ஒரு முக்கியமான குறிப்பாகும். உணர்ச்சிகள் உறுதியற்றவை. அவை எந்த நேரத்திலும், எவ்வித அறிவிப்புமின்றி மாறி விடக் கூடியது. எனவே நாம் எப்படி உணர்கிறோம் என்பதில் நம் நம்பிக்கையை வைப்பது புத்திசாலித்தனமான காரியமன்று.

நீங்கள் ஒரு பணிக்கென்று விண்ணப்பிக்கும் பொழுது, தொடக்கத்திலே அதற்கு தேவையான ஆற்றல் உங்களுக்கிருக்கிறதென்று நம்பிக்கையுடனிருக்கலாம். ஆனால் உங்கள் நேர்காணலின் பாதியிலே இருக்கும் போது, உங்களை கேள்வி கேட்டுக் கொண்டிருப்பவருக்கு, உங்களைப் பிடிக்கவில்லை என்பதாக உங்களுக்குத் தெரியலாம். சடிதியாக உங்களுக்கு வரும் அந்த எண்ணமானது (அது உண்மையில்லாமலுமிருக்கலாம்) உங்களை நம்பிக்கை இழ்க்க செய்து விடும். ஆனால் உங்கள் நம்பிக்கை தேவன் பேரிலே இருக்குமென்றால் அவர் உங்களுக்கு தயவைக் கொடுக்கும் படி அவரை நம்பலாம். அது உங்களுக்கான பொருத்தமான வேலைதான், அதைப் பெற்றுக் கொள்வீர்களென்ற நம்பிக்கையுடன் அதிலே தொடர்ந்து செல்வீர்கள்.

நாம் நம்பிக்கையுடனிருப்பதை சாத்தான் விரும்புவதில்லை, ஏனென்றால் அது இல்லாமல் நம் வாழ்விலே நாம் எதையும் சாதிக்க இயலாது என்பதை அவன் அறிந்திருக்கிறான். அதிக திற்மையுடனும், புத்திசாலியாகவும், ஆற்றல் மிக்கவர்களாக இருப்பவர்களுக்குக் கூட நம்பிக்கை தேவைப்படுகின்றது.

ஒரு ஆகாய விமானத்திற்கு எப்படி எரிபொருள் இருக்கின்றதோ அப்படியே நமக்கும் நம்பிக்கை இருக்கின்றது. விமானம் பறக்கும் ஆற்றலை கொண்டிருந்தாலும், எரிபொருள் இல்லையென்றால் அது தரையில்தானிருக்கும்.

நம் நம்பிக்கையானது மக்கள் மீதோ, பொருட்கள் மீதோ தவறாக வைக்கப்படும் போது தொடர்ந்து நம்பிக்கையுடனிருப்பதென்பது இயலாத காரியமாக இருக்கின்றது. ஏனென்றால் அவையெல்லாம் மாற்றம் அடையக் கூடியது. ஆனால் தேவன் மாறாதவர், பொய்யுரையாதவர்!. உறுதியற்று பொங்கிக் கொண்டிருக்கும் இந்த கடல் போன்ற இந்த உலகிலே நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் கன்மலை அவரே.

அத்தியாயம் 2

# நம்பிக்கை இளைப்பாற செய்கிறது

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

மத் 11:28

நோவா வெப்ஸ்டர் "நம்பிக்கையென்பது மற்றவரின் நல்ல பண்பிலே இளைப்பாறச் செய்தல்" என்கிறார். இந்த புத்தகத்திலே மனதை இளைப்பாறச் செய்யும் தலைப்பிற்காக ஒரு அதிகாரத்தை அர்ப்பணிப்பது அவசியம் என்று உணர்கிறேன். இது நாம் அனைவரும் அதிகமாக விரும்புவதும், நம்மனைவருக்கும் அதிகமாக தேவைப்படும் ஒன்றாகவும் இருக்கிறது. நாம் மற்ற காயங்களால் மேற்கொள்ளப்பட்டு விடாமல், நம்முடைய கவனத்தைக் கொடுக்க வேண்டிய அனேக காரியங்கள் நம் வாழ்விலே இருக்கிறது. தேவன் நமக்கு உதவ விரும்புகின்றார், ஆனால் நாமாகவே நமக்கு உதவ முயன்று கொண்டிருக்கும் வரையிலே அவர் தமது உதவியை நம் மீது திணிக்க மாட்டார்.

நம் வாழ்விலே பல நேரங்களில் நமது பாரத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய மக்களை நமக்களிப்பதின் மூலம் தேவன் நமக்கு உதவுகிறார். டேவுக்கும் எனக்கும் இரண்டு மகன்கள் உண்டு. அவர்கள் இருவரும் எங்களுடன் ஊழியம் செய்கின்றனர். இந்த மகா பெரிய ஊழியத்தின் பாரத்தை பகிர்ந்து கொள்வதின் மூலம், அவர்கள் எங்களுக்கு உதவும் படி, தேவன் அவர்களை அளித்திருக்கிறார். ஆரம்பத்திலே நாங்கள் பொறுப்பேற்று செய்து கொண்டிருந்த காரியங்களை அவர்களிடம் ஒப்படைத்துவிடுவது எங்களுக்கு

கடினமானதாகத்தானிருந்தது. நாங்கள் எடுக்க வேண்டிய ஒரு தீர்மானமாக அது இருந்தது. ஆனால் அப்படிச் செய்ததால் எங்கள் மனதிற்கும் ஆத்துமாவிற்கும் இளைப்பாறுதல் கிடைத்தது.

அநேக காரியங்களைப் பற்றியும், சூழ்நிலைகளைப் பற்றியும் நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஏனென்றால் எங்களுக்காக மகன்கள் அதை செய்கின்றனர். நான் போதிக்கவும், எழுதவும், ப்டிக்கவும், ஜெபிக்கவும், தொலக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்தவும் செய்கின்றேன். இப்போது இங்கே உட்கார்ந்து எழுதி கொண்டிருக்கையிலே, ஊழியத்தில் அநேக காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி நான் தெரிந்து கொண்டிருக்கவும் இல்லை. ஆனால் பலனைப் பார்க்கிறேன். அது நன்றாக இருக்கிறது. அந்த பலனைப் பெற்றுக் கொள்ள என் மகன்கள் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்கிறார்களென்று நம்புகிறேன். என்னுடைய மகன் டேன் நேற்றுத்தான் என்னிடம், எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி நெட்ஃப்லிஃஸ்ல் ஒளிபரப்பப்படுகிறதென்று சொன்னான். அது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அநேக மக்களை சென்றடைய அது ஒரு பெரிய வாய்ப்பாகும். அவையெல்லாமே நான் ஈடுபடாமலே நடைபெறுகின்றது. ஏனென்றால் ஊழிய நிர்வாகத்தின் அந்தப் பகுதியை நான் வேறொருவரிடம் கொடுத்து விட்டேன்.

என் மகன் டேவிட், தான்சானியாவிலே, நாங்கள் பொருளுதவி செய்து மேற்பார்வையிடும் திட்டத்தின் புகைப்படங்களை என்னிடம் காண்பித்து என்னை ஆச்சரியத்துக் கொள்ளாக்கினான். அநேக மக்களுக்கு உதவுவதிலே பங்கெடுப்பதில் மிகுந்த சந்தோஷமடைகின்றேன். ஆனால் அந்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நான் கவலைப்படத் தேவையில்லை.

எங்கள் மகன்கள் ஊழியத்திலே எங்களுடன் பங்கெடுக்கின்றனர். நாங்கள் இன்னும் அதிக கடினமாக உழைத்தாலும், அதை பாரமாகவோ அல்லது சுமையாகவோ உணர்வதில்லை. நாங்கள் கவலையினால் அழுத்தப்பட்டிருக்கவில்லை. எங்கள் மனம் இளைப்பாறிக்கொண்டிருக்கிறது.

நாம் தேவனுடைய கரங்களிலே, அவர் அதைப் பார்த்து கொள்ளும் படி விட்டு விடும் போது நம்மை ஆச்சரியப்பட வைப்பதிலே அவர் மகிழ்கின்றார். நம்முடைய வாழ்விலே பங்கெடுக்க அவர் விரும்புகின்றார். அதற்கு அவரை நாம் அனுமதிப்போமென்றால், நம் மனம் இளைப்பாறும். வேதத்தின் படி நாம் தேவனோடு பங்கெடுக்கவும், துணையாக இருக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். 1 கொரி 1:9 இப்படியாக கூறுகின்றது.

> தேவனுடனான உறவு என்பது, அனுதின வேத வாசிப்பு, வாரம் ஒரு முறை ஆலயம் செல்வது, கொஞ்சம் பணத்தை காணிக்கையாக கொடுப்பது, சில நற்காரியங்களைச் செய்வது போன்றவற்றை விட மிகவும் மேலானது.

அவையெல்லாம் பக்தி சம்பந்தமான காரியங்கள், ஆனால் கிறிஸ்துவின் மேல் கொண்ட விசுவாசத்தால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அற்புதமான, வளமான உறவு தான் பங்காளர் என்பது. அவர் நமக்கு ஆற்றல்களைக் கொடுத்து, அதை நாம் அவர் மேல் நம்பிக்கை வைத்துக் கொண்டே உபயோகிக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார். நம்மால் சமாளிக்க இயலாத எதையும் சமாளிக்க ஆயத்தமாக இருக்கிறார். நீங்கள் சிறந்ததை செய்யும் படி அவரை நம்புங்கள். உங்களால் செய்ய இயலாதவற்றையும் செய்ய அவரை நம்புங்கள் என்று சொல்ல விரும்புகின்றேன்.

> *நீங்கள் சிறந்ததை செய்யும் படி அவரை நம்புங்கள்.*

## மன சமாதானம்

தேவன் மேல் நாம் நம் நம்பிக்கையை வைக்கும் போது, அவர் நமக்கு மன சமாதானத்தை அளிக்கிறார். ஒவ்வொரு நாளும் நமக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் எண்ணங்கள் தேன்றுகிறது. இன்று காலை நான் ஒருவருடன் இருந்தேன். அவர் அமைதியாக இருந்தார்

என்னுடன் எதுவும் பேச விரும்பவில்லை. அவருக்கு என்னை பிடிக்கவில்லை என்று எண்ணிக் கொண்டேன். அந்த சூழ்நிலையை மாற்ற ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றியது. ஆனாலும் என்ன செய்வதென்று தெரியவில்லை.

நான் எப்படி செய்ய வேண்டுமென்று தெரியாத காரியங்களை நாம் செய்ய முயலும் போது, அது எப்போதுமே அழுத்தத்தையும், கவலையையும் சில சமயங்களில் பயத்தையும் ஏற்படுத்துகின்றது. உங்கள் வாழ்விலே, சில காரியங்களை நீங்கள் தான் சரி படுத்த வேண்டுமென்று அறிந்திருந்தும் அதை எப்படி செய்வதென்று அறியாமலிருக்கின்றீர்களா? அப்படியென்றல், இன்று காலையிலே நான் செய்ததை நீங்களும் செய்யலாம். ஜெபியுங்கள், தேவனிடம் அதை ஒப்படையுங்கள். அவர் அதைச் சரிப்படுத்த அவரை நம்புங்கள். நான் ஒரு எளிமையான ஜெபத்தை செய்தேன். "பிதாவே, இவருடனான உறவை உம் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன்.நீர் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறீரோ, அது அவ்வாறு இருக்கும் படி செய்யும். இப்படி நான் ஜெபம் செய்த பொழுது ஒரு மன சமாதானம் அடைந்தேன்."

அதற்கு பின் சிறிது நேரத்திலே, அவர்கள் உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டிருந்ததாக என் பிள்ளைகளில் ஒருவரிடமிருந்து கேள்விப்பட்டேன். நான் எவ்விதத்திலாவது உதவக் கூடுமா என்று கேட்டேன். அவர்களோ வேண்டாமென்றனர். உடனே நான் தவறு என்னவாக இருக்கக் கூடும்? யாருடனாவது சண்டையிட்டனரா? உடம்பு சரியில்லையா? என்ன நடந்தது? என்று நினைக்கத்தொடங்கினேன். இத்தகைய நினைவுகளால் நான் நிறைந்து, அதை அந்த நாள் முழுவதும் சுமந்து செல்ல ஆயத்தமானேன். அப்போது, அதை ஆண்டவரிடம் விட்டு விடலாமா என்ற எண்ணம் தோன்றியது. அவருக்கு தான் என்ன நடந்தது, என்ன செய்ய வேண்டுமென்று தெரியும் என்று எண்ணினேன்.

நான் "பிதாவே, அவர்கள் ஒரு நல்ல நாளை காண உதவி செய்யும். அவர்கள் வருத்தப்படுவதற்குப் பதிலாக எவ்வளவு ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்பதை உணர உதவி செய்யும்" என்று ஜெபித்தேன்

நான் ஜெபித்த சிறிது நேரத்திற்கு பிறகு, "நான் இப்போது நன்றாக உணர்கிறேன், உங்களை நேசிக்கிறேன்" என்ற குறுந்தகவல் அவர்களிடமிருந்து வந்தது.

இது போன்ற அநேக காரியங்கள் நமக்கு ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்றது. தேவனை எப்படி நம்புவது. அவர் மீது தங்கள் கவலைகளையெல்லாம் வைப்பது எப்படி என்பதை அறிந்திருப்பார்களேயென்றால், மன அழுத்தத்துக்குள்ளாவதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. என் வாழ்விலே பாதி நாட்கள் நான் அவ்வாறாகத்தானிருந்தேன். ஆனால் பிற்பாடு என்னுடைய கவலைகளை எப்படிச் சமாளிப்பது என்பதை அறிந்து கொண்டதற்காய் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தேவனிடம் எல்லாவறைப் பற்றிப் பேசுவதின் மூலம், உங்கள் நாளை அவர் உங்களுடன் பகிர்ந்து கொள்ள அனுமதியுங்கள். ஜெபமானது எளிமையானது. அது ஆண்டவரிடம் பேசுவதாகும். எனவே நாம் செய்ய வேண்டிய கடமையாக அதைப் பாராதேயுங்கள். நம் வாழ்வில் எல்லா காரியங்களிலும் தேவனை அனுமதிப்பதே ஜெபமாகும். நம் சமாதானத்தைத் திருடி நம்மைக் கவலைக்குள்ளாக்கும் காரியங்களிலும் கூட அவரை அனுமதிக்க வேண்டும்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ அதைப் பற்றி உங்களால் எதுவும் செய்ய இயலாது என்று நினைத்து ஏமாந்து விடாதீர். உங்கள் மனதிலுள்ள எண்ணங்கள் கவலையை உண்டாக்குமேயென்றால் வேறு எதையாவதைப் பற்றி யோசிக்க தெரிந்து கொள்ளுங்கள். தவறான எண்ணங்களை கீழே தள்ளி விட வேண்டுமென்றும் அவற்றை சிறை பிடித்துக் கிறிஸ்துவுக்குள் கீழ் அடக்க வேண்டுமென்றும் தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. (2 கொரி 10:5) நாள் முழுவதும் இயேசுவிடம் நான் செய்யும் எல்லாவற்றைப் பற்றியும், என்னுடைய கவலைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பதே அவருடன் ஐக்கியம் கொள்ளும் சிறந்த வழியாகும். அவரின் பிரசன்னத்தை அனுபவிக்கவும். அவரிடம் உதவியை பெற்றுக் கொள்ளவும் சிறந்த வழியாகும் என்று கண்டறிந்திருக்கிறேன்.

“கலக்கம்/பிரச்சினை” என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் இயேசு என்ன யோசிப்பார்? அத்தைகைய சூழ்நிலைகளை அவர் எவ்விதம் கையாண்டார் என்பதற்கான அனேக உதாரணங்கள் வேதத்திலே இருக்கின்றது. ஒவ்வொரு முறையும் அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவை நம்பத் தெரிந்து கொண்டார். அவர் சிலுவையிலே தொங்கின போதும், கைவிடப்பட்டதாக உணர்ந்த போதும், “பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று சொன்னார்” (லூக்கா 23:46). அவர் வாழ்விலே அது மிகவும் கடினமான சமயமாக இருந்தது. ஆனாலும் பயங்கரமான பாடுகள், வேதனைகளின் மத்தியிலும் அவர் தேவனை நம்பினார்.

வேதத்திலே, இயேசு படகிலே கடும் புயலின் மத்தியிலே எப்படி இருந்தார் என்பதைப் பற்றியும் பார்க்கிறோம். அவருடன் இருந்த அவரது சீஷர்கள் மிகவும் பதற்றமடைந்தனர். ஆனால் அவர்கள் படகின் கீழ் தட்டிலே படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி தங்கள் பயத்தை அவரிடம் சொன்ன போது, இயேசு சொன்னார். “நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுக்கு ஏன் விசுவாசம் இல்லாமற் போயிற்று? என்று கேட்டார்” (மாற்கு 4:40).

நாம் தேவனை நம்ப வேண்டுமென்று அவர் எதிர் பார்க்கிறார். அவர் நமக்கு அந்த தெரிந்து கொள்ளுதலை அளிக்கிறார். நாம் எப்போதெல்லாம் கவலைப்படத் தொடங்குகிறோமோ அப்போதெல்லாம் விசுவாசத்தோடிருப்போனால் புத்திசாலிகளாயிருப்போம். நாம் நிர்பந்தத்துடன் இருக்க தேவையில்லாத போது ஏன் அப்படி இருக்க வேண்டும்?

## நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ள இயலாமற் போனால் என்ன செய்வது?

நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ளாமல் இருந்து விடுவோமோ என்ற பயம் தான், தேவனை நம்புவதைக் கடினமாக்குகிறதென்று

நினைக்கிறேன். நமக்கு தேவையானவற்றை நாமே பார்த்துக் கொண்டால் தான், நாம் விரும்புவதைப் பெற முடியும் என்படில் நம்மில் அநேகர் உறுதியாக இருக்கிறோம். இந்த பயமே நாம் எவரையும் முற்றிலுமாக நம்புவதை தடுக்கிறது.

நான் சுயநலமான, துஷ்பிரயோகமான தாய் தகப்பனால் வளர்க்கப் பட்ட படியால், யாருமே என் மேல் உறுதியான ஈடுபாட்டுடன் இருக்க மாட்டார்கள் என்று நம்பினேன். நான் என்னைப் பார்த்துக் கொள்ளா விட்டால், யாரும் என்னைப் பராமரிக்க மாட்டார்களென்பதே என் எண்ணமாக இருந்தது. ஒரு வேளை நீங்களும் அப்படி இருக்கக் கூடும். அது என்னைப் போன்றே உங்களையும் நிர்பந்தமாக மாற்றுகிறது.

*தேவன் நமக்காக கொண்டிருக்கும் திட்டங்களிலும், எண்ணங்களிலும் நமக்கான சிறந்ததையே வைத்திருக்கிறார்.*

டேவை நான் நம்ப விரும்பாததால் அவர் அநேகந்தரம் வருத்தப்பட்டதுண்டு. ஆனால் தனக்கு மட்டுமே சாதகமாக இருக்கும் சுயநலமான தீர்மானங்களை அவர் எடுக்க மாட்டார். அவர் என்னை நேசித்தாரென்று நம்பினேன். என் பெற்றோரும் கூட என்னை நேசிப்பதாய் சொன்னார்கள், ஆனால் அது எப்படிப்பட்டதென்று எனக்குத் தெரிந்திருந்தது. தேவனுடைய நிபந்தனையற்ற அன்பை நான் விசுவாசித்து, யாராவது என்னைக் காயப்படுத்தியிருந்தாலும், அவர் ஆறுதலளிப்பார் என்று உணரும் வரை யாரையும் என்னால் நம்ப இயலவில்லை. அதை நாம் எப்போது நம்புகிறோமோ அப்போது தான் அவரை நம்ப முடியும், பிறரையும் நம்பக் கற்றுக் கொள்வோம்

தேவனை நம்புவதென்பது, எப்போதுமே நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்வோமென்ற உறுதியை அளிக்கிறதில்லை. ஆனாலும் நாம் பெற்றுக் கொள்ளாமலிருப்போமேயென்றால், தேவன் நமக்காய் மிகவும் சிறந்ததை வைத்திருக்கிறாரென்று அர்த்தம். என் வாழ்விலே

அனேகந்தரம் நான் பெற்றுக் கொள்ளாத பல காரியங்களை விரும்பியிருக்கிறேன். தேவனிடம் கேட்டிருக்கிறேன். பின்னர் தான் ஒரு உண்மையை உணர்ந்து கொண்டேன். “நான் கேட்டதை அப்பொழுது எனக்கு கொடுத்திருப்பாரென்றால் அது நன்மையாக இருந்திருக்காது.” நாம் நமக்கு என்ன வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை விட தேவன் நமக்கு என்ன இருக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை நாம் வாஞ்சிக்க கற்றுக் கொள்ளும் போது, எல்லா சூழ்நிலையிலும் நாம் மன சமாதானத்தைப் பெற்றிருக்க முடியும்.

இயேசு தம்முடைய வேதனை மிகுந்த மரணத்திற்கு முன் அவர் கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்த பொழுது, இதற்குப் பரிபூரணமான உதாரணத்தை வெளிப்படுத்தினார். அவர் சொன்னார்.

> “...பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும் படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தமல்ல உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது ” என்றார்.
>
> லூக்கா 22:42

நாம் புரிந்து கொள்ள இயலாவிட்டாலும் தேவனுடைய சித்தமே நம் சித்தத்தை விட சிறந்தது என்று நம்ப விரும்புவதை சார்ந்திருக்கிறது. ஏனென்றால் நாம் சுயசித்தத்துடன் உருவாக்கப் பட்டிருக்கிறோம். நாம் நம்முடைய சொந்த வாழ்க்கையை நடத்தவும், விருப்பம் போல வாழவும் முடியும். ஆனால், அதற்கு இன்னொரு வழி இருக்கிறது. அதற்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அது தேவனுடைய நன்மை மற்றும் கர்த்தத்துவத்தை நம்புவதாகும். ஏசாயா தீர்க்கதரிசி இதை எவ்வாறாக சொல்கிறார். “அவருடைய கர்த்தத்துவத்துக்கும், சமாதானத்திற்கும் முடிவில்லை” (ஏசாயா 9:7). தேவன் ஆட்சியில் வாழ்வை வாழ எவ்வளவு அதிகமாக அனுமதிக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமான சமாதானத்தை நாம் அனுபவிப்போம்!

## உங்கள் வாழ்வின் ஓட்டுனர் இருக்கையில் இருப்பவர் யார்?

நாம் நம் விருப்பம் போல வாழாமலிருக்கும் போது, அவரை நாம் நம்பாமல் இருப்போமேயானால், தேவனிடமிருக்கும் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்வது சுலபமானதே. அவரை நாம் கட்டுப்படுத்தவோ அல்லது நாம் நினைத்ததைப் போன்று அவர் செயல்பட வேண்டுமென்று வற்புறுத்துவோம். ஆனால் அவ்வாறு செய்வது ஒரு சிறந்த நபரைக்கூட உணர்ச்சிப் பூர்வமான, ஆவிக்குரிய விதமாகவும் பெரிய சாக்கடையிலே தள்ளி விடும். மாறாக தேவன் உங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல ஏன் அனுமதிக்கக்கூடாது?

சமீபத்திலே இரண்டு வாலிபப் பெண்கள் ஒன்றாக நாளை செலவளித்ததைப் பற்றிக் கேட்டேன். அந்த பெண்களில் ஒருத்தி எதைப் பற்றியும் யோசிக்காமல் காரியங்களைத் தானாகவே செய்து விடுவதுண்டு. அவள் திடீரென்று கார் ஓடிக்கொண்டிருக்கும் போதே, ஓட்டுனரி இருக்கைக்குச் செல்ல வேண்டுமென்று தீர்மானத்தாள். அவ்வாறு செய்யத்தொடங்கினாள். காரை ஓட்டிக்கொண்டிருந்தவர் முதலில் மறுத்தாலும், பின்னர் இந்த செயலிலே இணைந்து கொண்டார். சீக்கிரத்திலே அவர்கள் கார் சாக்கடைக்குள்ளே விழுந்தது.சேதமும் அடைந்து விட்டது.

உங்கள் காரை தேவன் ஓட்டிச் செல்வதற்கு அனுமதியுங்கள் என்று உங்களுக்குப் பரிந்துரை செய்கின்றேன். நீங்கள் எங்கே செல்ல வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அங்கே அவர் உங்களை நடத்திச் செல்லும் போது, கட்டுப்பாட்டை நீங்கள் எடுத்துக் கொள்ள முயலாதீர். அவரே முன் செல்லட்டும். அவரைப் பின்பற்ற கற்றுக் கொள்ளுங்கள். இது தான் புத்திசாலித்தனமான, பாதுகாப்பான, நிறைவளிக்கக் கூடிய முறையிலே வாழும் வாழ்க்கையாகும்.

வாசிப்பதை சிறிது நேரத்தில் நிறுத்தி விட்டு சில கேள்விகளைப் பற்றி யோசிப்பதற்கு இதுவே நல்ல இடம் என்று எண்ணுகிறேன்.

- உங்கள் வாழ்வின் ஓட்டுனர் இருக்கையில் இருப்பது யார்?
- எவ்வளவு மன சமாதானத்தைத் நீங்கள் அனுபவிக்கிறீர்கள்?
- உங்கள் சமாதானத்தைத் திருடும் காரியத்தைப் பற்றிக் கவலைப்பட்டு ஒரு நாள் முழுவதையும் விரையமாக்குவது எத்தனை முறை?
- நீங்கள் விரும்பும் ஒன்றை பெற்றுக் கொள்ளால் இருந்து விடுவோமா என்ற பயம் தான் தேவனை நீங்கள் நம்புவதிலிருந்து தடுக்கிறதா?
- இன்னும் அதிகமான மன சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்களா?
- உங்கள் வாழ்க்கையை இன்னும் அதிகமாக நீங்கள் அனுபவிக்க விரும்புகின்றீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு உண்மையாக பதிலளித்தால் உங்கள் நம்பிக்கையின் அளவு என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நீங்கள் எவ்வளவு தேவனை நம்ப வேண்டுமோ அவ்வளவாய் நம்பவில்லை எனதை காண்பீர்களானால் ஆக்கினைக்குள்ளாவதற்கு எந்த அவசியமும் இல்லை. இந்த ஷனப்பொழுதிலிருந்து கவலைக்கு மேல் நம்பிக்கையைத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்க்காணும் வ்த வாக்கியத்தை கவனியுங்கள்:

> உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.
>
> ஏசாயா 26:3

ஜெபிக்க ஓர் புதிய வழியை நான் உங்களுக்கு சொல்கிறேன். உங்களுக்கு தேவன் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவதை அவரிடம் சொல்வதோடு, தேவனே இது எனக்குச் சரியானதாக இராமலிருக்குமென்றால் தயவு செய்து அதைக் கொடுக்க வேண்டாம் என்றும் சொல்லுங்கள்.

என் வாழ்க்கையிலே அனேக சமயங்களிலே நான் விரும்பும் ஒன்றை பெற்றுக் கொள்ள கடினமாக உழைத்ததுண்டு. ஆனால் அது என்னை முழுமையாக திருப்திபடுத்தவில்லை, நிறைவை அளிக்கவில்லை. அது என் சூழ்னிலையை அதிக மோசமாகத்தான் மாற்றியிருக்கிறது. நம்மில் அனேகர், சில சமயத்திலே, நம்மால் வாங்க இயலாத ஒன்றை வாங்கியிருக்கின்றோம். ஆனால் அதை வாங்க ஏற்பட்ட கடனால் நாம் மன உளைச்சலுக்குள்ளாகியிருக்கின்றோம். அல்லது நம் வாழ்க்கைத் துணையோடு கருத்து வேறுபாடு ஏற்படும் போது வாக்குவாதத்தைத் தொடங்கியிருக்கலாம். ஆனால் நாம் விரும்பியதை பெற்றுக் கொண்ட பின்னர், அது துயரத்தைக் கொடுக்கக் கூடியது என்று உணர்கிறோம்.

நாம் என்ன பெற்றுக் கொள்ள விரும்புகிறோமோ அதை மன சமாதனத்துடன் பெற்றுக் கொள்ள இயலாதென்றால், அது பெற்றுக் கொள்ள தகுந்ததல்ல என்பதை கற்றுக் கொள்ளவேண்டும். எல்லா இறுதி தீர்மானங்களையும் எடுத்து சமாதானமே ஆள வேண்டுமென்று வேதத்தால் உந்தித் தள்ளப்படுகிறோம். (கொலோ 3:15). அனேக ஆண்டுகள் மனதளவிலும், உணர்ச்சியளவிலும் குழப்பமடைந்த பின் சமாதானம் ஒரு விலையேறப்பெற்றதென்றும் அதைப் பெற்றுக் கொள்ள நாம் என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டேன்.

> *நாம் என்ன பெற்றுக் கொள்ள விரும்புகிறோமோ அதை மன சமாதனத்துடன் பெற்றுக் கொள்ள இயலாதென்றால், அது பெற்றுக் கொள்ள தகுந்ததல்ல என்பதை கற்றுக் கொள்ளவேண்டும்.*

தேவனை நம்ப கடினமாக நீங்கள் உணரும் போது ‘நான் அவரை நம்பினால், நான் விரும்புவதை என்னால் பெற்றுக் கொள்ள இயலாது என்று பயப்படுவதாலே அவரை நம்ப மறுக்கிறேனா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். பதில் ஆம் என்று

இருக்குமேயானால் உங்கள் நம்பிக்கையின்மைக்கான, சமாதானமின்மைக்கான காரணத்தையும் நீங்கள் கண்டு பிடித்துவிட்டீர்கள்.

நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ளும் போது பெருமிதப்படுகிறோம். நம்மைப் பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொண்டு எவ்வளவு நாட்களை நாம் விரயமாக்குகின்றோம். இறுதியிலே நாம் திருப்தியடையவேயில்லை என்பதைத்தான் கண்டடைகிறோம்.

தேவ சித்தம் செய்வது தான் இறுதியிலே முற்றிலுமாக திருப்தியடையச் செய்யும். நாம் அவருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றோம். அதைத் தவிர வேறு எதுவும் நிலையான திருப்தியை அளிக்காது. நாம் இளைமையாக இருக்கும் போது, நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்வது தான் வாழ்க்கையிலே மிகவும் முக்கியமானது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் காலம் செல்ல செல்ல நாம் கற்றுக் கொள்கிறோம். என்னுடைய சித்தத்திற்கு மேல் தேவனுடைய சித்தத்தை தான் விரும்புகிறேன் என்று உறுதியாக சொல்லும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறோம். தேவனுடைய பரிபூரண சித்தத்திலிருப்பதை விட சிறந்த இடம் வேறு எதுவுமில்லை! *நீங்கள் உங்களால் இயன்ற அளவு சிறந்ததைச் செய்யுங்கள், எஞ்சியதை அவர் செய்து முடிக்க அவரை நம்புங்கள்*.

தேவன் நமக்காக கொண்டிருக்கும் எண்ணங்களிலும், திட்டங்களிலும் நமக்கு சிறந்ததையே வைத்திருக்கிறார். நாம் எதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறோமோ அதை மன சமாதானத்தோடு பெற்றுக் கொள்ள இயலாமலிருக்குமேயென்றால் அது அநேகமாக நாம் பெற்றுக் கொள்ளத் தகுதியானதல்ல.

அத்தியாயம் 3

# யாரை என்னால் நம்ப இயலும்?

மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 17:5

“இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது” என்பது பொதுவான ஒரு கூற்றாகி விட்டது. இதை நாம் ஒவ்வொருவரும் அவ்வப்போது உபயோகிப்பது உண்டு. ஆயினும் யாரையுமே நம்ப இயலாது என்பது முற்றிலும் உண்மையல்ல. தவறானதை மட்டுமே பார்க்கும் ஒருவரைப் போன்று நாமும் மாறி அவ்வாறு நினைப்பது ஆபத்தானதாகும்.

முன்பு இல்லாததைப் போன்று இப்போது நம்பத்தக்கவர்களைக் கண்டுபிடிப்பது கடினமானது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.ஆனால் நம்ப முடியாத படி சந்தேகத்துடன் வாழும் வாழ்க்கையை நான் அறவே மறுக்கிறேன். நான் மக்களிடம் இருக்கும் சிறந்ததை நம்பவும், குறிப்பாக ஒரு காரணத்தைக் கொடுத்தாலொழிய மக்களை நம்பவும் தீர்மானித்திருக்கிறேன். இந்தத் தீர்மானமானது மக்களுடன் நான் கொண்டிருக்கும் அனுபவங்களைச் சார்ந்ததாக இருக்கிறது.

என் பெற்றோர்கள் சுய நலக்காரர்களாகவும், மிகவும் துஷ்பிரயோகம் செய்பவர்களாகவும் இருந்ததால் ஏழு வயதிலேயே அவர்களை நம்ப முடியாது என்றறிந்தேன். எனக்கு உதவும் படி கேட்ட பிற உறவினர்களும்

“நான் இதிலே என்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்ல, இது என் வேலையில்லை” என்று சாக்கு போக்கு சொல்லி எனக்கு உதவ மறுத்ததால், அவர்களையும் என்னால் நம்ப இயலவில்லை.

நான் இளம் வாலிபப் பெண்ணாக வளர்ந்த போது “யாரையும் நம்ப முடியாது” என்று நான் சொல்லும் வண்ணம் வேறு பல துக்கமான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டது. பதினெட்டு வயதிலே உண்மையில்லாத ஒரு வாலிபனை திருமணம் செய்து கொண்டேன். அவன் திருடனாக இருந்தது மட்டுமல்லாமல், சிறைக்கும் சென்றிருக்கிறான். இருந்தும் நம்பத்தக்க சிலரைச் சந்தித்திருக்கிறேன் என்று உறுதியாக நம்புகிறேன். ஆனால் என்னைக் காயப்படுத்தி, ஏமாற்றியவர்களைப் பற்றியே நான் அதிக கவனமுள்ளவளாக இருந்தேன்.

டேவை என்னுடைய 23-ம் வயதிலே திருமணம் செய்து கொண்டேன். அப்போதிருந்தே நான் ஆலயத்திற்கு ஒழுங்காக செல்வதுண்டு. இப்போது நான் சபையினரோடு அதிகமாக பழகுவதால் அவர்களை நம்பலாம், காயப்பட மாட்டேன் என்று நினைத்தேன். ஆனால் அது சரியானதாக இருக்கவில்லை. உண்மையாகவே நான் அனுபவித்த ஏமாற்றங்களில் சில கிறிஸ்தவர்களால் தான் ஏற்பட்டது. (வாசகர்களில் சிலர் ஆமென் என்று சொல்வதை என்னால் கேட்க முடிகிறது). நீங்கள் இதைப் போன்ற காரியங்களை அனுபவித்திருக்கலாம். பயங்கரமான கதைகள் உங்களிடம் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நாம் உட்பட மனிதர்கள் அனைவருமே குறையுள்ளவர்களே. இதை நம்ப மறுப்போமேயானால் ஏமாற்றம் தான் அடைவோம். இயேசு பலவான்களுக்காக அல்ல பலவீனர்களுக்காகவே வந்தார். அவ்வாறு அவர் வந்ததற்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறேன். எனக்கு இரக்கமும் மன்னிப்பும் தேவைப்படுகிறது. அப்படியென்றால், நானும் அதைத் தாராளமாகக் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இந்த காலத்திலே நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மை என்பது தலைப்புச் செய்தியாக காணப்படுகிறது. சாமியார்களால் பாலியல்

வன்முறைகள் நடைபெறுகிறதென்ற குற்றசாட்டுகள் அடிக்கடி ஏற்படுகின்றது. ஆயிரக்கணக்கான மக்களின் சேமிப்பை சூறையாடி ஏமாற்றிய செய்திகளைக் கேட்டிருக்கின்றோம். நாம் வாக்களித்த அரசியல்வாதிகள், தாங்கள் சொன்னவாறு சத்தியத்தின்படி செய்யாமல் நம்பியிருக்கும் நம்மை ஏமாற்றுகிறார்கள்.

மோசமானவர்களிடமிருந்து நல்லவர்களை நாம் எப்படி கண்டு கொள்வது? யார் நம்பத்தக்கவர், யாரை நம்ப முடியாது என்று எப்படி அறிந்து கொள்வது? இது சுலபமல்ல. சில சமயங்களிலே நம்மைப் பராமரித்து காப்பவர்களைக் கூட நம்மால் நம்ப இயலாது. ஆலயத்திலே மூப்பராக மதிக்கப்பட்ட ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யபட்ட ஒரு இளம் பெண்ணிடம் கேட்டேன். எல்லோருமே அவரின் குடும்பத்தினர் உட்பட, அவர் உண்மைத்தன்மைக்கு ஏற்றவர் என்று நினைத்திருந்தனர் ஆனால் முடிவிலே அந்த மனிதன் ஒரு பொல்லாதவனாகவும் ஏமாற்றுக்காரனாகவும் நிரூபிக்கப்பட்டான்.

“யாரை உன்னால் நம்ப முடியும்?” என்ற ஒரு கட்டுரையிலே டாக்டர் எர்வின். டபள்யூ லட்சர் என்பவர் சொல்கிறார்.

> “ஏன் மக்கள் நம்பத்தக்கவர்களாக இல்லை? நாம் பகுத்தறியும் உணர்வினால் உந்தப்படுகிறோம் என்று நினைத்தாலும், உண்மையென்னவெனில், நாம் நம்முடைய சுயநலமான விருப்பங்களால் தான் உந்தப்படுகிறோம். நம்மைப் பற்றி நன்மையாக நினைக்க வேண்டுமென்று நம்முடைய இருதயத்தின் உண்மைத்தன்மையை முழுவதுமாக புறக்கணித்து விட்டு, நம்முடைய வெளிப்பிரகாரங்களுக்குக் கவனம் செலுத்துவது சுலபமாக இருக்கிறது. உண்மையிலேயே சிலர் தங்களை ஏமாற்றுவதோடு தங்களையும் ஏமாற்றிக் கொள்கிறார்கள். நம்முடைய சுயத்தைக் காப்பாற்றுவதற்க்காக, நம்மைச் சுற்றியுள்ளவர்களை அழிக்கும் பொல்லாதவர்களாகி விடுகிறோம்.”

ஆம் யாரை நம்புவது என்பதைக் கண்டுகொள்வது கடினமாகத்தானிருக்கிறது. விபச்சாரம் மேலோங்கி இருக்கிறது. அநேக கல்லூரி மாணவர்கள் தங்கள் பரீட்சைகளிலே ஏமாற்றுகிறார்களென்று சொல்கிறார்கள். வேலையாட்கள், வேலைக் கொடுத்தவரிடம் திருடுகிறார்கள். இப்படியாக அட்டியல் நீண்டு கொண்டேயிருக்கிறது. எப்போதுமே தரமான வேலையாட்களை கண்டு பிடிப்பது கடினமாகிக் கொண்டேயிருக்கிறது. இது சிறிய காரியமென்றாலும் மிகுந்த விரக்தியை ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஏன் கொடுக்கப்பட்டிருக்கும் கால நேரத்தைக் கடைபிடிப்பார்களென்று மக்களை எதிர்பார்ப்பதும் கூட அரிதாகி விட்டது. நாம் என்ன செய்வது?

"இந்தக் காலத்திலே யாரையும் நீங்கள் நம்ப முடியாது" என்று எல்லோரும் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளலாமா? அல்லது அவர்களை நம்ப கூடாததற்கு போதுமான காரணங்களைக் கொடுக்கும் வரை எல்லோரையும் நம்ப தீர்மானிக்கலாமா? நான் மக்களை நம்புவதற்கு வாக்களிக்கிறேன். ஏனென்றால், யாரோ சிலர் என்னை ஏமாற்றுவதால் என்னை நிர்பந்தமாக்கும் ஒரு சந்தேகமான மனப்பான்மையோடு வாழ மறுக்கிறேன்.

## உங்கள் கண்களை விரிவாய் திறந்து வைத்துக் கொண்டு நம்புங்கள்

நாம் மக்கள் மீது நம்பிக்கை வைக்காமலே அவர்களை நம்பலாம். உண்மையிலேயே, தேவனுக்கு மாத்திரமே அது சொந்தம். இயேசு இதைப் பற்றி பேசினதாக அப்போஸ்தலனாகிய யோவான் பதிவு செய்திருக்கிறார்.

> அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை.
>
> யோவான் 2:24

வேதாகமம் இயேசு யாரையும் நம்பவில்லை என்று சொல்லவில்லை. மாறாக, அவர் தம்மை அவர்களிடம் ஒப்புக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறது. அப்படியென்றால் என்ன? மக்கள் தம்மை ஏமாற்றமாட்டார்களென்ற எண்ணத்திற்கு அவர் தம்மை ஒப்புக் கொடுக்கவில்லை. அவர் தம்மை பாதுகாத்துக் கொள்ளுவதற்கு அவர்களிடம் தம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கவில்லை.

> மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை.
>
> யோவாண் 2:25

இயேசு மனித இயல்பையும் அதன் பெலவீனங்களைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அவர் அவர்களின் பெலவீனங்களிலே, அவர்களுடைய பெலப்படுத்த வந்தார். அவர், அவர்களின் தோல்விகளையும், பாவங்களையும் மன்னித்து விட்டார். நம் வாழ்விலே நமக்கு சமாதானம் வேண்டுமென்றால், நாமும் அதைத் தான் செய்ய வேண்டும்.

நம்மில் ஒருவர் கூட நான் காயப்படவில்லை, ஏமாற்றவில்லை அல்லது காயப்படுத்தியதோ, ஏமாற்றியதோ இல்லை என்று சொல்ல இயலாது. மனித இயல்பின் பெலவீனங்களைக் கொண்டிருக்கிறோம். நான் வேண்டுமென்றே ஒருவரைக் காயப்படுத்துவதில்லை. ஆனால் சில சமயங்களில் காயப்படுத்தி விடுகிறேன். ஒருவருடனான உறவிலே நாம் நிலைத்திருக்க வேண்டுமென்றால், நாம் ஏமாற்றமடைய விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் விட்டு விடாமல் நம்பிக்கையை வளர்க்கும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

> *"நான் ஏமாற்றம் அடைந்திருப்பதற்கும் தேவன் என்னை ஏமாற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு."*

எனவே நான் கண்களை விரிவாய் திறந்து வைத்துக்

கொண்டு நம்ப தீர்மானித்து விட்டேன். அப்படியென்றால் எவருமே என்னை ஏமாற்ற மாட்டரென்று எதிர்பார்க்கிறதில்லை. ஆரம்பத்திலே நான் நினைத்த படி காரியங்கள் நடைபெறாமலிருக்கும் போது தேவனிடம் கூட ஏமாற்றமடைந்ததுண்டு. ஆனாலும் தேவனிடம் நான் ஏமாற்றமடைவதற்கும், தேவன் என்னை ஏமாற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு. என்னுடைய சொந்த எதிர்பார்ப்புகளே, தேவனிடம் நான் ஏமாற்றமடைவதற்குக் காரணமாயிருக்கிறது, தேவன் அல்ல. ஏனென்றால் நாம் அவர் பேரிலே நம்பிக்கை வைப்போமென்றால், அவர் நம்மை ஒருபோதும் ஏமாற்ற மாட்டாரென்று வேதம் சொல்லுகிறது. (ரோமர் 5:5)

## தவறான எதிர்பார்ப்புகள்

நம்முடைய ஏமாற்றங்களிலே எவ்வளவு பிறருடைய தவறு எவ்வளவு நம்முடைய தவறு? இது ஒரு சுவாரஸ்சியமான கேள்வி என்று நினைக்கிறேன். தேவன் செய்வதைப் பற்றியோ செய்யாமலிருப்பதைப் பற்றியோ நாம் ஏமாற்றமடையலாம். ஆனால் அது நம் எதிர்பார்ப்புகள் தவறாக இருப்பதாலேயே ஏற்படுகின்றது. தேவன் விரும்புவதை நாம் விரும்புவதற்கு பதிலாக நாம் விரும்புவதையே எதிர்பார்க்கின்றோம்.

ஒருவர் உங்களை காயப்படுத்தவோ, ஏமாற்றவோ கூடாதென்று எதிர்பார்ப்பது தவறானதொன்றாகும். ஏனென்றால் மனித இயல்பானது பூரணமாக இருக்க இயலாது. நாம் என்ன விரும்புகின்றோம் எப்படி உணர்கின்றோம் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள வாஞ்சிக்கின்றோம். அவர்கள் அப்படிச் செய்யாத போது ஏமாற்றமடைகின்றோம். மக்கள் நம்மைப் புரிந்து கொள்ளவில்லை என்று ஏமாற்றமடைகின்றோம்.நான் எப்படி உணர்கிறேனென்று டேவ் புரிந்து கொள்ளாததால், அவரை நான் ஏன் குற்றப்படுத்த வேண்டும். அது அவருடைய சுபாவம் இல்லையே. அவரது ஆளுமை தன்மை என்னை விட வேறுபட்டது. எனக்கு முக்கியமான சில காரியங்கள் அவருக்கு முக்கியமானதாக இல்லாமலிருக்கலாம். இது இருவருக்கும் பொருந்தும். நான் எப்படி உணர்கிறேன் என்பதைப் பற்றி அவரிடம்

விவரித்துச் சொல்லலாம். அவரும் என்னை நேசிப்பதால் எனக்காக பரிதாபப்படலாம். ஆனாலும் நான் எப்படி உணர்கிறேன் என்பதை அவர் அனுபவபூர்வமாக அறியாமலிருக்கலாம். அதை நான் அறிந்திருக்கவில்லை.

ஒரு பெண் முழுமையாக அறிந்துகொள்ளப்பட வேண்டுமென்று விரும்பினால், அவளைப் போன்றே குணம் படைத்த மற்றொரு பெண்ணுடன் பகிர்ந்து கொள்ளுவதே மேலானதாகும். டேவ் விளையாட்டுகளைப் பற்றி உண்மையாலுமே விருப்பமுள்ளவர்களிடம் உரையாட வேண்டும். என்னிடம் உரையாடுவதில் அர்த்தமேதுமில்லை. ஒருவேளை மரியாதை நிமித்தமாக நான் விருப்பமுள்ளவளைப் போன்று நடிக்கலாம். ஆனாலும் அவரது உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடியாது. ஏனன்றால் அதை நான் உணர்ந்ததில்லை, அநேகமாக உணரவும் மாட்டேன்.

இதை நான் எழுதுகையிலே எனக்கும் டேவுக்கும் திருமணமாகி ஐம்பது வருடங்களாகிறது. எங்கள் திருமணம் வெற்றியானதாக இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று. எங்களால் கொடுக்க இயலாத காரியங்களைக் கொடுக்கும் படி எதிர்பார்க்கக் கூடாது என்பதின் முக்கியத்துவத்தை நீண்ட காலத்திற்கு முன்பே கற்றுக் கொண்டோம். நாம் மற்றவரிடம் கனிவாக இருக்க வேண்டுமென்பதற்காக சில காரியங்களைக் கொடுக்கக் கற்றுக் கொள்ளலாம், ஆனால் கொடுக்க இயலாத சில காரியங்களும் இருக்கின்றன. டேவ், நான் என்னுடைய வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால், உண்மையாகவே நான் நானாக இருக்கும் வரை அதை அனுபவிக்க முடியாது என்பதை அறிந்திருக்கிறார். எனவே நான் எப்படி இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறாரோ அவ்வாறாக இல்லாமல், நான் யாராக இருக்கிறேனோ அதை அவர் கொண்டாடுகிறார். நானும் அவருக்காக அதையே செய்கின்றேன். இந்த நிலைக்கு வர அநேக ஆண்டுகள் பிடித்தது. அதைச் செய்யும் வரை நாங்கள் இருவரும் அநேக காயங்களையும் ஏமாற்றங்களையும் தவறான எதிர்பார்ப்புகளால் அனுபவித்தோம்.

இயேசு தம்முடைய சீஷர்கள் அவரை ஏமாற்றுகிறார்களென்பதை அறிந்திருந்தார். எனவே அவர்கள் அவ்வாறு செய்த போது அதற்காக ஆயத்தமாக இருந்தார். எனவே அவர்களது செயல்களால் நொருங்கிப்போகவில்லை. யூதாஸ் காட்டிக் கொடுத்தான்; பேதுரு மறுதலித்தான். மிகவும் முக்கியமான தருணத்திலே அவர்களை ஜெபிக்கும் படி கேட்டுக் கொண்டார். இருந்தும் அவர்கள் தூங்கி விட்டனர். ஆனால் அவர் அவர்களைத் தொடர்ந்து நேசித்தார். 'நீங்கள் என்னை காயப்படுத்தி விட்டீர்கள், எனவே நான் உங்களை இனிமேல் நம்ப மாட்டேன்' என்ற சந்தேக மனப்பான்மையுடன் இருக்கவில்லை. அவருக்குத் தவறான எதிர்பார்ப்பு இருக்கவில்லை.

*"ஒவ்வொரு நாளும் சில திட்டமிடாத காரியங்களுக்காக திட்டமிடுவது ஞானமான ஒன்று."*

மக்கள் சரியானதைச் செய்ய வேண்டும், நம்மைக் காயப்படுத்தாமல் இருக்க வ்ண்டும் என்று எதிர்பார்ப்பது தவறில்லை. ஆனால் அதே சமயம் அவர்கள் அதில் தவறாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. மனிதர்கள் பூரணரல்ல. வெகு சில தினங்களே நான் எதிர்பார்ப்பது போல காரியங்கள் நடைபெறுகிறதென்பதை அறிந்து கொள்ளும் வரை என் திட்டங்களெல்ல்லாம் நான் எதிர்பார்த்ததைப் போன்று நடைபெறவில்லை.

அதனால் அநேக ஆண்டுகள் நான் ஏமாற்றமடைந்தும் சோர்வுற்றும் இருந்திருக்கிறேன். இப்போதோ நான் திட்டமிடாத காரியங்களுக்காகவும் திட்டமிடுகிறேன். அது என்னுடைய சமாதானத்தைக் காத்துக் கொள்ள உதவுகிறது. ஒவ்வொரு நாளும் எல்லாவற்றிற்கும் திட்டமிடுவதே ஞானம் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

## பிரகாசமான(தைப்) பக்கத்தைப் பாருங்கள்

நம்பத்தகாதவர்களைப் பற்றி பேசினோம். ஆனால் மீண்டும்

மீண்டுமாக நம்பத் தகுந்தவர்கள் என்று நிரூபித்த மக்களைப் பற்றி என்ன? யாருமே பூரணரல்ல என்று சொன்னோம். ஆனால் உண்மையாலும், நேர்மையாலும் சில நிகரற்ற மனிதர்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் வார்த்தையின் படி செய்வார்களென்பதாலும், நம் நம்பிக்கையை வேண்டுமென்றே உடைக்க மாட்டார்கள் என்பதாலும் அவர்களைச் சார்ந்து கொள்ளலாம்.

இத்தகைய மக்கள் சிலரை அறிந்து கொள்ளும் சிலாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். அவர்களுக்காக நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நான் காயப்பட்டு, "யாரையும் நம்ப முடியாது" என்னும் மன நிலை வரும் போது இப்படிப்பட்ட மக்களை நினைத்துக் கொள்ளுகிறேன்.

எந்தவொரு பிரச்சினையின் மோசமான எதிர்மறையான பகுதியைப் பார்ப்பதற்குப் பதிலாக, நல்ல நேர்மறையான பகுதியைப் பார்ப்பது சிறந்ததாகும். ஒன்று நமக்கு சமாதானத்தைக் கொடுக்கிறது, மற்றது நம் சமாதானத்தைத் திருடுகிறது. எனவே நல்லவைகளைப் பார்த்து வாழ்வை எவ்வளவு நன்றாக வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது?

## பகுத்தறிதல்

ஆவிகளைப் பகுத்தறிதல் என்ற பரிசுத்த ஆவியின் வரம் ஒன்று நமக்கிருக்கின்றது. (1 கொரி 12:4-11) தேவனிடமிருந்து நமக்கு வரும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வரம் இது. இதனால் யார் நல்லவர் யார் கெட்டவர் என்பதை அறிந்து கொள்ள இயலும். நான் அடிக்கடி இந்த பகுத்தறிவு வரத்திற்காக ஜெபிப்பதுண்டு. நான் இயற்கையான முறையிலே அதை அறிந்து கொள்ளாமலிருக்கும் பொழுது, தேவன் அதற்கு உதவி செய்வார். சமீபத்திலே நான் சந்தித்த ஒருவருடன் இதை உணர்ந்தேன். ஒவ்வொரு முறையும் நான் அவர்களைச் சந்தித்த பொழுது "நான் உங்களை நம்ப முடியாது" என்று நினைத்தேன். முதலிலே நான் சந்தேகத்துடனும், குற்றப்படுத்தும் படியாக இருந்தமைக்காக என்னை நானே கடிந்து கொண்டேன். ஆனால்

இரண்டு தனிப்பட்ட நபர்கள் இரண்டு வெவ்வேறு சமயங்களிலே, அந்த மக்கள் அவர்கள் தோற்றத்தைப் போன்று இல்லை என்று என்னிடம் கூறினர். அவர்கள் தங்களை தேவனுக்கேற்றவர்களாக, ஆழமான விசுவாசத்துடன் இருப்பதாக தங்களை காண்பித்துக் கொண்டனர். ஆனால் அவர்களுடைய அனுதின வாழ்விலே அவர்கள் அவ்வாறாக இருக்கவில்லை.

சமீபத்திலே எங்கள் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரிடம் ஏதோவொன்று சரியாக இல்லை என்பதாக உணர்ந்தேன். அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவருடன் நான் இருந்த போதெல்லாம் அசௌகரியமாக உணர்ந்தேன். சில மாதங்களுக்குப் பின், அந்த நபர் தன் வேலைகளை ஒழுங்காக செய்யவில்லையென்றும், வெளியே தெரியாமலிருக்க சில காரியங்களை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் கண்டு பிடித்தோம். நான் முன்பே அதைத் தெரிந்திருந்ததால் ஏமாற்றத்தால் அதிகமாக பாதிக்கப்படவில்லை. பகுத்தறிதலானது, தவறான மக்களுடன் நாம் ஈடுபடுவதைத் தடுக்கின்றது. காரியங்கள் நடக்கும் முன்பாகவே ஆயத்தமாக இருக்க உதவுகின்றது.

ஏதோவொன்று சரியாக இல்லை என்று நான் உணரும் போது அல்லது அசௌகரியமாக உணரும் போது, அந்த உணர்வுகளை மட்டுமே சார்ந்திருப்பதில்லை. ஏனென்றால் நான் தவறாக இருக்கக்கூடும். என் உண்ர்வுகளை மட்டுமே சார்ந்து நான் ஒருவரை நியாயந்தீர்க்கவோ அல்லது என் இருதயத்தை அடைத்துக் கொள்ளவோ விரும்பவில்லை. ஏதாவது பிரச்சினை இருக்குமென்றால் அதைக் காட்டும் படி ஜெபிக்கின்றேன். ஆனால் நான் அதிக ஜாக்கிரதையாக இருக்கவும், என்னை நான் அதிக கவனமாக கவனிக்கவும் உதவுகிறது. அவர் எப்போதுமே பிரச்சினைகளைக் காட்டுகிறார். பகுத்தறிவுக்காக ஜெபியுங்கள். நீங்கள் அதிகமாக வஞ்சிக்கப்படாமலும் காயப்படாமலும் இருக்க அது உதவும்.

ஒரு உண்மையான ஆவிக்குறியவர் பகுத்தறிகிறவனாக இருக்கிறார்.

> ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.
>
> 1 கொரி 2:15

## தேவனை நம்பு

நாம் மக்களை எப்போதுமே நம்ப இயலாவிட்டாலும், தேவனை எப்போதுமே நம்பலாம். நம் பரலோக பிதா எதை அவரிடம் ஒப்படைத்தாலும், நம்பி அவரிடம் ஒப்படைக்கலாம் என்பதை மீண்டும் மீண்டுமாக நிரூபித்திருக்கிறார்.

நாம் பதிலளிக்க வேண்டிய, இது மாதிரியான சில கேள்விகள் இருக்கிறதென்று நான் உணர்கிறேன். தேவன் நல்லவராகவும் ஆளுகிறவராகவும் இருப்பாரேயென்றால், மக்களின் வாழ்விலே நடைபெறும் சில பயங்கரமான சூழ்நிலைகளைப் பற்றி அவர் ஏன் எதுவும் செய்கிறதில்லை? நம் வேதனைகளைப் போக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் அதை செய்யாமலிருக்கும் ஒருவரை எப்படி நம்புவது? ஏன் நல்லவர்களுக்குக் கெட்ட காரியங்கள் நடைபெறுகிறது? என் தகப்பன் மிகவும் பொல்லாதவராக 83 ஆண்டுகள் வாழ்ந்தார். சமீபத்திலே இரண்டு சிறு பிள்ளைகளுக்குத் தாயாக இருந்த முப்பத்தி ஏழே வயதான ஒரு இளம் மனைவியின் அடக்க ஆராதனையிலே நான் பங்கு பெற்றேன். ஏன் சில சமயங்களில் கெட்ட மக்கள் அதிக ஆயுளுடனும், நல்லவர் சீக்கிரமாகவும் மரிக்கின்றனர்?

இவற்றிற்கு சில பதில்கள் இருக்கிறது ஆனால் அவை எல்லோரையும் திருப்திப்படுத்துவதில்லை. இவற்றைப் பற்றி என் குறுகிய ஆற்றலைக் கொண்டு இயன்ற அளவு பின்னர் இந்த நூலில் விளக்குகின்றேன். தேவனை நம்புவதில் சில பதில் பெறாத கேள்விகளும் இருக்கும். ஆனாலும் தேவனை நம்ப வேண்டுமென்று

மீண்டுமாக சொல்கிறேன். தேவனை எல்லையில்லாமல் நம்புவதென்பது, நம் கேள்விகளுக்குப் பதில் இல்லாத போதும் அவரை நம்புவதை விட்டு விடாமல் இருப்பது. நமக்குப் பதில் தெரியாமலிருக்கலாம் ஆனால் தேவன் அறிந்திருக்கிறாரென்ற விசுவாசத்தில் இளைப்பாறலாம்.

தேவனை நம்புவது ஒரு சிலாக்கியமாகும்; நாம் விரும்பினால் தெரிந்து கொள்ளலாம். அநேக ஆண்டுகளுக்குப் பிறகு நான் தேவனை நம்ப தீர்மானித்தேன். ஏனென்றால் அப்படி செய்யா விட்டால் நான் சந்தோஷமாக இருப்பதற்கு வேறு வழி ஏதும் கிடையாது. அவர் என் நம்பிக்கைக்கு பாத்திரராயிருக்கிறாரென்று நான் விசுவாசிக்கின்றேன். என் நம்பிக்கையை ஏதோவொன்றின் மீதோ, யாரோ ஒருவரின் மீதோ வைத்து விட்டு பின்னர் அந்த நம்பிக்கைக்கு பாத்திரராக அவர்கள் இல்லை என்பதை நான் அனுபவித்திருக்கிறேன். எனவே அதை நான் தேவனிடம் கொடுத்து விடுகிறேன். என்னை நானே நம்ப முயற்சித்தேன், அதுவும் முற்றிலும் தோல்வி. நான் மற்றவர்களை நம்புவதற்கு முயன்றிருக்கிறேன். சிலர் உண்மையாலுமே நல்லவர்கள், ஆனால் மனித சுபாவமானது குற்றமுள்ளதே. அரசியலையும் நம்ப முடியாது, பங்குச் சந்தையையும் நம்ப முடியாது ஏன் என் ஓய்வுகால தொகையையும் நம்ப முடியாது. நான் யோசித்துப் பார்த்த பின் தேவனே ஜெயித்தார் - நான் தேவனை நம்புகிறேன்.

இந்தக் கடைசி வாக்கியத்தை நான் எழுதியவுடன் சுவாரஸ்சியமான முறையிலே என்னுடைய ஆத்துமாவிலே சந்தோஷம் பெருகியது. அது நாம் தேவனை நம்பும் போது அவர் மகிழுகிறார் என்று உறுதிபடுத்துகின்றது. அவருக்கு அது பிடித்திருக்கின்றது. அவர் தம் மக்களுக்குள்ளே வாழ்வதால் அவர் மகிழும் போது நாமும் மகிழ்கிறோம்.

உங்களுக்கு சந்தோஷமே இல்லையே என்று நினைப்பீர்களென்றால், உங்கள் நம்பிக்கையைப் பரிசோதித்துப்

பாருங்கள். பவுல் ரோமர்களிடம் என்ன கூறினாரென்றால் சந்தோஷமும், சமாதானமும் விசுவாசிப்பதிலேதான் இருக்கிறது. (ரோமர் 15:13) இந்தக் கோட்பாட்டை நான் என் வாழ்விலே சோதித்ததுண்டு. அது உண்மை என்று அறிந்திருக்கிறேன். நான் தேவனுடைய வார்த்தையையும் வாக்குத்தத்தையும் நம்பி விசுவாசிக்கும் போது, எனக்கு சமாதானமும் சந்தோஷமும் கிடைக்கிறது. நான் வாழ்க்கையை அனுபவிக்கின்றேன். ஆனால் நான் அவரை நம்பாமலிருக்கும் போது, நான் சந்தேகத்தாலும், பயத்தாலும், கவலையினாலும் நிறந்திருக்கிறேன். அது மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. நான் சுமக்க விரும்பாத ஒரு பாரத்தை அது என் மேல் சுமத்துகின்றது.

*“பிதாவே உம்மை நம்ப கற்றுக் கொள்ள எனக்கு உதவுமாறுகேட்டுக் கொள்கிறேன்.”*

நமக்கு இரண்டே இரண்டு வழிகள் தான் உண்டு. தேவனை நம்பு அல்லது நம்பாதே. நாம் பாதி செய்து விட்டு முழு பலனை எதிர்பார்க்கும் காரியம் இதுவல்ல! ஆனால் ஏற்கனவே சொல்லியதைப் போன்று எல்லாவற்றிற்கும் மேல் தேவனிடம் நேர்மையாக இரு. தேவனிடம் நடிப்பது நமக்கு ஒருபோதும் உதவாது; நீங்கள் தேவனை நம்ப விரும்பியும், அது உங்களுக்கு கடினமாக இருக்குமேயென்றால் இந்த ஜெபத்தை ஜெபியுங்கள். “பிதாவே நான் உம்மை நம்புவதற்கு கற்றுக் கொள்ள நீர் உதவுகிறீர்.”

நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கே வந்து உங்களைச் சந்திக்கவும், நீங்கள் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே உங்களைக் கொண்டு செல்லவும் தேவன் விரும்புகிறார். இதுதான் சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்.

அத்தியாயம் 4

# சுய சார்பின் மூடத்தனம்

எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.

2 கொரி 3:5

தேவனை நம்புகிறீர்களா? அல்லது உங்ககளை நம்புகிறீர்களா? பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்ட இந்தக் கேள்வியை இன்னும் அநேகர் விவாதித்துக்கொண்டுதானிருக்கின்றனர். தேவன் தேவை என்பதற்கு எதிராக மனிதன் போராடிக்கொண்டிருக்கிறான்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய தாலந்தை உபயோகிக்க அதிகமாகப் பிரயாசப்பட வேண்டும். அதற்கு நாம் தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஆனால் நம் வாழ்வை நாமாகவே வாழ்ந்து கொண்டு, நாம் விரும்புவதைச் செய்து கொண்டு, நம்மால் தீர்க்கப்பட முடியாத அவசர சூழ்நிலை வரும் வரை தேவனைப் புறகணித்துக் கொண்டு வாழ நாம் அழைக்கப்படவில்லை.

நம் சுயத்தை சார்ந்து வாழ நாம் முற்படும் போது அது மன ரீதியான, உணர்வு ரீதியான, சரீர விரக்தியையும், மன பிரம்மையையும், ஏமாற்றத்தையும்,கோபதாபத்தையும் சில விதமான குழப்பங்களையும் ஏற்படுத்தும்.

யோசுவா 24:15 லே நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தான் ஒவ்வொரு விசுவாசிக்கும் முதன்மையான தெரிந்து கொள்ளுதலாகும்.

தேவனை சேவிப்பது உங்கள் வாழ்க்கைக்குத் தகாததாக காணப்படுமேயென்றால், யாரை சேவிப்பீகளென்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம். இன்று நான் உங்களுக்குக் கொடுக்கக்கூடிய எல்லா எச்சரிக்கைகளிலும் முக்கியமானது, 'தேவனை நீங்கள் சேவிப்பீர்களா இல்லையா என்று நீங்களே தீர்மானியுங்கள். உலகமோ அல்லது மற்றவரோ அதை உங்களுக்காக செய்ய அனுமதிக்காதீர்.

உங்களுடைய ஒரே ஒரு வாழ்க்கையை யாரிடம் ஒப்படைப்பீர்கள்? அல்பாவும் ஒமேகாவுமாக ஆரம்பத்திலிருந்து முடிவை அறிந்தவரிடமா அல்லது இந்த உலக அமைப்புகளின் ஆண்டவனும் சுய சார்பின் ஆவியிடமா?

*நீங்கள் சுயத்தை சாராமல் தேவனை சார்ந்திருக்கலாம். உங்களுடைய ஒரே ஒரு வாழ்க்கையிலே யாரை நம்புவீர்கள்?*

## சுய சார்பு என்றால் என்ன?

சுய சார்பென்பது, பணம், பதவி, அதிகாரம், தோற்றம், சொத்து போன்ற வெளியரங்கமான காரியங்களால் சந்தோஷத்தை அடைய மனிதன் எடுக்கும் முயற்சியாகும்.இந்த மாதிரியான காரியங்கள் நம்மை சந்தோஷமாக வைக்கும் என்று நாம் உறுதியக நம்பும் பொழுது நாம் அவற்றை அதிக வாஞ்சையோடு தொடர்கிறோம். பின்னர் நமக்கு அது கொடுக்கும் என்று நினைத்தவற்றை கொடுக்காமலிருக்கும் போது அதிகமாக ஏமாற்றமடைகிறோம்.

ஒருமுறை ஒருவர் சொன்னதைக் கேள்விப்பட்டேன் மனிதர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் வெற்றி என்னும் ஏணியில் ஏறவே முயலுகின்றனர். ஏணியில் ஏறிய பின்பு தான் அது தவறான கட்டிடத்தின் மீது சாய்ந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுகின்றனர் என்று சொன்னார். யாராவது ஒருவர் அவரது மரணத் தருவாயிலே, தன் வங்கியில் எவ்வளவு பணம்

இருக்கிறதென்று கேட்பாரோ? மாறாக அவர்கள் குடும்பத்தினரோடும், நண்பர்களோடும் தேவன் இருக்க வேண்டுமென்று விரும்புவார்.

நீங்களோ அல்லது வேறு மனிதர் சொல்வதைக் கேட்டிருப்பீர்களென உறுதிப்படுத்துகிறேன். எனக்கு யாரும் தேவையில்லை, என்னை நானே பராமரித்துக் கொள்வேன் என்று சிலர் சொல்வதைக் கேட்டிருக்கலாம். அதையோ அல்லது அதைப் போன்ற வேறொன்றையோ என் வாழ்விலே சில காலம் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் எனக்கு மக்கள் முக்கியமாக தேவன் தேவையென்று கண்டு கொண்டதற்காக நன்றி செலுத்துகிறேன். இத்தகைய கூற்றை சொல்பவர்கள் பொதுவாகவே பிறரால் காயப்பட்டிருப்பார்கள். அவர்கள் இயேசுவின் மூலமாக தேவனுடனான உறவுக்கு அறிமுகப்படுத்தப்படாமலிருப்பார்கள். அவர்கள் தங்களைத் தவிர வேறு ஒருவரையும் நம்ப மாட்டார்கள். அவர்கள் எடுக்கக் கூடிய அதி மோசமான தேர்வு, சுய சார்பு என்பதைக் கண்டு பிடிக்காமலிருக்கிறார்கள். அவர்களை உருவாக்கி, நிபந்தனையின்றி அவர்களை நேசிக்கும் உண்மையான அந்த தேவனை அவர்கள் சந்திக்க வேண்டும்.

ஒருவர் அவருக்கு எவருமே தேவையில்லை என்பதாக நினைக்கலாம். ஆனால் தேவனோ நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் படி சிருஷ்டித்திருக்கிறார். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாழ்விலே நாம் பிறரைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளாவிட்டால் முழுவதுமாக செயல்பட இயலாது. தனிப்பட்ட நபர்களாக நம் ஒவ்வொருவருக்கும் திறமைகள் இருக்கிறது. ஆனால் நம்மில் ஒருவர் கூட எல்லா திறமைகளையும் பெற்றிருக்கவில்லை. நம்மிடம் இல்லாததைக் கொண்டிருப்பவருடன் உறவிலே இருக்கும் படி தேவன் செய்கிறார். நாம் இணைந்து கிரியை செய்யக் கற்றுக் கொள்ளும் போது பெரிய காரியங்களை நிறைவேற்றலாம். நம் வாழ்வை நாம் அனுபவிப்போம்.

வறுந்ததக்கதென்ன வென்றால் நாமணைவரும் ஒருவரையொருவர் குற்றப்படுத்திக் கொண்டு காலத்தை விரயமாக்குகின்றோம். அவர்களை ஏற்றுக் கொள்வதற்குப் பதில் புறக்கணிக்கின்றோம். இதனால், அவர்கள் மூலம் நாம் நம் வாழ்வில் பெற்றுக் கொள்ளும் காரியங்களை இழந்து விடுகிறோம். நம்மால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடியவற்றையும் களவாடி விடுகிறோம். நாம் கற்றுக் கொள்ளக்கூடிய முக்கியமான காரியங்களில் ஒன்று ஒவ்வொருவரும் எவ்வளவு விலைமதிக்கத்தக்கவர்கள் என்பதே. நாம் எப்படி பரிபூரணமாயிருக்கிறோமோ, அவர்களும் அவ்வாறே இருக்கின்றனர். ஒரு நல்ல உறவுக்கு முயற்சியும் பிரயாசமும் தேவைப்படுகின்றது. நிச்சயமாகவே அது தேவையானது.

> *யாரோ ஒருவரால் நீங்கள் காயப்பட்டிருப்பதால், எல்லோருமே உங்களை காயப்படுத்துவார்கள் என்று எண்ணிக் கொள்ளாதிருங்கள்.*

யாரோ ஒருவரால் நீங்கள் காயமடைந்தால், எல்லோருமே உங்களைக் காயப்படுத்துவர் என்று கருதாதீர்கள். நாம் நம்மை தனிமைப்படுத்தி, யாரையும் ஏற்றுக் கொள்ளாமலிருப்பதற்குப் பதிலாக பிறரை நம்பி அவ்வப்போது காயப்படுவது மேலானதே. மக்களுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களால், நான் என் இருதயத்தைச் சுற்றிலும் ஒரு சுவரை ஏற்படுத்திக் கொண்டு யாரையும் அதற்குள்ளாக அனுமதிக்கவில்லை. எனக்கு சில உறவுகளிருந்தன, ஆனால் அவை ஆரோக்கியமானதாக இல்லை, ஏனென்றால் நல்ல உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பதிலாக நான் புறக்கணிக்கப்படாமலிருப்பதிலேயே நேரம் செலவழித்துக் கொண்டிருந்தேன். ஆனால் தேவனோடுள்ள எனது உறவினாலும், அவருடைய வார்த்தியின் வல்லமையை அனுபவிப்பதினாலும், மீண்டுமாக நம்ப கற்றுக் கொண்டதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

நீங்கள் காயப்பட்டிருப்பீர்களென்றால், உங்களது காயப்பட்ட உள்ளத்தைக் கடவுள் குணமாக்க அவர் காத்துக் கொண்டிருக்கிறார். அவர் நொறுக்கப்பட்ட இருதயத்தைக் குண்மாக்கி, துயரத்திற்குப் பதிலாக சந்தோஷத்தைக் கொடுக்கிறார். (ஏசாயா 61:1-7). உங்களைச் சுற்றிலும் பாதுகாக்கும் அரணாக அவர் இருப்பார். நாம் காயப்படவே மாட்டோம் என்று அவர் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை. ஆனால் நம்மை ஆறுதல்படுத்தவும் குணமாக்கவும், இழந்ததைத் திரும்பக் கொடுக்கவும் வாக்களிக்கிறார். கீழ்க்காணும் வாக்கியத்தை மெதுவாக வாசித்து தியானியுங்கள். சமயத்தைச் சார்ந்திராமல் தேவனைச் சார்ந்திருப்பது எப்படி என்று நான் கற்றுக் கொண்டிருந்த வேளையிலே இது எனக்கு அதிக அளவில் உதவியது.

> நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.
>
> 2 கொரி 1:3-4

என்னுடைய காயப்பட்ட ஆத்துமாவை ஆற்றுவதற்கு நான் தேவனை அனுமதித்திக்காமல் இருந்திருப்பேனேயென்றால், அவரிடமிருந்து உதவியையும், ஆறுதலையும் பெறுவது எப்படி எனபதைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்க முடியாமல் போயிருக்கும். நீங்கள் செய்ய வேண்டிய சில முக்கியமான காரியங்களும், உதவ வேண்டிய சில நபர்களையும் தேவன் வைத்திருக்கிறார். உங்கள் க்டந்த கால வேதனையிலே மாட்டிக் கொண்டு காயப்பட்டுக் கொண்டேயிருக்கும் நபர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களென்றால் தேவனிடமிருந்து ஆறுதலையும் சுகத்தையும் இன்றே பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறேன். தேவன்

உங்கள் ஆத்துமாவைக் குணமாக்கி வேதனையிலிருக்கும் உங்களை ஆறுதல் படுத்தும்படி கேளுங்கள்.

> *தேவன் உங்களை சுகப்படுத்துவதோடு இழந்து போன வருடங்களைத் திரும்பக் கொடுப்பார்.*

தேவன் உங்களைக் குணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இழந்து போன காலங்களையும் திரும்பக் கொடுப்பார். நாம் அவர் மேல் நம்பிக்கை வைப்போமேயென்றால் நம்முடைய கடந்த கால பிரச்சினைகளுக்குத் தக்கதாக, இரட்டத்தனையான ஆசீர்வாதத்தை உங்களுக்குத் திரும்ப கொடுப்பார். இது ஒரே நாளில் நடக்காவிட்டாலும் தேவனை நம்பி பரிசுத்த ஆவியானவருடன் இணைந்து செயல்படும் போது சிறிது சிறிதாக இது நடைபெறுகிறது.

> உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். ஏசாயா 61:7

இந்த தேவனுடைய வாக்குத்தத்தமானது, என் வாழ்விலும் நான் அறிந்த அநேகருடைய வாழ்க்கையிலும் உண்மையாக நடந்திருக்கிறது. இது உங்கள் அனுபவமாக இல்லாமலிருந்தால், இனி உங்கள் வாழ்வில் நடக்கும். இந்த வாக்குத்தத்தையும் இதைப் போன்ற மற்ற வாக்குத்தத்தங்களையும் பெற்றுக் கொள்ள தேவனை நம்புவதே திறவுகோலாகும்.

## முட்டாள்

நீதிமொழிகளின் புத்தகமானது, ஞானத்தின் தன்மைகளைப் பற்றிச் சொல்லுகிறது. அதை எழுதிய சாலமோன், ஞானம், புத்தியீனம்

ஆகியவற்றின் விளைவுகளைப் பற்றிக் கூற அதிக நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஞானி மற்றும் புத்தியீனன் ஆகிய இருவருக்குமே வாக்குதத்தங்கள் இருக்கின்றன. நீங்கள் ஆசீர்வாதங்களென்று நினைக்கும் அத்தனையும் ஞானிகளுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. வழிநடத்துதல், பாதுகாப்பு, நீண்ட ஆயுள், சரீர ஆரோக்கியம் எல்லாவற்றிலும் வளம், மேன்மை, கனம் ஆகியவை அவற்றுள் சில. ஆனால் புத்தியீனரோ அதற்கு எதிரானவற்றையே எதிர்பார்க்கலாம்.

நீதிமொழிகளின் புத்தகத்திலே, புத்தியீனன் அல்லது முட்டாள் சுயத்தைச் சார்ந்தவனாகவோ, சுய நம்பிக்கை உள்ளவனாகவோ சொல்லப்படுகிறான். எவனொருவன் சுயத்தைச் சார்ந்திருக்கிறானோ அவன் முட்டாள், அதன் விளைவு எப்போதுமே நன்மையாக இருக்கிறதில்லை. சுயத்தைச் சார்ந்த ஒருவன் அறிவுரையை எடுத்துக் கொள்ள மறுக்கிறான்.

அவர்களுடைய வழியே எப்போதும் சரியானது என்று உறுதியாக இருக்கிறார்கள். ஒரு முட்டாளுக்கு சூட்டப்படும் உயர்ந்த மதிப்பு இலட்சையேயாகும் (நீதி 3:35). முட்டாள்கள் யோசிக்காமல் பேசுகின்றனர். அவர்கள் பேசுவதைக் கொண்டு அவர்களை இனங்கண்டு கொள்ளலாம். அவர்கள் நீதிமான்களைப் பரிகாசம் செய்யும் பரியாசக்காரர்கள். அவர்கள் தீமையை நேசித்து, நன்மையை வெறுக்கின்றனர். ஒரு புத்தியீனமான சுயத்தைச் சார்ந்தவனின் அழிக்கும் குணம் அவனது பெருமையேயாகும். அவர்களது சொந்த பெருமை அவர்களை அழிக்கின்றது. அவர்கள் தேவனுக்கு செவி கொடுக்க மறுக்கின்றனர்.

இந்த உலகத்திலே அனேக முட்டாள்கள் இருக்கின்றனர். அவர்கள் மாறாவிடில், முட்டாள்தனத்தின் பலனை அனுபவிப்பார்கள் என்று சொல்வதில் தவறேதுமில்லை என்று நான் நினைக்கிறேன். தேவனைப் பற்றி ஊக்கப்படுத்தும் காரியம் என்னவென்றால், அவர் நமக்கு ஒரு புதிய தொடக்கத்தை எப்போது தேவையோ அப்போது கொடுக்கிறார். எவருமே அவர்களாகத் தெரிந்து கொண்டாலொழிய, அவர்களது

கடந்த காலத்திலே மாட்டிக் கொண்டிருப்பதில்லை. நான் அநேக ஆண்டுகளாக சுயத்தைச் சார்ந்தவளாக இருந்த போதும், தேவனுடைய உதவியால் மாறியிருக்கிறேன். எல்லா நேரங்களிலும் தேவன் எனக்குத் தேவை என்பதையும், மனிதர்களும் தேவை என்பதையும் அறிந்திருக்கிறேன். என் வாழ்விலே சரியான நபர்களைக் கொடுக்க நான் தேவனை நம்புகிறேன். பின்னர் அவர்களுடன் இணைந்து தேவன் பேரிலே நம்பிக்கையை வைக்கும் போது அற்புதமான காரியங்கள் நடைபெறுகிறது.

ஒரு நல்ல கிறிஸ்தவனாக இருக்கத் தம்மை அர்பணித்தவர் கூட அவ்வப்போது முட்டாள்தனமான காரியத்தைச் செய்கிறார். எனக்குத் தெரியும் நானும் அவ்வாறு செய்வதுண்டு. அநேக மாதங்களுக்கு முன், நன்கு யோசிக்காமல், ஒரு நீண்ட காலத் திட்டத்திற்கு என்னை அர்ப்பணித்தேன். அவ்வாறு செய்திருக்கக் கூடாதென்று இப்போது நினைக்கின்றேன். தேவனுடைய ஞானத்தைத் தேட நேரம் எடுத்துக் கொள்ளாமல், என் உணர்ச்சியின் அடிப்படையிலே முடிவெடுத்தேன். அதற்கு நான் மனந்திரும்பினேன். என் வார்த்தையை நான் காத்துக்கொள்ள உதவும்படி தேவனிடம் கேட்டேன். அப்படி செய்யவில்லையென்றால் அது இன்னமும் முட்டாள்தனமாகத் தோன்றும். இந்த தீர்ப்பிலிருந்து பிழைக்க என்னால் கற்றுக் கொள்ள முடியும்.

நான் குறிப்பிடுவது, நாம் அனைவரும் சில சமயங்களிலே முட்டாள்களாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய இருதயம் தேவனோடு சரியாக இருக்குமேயென்றால், அவர் நம்முடைய தவறுகளிலிருந்து ஏதாவது நன்மையைக் கொண்டு வருவார். அவ்வப்போது முட்டாளாக இருந்து தேவனிடம் ஆலோசிக்காமல் தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுப்பதும், சுயத்தைச் சார்ந்த முட்டாளாக வாழ்வதும் வேறானது.

ஒரு சுய நம்பிக்கைக் கொண்ட, சுயத்தைச் சார்ந்திருக்கும் மனிதனை முட்டாளென்று வேதம் விவரிக்கிறதைக் கற்றுக்

கொண்டது என் கண்களைத் திறந்தது. நாம் நினைத்துப் பார்ப்பதற்கு மேல் பெரிதான காரியம் சுய சார்பாகும். அது தேவன் நமக்குக் கொடுக்க விரும்பும் எல்லாவிதமான உதவியையும் தடுத்துக் கதவை அடைத்து விடுகின்றது. நாம் நம்மையே சார்ந்து, நம்மையே நம்பும் போது கிடைக்கும் பலனானது, தேவனை நம்பும் போது கிடைக்கும் ஆச்சரியமான பலனை விட மிகவும் குறைவானதே!

## நீங்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதில்லை

யாரையும் நம்பாமல் உங்களை மட்டுமே நம்புவது சுமப்பதற்கு அரிய சுமையாகும். அப்படியென்றால் எல்லாவற்றையும் நீங்களே செய்தாக வேண்டும். ஓ, அதைப்பற்றி எண்ணும் போது நான் களைத்துப் போகிறேன். ஏனென்றால் அப்படி நான் இருந்தது என் நினைவுக்கு வருகிறது. நம்பிக்கையைப் பற்றிய விளக்கத்தின் ஒரு பகுதி சார்ந்திருத்தல். அப்படியென்றால் சாய்ந்து கொள்ளுதல், நம்பிக்கை வைத்தல், சார்ந்திருத்தல் என்பதாகும். நாம் பிறரைச் சார்ந்து கொள்ளும் போது நம்முடைய சுமையை இலகுவாக்குகிறோம்.

“இப்படியே என்னால் இருக்க முடியாது” என்று நீங்கள் சொல்வீர்களானால், நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டதற்கும் அதிகமாக செய்ய முயற்சிக்கிறீர்கள். நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒரு அளவு இருக்கிறது. நம்முடைய அழுத்தங்களின் அளவை நாம் கவனிப்போமேயென்றால், அந்த அளவு என்ன என்பதைக் கண்டறிந்து கொள்ளலாம். நான் அவ்வளவு பெரிய சுமையைச் சுமக்கையிலே, எப்போதும் களைத்துப் போய், அடிக்கடி குற்றப்படுத்திக் கொண்டு, பொறுமையில்லாமல் கோபப்பட்டுக் கொண்டிருப்பேனேயென்றால், நான் என்னுடைய அளவைக் கடந்து விட்டேன். நான் ஒன்று தேவனிடமிருந்தோ அல்லது அவர் கொடுத்த மனிதர்களிடமிருந்தோ உதவி பெற வேண்டும். நான் பிறரைச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால் நான் எப்படி நம்புவது என்பதை அறிந்திராமலிருக்கும் போது அது கடினமாகிறது.

நாம் செய்து கொண்டிருக்கும் அனைத்தையும் செய்யத்தான் வேண்டுமா? நாம் தான் அதைச் செய்ய வேண்டுமா? அல்லது யாரையாவது நம்ப நாம் பயப்படுகிறோமா? ஒருவேளை எல்லாவற்றையும் செய்ய வல்லவர் என்பதிலிருந்து நாம் நம்முடைய அடையாளத்தைக் காட்ட விரும்புகிறோமா? இந்த கேள்விக்கு நேரடியாக பதில் சொல்வதற்கு கொஞ்சம் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. எத்தனை மக்கள் உண்மையாலுமே தங்களையும் அவர்கள் செய்யும் காரியத்திற்குப் பின்னால் இருக்கும் நோக்கத்தையும் அறிந்திருக்கின்றனர். எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று ஏன் நினைக்கிறோம் என்று நம்மை நாமே கேட்பதற்கு பயப்படுகிறோமா? நான் மிகுந்த வேதனையோடு கண்டு பிடித்த காரியங்களுள் ஒன்று, எல்லா காரியங்களையும் நானே செய்ய வேண்டுமென்று நினைத்தேன். ஏனென்றால் நான் செய்வது போல் எவருமே செய்ய மாட்டார்களென நம்பிய ஒரு பெருமைக்காரியாக இருந்தேன்.

என்னுடைய கடந்த காலத்தால் என்னுள் புறக்கணிப்பின் வேர் இருந்தது. அதனால் நான் உதவி கேட்கத் தயங்கினேன். ஏனென்றால் புறக்கணிக்கப் படுவேன் என்று நினைத்தேன். நாம் உதவி கேட்டு இல்லை என்ற பதிலைப் பெற்றால் அது நன்றாக இருக்காது. எல்லோரையும் போன்று காரியங்களை ஆழமாய் பார்ப்பதற்கு பயந்தேன். நான் நொடிந்து போகும் வரை அவ்வாறே செய்து கொண்டிருந்தேன். பின்னர் தான் எனக்கு உதவும் படி தேவனிடம் கேட்டேன்.

இனிமேல் முடியாது என்று நீங்கள் உணரும் போது விட்டு விடாமல் தேவனிடம் உதவும் படி கேளுங்கள். நாம் தேவனிடம் உதவும் படி கேட்கும் போது அவர் நமக்கு உண்மையைக் காட்டுகின்றார். அது சுலபமாக ஏற்றுக் கொள்ள இயலாது. சத்தியம் நம்மை விடுதலையாக்கும். ஆனால் நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அது கடினமானதொன்றாக இருக்கிறது.

நான் பெருமைக்காரி என்று ஒத்துக் கொள்வது எனக்கு சுலபமாக இல்லை. நான் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த விரும்பினேன். நான்

சுயத்தைச் சார்ந்திருந்தேன். யாரும் தேவையில்லை என்ற மனப்பான்மை தேவனுக்கு ஏற்றதல்ல என்பதை உணராமலிருந்தேன். தேவன் இந்த காரியங்களை எனக்கு வெளிப்படுத்திய போது, என் ஆத்துமா அப்படியே திறக்கப்பட்டு என்னை சங்கடப்படுத்தும் விதத்திலே வெளிப்படுத்தப்பட்டேன். ஆனால் உண்மைதான் என்னை விடுதலையாக்கியது. எவரெல்லாம் அதை ஏற்றுக் கொள்ள விரும்புகிறாரோ அதை அவர்களுக்குத் தேவன் செய்வார்.

*தேவனை நம்புவதே எல்லா சுகமாக்குதலுக்கும் தொடக்கமாகும்.*

இப்போது நான் எல்லாவற்றையும் செய்யாமல் இருக்க விரும்புவதோடில்லாமல், என்னால் எல்லாவற்றையும் செய்ய இயலாது என்பதையும் அறிந்திருக்கிறேன். உண்மையாலுமே என்னால் ஒருபோதும் செய்ய இயலாது, உங்களாலும் தான்.

தேவனை நம்புவதுதான் எல்லாவிதமான குணமாக்குதலுக்கும் ஆரம்பம். தொடக்கத்திலே அவை நல்லதாக தோன்றாவிட்டாலும், அவருடைய வழிகளை நாம் நம்ப வேண்டும். நம்முடைய நோயை விட குணமாக்குதல் நம்மை அதிகமாக காயப்படுத்துகிறது. ஆத்துமாவிலும் அது அப்படியாகத்தான் இருக்கிறது. எனக்கு ஆத்துமாவிலே வியாதி இருந்தது. எப்படி நம்புவது என்பது எனக்குத் தெரியாமலிருந்தது. நான் பயத்திலே வாழ்ந்தேன். பாரமான சுமையை நித்தமும் என் முதுகிலே சுமந்து திரிந்தேன். ஒப்பிட்டுப் பார்க்கும் படிக்கு எனக்கு ஒரு கடந்த காலம் இருப்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் என் வாழ்க்கை எவ்வளவு அருமையாக இருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. நான் எவ்வளவு அழுத்தங்களுக்குள் இருந்தேன் என்பதையும், இப்போது நான் எவ்வளவு இலகுவாகவும், விடுதலையாகவும் இருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்க்கும் பொழுது நான் உண்மையாலுமே தேவனுடைய வல்லமையையும்

நன்மையையும் பாத்து ஆச்சரியப் படுகிறேன்.

நான் எப்படி இருந்தேன் என்பதைப் பற்றி பேசுகிறேன். ஏனென்றால் அநேகர் இப்படி மாட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று நினைக்கின்றேன். ஒருவர் விடுவிக்கப்பட்டார் என்று அறிந்து கொள்ளுதல் ஒரு துயரப்படும் ஆத்துமாவை உற்சாகப்படுத்தும். அதற்காய் ஜெபிக்கிறேன். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடைபெற்றதைப் பிடித்துக் கொண்டிராமல் தேவனிடம் விட்டு விடும் போது அவ்வாறே நடைபெறும்.

தேவன் உங்களைப் பராமரிக்க உதவ அவரைச் சார்ந்து கொள்ளுங்கள். தேவன் வேண்டாமென்று நினைக்கும் ஜனங்களை நினைத்து நான் அதிர்ச்சியடைகிறேன். தேவனை என் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நான் பெற்றிராவிட்டால் எந்த நோக்கத்தையையும் என் வாழ்விலே நான் அடைகிறதில்லை. தேவன் நமக்கு தேவைப்படும் படிதான் அவர் நம்மை வடிவமைத்திருக்கிறார். எனவே தேவன் இல்லாமல் நம்மால் செயல் படவே முடியாது. சிலர் தாங்கள் நன்றாக இருப்பதாக நினைத்துக் கொண்டு தங்களையே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை அவர்கள் அறிந்து கொள்ளும் நாள் வரும். முற்றிலுமாக உணர்ந்து கொள்வார்கள். தேவன் தங்களுக்கு அளிக்கும் தாழ்மையை பெற்றுக் கொள்வார்கள். இந்தப் போதனையால் நீங்கள் சுயசார்பைப் பற்றி உணர்த்தப்பட்டு, உதவி தேவை என்று எண்ணுவீர்களென்றால் தேவனிடம் கேளுங்கள். அவர்தான் மக்களுக்கு உதவுவதிலே உலகப்புகழ் பெற்றவர். பரிசுத்த ஆவியானவர் இங்கே நம்மோடு கூட இருக்கிறார். அவர் உதவுகிறவராயிருக்கிறார் (யோவான் 14:26). ஒரு தெய்வீக உதவியாளர் உங்களருகில் எப்பொழுதும் நின்று கொண்டிருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் செய்வதற்கு ஏதாவது கொடுத்தால் என்ன? நீங்களே எல்லாவற்றையும் செய்யத் தேவையில்லை. உண்மையென்னவெனில், இயேசு எல்லாவற்றையும் ஏற்கனவே செய்து முடித்து விட்டார். அவரை நம்புவதின் மூலம், அவர் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையின் மூலம், உங்கள் பாரங்களை இறக்கி வைத்து விட்டு நிம்மதி பெருமூச்சு விடலாமே! நீங்கள் தற்காப்புக்குப் பதிலாக தெய்வீகமானவர்களாய் இருக்க முடியும்.

அத்தியாயம் 5

# தேவனை நம்பி நன்மை செய் (பகுதி 1)

> கர்த்தரை நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.
>
> சங்கீதம் 37:3

சங்கீதம் 37:3, நாம் தேவனை நம்பி நன்மை செய்தால் போஷிக்கப்படுவோம் என்று இந்த வசனம் சொல்லுகிறது. ஆனால் நாம் திருப்தியடையும் படி போதுமான உணவைப் பெற்றிருப்பதைப் பற்றி பேசுகிறதில்லை. மாறாக நம் ஆத்துமாவிலே திருப்தியை அனுபவிப்பதைப் பற்றிக் கூறுகிறது. ஏதோவொன்று மாற வேண்டுமென்று நாம் விரும்பலாம். ஆனால் நாம் அதற்காக காத்துக் கொண்டிருக்கையிலே, தேவனிடம் திருப்தியாக இருக்கும் ஒரு ஆத்துமாவைப் பெற்றிருக்க வேண்டும்.

தேவனை நம்புவது, ஒரு பெரிய என்பது கடவுளின் பிள்ளைகளுக்கு மிகப் பெரிய நன்மையை அளிக்கிறது. வெறுமனே வாழாமல், உங்களுடைய வாழ்க்கையை அனுபவிக்க ஏதுவாயிருக்கின்றது. தேவனை நம்புவது நாம் தெரிந்து கொள்ளும் ந்றாகும். அது ஒரு சிலாக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் அதனுடைய முழு பலனையும் பெற்றுக் கொள்ள நம்பிக்கையோடு அதனுடன் இன்னொன்றையும் சேர்க்க வேண்டும். அது என்னவென்றால் நன்மை செய்வதாகும்.

இந்த அத்தியாயம் உங்களுக்கு இன்றியமையாத முக்கிய

புத்தகமாயிருக்க முடியும். சங். 37:3 ல் இருக்கும் ஆவிக்குறிய கோட்பாடானது என் வாழ்வில் எனக்கு அதிகமாக உதவியிருக்கிறது. உங்களுக்கும் அது முக்கியம் என்று நம்புகிறேன்.

தேவனை நம்புவதென்பது, அவர் மேல் நம் கவலைகளையெல்லாம் வைத்து விட்டு எதைப் பற்றியும் கவலைப்பட மறுப்பதாகும். அப்படியென்றால் நம் பொறுப்புகளை நாம் செய்யாமல் இருப்பதில்லை. நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்ள, செய்ய வேண்டிய தேவனால் தூண்டப்பட்ட செயல்கள் உள்ளது. சிலர் தேவனை நம்புவது அல்லது தேவனுக்காக காத்திருப்பதென்பது செயல்படாத நிலையென்றும், தேவன் செய்யும் வரை நாம் எதையும் செய்ய வேண்டியதில்லை என்றும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அது உண்மையல்ல. உதாரணமாக ஒருவர் ஒரு வேலையைப் பெற்றுக் கொள்ளும் படி தேவனை நம்பிக் கொண்டிருந்தும் அதற்காக அவர் பிரயாசப்படாமல் இருக்கும் போது நல்ல முடிவை பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பவுல் இதை எபேசியருக்கு எழுதிய நிருபத்திலே நன்றாக கூறுகிறார். தேவைப்படும் அனைத்தையும் அவர்கள் செய்ய வேண்டும், பின்னர் தங்கள் நிலையிலே உறுதியாக நிற்க வேண்டும். (எபே 6:13) இந்த வேத வாக்கியத்திலே, "தேவனை நம்பி நன்மை செய்" என்ற கோட்பாட்டை பார்க்கிறோம். நீங்கள் என்ன செய்ய் வேண்டுமோ அதை செய்யுங்கள். என்ன செய்ய இயலுமோ அதை செய்யுங்கள். பின்னர் உங்களால் செய்ய இயலாததையும் கூடாததையும் தேவன் செய்வாரென்று அவரை நம்புங்கள்.

நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் என்னவெனில், எல்லா காரியங்களிலும் தேவனை நம்ப வேண்டும். இரண்டாவதாக, நாம் செய்ய வேண்டுமென்று தேவன் காட்டுவதை செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். எனக்குத் தேவையிருக்கும் போது நான் ஜெபிக்கும் முறையை மாற்றும் படி நடத்தப்பட்டேன். "தேவனே, எனக்காக நீர் இதைச் செய்ய உம்மை நம்புகிறேன். இந்த சூழ்நிலையை நீர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிக் கொள்கிறேன். நான் செய்ய

வேண்டியது ஏதாவது இருக்குமெனில் அதை எனக்குக் காண்பியும்" என்று சொல்வேன். இப்படியாக செய்ய நீங்கள் விரும்பலாம். அப்படிச் செய்தால் தேவன் நமக்கு கொடுக்கும் அறிவுரைகள் ஏதாவதிருப்பின் அது நம் தேவைகளைக் கேட்பதில் நம்மை வில்ழிப்புணர்வடைய செய்வதொடு, தேவன் கொடுக்கும் அறிவு நாம் கேட்கும் போது, அவர் அதைக் கொடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி, நான் என்னுடைய நாட்குறிப்பேட்டிலே, எனக்கு அதிக வல்லமை/பெலன் தேவைப்படுகிறது, அதை விரும்புகிறேன் என்று எழுதி வைத்தேன். நான் ஏற்கனவே உடற்பயிற்சியாளருடன், வாரத்தில் மூன்று நாட்கள் உடற்பயிற்சி செய்கிறேன். ஆனால் அதோடு இப்போது நடக்க வேண்டுமென்றும் நினைத்தேன். அதற்கான வாஞ்சையையும், பெலனையும் தேவன் எனக்குக் கொடுக்கும் படி அவரை சார்ந்திருந்தேன். சில மாதங்களுக்குள், ஒரு நாளைக்கு ஐந்து மைல் தூரம் நடந்தேன். மிகவும் வலிமையாக உணர்கிறேன். அதிக சகிப்பு தன்மையும், மனதளவில் அதிக உற்சாகத்தையும் பெற்றிருந்தேன். இதற்கு சன்மானமாக எடையும் குறைந்தது. அது என்னுடைய முதன்மைஆன இலக்காக இல்லாதிருந்தாலும், நான் மிகவும் மகிழ்வுற்றேன். நான் செய்த சற்று அதிகமான உடற்பயிற்சி என் உடம்புக்கு தேவையானதொன்றாக மாறி விட்டது.

> *தேவன் எனக்கு அதிக ஆறுதலைக் கொடுக்க அவரை நம்பினேன். அவரோ நான் செய்யும் படி ஒன்றை எனக்குக் கொடுத்தார்.*

தேவன் எனக்கு அதிக ஆற்றலைக் கொடுக்கும் படி அவரை நம்பினேன். அவரோ நான் செய்யும் படி ஏதோவொன்றை எனக்குக் கொடுத்தார். அதோடு அதை செய்ய எனக்கு வாஞ்சையையும், ஆற்றலையும் கொடுத்தார். நீங்கள் தேவனை நம்பி அவர் உங்களிடம் செய்ய சொல்லும் எதையும் செய்ய உண்மையாலும் ஆயத்தமாக

இருப்பீர்களென்றால், உங்கள் இலக்குக்கு நேராக நீங்கள் அடையும் முன்னேற்றத்தைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுவீர்களென்று நான் நிச்சயமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சமீபத்திலே என் கண்கள் அதிகமாக வறண்டு இருந்தது. சில சமயம் எரிச்சலாக இருக்கும். அது மிகவும் வேதனையளித்தது. பரிந்துரைக்கப்பட்ட எல்லா சொட்டு மருந்துகளையும் உபயோகித்தேன். நான் தூங்கும் அறையிலே, ஈரப்பதத்தை அதிகரிக்கும் கருவியொன்றையும் உபயோகித்தேன். அது கொஞ்சம் உதவினாலும் நான் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டேதானிருந்தேன். குறிப்பாக வறண்ட காலனிலை இருக்கும் இடத்திற்கு நான் செல்லும் போது அது அதிக வேதனையாக இருந்தது. என்னுடைய ஊழிய பொறுப்புகளினிமித்தமாக நான் பல இடங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது.

நான் பல தடவை செய்தது போல இப்போதும், இதைப்பற்றி நான் ஜெபித்தேன். இப்போதும், அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டுமென்று தேவன் சொல்வதாக உணர்ந்தேன். நான் ஏற்கனவே அதிக தண்ணீர் குடித்தேன் என்று நினைத்தேன். இரண்டுபேர் நான் அதிக தண்ணீர் குடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றனர். நான் ஏற்கனவே அதிகம் குடித்துக் கொண்டிருந்ததால் அது பலனளிக்காது என்று எண்ணி விட்டு விட்டேன். சிலர் சொல்லும் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளாத படி நம்முடைய பெருமை நம்மைத் தடுக்கிறது. நமக்கு கொடுக்கப்ப்ட்ட அறிவுரையை தேவன் முன் வைத்து, நம் ஆவியுடன் அது ஒத்துப் போகிறதா என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும். தேவன் அநேகந்தரம் மக்களின் மூலம் நம்முடன் பேசுகின்றார், ஆனால் நாம் அவர்களுக்கு செவி கொடுக்கும் அளவுக்கு தாழ்மையாக இருக்க வேண்டும்.

> *தேவன் நம்மை விட்டு விடாமலிருப்பதற்காக அவருக்கு நன்றி.*

தேவன் நம்மை அப்படியே விட்டு விடாமல் இருந்ததற்க்காக தேவனுக்கு

ஸ்தோத்திரம். மனிதர்கள் மூலமாக நான் என்ன செய்ய வேண்டுமென்று எனக்குச் சொல்ல முற்பட்டாலும், அவரே இப்போது எனக்கு சொல்ல கிருபையாயிருந்தார். நான் குடித்துக் கொண்டிருந்ததை விட இரண்டு மடங்கு அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டுமென்று உணர்ந்தேன். விசேஷமாக நான் வறண்ட சீதோஷணம் உள்ள இடங்களில் இருக்கும் போது, அப்படிச் செய்ய ஒரு நாளைக்கு பதினாறு அவுன்ஸ் பாட்டில் தண்ணீரைக் குடிக்க வேண்டியிருந்தது.அவற்றை என் மேஜையின் மீது வைத்து குடிக்கத் தொடங்கினேன். நிச்சயமாகவே என் கண்கள் சரியாகி விட்டது. மிகவும் சரியாக இருக்கவில்லை ஆனால் முன்பு இருந்ததை விட நன்றாக இருந்தது. இவ்வளவு தண்ணீரைக் குடிப்பது சவலாகத்தானிருக்கிறது. அனுதினமும் நான் அதை செய்கிறதில்லை. ஆனால் அனுபவ ரீதியாக ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடும் என்பதை அறிந்து கொண்டேன். அப்படிச் செய்யும் போது, கடினமாக இருக்கும் என் வாழ்க்கை முறையாக மாறிவிடும்.

இன்னொரு முறை என்னால் தூங்க இயலவில்லை. அதிகாலை வரை நான் புரண்டு புரண்டு படுத்த பின் தேவனிடம் என்ன தவறு என்ன கேட்டேன். அவர், உடனேயே, அன்று நான் ஒருவரிடம் மிகவும் கடினமாகவும், கனிவற்றும் நடந்து கொண்ட ஒரு சம்பவத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்தார். என்னை மன்னிக்கும் படி அவரைக் கேட்க வேண்டுமென்பதை உடனேயே அறிந்து கொண்டேன். நான் எவ்வளவு சீக்கிரம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டேன். அதற்குப் பின் தூங்கி விட்டேன்!

வாழ்க்கையிலே என்னுடைய இலக்கு தேவனைத் தொடர்ந்து நம்பிக்கொண்டிருப்பதும் நன்மை செய்வதுமேயாகும். நன்மை செய்வதென்பது நாம் செய்யும் படி தேவன் நம்மை நடத்தும் நன்மையை செய்வதாகும். அவர் நமக்கு காண்பிக்கும் எல்லாவற்றிற்கும் நாம் உடனே கீழ்படிவதாகும். நன்மை செய்வதின் மற்றொரு பரிணாமத்தைப் பற்றி அடுத்த அத்தியாயத்திலே பேச விரும்புகிறேன். ஆனால் இந்த அத்தியாயத்திலே, பரிசுத்த

ஆவியானவரின் வழிநடத்துதலை நாம் துரிதமாக பின்பற்ற வேண்டியதின் அவசியத்தைக் கற்றுக் கொள்ளுவதற்கு அர்ப்பணிக்கிறேன்.

## நமது உதவியாளர்

இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்ற பின், வேறொரு தேற்றரவாளனை, உதவியாளரை - பரிசுத்த ஆவியை அனுப்பினார்!. அவர் யோவான் 14:16 ல்

> நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.
>
> யோவான் 14:16

இயேசு தம்முடைய ஆவியை எப்போதும் நம்முடனிருக்கவும், நமக்குள்ளிருக்கவும் அனுப்பினார். யோவான் 16:13 படி பரிசுத்த ஆவியானவர் நம் நடத்துநர். என் வாழ்க்கை முழுவதும் என்னுடன் நடக்க பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரென்ற எண்ணத்தை நான் விரும்புகின்றேன் அந்த எண்ணம் உங்களையும் சந்தோஷப்படுத்தும் என்று எண்ணுகிறேன். நான் தனியாக இருக்கவோ, எல்லாவற்றையும் நாமே செய்யவோ தேவையில்லை. ஏனென்றால் நமக்கு உதவும் படி பரிசுத்த ஆவியானவர் நம்மில் இருக்கிறார். நாம் செய்ய வேண்டியதற்கு நேராய் நம்மை நடத்துகிறார். அதைச் செய்ய நமக்கு உதவுகிறார். நம்மை பெலப்படுத்துகிறார்!. தேவனை எல்லா சமயங்களிலும் சார்ந்து கொள்ளும் படி பாருங்கள், ஏனென்றால் அவரின்றி நம்மால் எதுவும் செய்ய இயலாது (யோவான் 15:5). நாம் நம்முடைய நம்பிக்கையை இயேசுவிலே வைக்கும் போது, நம்மேலிருக்கும் அழுத்தத்தை அது எடுத்து விடுகிறது.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட செயலை செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புவாரேயென்றால், அது என்ன என்பதை அவ்வளவு சீக்கிரம்

அறிந்து கொள்ள இயலாது. ஆனால் தேவன் மேல் உங்கள் நம்பிக்கையை வைத்து பொறுமையாக காத்திருப்பீர்களேயானால், அவர் தம் சித்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஒரு சூழ்நிலையை தேவன் பார்த்துக் கொள்ளும் படி அவருக்காக காத்திருந்த சமயங்கள் இருக்கின்றன. அந்த சூழ்நிலையைப் பற்றி நான் நேர்மறையாகப் பேசி ஒரு மாற்றத்திற்காக முன் கூட்டியே நன்றி செலுத்துவதே நான் செய்தது. இரண்டொருதரம் நாங்கள் தியாகமாக கொடுக்க வேண்டுமென்று அவர் சொன்ன தருணங்கள் நினைவில் இருக்கிறது. மற்றொரு சமயம், அது உபவாசமாகவும், சில சமயங்களிலே ஆராதித்து காத்திருக்கும் படியும் கூறினார். தேவன் நம்மோடு இப்படிப் பேசுவார், இப்படி கிரியை செய்வார் என்று எண்ணிக் கொண்டிராதீர்கள். ஏனென்றால் அவருடைய வழிகளுக்கு முடிவில்லை.

*உண்மையாகவே அவருடைய வழினடத்துதல் தேவைப்படுகிறவர்களை தேவன் நடத்துகிறார்!*

தேவன் நம்மை நடத்தும் போது, நாம் செல்ல வேண்டிய குறிப்பிட்ட திசையை நம் இருதயங்களில் உறுதியாக உணர்கிறோம் அல்லது மாறாத ஒரு எண்ணத்தையோ கருத்தையோ கொண்டிருக்கிறோம். அவருடைய வழிநடத்துதலை உண்மையாக விரும்புபவர்களை தேவன் நடத்துகிறார். சில சமயங்களிலே தவறுகள் செய்வதின் மூலம் நாம் கற்றுக் கொள்கிறோம். எனவே விசுவாசத்தால் அடியெடுத்து வைத்து விட்டு தவறாக புரிந்து கொண்டோமென்று கண்டுபிடிப்பீர்களென்றால் விட்டு விடாதீர்.

தேவன் விரும்பாததை நான் செய்து கொண்டிருப்பேனென்றால் என்னுடைய ஆவியிலும், ஆத்துமாவிலும் அசவுகரியத்தை உணர்வேன். அந்த உணர்வு தொடருமேயென்றால், நான் வேறொரு பாதையை தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை கற்றுக் கொண்டிருக்கிறேன். அது என்னவென்று காத்திருந்து கண்டு பிடிக்கின்றேன். நான் செய்ய

வேண்டுமென்று தேவன் விரும்புவதை செய்யும் போது, சமாதானத்தையும், சந்தோஷத்தையும், கிருபையையும் உணர்கிறேன்.

உங்கள் வாழ்விலே கட்டுப்படுத்துபவர் யார்? தேவனாக இருந்தால், காரியங்கள் நன்றாக நடைபெறும், இல்லையென்றால் அது அவ்வளவாக நன்றாக இராது.

## அவர் உங்களிடம் சொல்வதை செய்யுங்கள்!

ஒரு கூட்டத்தின் முடிவிலே, என்னிடம் பேசும் படி வந்த ஒரு பெண்ணின் கதையை நான் அடிக்கடி சொல்வதுண்டு வாரயிறுதி நாட்களிலே தனிப்பட்ட சாட்சிகளைப் பகிர்ந்து கொண்ட மற்ற அநேக பெண்களுடன் அவள் இருந்தாள். தேவன் அவர்களைச் செய்யும் படி சொன்ன காரியங்களை செய்து போது, எதிர்பார்த்திருந்த மாற்றத்தை பெற்றுக் கொண்டனர். அவள் சொன்னாள், "ஜாய்ஸ் அவர்கள் செய்யும் படி வழிநடத்திய அனைத்தையும், என்னையும் செய்யும் படி சொன்னார். ஆனால் வித்தியாசம் என்னவெனில் தேவன் சொன்னதை அவர்கள் செய்ததால் தங்கள் பிரச்சினையின் மேல் வெற்றி பெற்றனர். நானோ அவ்வாறு செய்யவில்லை." வாழ்க்கையில் முன்னேறி, நாம் சந்திக்கும் சவால்களை மேற்கொள்ள பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை பின்பற்றுவதே திறவுகோலாகும்.

இதை விட எளிமையாக சொல்ல இயலாது! ஒரு நல்ல வேதாகம உதாரணம் யோவான் 2-ம் அதிகாரத்திலிருக்கிறது. கானாவூர் கலியாணத்திலே திராட்சரசம் தீர்ந்து போன போது இயேசுவின் தாயாகிய மரியாள் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்தார். 5-ம் வசனத்தில் அவர் வேலையாட்களிடமாய் திரும்பி, இயேசு என்ன சொல்லுகிறாரோ அப்படியே செய்யுங்கள் என்று சொன்னார். தேவனிடம் உங்கள் முழு வாழ்க்கையின் கட்டுப்பாட்டை கொடுத்திருப்பீர்களென்று சொன்னால் இதை உங்கள் வாழ்வின் இலக்காக ஏற்றுக் கொள்ள ஆவலாக இருக்கின்றீர்களா? அப்படிச் செய்வீர்களென்றால் ஒருபோதும் வருத்தமடைய மாட்டீர்கள்.

நான் தேவனை உண்மையாலுமே நம்புகிறேனா? அவர் என்னிடம் செய்ய சொன்னதை செய்திருக்கிறேனா? அல்லது அவருக்கு கீழ்ப்படிவதைத் தள்ளி விட்டு இன்னும் நான் விரும்புவதைப் பெற்றுக் கொள்வேனென்று நம்பிக் கொண்டிருக்கிறேனா? தேவனுக்கு கீழ்ப்படிய விருப்பம் இல்லாவிட்டாலும் அவரை நம்ப ஒருவரால் முடியுமா? அப்படி இருக்காது என்று நினைக்கிறேன்! இது கொஞ்சம் கடினமாகத் தோன்றும், ஆனால் அது உண்மை என்று நினைக்கிறேன். ஒருவேளை நாம் எதுவும் செய்ய வேண்டாம் என்று சொன்னால் செய்யாமலிருப்பதும், தேவன் நாம் செய்ய வேண்டுமென்று சொல்வதைச் செய்வதும் தேவனை நம்புவதாகும்.

தேவன் நாம் எதுவும் செய்ய வேண்டாமென்று சொல்லும் போது என்ன செய்வது?

நாம் செய்யும் படி தேவன் சொல்லும் காரியங்களுண்டு. நாம் செய்வதை நிறுத்த வேண்டுமென்று சொல்லும் காரியங்களும் உண்டு. என் கணவர் மாற வேண்டுமென்று நான் விரும்பிய சமயம் உண்டு. ஆனால் அதை நான் எவ்வளவு முயன்றும் சுய முயற்சியாலும் போராட்டத்தாலும் செய்ய இயலவில்லை. அவர் தொடங்கியதை அவரே முடிப்பாரென்று எண்ணி காத்திருக்க வேண்டியதாயிருந்தது. (பிலி 1:6) நான் செய்யாமலிருக்க வேண்டுமென்று தேவன் சொன்ன காரியங்களில் அதிகமான ஈடுபாட்டுடன் இருக்க விரும்பினேன். அதை விட்டு விடுவது எனக்கு சுலபமாக இருக்கவில்லை.

தேவன் உங்களை, செய்வதை நிறுத்து என்று சொல்லிய காரியங்கள் ஏதாவது இருக்கிறதா? நிச்சயமாகவே, அவ்வப்போது அவர், நான் செய்து கொண்டிருந்த காரியங்களை நிறுத்த சொல்லியிருக்கிறார். என் கணவருடன் ஒத்துச் செல்லாமல் நான் வாதாடும் போது, கடைசி வார்த்தை என்னுடையதாகத் தான் இருக்க வேண்டுமென்று விரும்பியதை இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். ஆனால் தேவன் நான் பேசுவதை நிறுத்தும் படி சொன்னார்! நான் என் கருத்தைச் சொல்ல விரும்புவேன், ஆனால் அடிக்கடி பரிசுத்த ஆவியானவர் சிவப்பு விளக்கைக் காட்டி, என்னை நிறுத்தும் படியும், அமைதியாக இருக்கும் ப்டியும் அறிவுறுத்துவார்.

உங்களுடைய சொந்த பெலத்தாலும், திறமையாலும் நிறைவேற்ற முடியாத காரியங்களைச் செய்ய முயன்று, உங்கள் மாம்ச செயலால் உங்களை நீங்களே விரக்திக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. தேவன் உங்களுக்குச் செய்யும் படி காட்டுபவற்றையும், செய்ய வேண்டாமென்று சொல்லும் காரியத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பதை தயவு செய்து விளங்கிக் கொள்ளுங்கள்.

எனக்குப் பிடித்த வேதபகுதி சங். 46:10 ம் ஒன்று. நான் அமர்ந்திருந்து அவரே தேவன் என்று அறிந்து கொள்ளும் படி கூறுகிறது. ஏதாவது செய்து கொண்டு சுறு சுறுப்பாய் இருப்பதை விட சும்மா இருப்பதே எனக்கு மிகவும் கடினமான காரியம். நாம் நம்முடைய சித்தத்தை அல்ல தேவனுடைய சித்தத்தைச் செய்து கொண்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

தேவனிடம் நீங்கள் ஒப்படைத்து விட்ட ஒரு சூழ்நிலையை, அவர் பார்த்துக் கொள்வாரென்று நீங்கள் அவரை நம்பிக்கொண்டிருக்கும் பொழுது, அவர் உங்கள் ஜெப நேரமானது அதிக விண்ணப்பங்களால் நிறைந்ததாக இல்லாமல் நன்றியால் நிறைந்திருக்கும் படி விரும்புகிறார். வாழ்க்கையிலே ஜெபித்து விட்டு காத்திருப்பதைத் தவிர வேறே எதுவும் செய்ய முடியாத அநேக தருணங்கள் நம் வாழ்விலே இருக்கின்றது. இது விசேஷமாக உங்களுக்கு விருப்பமானவருக்காக ஜெபிக்கும் போது ஏற்படலாம். தேவன் கிரியை செய்யும் படி உங்கள் ஜெபமானது கதவைத் திறக்கின்றது. ஆனால் அந்த நபர் தேவன் தன்னில் கிரியை செய்யும் படி அனுமதிக்க வேண்டும்.

நான் ஒருவருக்காக நீண்ட காலம் ஜெபித்த சந்தர்ப்பங்களுண்டு, ஆனால் இன்னும் தேவனிடம் கேட்டுக் கொண்டிராமல் அவருக்கு நன்றி செலுத்த நடத்தப்படுகிறேன்

## கீழ்ப்படிதலின் வல்லமை

தங்கள் விசுவாசம் ஏன் கிரியை செய்கிறதில்லை என்று குழப்பமடைந்திருப்பவரிடம் நான் அடிக்கடி பேசுவதுண்டு.

அவர்களுடன் சிறிது நேரம் இருந்த பின் ஏன் அப்படி என்பதை என்னால் கண்டு பிடிக்க முடிந்தது. அவர்கள் குறைகூறுகின்றனர். பிறரை குற்றப்படுத்துகின்றனர். அவர்கள் எதிர்மறையானவர்களாக இருக்கிறார்கள்!.

அத்தகைய நடத்தையானது பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு கட்டுப்படுவதில்லை. நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

நம்முடைய சத்துருவான சாத்தானின் மேல் நமக்கு வல்லமை இருக்கிறது. ஆனால் அந்த வல்லமையை உபயோகிக்கும் அதிகாரம் தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பதின் மூலம் கிடைக்கிறது. இயேசு நிச்சயமாகவே வல்லமை நிறைந்தவராக இருந்தார். அவர் மரண பரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவராக இருந்தார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் நாமத்தை சொல்கையிலே முழங்கால்கள் யாவும் முடங்க வேண்டும். (பிலி 2:8-10)

அநேகரின் ஜெபங்களுக்கு பதில் வராமல் தடைபடுகிறதற்கான காரணம் அவர்கள் விட்டு விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் கோபம் மற்றும் கசப்பு தான். நம்மைக் காயப்படுத்தினவர்களையும், நாம் எதிரிகள் என்று நினைப்பவர்களையும் மன்னிக்க வேண்டுமென்று தேவனுடைய வார்த்தையிலே அதிக தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஜெபிக்கும் போது ஒருவருடன் ஏதாவது கசப்பு இருக்குமானால் அதை மன்னிக்க வேண்டும் (மாற்கு 11:25). எனவே நம்மில் எவராவது மன்னிக்க மறந்து விட்டு தேவனுடைய கிரியையை நம் வாழ்விலே காண முயன்றால், அது தவறான முயற்சியாகும்.

இப்போது, நம்முடைய கீழ்ப்படிதலால் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லவில்லை. கிறிஸ்துவின் கீழ்படிதல் தான் நமக்கு இரட்சிப்பை அளிக்கிறது. நாம் நம்முடைய சொந்த கிரியையினாலல்ல, தேவனுடைய கிரியையினாலே இரட்சிக்கப்பட்டோம் (எபி 2:8). ஆனாலும் ஒருவன் கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பென்னும் ஈவைப்

பெற்றுக் கொள்ளும் போது, அவன் அவரை நேசிப்பதால் கீழ்ப்படிதலில் வளர விரும்புவான் என்று உண்மையாகவே நம்புகிறேன்.

*அநேக கீழ்படியாமையோடு கொஞ்சம் கீழபடிதலைக் கலப்பது, கசப்பான வாழ்க்கையையே கொடுக்கும்.*

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களை நம்பி, கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்ப்பர். எனவே அப்படியாக தேவனும் நம்மிடம் எதிர்பார்க்க மாட்டாரென்று ஏன் நினைக்கக்கூடாது? நீங்கள் எப்போதுமே தேவனை நம்பவும், அவர் சொல்வதைச் செய்யவும், செய்யாதே என்று சொல்வதைச் செய்யாமலிருக்கவும் உங்கள் மனதில் தீர்மானிக்க வேண்டுமென்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன். (கொலோ 3:2). நாம் எபோதாவது செய்வது நம் வாழ்வில் வெற்றியை கொடுக்கிறதில்லை. ஆனால் எதை நாம் தொடர்ந்து ஜாக்கிரதையாக செய்கிறோமோ அதுதான் வெற்றியளிக்கிறது. அதிகமான கீழ்ப்படியாமையோடு கலந்திருக்கும் கொஞ்ச விசுவாசம் கசப்பான வாழ்வைத்தான் கொடுக்கும்.

தேவனுக்கு அதிகமாக கீழ்ப்படிய உங்களை அர்ப்பணிப்பீர்களா? நீங்கள் அப்படி அர்ப்பணிபீர்களென்றால், அதைச் செய்யத் தேவையான கிருபையை அவர் கொடுப்பார். தேவனிடம் முற்றிலுமாக ஒப்படைக்க வேண்டிய பகுதிகள் உங்கள் வாழ்வில் ஏதேனும் இருக்கிறதா? நீங்கள் ஒரு புதிய தொடக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்! ஒரு புதிய தொடக்கம்! பிதாவே என்னுடைய சித்தமல்ல உம் சித்தமே ஆகக்கடவது என்பது உங்கள் இருதய கதறலாக இருக்கக்கடவது!

இப்போது நாம் நன்மை செய்வதின் இரண்டாம் பகுதிக்குள்ளாக கடந்து செல்வோம். அது மிகவும் நல்லது அதைப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கிறேன்!

அத்தியாயம் 6

# தேவனை நம்பி நன்மை செய் (பகுதி 2)

> நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.
>
> கலா 6:9

தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றுதல் "நன்மை செய்தல்" என்று பார்த்தோம். ஆனால் இந்த அதிகாரத்திலே தேவையிலிருக்கும் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதின் மூலம் தேவனுக்கு கீழ்ப்படிவதைப் பற்றி பேச விரும்புகிறேன்.

அப். பவுல் கலாத்தியருக்கு நன்மை செய்வதிலே சோர்ந்து போகாதிருக்கும் படி சொன்னார் (கலா 6:9) சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் விசேஷமாக எல்லோருக்கும் விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யும் படி அறிவுறித்தினார் (6:10) தேவையிலிருக்கும் மற்றவருக்கு உதவி செய்வதை நன்மை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக நாம் பார்க்க் வேண்டும். பிறரை ஆசீர்வதிக்கவும் நாமும் ஆசீர்வதிக்கப்படவும் அதை ஒரு சந்தர்ப்பமாக பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை செய்ய நோக்கமாயிருப்பவர்கள், சந்தோஷமான மக்களாவர்!

கொடுப்பது தேவன் நம்புவதிலே ஊன்றப்பட்டிருக்கிறது என்று நான் உண்மையாக நம்புகிறேன். தேவன் நம்மிடம் சொல்லியிருப்பதால் செய்கிறோம். நம்முடைய சொந்த பொருளாதார

தேவைகளை அவர் சந்திப்பார் என்று வாக்களைத்திருக்கிறதை நாம் நம்புகிறோம். நன்மை செய்வது அதை ஜாக்கிரதையாய் செய்கிறவர்களுக்கு அற்புதமான காரியங்களைச் செய்கிறது. அப் 20:35 சொல்கிறது. "...வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்." நாமாகவே கொடுப்பது, நம் வாழ்விலே சந்தோஷத்தை அளிக்கிறது. தேவன் நம்முடைய சொந்த தேவையைச் சந்திக்க அவருக்காக நாம் சந்தோஷமாக காத்திருக்க உதவுகிறது. எனவே "எனக்கு பிரச்சினைகள் இருக்கும் போது நான் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்" என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்களென்றால், பதில் மிகவும் எளிமையானதே. வேறொருவருக்கு ஒன்றை செய்வதின் மூலம் உங்களைப் பற்றி யோசிப்பதை மாற்றுங்கள். தேவன் நமக்கு பதிலளிக்க நாள் முழுவதும் நம்முடைய பிரச்சினைகளையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. உங்களுக்கு என்ன தேவை, என்ன வேண்டும் என்பதை அவரிடம் சொல்லுங்கள். பின்னர் நீங்கள் நன்மை செய்வதிலே நோக்கமாயிருக்கையில் அவர் அதை கொடுப்பாரென்று நம்புங்கள்.

அப் 10:38 எனக்கு பிடித்தமான வேத பகுதிகளில் ஒன்றாகும். அதிலே இயேசு பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். "அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் விசேஷமாக பிசாசினால் ஒடுக்கப்பட்டவர்களை..." நாம் அவருடைய நடக்கையைப் பின்பற்ற போதிக்கப்பட்டிருக்கிறோம். எனவே அப்படிச் செய்ய இது ஒரு சிறந்த வழியாகும். பிசாசினால் ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களால் இவ்வுலகம் நிறைந்திருக்கிறது. இயேசு செய்தது போல நாமும் உதவி செய்ய பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம்.

*பிறருக்கு உதவ கூடாத படி உங்களுக்கே அதிக பிரச்சினைகள் இருக்கிறதென்று நினைக்கும் தவறை செய்யாதீர்.*

நாம் நன்மை செய்யும் ஒவ்வொரு முறையும் நம் அறுவடைக்கான விதையை விதைக்கிறோம். பிறருக்கு உதவ முடியாத படி

உங்களுக்கு அநேக பிரச்சினைகள் இருக்கிறதென்று சொல்லி உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளாதீர். அது நீங்கள் உங்கள் பிரச்சினையிலேயே மாட்டிக் கொண்டிருக்கச் செய்து விடும்.

ஒரு வார இறுதியிலே என் கூட்டம் ஒன்றிலே, தேவனை நம்பி நன்மை செய் என்ற தலைப்பைப் பற்றி நான் போதித்துக் கொண்டிருக்கையிலே, கூட்டம் நடந்து கொண்டிருந்த அந்தப் பகுதியிலே மின்சாரம் தடைபட்டது. கூட்டம் தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக இப்படி நடந்தது. எனவே கூட்டத்தை ரத்து செய்ய வேண்டியதாயிற்று. ஆயிரக்கணக்கானோர் திரும்பிச் சென்றனர். கூட்டம் நடந்திருந்தால், முடிவதற்கு 10 நிமிடம் முன்பு தான் மின்சாரம் திரும்பி வந்தது. நாங்கள் காத்திருந்துஅடுத்த நாள் காலையிலே தொடங்க வேண்டியதாயிருந்தது.

தேவனை நம்புவதைப் பற்றிப் போதிக்க வேண்டிய அந்தக் கூட்டத்திலே நான் தேவனை நம்ப வேண்டியிருந்தது. நாங்கள் ஏற்கனவே சமாளிக்க வேண்டிய பிரச்சினையோடு வெளியே போடப்பட்ட அறிவிப்பிலே “ஜாய்ஸ் மேயர் கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டு விட்டது” என்று போடப்பட்டிருந்தது. அவர்கள் எங்களுக்கு உதவுவதாக நினைத்தனர். ஆனால் அன்றிரவு மட்டும் ரத்து செய்யப்பட்டது மறு நாள் காலை தொடங்கும் என்று போட மறந்து விட்டனர். எனக்கு அந்த பிரமாண்டமான மைதானத்திலே காலி இருக்கைகளுக்கு போதிப்பதைப் போன்று கற்பனைகள் தோன்றின. என் ஆத்துமாவிலே நான் மிகவும் கலங்கினேன். ஆனால் “தேவனே உம்மேல் என் நம்பிக்கையை வைக்கிறேன்” என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இறுதியாக அது ஒரு நல்ல கூட்டமாக அமைந்தது.

போதிக்கும் போது, தேவனை நம்பி நன்மை செய் என்ற கோட்பாட்டை மக்கள் விளங்கிக் கொள்ளும் படி ஒரு கண்ணால் பார்க்கக் கூடிய மாதிரி உபகரணங்களை ஏற்படுத்தினோம். எங்கள் குழுவினர் மூன்று அடி உயரமான இரண்டு மருந்து புட்டிகளை வடிவமைத்தார். அதை மேடையிலே வைத்து, ஒன்றின் மேல் தேவனை நம்பு என்றும், மற்றொன்றின் மேல் நன்மை செய் என்றும் எழுதினர்.

அந்த புட்டிகளின் மேல் எத்தனை தரம் வேண்டுமென்றாலும் நிரப்பிக்கொள்ளலாம் என்றும், எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் உட்கொள்ளலாம், ஏதவது ஒன்றை மட்டும் அளவுக்கதிகமாக உட்கொள்ளுதல் இயலாது என்று எழுதப்பட்டது.

நான் சோதனைகளையும், உபத்திரவங்களையும், பிரச்சினைகளையும், எல்லாவிதமான துயரங்களையும் சமாளிப்பது எப்படி என்பதைப் பற்றி போதிக்கையிலே அறிகுறி தோன்றும் போது உடனே ‘தேவனை நம்பு’ என்ற மாத்திரையை உட்கொண்டு பின்னர் ‘நன்மை செய்’ என்ற மாத்திரையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். இந்த மாத்திரையானது, மக்கள், தேவன் நம்மேல் நண்மையாக இருக்க அவரை நம்பும் போது, பிறருக்கு நன்மை செய்வது நம் ஆத்துமாவுக்கான மருந்து என்பதை அறிந்து கொள்ள உதவியது.

தேவனுடைய வார்த்தை சொல்வதை நாம் பின்பற்றுவோமேயானால், அது நம் ஆத்துமாவுக்கான மருந்தாக அமைகிறது. நாம் உட்கொண்டாலொழிய எந்த மாத்திரையும் நமக்குப் பலன் தருவதில்லை. அதே போல் தேவனுடைய வார்த்தையும். நாம் அறிந்திருந்தும், செய்யாதிருந்தால் அதனால் பயன் இல்லை. உதாரணமாக நீங்கள் பாவம் செய்யும் போது, மக்கள் பொதுவாக செய்வதைப் போன்று, குற்றவுணர்வடைந்தும், ஆக்கினையடைந்தும் விடலாம் அல்லது ‘தேவனே என்னை மன்னியும்’ என்ற வார்த்தையை உட்கொள்ளலாம். அது உங்கள் ஆத்துமாவை சுகமாக்கும். யாரோ ஒருவர் உங்களைக் காயப்படுத்தி விட்டால், கோபப்பட்டு சோர்வாக உணர்வதற்குப் பதிலாக ‘நான் உங்களை மன்னிக்கிறேன்’ என்ற ஆரோக்கியமான மாத்திரையை உட்கொண்டு, உங்கள் நாளை நீங்கள் அனுபவிக்கலாம். தேவனுடைய வார்த்தையை நம் ஆத்துமாவிற்கான மருந்தாக நாம் பார்க்கும் போது, நம் வாழ்விலே நாம் சந்திக்கும் எல்லா பிரச்சினைகளுக்கும் உதவியை பெற்றுக் கொள்ளலம்.

தேவனை நம்பி நன்மை செய்வது நம் ஆத்துமாக்களுக்கான மருந்து என்று நான் நம்புகிறேன் என்பதை மீண்டுமாக சொல்ல

விரும்புகிறேன்.நீங்கள் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ, எத்தனை தரம் வேண்டுமோ அவ்வளவாக எடுத்துக் கொள்ளுங்களென்று உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். இதற்கு பக்க விளைவுகள் உண்டு என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். அவை சமாதானம், சந்தோஷம், உறுதி, நம்பிக்கை, பரலோகத்திலே பலன் போன்றவைகளே.

## நல்ல கிரியை என்பது என்ன?

நற்கிரியை என்பது ஒருவரை பாராட்டுவதாகவோ அல்லது வேதனையிலிருப்பவர்களுக்குச் செவி கொடுப்பதாகவோ இருக்கலாம். தேவையிலிருப்பவருக்கு உங்கள் நேரத்தையும், பணத்தையும் கொடுப்பதும் உள்ளடங்கும். வேதனையால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உற்சாகமளிப்பதும்,

தேவையிலிருப்பவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவுவதைப் பற்றியும் அநேக வேத வாக்கியங்கள் இருக்கிறது. நாம் நற்காரியங்களையும் கனிவான செயல்களையும் செய்ய நாட வேண்டுமென்று சொல்லுகிறது. அப்படியென்றால் பிறருக்கு உதவி செய்ய நாம் வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

> ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்.
> 1 தெச 5:15

இந்த உலகிலே ஒரு திருப்தியளிக்கும் நோக்கத்தோடு நீங்கள் உபயோகமுள்ளவர்களாக வாழ விரும்புகிறீர்களா? “மற்றொருவரின் பாரங்களைக் குறைக்கும் எவரும் இந்த உலகிலே பயனற்றவரல்ல” என்று சார்லஸ் டிக்கன்ஸ் கூறுகிறார். தேவன் காயப்படுகிறவர்களுக்கு உதவ மட்டும் அறிவுறுத்தவில்லை, நம் எதிராளிகளையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். அதை ஏன் செய்ய வேண்டும்? ஏனென்றால் தீமையை நன்மையால் மேற்கொள்ளுகின்றோம் (ரோமர்

12:21). பிரச்சினைகள் வரும் போதும் மக்கள் நம்மை காயப்படுத்தும் போதும் அல்லது நமக்குத் தனிப்பட்டத் தேவை ஏற்படும் போதும், அற்புதமாக செயல்படும் ஒரு இரகசிய ஆயுதம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நன்மை செய்வதே!

நம்மை ஒருவர் காயப்படுத்தும் போதும், நியாயமற்று நடக்கும் போதும், முதலாவது செய்ய வேண்டிய காரியங்களுள் ஒன்று அவர்களுக்காக ஜெபிப்பதாகும். நான் எப்படி ஜெபிக்க வேண்டும்? தேவன் அவர்களை மன்னிக்கவும் அவர்களுடைய நடத்தை மற்றவர்களை துன்பப்டுத்துகிறதென்பதைப் பார்க்கும் படி அவர்களது கண்களைத் திறக்க வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்காவிட்டால் அவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள். இப்படிச் செய்யும் போது அவர்கள் மேல் கோபமாக இருப்பதையும், அவர் செய்ததைப் பற்றி உங்களை நீங்களே வருத்திக் கொண்டிருப்பதிலிருந்தும், உங்களை நீங்கள் விடுவித்துக் கொள்வீர்கள். உடனடியாக அப்படி உணராமலிருக்கலாம், ஆனால் நீங்கள் வழக்கமாக ஜெபித்துக் கொண்டிருக்கும் ஒருவர் மேல் கோபமாக இருப்பது கடினமானதொன்று.

நாம் எப்போதுமே நன்மை செய்ய வேண்டும், ஆனால் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது, நம்மைப் பற்றி நாம் நிதானித்துக் கொண்டு, பிறருக்கு உதவுவதை நாம் நிறுத்திக் கொள்ளக்கூடும். அது ஒரு பெரிய தவறாகும். நன்மை செய்வது எப்போதுமே முக்கியம். ஆனால் உங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும் போது அப்படிச் செய்வது கடினமாகி விடுகின்றது. இயேசு நம்ப முடியாத அளவு வேதனைப்பட்டு மரித்தார், பிறருக்கு நன்மை செய்தார், ஆனாலும் பிதாவிடம் தம்மை சிலுவையிலறைந்தவர்களை மன்னிக்கும் படி கேட்டார், தன்னோடு சிலுவையிலறையப்பட்டு உதவி கோரிய கள்ளனை ஆற்றித் தேற்றினார். (லூக்கா 23:32-43). உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் எனக்கு பிரச்சினைகள் இருக்கும் போது பிறருடன் கோபமாக இல்லாமலிருப்பது மிகவும் கடினம். ஆயினும் இதுதான் கனிவாக இருக்கவும், நன்மை செய்யவும்

பயிற்சி எடுக்க சிறந்த தருணம் என்பதைப் பல ஆண்டுகள் கழித்து கற்றிருக்கிறேன். நமக்கு பிரச்சினைகள் இல்லாத போது பிறரை கனிவாக நடத்துவதற்கு எவ்விதமான ஒழுக்கமும் தேவையில்லை. ஆனால் நாம் காயப்பட்டு வருந்திக் கொண்டிருக்கும் போது தேவனை நம்பி தொடர்ந்து அவர் சித்தம் செய்வதற்கு அதிகமான ஒழுங்கு தேவைப்படுகிறது.

எனக்கு சங்கீதம் 37 மிகவும் பிடிக்கும், அதை நான் அடிக்கடி வாசிப்பதுண்டு. 1-5 வசனங்கள் இந்த ஞானத்தை சொல்கிறது. பொல்லாதவர்கள் மேல் எரிச்சலடையாதே, ஏனென்றால் தக்க நேரத்திலே தேவன் அவர்களுக்கு பதில் அளிப்பார். நீ காத்திருக்கும் போது தேவன் நம்பி நன்மை செய். தேவனிலே மன மகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழியை அவரிடம் ஒப்புவி, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். நாம் நன்றாக உணர்வதற்கு வாசிக்கும் சில வசனங்கள் அல்ல இவை. நாம் பின்பற்ற வேண்டிய அறிவுரையை இவை அளிக்கிறது. நாம் அப்படிச் செய்யும் போது, நம் தேவைகள் மட்டும் சந்திக்கப்படாது. தேவனை அறியாதவர்களுக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்க முடியும். நாம் நற்காரியங்களை செய்யும் போது, நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களென்று இந்த உலகம் நம்மை அறிந்து கொள்ளும் (1 பேதுரு 2:12)

*நற்காரியங்களை செய்வதின் மூலம் தான் நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள் என்று இந்த உலகம் அறிந்து கொள்ளும்.*

## மகா பெரிய கட்டளை

தேவனிடமிருந்து வரும் ஒவ்வொரு கட்டளையும் பெரியதாகவும் முக்கியமானதாகவும் இருக்கையில், நாம் அன்பிலே நடப்பது தான் எல்லாவற்றை விட மகா பெரியதும், மிக முக்கியமானதாகும் என்று இயேசு சொன்னார். நாம் தேவனை நேசிக்க வேண்டும், நம்மை நேசிப்பதைப் போன்று பிறரையும் நேசிக்க வேண்டும்

(மத் 22:36-39) மேலும் அவர் சொன்னார், இந்த அன்பினிமித்தமாகத்தான் நாம் அவருடைய சீஷர்களென்று இந்த உலகம் அறிந்து கொள்ளும்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.
>
> நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.
>
> யோவான் 13:34-35

நற்காரியங்களைச் செய்யாமல் அன்பைப் பற்றி நம்மால் பேச இயலாது. ஏனென்றால் அப்படியாகத்தான் அது பார்க்கப்படுகிறது. அன்பென்பது ஒரு நல்ல பிரசங்கத்தையோ, விளக்கவுரையையோ அல்லது போதனையோ அன்று; அது உண்மையானதும் செயல்படுத்தக்கூடியதுமாகும். அன்பைப் பார்க்கலாம், உணரலாம். வாழ்க்கையை மாற்றும் அற்புத வல்லமையைப் பெற்றிருக்கிறது.

*அன்பு ஒத்து செல்லக்கூடிய வழியைப் பார்க்கிறது; ஒத்துப் போகாமலிருக்க பார்ப்பது இல்லை.*

ஒற்றுமையாக இருக்கும் குடும்பமானது பலமுள்ளது. டேவும் நானும் எங்கள் ஊழியத்தின் தொடக்கத்திலே, எங்கள் இருதயங்களில் சண்டையை வைத்துக் கொண்டு வெற்றியோடு ஊழியம் செய்ய முடியாது என்பதை கற்றுக் கொண்டோம். எங்கள் வாழ்விலே சண்டை இல்லாமலிருக்கும் படி அதிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டோம். அதனால் சமாதானமும் ஒற்றுமையையும் விளைவிக்கும் வல்லமையை நாங்கள் கண்டிருக்கிறோம்.

உங்கள் குடும்பத்திலோ வீட்டிலோ வசிக்கும் இடங்களிலோ, ஆலயத்திலோ வேலை செய்யும் இடங்களிலோ எந்தவொரு சண்டையிலும் பங்கெடுத்துக் கொள்ளாதீர். சண்டையை தவிர்த்து குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவது ஒருவனுக்கு மேண்மை (நீதி 19:11). நாம் தேவனுடைய வழியிலே நடப்பதின் மூலம் அவரை கனப்படுத்தும் போது, நம் வாழ்விலே நம்மை அவர் வெளியரங்கமாக மேன்மைப்படுத்துகிறார்.

அன்பில் நடப்பதற்கு, நம்முடைய உணர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டு வாழ உதவும் காரியங்களை அனுதினமும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நமக்குத் தோன்றும் எல்லாவற்றையும் செய்து கொண்டு அதே சமயம் அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படிய முடியாது. பிறரிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றாமல் இருக்கலாம் ஆனால் அப்படி செய்யும் ஒவ்வொரு முறையும் நான் அன்பிலே நடக்கிறேன். அன்பு நாம் கொண்டிருக்கும் ஒரு உணர்வு அல்ல. அது நாம் மக்களை எப்படி நடத்துகிறோம் என்று தெரிந்து கொள்ளுதல். அன்பில் நடக்க எனக்கு உதவும் ஒரு வசனமானது மத் 7:12 ஆகும்.

*அன்பானது நாம் கொண்டிருக்கும் ஒரு உணர்வு இல்லை. அது மக்களை எப்படி நாம் நடத்துகிறோம் என்பதைப் பற்றிய ஒரு தெரிந்து கொள்ளுதலாகும்.*

> ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

நாம் பிறரை எப்படி நடத்த வேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படி நாம் பிறரை நடத்தும் போது நம் நடத்தை மாறுகிறதை நம்மால் பார்க்க இயலும். இது நம் அனுதின வாழ்விலே

அப்பியாசப்படுத்தக்கூடிய ஒரு எளிமையான அறிவுரையாகும். ஒருவரை நன்றாக நடத்த கடினமாகத் தோன்றும் சூழ்நிலை ஏற்படும் போது உங்களிடம் நீங்களே கேளுங்கள் “இரக்கம் தேவைப்படுபவர் நானாக இருந்தால் இவர் எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று நான் விரும்புவேன்?”

நம் நாட்களெல்லாம் சின்ன சின்ன எரிச்சலூட்டும் காரியங்களால் நிறைந்திருக்கிறது. நாம் கூட்டமான ஒரு இடத்திலே வண்டியை நிறுத்த இடம் தேடிக் கொண்டிருக்கலாம். இடம் கண்டு நாம் அங்கே செல்வதற்கு முன் வேறொருவர் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம். உடனே நாம் எரிச்சலடைகிறோம். அவர்கள் செய்தது நியாயமில்லை என்று கூச்சலிடலாம் அல்லது ஹாரனை அதிகமாக ஒலிக்க செய்யலாம் அல்லது வேறு பல தேவனுக்கேற்காத காரியங்களைச் செய்யலாம். ஆனால் அவை எதுவும் நன்றாக உணரச் செய்யாது. அது நம்மை அவர்களுடைய தரத்திற்குக் கொண்டு செல்கிறது. நீங்கள் தேவனை நம்பி நன்மை செய்து கொண்டேயிருந்தால், ஏதாவதொரு வழியிலே தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்!

இத்தகைய எல்லா எரிச்சல்களும் திட்டமிடாத நிகழ்வுகளும் உங்களைக் கோபப்படுத்துவதற்குப் பதிலாக அன்பைக் காட்டும் ஒரு தருணமாகப் பார்க்கத் தொடங்குங்கள்.

1 கொரி 13:4-8 ல் அன்பின் நடத்தையைப் பற்றி அற்புதமான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒவ்வொன்றையும் பார்க்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். எந்த பகுதிகளில் நீங்கள் வளர வேண்டுமென்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

- அன்பு நீடிய பொறுமையுள்ளது, கனிவானது.
- அன்புக்குப் பொறாமையில்லை, பொறாமையால் கொதிக்கிறதில்லை.
- அன்புக்கு தற்பெருமையில்லை, வீண் பெருமையும் இல்லை, மன மேட்டிமையாய் தன்னைக் காட்டிக் கொள்ளாது.

- அன்புக்கு கர்வம் இல்லை (திமிராகவும், தலைக் கனமாகவும் இராது).
- அன்பு தரமற்றிருப்பதில்லை, தகுதியற்று நடந்து கொள்ளாது.
- அன்பு தன்னுடைய உரிமையை மட்டும் கோராது, தன்னுடைய வழியை மட்டும், தனக்கானவையை மட்டும் தேடாது.
- அன்பு எளிதில் கோபமடையாது, எரிச்சலடையாது, வெறுப்படையாது.
- அன்பு தனக்கு விளைவிக்கப்பட்ட பொல்லாப்பைப் பற்றிய கணக்கைக் கொண்டிராது. கஷ்டப்பட்டதையும், ஏமாற்றப்பட்டதையும் பெரிதாகக் கண்டு கொள்ளாமல் இருந்து விடும்.
- அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது. ஆனால் சரியானதும், உண்மையும் மேற்கொள்ளும் போது களிகூறும்.
- அன்பு எதையும் எல்லாவற்றையும் தாங்கும்.
- அன்பு எப்போதுமே எல்லாவற்றிலுமுள்ள சிறந்ததையே நம்பும்.
- அன்பு ஒரு போதும் விட்டு விடாது. அது எப்போதுமே நம்பிக்கையால் நிறைந்திருக்கிறது. தளரமால் எல்லாவற்றையும் சகிக்கிறது.
- அன்பு ஒருக்காலும் ஒழியாது.

## ஏழைகளுக்கு உதவுதல்

ஏழைகளுக்கு உதவுவதைப் பற்றி வேதம் நிறைய சொல்கிறது. அவர்களுக்கு உதவுபவர்களுக்கு சில் அற்புதமான வாக்குதத்தங்களும் இருக்கிறது. அவைகளுள் ஒன்று

> ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி 19:17

அப்போஸ்தலனாகிய யாக்கோபு, உண்மையான ஆராதனையானது, விதவைகளையும், அனாதைகளையும் அவர்களது

தேவையிலும் ஒடுக்கத்திலும் சந்தித்து, உதவி செய்து பராமரிப்பதேயாகும் என்று சொல்கிறார். (யாக் 1:27) உண்மையான பக்தி எப்போதுமே வெளியரங்கமான செயல்களால் வெளிப்பட வேண்டும். ஏனெனில் உண்மையான கிறிஸ்தவம் ஒருவரின் இருதயத்தை மட்டுமல்ல, அவரின் நடத்தையையும் மாற்றுகிறது. தேவன் கொடுக்கிறவர். அவரோடு உறவிலிருக்கும் எவரும் கொடுக்க விரும்புவர். பரிசுத்த ஆவியானவர் உதவியாளர் ஆகவே அவரோடு உறவிலிருக்கும் எவருக்கும் உதவி செய்வார்.

*ஒரு சந்தோசமான அர்த்தமுள்ள வாழ்க்கை எனது நாம் என்ன பெற்றுக் கொள்கிறோம் என்பதில் அல்ல, மாறாக என்ன கொடுக்கிறோம் என்பதிலேயே அடங்கியிருக்கிறது.*

நம்மிடம் நாமே கேட்டுக் கொள்வது ஆரோக்கியமான ஒரு பயிற்சியாகும். "பிறருக்கு உதவ நான் என்ன செய்கிறேன்?" நீங்கள் கடைசியாக உதவி செய்தவர் உங்கள் நினைவில் இருக்கிறதா? ஆம் அனுதின செயல்பாடுகளிலே நாம் நம் குடும்பத்தினருக்கு உதவுகிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது வெகுமதிகளைக் கொடுக்கின்றோம். ஆனால் அதற்கும் அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றி நான் பேசுகிறேன். நான் கொடுப்பதற்காகவே வாழ்வதைப் பற்றிப் பேசுகின்றேன். நாம் எதைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதல்ல, எதைக் கொடுக்கிறோம் என்பதில் தான் சந்தோஷமான அர்த்தம் நிறைந்த வாழ்வு இருக்கிறது.

தேவையிலிருக்கும் எத்தனை பேர் நமக்குத் தெரியும். ஆனாலும் அவர்களுக்கு உதவ வேண்டுமென்று நாம் நினைப்பதேயில்லை. நமக்கு நாமே இந்த கஷ்டமான அதைப் பற்றி கேள்விகள் கேட்கத் தொடங்கும் போது, நம்முடைய பதில்கள் ஏமாற்றமடையச் செய்வதாக இருப்பதைக் காணலாம். ஆனாலும் நான் என்னிலே ஏமாற்றமடையும் போது எப்போதுமே நாம் 'மீண்டும் அதைச் செய்ய அர்ப்பணித்து' சரியானதைச் செய்ய தொடங்கலாமே.

தேவையிலிருக்கும் மக்களுக்கு வேண்டுமென்றே உதவி செய்ய உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு உதவ சில வழிகளைக் கண்டு பிடியுங்கள். சாக்கு போக்கு சொல்லிக்கொண்டு ஒன்றுமே செய்யாமலிருப்பது சுலபமானதே. ஆனால் ஒரு கிறிஸ்தவனின் சரியான நடத்தை இதுவல்ல. கடந்த காலத்திலே நான் சொன்னதும், பிறர் சொல்லக் கேட்ட்துமான சாக்கு போக்குகள் இவைகளே.

நான் மிகுந்த அலுவலாக / வேளையாக இருக்கிறேன் (எனக்கு வேலையிருக்கிறது)

- நான் அதிக வேலையால் இருக்கிறேன்.
- அவர்களின் பிரச்சினைக்கு அவர்கள் தான் காரணம்
- எனக்கே நிறைய பிரச்சினகளுண்டு
- அதிலே தலையிட நான் விரும்பவில்லை
- எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை

நம்மால் ஏன் உதவ இயலாது என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பதற்குப் பதில், நான் எப்படி உதவ இயலும் என்று ஏன் கண்டு பிடிக்கக்கூடாது? ஒருவருடைய தேவையை உங்களால் மட்டுமே சந்திக்க இயலாமலிருக்கலாம். ஆனால் ஒரு குழுவாக சேர்ந்து அந்த மனிதனுக்கு உதவி செய்ய ஒரு குழுவை நீங்கள் கூட்டலாமே. நாம் ஒவ்வொருவரும் குறைந்த பட்சமாக செய்யக்கூடியது, தேவையிலிருப்பவர்களுக்கு நம்மால் செய்ய இயன்றதை தேவன் நமக்குக் கொடுக்கும் படி ஜெபிப்பதேயாகும். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒருவருக்கு நன்மையானதொன்றை செய்யும் போது உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொள்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

சமீபத்திலே மூன்று பெண்கள் எங்கள் கூட்டங்களில் கலந்து கொண்டனர். சில உலக நாடுகளிலே, தண்ணீருக்காக பல மணி நேரம், சில சமயம் ஒரு நாள் முழுவ்தும் நடந்து சென்றும், அழுக்கான சுகாதாரமற்ற தண்ணீரைப் பெறும் இடங்களிலே ஆழ்துளை கிணறுகள் தோன்றும் அவசியத்தைப் பற்றியும், அது போல் எழுனூறு

கிணறுகள் தோண்ட வேண்டிய அவசியத்தைப் பறியும் அது எவ்வாறு முழு கிராமத்தையும் மாற்றியமைக்கும் என்று சொன்னதைக் கேட்டிருந்தனர். அந்த மூன்று பெண்களும் ஏதாவது செய்ய விரும்பினர். எனவே அவர்கள் இருபத்தியொரு குடும்பங்களை இணைத்து ஒரு பெரிய விற்பனையை நடத்தினர். அடுத்த கூட்டத்தின் போது அத்தகைய கிணறுகளை தோண்டவும், அதன் அருகில் ஒரு ஆலயத்தை கட்டவும் இரண்டாயிரம் டாலருக்கும் அதிகமான காணிக்கையை கொண்டு வந்து கொடுத்தனர். இப்படியாக வாழ்வளிக்கும் இயற்கை தண்ணீரையும் தேவனுடைய வார்த்தையாகிய தண்ணீரையும் கொடுக்கிறோம்.

> கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.
>
> லூக்கா 6:38

நாம் ஏதாவது திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக கொடுக்கக்கூடாது.பிறருக்கு உதவ வேண்டுமென்ற வாஞ்சையால் கொடுக்க வேண்டும்.அப்படி கொடுக்கும் போது அது பல வழிகளில் நமக்குத் திரும்ப கிடைக்கும் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணி, தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ? என் சிறுவயதுமுதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல என்னோடே வளர்ந்தான்; நான் என் தாயின் கர்ப்பத்திலே பிறந்ததுமுதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகுகொடுத்து நடத்தினேன். ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்துபோகிறதையும், ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும் நான் கண்டபோது,

அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல்கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும், ஒலிமுகவாசலில் எனக்குச் செல்வாக்கு உண்டென்று நான் கண்டு, திக்கற்றவனுக்கு விரோதமாய் என் கையை நீட்டினதும் உண்டானால், என் கைப்பட்டை தோளிலிருந்து சரிந்து, என் புயத்து எலும்பு முறிந்துபோவதாக. (யோபு 31:16-22)

நான் அதிரடடியாக பேசிக்கொண்டிருக்கும் இந்த வேத வாக்கியங்களெல்லாம் என் வாழ்விலே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவைகளாகும். நீங்கள் அவற்றைப் படிக்க பலமுறை நேரன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறேன். வருத்தங்களை விடுவிக்கும் வல்லமை உங்களுக்கும் எனக்கும் இருக்கிறது. அப்படி செய்யக் கூடிய எந்தவொரு தருணத்தையும் நாம் நழுவ விடக்கூடாது. உங்களுக்குத் திருப்பி செலுத்தக் கூடாத ஒருவருக்கு ஒன்றை நீங்கள் செய்யா விட்டால் இன்று நீங்கள் வாழவே இல்லை என்று ஜான் பனியன் கூறுகிறார்.

## தேவனை புன்னகைக்க செய்யுங்கள்

நாம் தேவனை புன்னகைக்க செய்யக் கூடும் என்று நினைப்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் நாம் அவ்வாறு செய்யக் கூடும் என்று வேதம் கூறுகிறது. தாவீது இவ்வாறு ஜெபித்தார். சங்கீதம் 119:135.

நாம் தேவனுடைய சித்தத்தை செய்யும் போது அவர் புன்னகைக்கிறார்!. நம் கீழ்ப்படிதலானது, பிறருக்கு உதவுவதையும் உள்ளடக்கும் போது அவர் இன்னும் அதிகமாக புன்னகைக்கிறார்.ஏனென்றால் நாம் அவ்வாறு செய்யும் போது, அவரைப் போன்று செய்கிறோம். என் மகன் தன் பிள்ளைகளைப் பற்றி இவ்விதம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். “நான் செய்வதை அவர்கள் பார்க்கின்றனர். இப்போது என்னைப் போன்று அவர்கள் செய்கின்ற்னர்.” அவன் என்னிடம் இதை சொல்லும் போது புன்னகையோடு சொன்னான்.

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒருவரை புன்னகைக்கச் செய்யும் போது தேவனும் புன்னகை செய்கிறார் என்று நினைக்கிறேன்.

அத்தியாயம் 7

# எப்பொழுதும்

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சேலா.)

சங்கீதம் 62:8

'சேலா' என்ற வார்த்தை சங்கீதங்களிலே எழுபத்தியோரு வசனங்களிலும், ஆபகூக் புத்தகத்திலே மூன்று இடத்திலும் காணப்படுகிறது. எந்த காலத்திலும் நாம் கடவுளை நம்ப வேண்டுமென்று மேலே குறிப்ட்ட வசனங்கள் சொல்லுகிறது. நாம் நின்று, தேவன் 'இந்த வசனம் விலையேறப்பட்டது, நீங்கள் நின்று யோசிக்க வேண்டுமென்று' கூறுவதை நாம் உணர வேண்டும்.

ஆரம்ப நாட்களில், ஒவ்வொரு முறையும் என்னால் சாமாளிக்க முடியாத பிரச்சினைகள் ஏற்பட்ட போது அவர் எனக்கு உதவ வேண்டுமென்று அவரை நம்பினேன். ஆனால் சில வருடங்களுக்குப் பின் அவரின்றி என்னால் எதையும் செய்ய இயலாதென்பதை உணரத் தொடங்கினேன். இப்போது எந்தக் காலத்திலும் அவரை நம்ப கற்றுக் கொண்டிருக்கிறேன். இதை நான் எப்படிச் செய்கிறேனெனால், தேவனை என் துணையாளர் என்று நம்பும் மனப்பான்மையோடு வாழ்கிறேன். 'தேவனே, எல்லாவற்றிலும் உம்மை நம்பியிருக்கிறேன்' என்று சொல்லாதிருக்கும் நாட்கள் குறைவே.

தேவன் பேரிலே நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை அறிக்கையிடுவது ஒரு விதமான துதி. என் வாழ்விலும் பிறர் வாழ்விலும் நான் அறிந்திருக்கும், நடைபெறும் குறிப்பிட்ட சில

காரியங்களுக்காக தேவனை நம்புகிறேன். இன்னும் நான் அறிந்திராத பல காரியங்களுக்காகவும் அவரை நம்புகிறேன்

நாம் தேவனை நம்பத் தீர்மானிக்கும் முன் ஏதாவதொரு அவசர சூழ்நிலையோ அல்லது பயங்கரமான பிரச்சினையோ நம்மைத் தாக்கும் வரை காத்திருப்பது முட்டாள்தனமாகும். நாம் நம்பும் மனப்பான்மையோடு வாழலாம், அப்படி நாம் செய்யும் போது விசுவாசத்தில் நடக்கிறோம். இதனால் நம் வாழ்க்கையிலே எந்த பிரச்சினையும் ஏற்படாது என்பதில்லை. ஆனால் நம் பிரச்சனைகளைக் கடந்து செல்ல, தேவன் நமக்கு உதவ அவரைச் சார்ந்திருக்கிறோம் என்பதைக் காண்பிக்கிறது.

இயேசு கெத்செமனே தோட்டத்தீல் இருந்த போது தான் பட போகிற கஷ்டங்கள், பாடுகள், சோதனைகளைக் குறித்து விழிப்புடையவராயிருந்தார் அவர் சீஷர்களிடத்தில் சோதனைக்குட்படாதபடிக்கு (லூக்கா 22:40) விழித்திருந்து ஜெபிக்கச் சொன்னார். ஆனால் அவர்கள் தூங்குவதற்கு விருப்பமாயிருந்தார்கள். வேதபகுதி, (லூக்கா 22:45) அவர்கள் தூக்கத்தில் நித்திரையடைந்தார்கள் என்று அறிக்கையிடுகிறது. ஒரு வேளை அவர்கள் கவலை, பயம் தீர்து விட்டது அல்லது ஒரு வேளை பிரச்சனையின் வழியைத் தவிர்ப்பதற்காகத் தூங்கினார்கள். ஆனால் இயேசு, தம் நேரத்தை ஆர்வத்துடன் ஜெபத்தில் செலவிட்டார். அவர் தாமாகவே நம்பிக்கையுடன் பிதாவிடத்தில் வரப்போகும் பாடுகளை நீக்க அல்லது அதன் மூலம் கடந்து போக பெலனை தரும்படி கேட்டார்.

இயேசு தெரிந்து கொள்ளுதலை தேவனிடம் விட்டு விட்டார். தம்முடைய சொந்த சித்தத்தைக் கேட்பதற்குப் பதிலாக, தனக்கு என்ன வேண்டுமென்று கூறினார். ஆனாலும் தம் ஜெபத்தை “ஆயினும் என் சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது” என்ற வார்த்தைகளால் முடித்தார் (லூக்கா 22:42). அவர் இப்படி செய்த பின் அவரை ஆவியிலே பெலப்படுத்தும் படி, பரலோகத்திலிருந்து ஒரு தூதன் அனுப்பப்பட்டான். (லூக்கா 22:43)

பரலோகத்திலிருக்கும் நம் பிதா, நம்மை விடுவிக்கிறவர் மட்டுமல்ல, நம்மைப் பெலப்படுத்துகிறவரும் கூட. உடனடியாக அவர் உங்களுக்கு விடுதலை அளிக்கவில்லையென்றாலும் நீங்கள் பொறுமையாக இருக்க விருப்பமுள்ளவர்களாக இருந்து, சரியான நேரத்திலே சரியான காரியங்களுக்காக அவரைத் தொடர்ந்து நம்புவீர்களென்றால் அவர் உங்களைப் பெலப்படுத்துவார்.

நம்முடைய பெலவீனங்கள் இவை என்று நாம் அறிந்திருக்கும் பகுதிகள் இருக்குமேயானால் அந்தப் பகுதிகளிலே ஏற்படும் சோதனைகளுக்குள் நாம் விழும்படி நாம் காத்திராமல் அவைகளைத் தவிர்க்கும் படியாக தேவன் நம்ப வேண்டும்.

ஆநேக ஆண்டுகளாக எனக்கு இருக்கும் பெலவீனங்களுள் ஒன்று, நான் அதிகமாகப் பேசுவேன் இல்லையேல் யோசிக்காமல் சிலவற்றை பேசி விடுவேன். இது உண்மையாகவே அடிக்கடி பிரச்சினைகளை ஏற்படுத்தியது. நான் காலையிலே பிறரிடம் பேசு முன், கேட்கிறவளாக இருக்க வேண்டுமென்றும், நான் சொல்லும் அனைத்திலும் ஞானத்தை உபயோகிக்க வேண்டுமென்று தேவனிடம் ஜெபிப்பதுண்டு.

*நாம் செய்யத்தக்க ஞானமான காரியங்களுள் ஒன்று, நம்முடைய பெலவீனங்களை நாம் அறிந்து கொண்டு, அதற்குள் இணைந்துக் கொள்ளாத படி நிற்கத் தேவன் பெலன் தரும்படி அவர் மேல் சார்ந்து கொள்வதாகும்.*

இப்படிச் செய்வதின் மூலம், நான் ஏற்கனவே பிரச்சினையை உண்டாக்கி பின்னர் அதின் விளைவுகளை சமாளிக்கும் வரை நான் காத்திருப்பதில்லை. சோதனைகள் நேரிடும் போது அதற்குள் விழாமல் தேவன் என்னைக் காக்க ஜெபிக்கிறேன். நாம் செய்ய வேண்டிய ஞானமான காரியங்களுள் ஒன்று, நம் பெலவீனங்களை அறிந்து கொண்டு அதற்குள் நாம் விழாமல் இருக்கத் தேவையான பெலனை

தேவன் நமக்குக் கொடுக்க அவரை சார்ந்திருப்பதேயாகும். பேதுருவுக்கு மட்டும் இதைச் செய்யும் படியான ஞானம் இருந்திருக்குமேயானால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

சாத்தான் பேதுருவை நன்கு சோதிக்கபோகிறானென்று இயேசு அவனை எச்சரித்தார். ஆனால், இயேசு தனக்கு உதவும்படி கேட்பதற்குப் பதிலாக, தான் மிகவும் பெலமுள்ளவனாக இருப்பதாக நினைத்துக் கொண்டான். அவனால் தோற்றுப் போவதை ஏற்றுக் கொள்வது முடியாத காரியமாயிருந்தது. இந்த வசனங்களைக் கவனமாகப் பாருங்கள். பேதுரு காட்டும் மனப்பான்மை உங்களுடையதாக இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

> பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.
>
> லூக்கா 22:31-33

பேதுரு இயேசுவை மூன்று தரம் மறுதலித்தான்! (லூக்கா 22:55-61). ஒருவேளை அவன் தன் மனுஷீக பெலவீனத்தை அறிந்திருந்து இயேசுவிடமிருந்து எவ்வளவு உதவி பெற்றுக்கொள்ள முடியுமோ அவையனைத்தையும் அவன் பெற்றிருப்பானேயென்றால் அவன் அதிக பெலவானாக இருந்திருப்பான். இயேசு அவனை சோதனையினின்று விடுவிக்க விரும்பவில்லை. ஆனால் அவன் அதனூடே வெற்றிகரமாக கடந்து செல்ல விரும்பினார். அதனால் பிறருக்கு உதவி செய்யத்தேவையான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வான் என்பதை விரும்பினார். ஆனால் பேதுருவோ நான் சோதனைக்கப்பாற்பட்டவன் என்று நினைத்தான். இதுவொரு பெரிய

தவறு. நம்மில் எவரும் அப்படி நினைப்பது தவறே. நாம் நம்மைப்பற்றி நினைப்பதற்கு மேல் அதிகமாக நினைப்பது ஞானமன்று. நாம் விழுந்து போவதற்கு அது கதவைத் திறந்து விடுகிறது. (ரோமர் 12:3) நம் பெருமையை கண்டிக்காமல் தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறார். எனவே முற்றிலுமாக அவரைச் சார்ந்திருக்க நாம் கற்றுக் கொள்ளலாம்.

எல்லா பருவங்களிலும், எல்ல சந்தர்ப்பங்களிலும், எல்லா காலத்திலும் நாம் ஜெபிக்க வேண்டுமென்று பவுல் போதிக்கிறார். (எபே 6:18). அப்படி நாம் செய்யும் போது எல்லா காலத்திலும் நாம் தேவன் பேரிலே நம்பிக்கையை வைத்திருக்கிறோமென்று காட்டுகிறது.

உங்கள் பெலவீனங்கள் என்ன என்பதைக் கண்டறிய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளில் தேவன் உங்களைப் பெலப்படுத்தும் படி எல்லா காலங்களிலும் அவரை நம்ப உறுதியாய் இருங்கள். நமக்கான வாக்குதத்தம் இதோ:

> நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;
>
> சங்கீதம் 138:3

ஒருவேளை நீங்கள் சோதனையை எதிர்க்க உதவுமாறு தேவனிடம் கேட்டும், இன்னும் அதற்குள் நீங்கள் விழுகிறதாக உணரலாம். சிலசமயம் அப்படியாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் தேவனை தொடர்ந்து நம்புவீர்களென்றால், நீங்கள் காலம் செல்லச் செல்ல பெலன் மேல் பெலனடைவீர்கள்.சிறந்த பலனைப் பெற உங்கள் நம்பிக்கையை அவருடைய வார்த்தையை ஆழ்ந்து படிப்பதோடு சிறந்த வெற்றி கிடைக்கும். வார்த்தைளைக், ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை இருக்கிறதென யாக்கோபு சொல்கிறார் (யாக்கோபு 1:21)

நான் பேசும் வார்த்தைகளி கட்டுப்படுத்த தேவன் எனக்கு உதவும்படி ஜெபிக்கும் போது வேதத்திலே வாயின் வார்த்தைகளைப்

பற்றி நான் படித்த பல்வேறு வசனங்களைச் சொல்வதுண்டு. என்னுடைய ஜெபம் இப்படியாக இருக்கிறது.

> "பிதாவே இன்று நல்ல வார்த்தைகளைப் பேச எனக்கு உதவும். பிறர் சொல்வதை கவனமாக கேட்கவும், பேசுவதற்கு முன் யோசிக்கவும் எனக்கு உதவும். என்னுடைய வார்த்தைகளால் உம்மை மகிமைப் படுத்த விரும்புகிறேன். என் வார்த்தைகள் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருக்க விரும்புகிறேன். நீர் எனக்குத் தேவை ஆண்டவரே, உம்மையல்லாமல் நான் ஒன்றும் இல்லை. என்னுடைய பெலவீனங்களிலே என்னைப் பெலப்படுத்தும்"

பின்னர் நான் ஜெபித்து வேத வாக்கியங்களை அறிக்கையிடுகிறேன். ஏனென்றால் தேவனுடைய வார்த்தையைப் பற்றி, தேவனுக்கு நினைவுபடுத்த வேண்டுமென்று ஏசாயா சொல்லுகிறார் (ஏசாயா 43:26) நிச்சயமாகவே தேவன் தம்முடைய வார்த்தையை மறந்து விடவில்லை. எனவே அவருக்கு நாம் ஏன் நினைவுறுத்த வேண்டும். சில காரணங்கள் இதோ:

- நாம் தேவனுக்கு அவருடைய வார்த்தையை நினைவு படுத்தும் போது நாம் நம்முடைய நம்பிக்கையை முற்றிலும் அவர் மேலும் அவருடைய வாக்குதத்தங்களின் மேலும் வைக்கிறோம் என்பதைக் காட்டுகிறது
- வார்த்தையை உரக்க பேசுவது, நாம் செய்யக்கூடிய அதிக வல்லமையான காரியமாகும். ஏனெனில் நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்திலே பயன்படும் ஆயுதங்களிலொன்று ஆவியின் பட்டயம். அது வேத வசனம் (2 கொரி 10:4-5; எபே 6:17)
- நம்முடைய மனதைத் தொடர்ந்து நாம் புதிதாக்கும் தேவனுடைய வார்த்தையைப் பேசுவது நமக்குதவுகிறது. (ரோமர் 12:2). அது தேவனுடைய வார்த்தையை தியானிப்பதின் ஒரு

பகுதியாகும். அதை நாம் செய்யும் படி வேத வாக்கியங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன.

என் ஜெபங்களிலே நான் அதிகமாக சொல்லும் எனக்கு விருப்பமான வசனங்களில் மூன்று இதோ:

> கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.
>
> சங்கீதம் 141:3

> என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
>
> சங்கீதம் 19:14

> மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.
>
> நீதி 18:21

உங்களுக்கு உதவி தேவைப்படும் எந்த பகுதியிலும் இந்தக் கருத்தை வைத்து ஜெபிப்பதிலும், தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுதலிலும் உபயோகிக்கலாம். உங்களுடைய பெலவீனம் கோபமா? அதிகம் உண்பதா? சுயநலமா? எதுவாக இருந்தாலும் அதை மாற்றும் வேத வசனங்கள் இருக்கிறதென்று உறுதியாக சொல்லுகிறேன். இதை இந்த கால கட்டங்களிலே வலைதளங்களில் இருக்கும், வேதத்தைச் சார்ந்தவற்றை உபயோகிப்பது அதிக

> *நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ளும் போது தேவனை நம்புவது ஒரு காரியம், அப்படி பெற்றுக் கொள்ளாமலிருக்கும் போது அவரை நம்புவது மற்றொன்று.*

எளிதாக்குகின்றது. மேலும் ஏதோ ஒன்று அல்லது இரண்டு முறை செய்வது நம் வாழ்விலே வெற்றியினைக் கொண்டு வருவதில்லை. தொடர்ந்து தேவனையும் அவருடைய வார்த்தையையும் எல்லா காலத்திலும் முதன்மையாக வைத்து, அவரைச் சார்ந்து கொள்ள அர்ப்பணிக்கும் போது, ஏற்ற காலத்திலே மாற்றத்தைக் காண்பீர்கள் என்று உறுதியாக கூறுகிறேன்.

## தொடர்ந்து மன ரம்மியமாக இருத்தல்

நாம் தேவனை எல்லா காலங்களிலும் நம்புவோமென்றால், நாம் விளங்கிக் கொள்ளாத காரியங்களிலும், நியாயமில்லை என்று தோன்றும் நேரங்களிலும் எப்போதும் போலவே நாம் அவரை நம்புவோம். நாம் என்ன விரும்புகிறோமோ அதை பெற்றுக் கொள்ளும் போது தேவனை நம்புவது வேறொன்று. ஆனால் அப்படியாக இல்லாமலிருக்கும் போது அவரை நம்புவது மற்றொன்று. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இலக்கு அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து 'நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டேன்' என்று சொல்லக்கூடியதாக இருக்க வேண்டுமென்று நம்புகிறேன் (பிலி 4:11-12) தனக்கு அதிகமாக இருந்தாலும், தேவை இருந்தாலும் பாதிக்கப்படாத அளவிற்கு எப்படி மன ரம்மியமாக/திருப்தியாக இருப்பது என்பதைக் கற்றுக்கொண்டதாக பவுல் கூறுகிறார் (பிலி 4:11-12) மனரம்மியமாக இருப்பதென்பது, எவ்வித மாற்றத்தையும் நாம் விரும்பாமல் அல்லது சிறப்பான காரியங்களுக்காக தரிசனம் கொண்டிராமலிருப்பதல்ல. அது நாம் விரும்பியும் பெற்றுக் கொள்ளாமலிருக்கும் காரியங்கள், இப்போது இருக்கும் இன்பத்தைத் திருட அனுமதிக்காததேயாகும்.

என்னை மிகவும் விரக்திக்குள்ளாக்கிய வருடங்களுண்டு. அதன் காரணம் என்னவென்றால் நான் சென்றடைய வேண்டிய இடத்திற்கு நேராக சென்று கொண்டிருக்கையிலே, எந்த இடத்தில் இருந்தேனோ அதை அனுபவிக்கவில்லை. தேவன் நாம் முன்னேறவும் வளரவும் வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அதற்கு மேல் நாம் சமாதானம்

கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். பிரசங்கி புத்தகத்திலுள்ள இந்த வசனத்தைப் பாருங்கள்

> ஆசையானது அலைந்துதேடுகிறதைப்பார்க்கிலும் கண் கண்டதே நலம்; இதுவும் மாயையும், மனதைச் சஞ்சலப்படுத்துகிறதுமாயிருக்கிறது.
>
> பிரசங்கி 6:9

இதை எழுதியவர் (சாலோமோன் என்று சொல்லப்படுகிறது) சொல்வதாவது. உங்களிடம் இல்லாத ஒன்றிற்காக அதிகமாக ஆசைப்படுவது மாயை. அது நீங்கள் என்ன பெற்றிருக்கிறீர்களோ அதை அனுபவிக்க முடியாதபடி செய்து விடும்.

பவுல், தான் என்ன விரும்பினாரோ அதைப் பெற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் திருப்தியாக இருக்க கற்றுக் கொண்டிருந்தார். இதுதான் நம்முடைய இலக்காகவும் இருக்க வேண்டும். நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்ளும் போது மட்டும் நன்றியோடும் திருப்தியாகவும் இருப்பது சிறுபிள்ளைத்தனமானது. அது ஆவிக்குரிய முதிர்ச்சியி காண்பிக்கிறதில்லை. பெற்றோர்களாக இத்தகைய முதிர்ச்சி நம் பிள்ளைகளில் இல்லாமலிருந்தால் அவர்களை திருத்துகிறோம். அவர்களுக்கு இருக்கும் எல்லா ஆசீர்வாதங்களைப் பற்றி நினைவுறுத்தி என்ன பெற்றிருக்கிறார்களோ அதற்கு நன்றியுள்ளவர்களாக இருக்க சொல்கிறோம். நாம் என்ன விரும்புகிறோமோ அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும் போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதைப் பின்பற்றும் படி அவர்களுக்கு ஒரு மாதிரியாக இருக்க வேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டும். எல்லாமே நம் விருப்பம் போல் நடை பெறும் போது தேவன் நம்புவது எளிது. ஆனால் இந்தப் புத்தகம் எந்தக் காலத்திலும் தேவனை நம்பக் கற்றுக் கொள்வதைப் பற்றியது.

வாழ்க்கை கஷ்டமாக இருக்கும் போதும், ஏனென்று புரிந்து கொள்ள இயலாமல் காத்திருக்க வேண்டியிருக்கும் போதும் திருப்தியாக இருப்பதற்கு தேவன் நல்லவர். அவருடைய வழிகள் நம்முடைய வழிகளை விட வேறுபட்டது என்று நாம் நம்ப வேண்டும். நான் கொண்டிருக்கும் சில காரியங்கள் நன்மையானதாக தோன்றலாம். அது எல்லா காலத்திலும் நன்றாகத் தோன்றும், நல்ல உணர்வைக் கொடுக்கும். ஆனால் அது நீண்ட காலத்திற்கு எனக்கு உதவுமா? எப்போதுமே நான் நினைத்தவற்றைப் பெற்றுக் கொள்வது, நான் சுயனலமற்றவளாக பிறர் வருந்தும் போது அவர்களிடம் அதிக மனதுருக்கம் உள்ளவளாக இருக்கும் படி செய்யுமா? இல்லை. அப்படி இல்லை! பிறருடன் நம்மை உண்மையாக அடையாளப்படுத்தி பார்க்க ஒரே வழி அவர்கள் எத்தகைய காரியங்களினூடே செல்கிறார்களோ அத்தகைய அனுபவங்களை நாம் பெற்றுக் கொள்வதேயாகும். ஆனால் பிறருக்கு உதவ, அவர்கள் கடந்து செல்லும் அனைத்தையும் நாம் அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஏமாற்றங்களையோ உணர்ச்சியின் வலியையோ அல்லது மற்ற எந்த கஷ்டங்களையோ அனுபவித்திராமல் போனால், புரிந்து கொள்ள மாட்டோம்.

நம்முடைய வேதனையிலே நாம் இயேசுவை நோக்கி கெஞ்சுகிறோம். ஏனெனில் நம்முடைய பெலவீனங்களையும், ஒடுக்குதலையும் விளங்கிக் கொள்ளும் பிரதான ஆசாரியர் அவர். அவரால் எப்படி விளங்கிக் கொள்ளாமல் இருக்க முடியும். அவர் புரிந்து கொள்ளுகிறவர். ஏனென்றால், அவர் நம்மைப் போன்று எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார். ஆனாலும் அவர் ஒரு போதும் பாவம் செய்யவில்லை. (எபி 4:15). உதவிக்காக நாம் இயேசுவிடம் செல்வது சுலபமானது. ஏனென்றால் அவர் நம்மை விளங்கிக் கொள்வாரென்று நம்புகிறோம். அவர் வியாதி, வேதனை, துயரம், புறக்கணிப்பு போன்றவற்றை அறிந்திருக்கிறார். நாம் இயேசுவிடம் வருவதைப் போன்று மற்றவரும் நம்மிடம் வருவதை எளிமையாக்க வேண்டும்.

நாம் வாழ்கையில் பல காரியங்களினூடே செல்லுகையில், தேவையிலிருக்கும் பலருக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் கொடுக்க அவைகளை உபயோகித்துக் கொள்ளுகிறார். நாம்

எப்போதுமே தேவனுடைய வழிகளை விளங்கிக் கொள்ள முடியாது. (விளங்கிக் கொள்ளவும் மாட்டோம்) (ஏசாயா 55:9). ஆனால் அவர் நல்லவர், அவருடைய வழிகளெல்லாம் சரியானதென்று தொடர்ந்து நம்பி அவரைக் கனப்படுத்தலாமே.

## நம்பிக்கைக்கு பொறுமை தேவை

தேவனை நம்பும் போது எப்போதுமே நமக்குப் பொறுமை தேவை. ஏனென்றால் நம்முடைய காலத்திட்டத்தின் படி தேவன் கிரியை செய்ய மாட்டார். பொறுமையானது நாம் காத்திருக்கும் போது நம் வாழ்க்கையை அனுபவிக்க உதவுகிறது. தேவன் நினைத்தால் சுலபமாக செய்யக் கூடிய ஒன்றை அவர் ஏன் செய்யாமலிருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள கடினமாக இருக்கலாம் அப்படியாக இருக்கும் போது அவரிடம் தான் காரணமும் இருக்கிறது. அது நம் விசுவாசத்தை சோதிக்கவோ விசுவாசத்தால் நாம் வாழ்வதை அதிகரிப்பதற்காகவோ இருக்கக் கூடும். நாம் அப்போது என்ன விரும்புகிறோமோ அதைவிட சிறந்ததொன்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பலாம் அல்லது சமாளிக்க தேவையான திறனை நாம் பெற்றுக் கொள்ள அவர் விரும்பலாம். இந்த எல்லா காரணங்களும் (இன்னும் பிற காரணங்களும்) நாம் தேவனுடைய ஆளுமையையும், நன்மையயும், ஞானத்தையும் நம்பி, சமாதானத்துடனிருக்கவே தருணங்களாகிறது.

> *பொறுமையானது நாம் காத்துக் கொண்டிருக்கும் போது வாழ்க்கையை அனுபவிக்க அனுமதிக்கின்றது, ஏதுவாக்குகின்றது.*

ஆவிக்குரிய கனியாகிய பொறுமையானது நம் வாழ்விலே சுலபமாக அதிகரிக்கும் ஒன்றல்ல. நான் சில பகுதிகளிலே பொறுமையாகவும் சில பகுதிக்ளிலே பொறுமையற்றும் இருக்கிறதை காண்கிறேன். நான் நிச்சயமாகவே பொறுமையில் இன்னும் வளர்ந்து

கொண்டுதானிருக்கிறேன். நாம் அனைவரும் சில காரியங்களுக்காக காத்திருக்கிறோம், எனவே காத்திருப்பது ஒரு தேர்வு அல்ல, ஆனால் நாம் காத்துக் கொண்டிருக்கும் போது எப்படி நடந்து கொள்ளுகிறோம் எப்படிப்பட்ட மனப்பான்மையைக் கொண்டிருக்கிறோம் என்பதில் தான் நம் தேர்வு இருக்கிறது. வைனின் விளக்கவுரை அகராதியிலே பொறுமைக்கான விளக்கம் என்னவெனில், சோதிக்கப்படும் போது மட்டுமே வளரும் ஆவியின் கனி என்பதே. வாவ்! இது வேறு விதமாக கொடுக்கப்பட்டிருக்கலாமென விரும்புகிறீர்களா? எனக்குத் தெரியும்.

இன்னும் அதிகமான பொறுமைக்காக ஜெபித்து, தேவன் அதை அப்படியே கொடுக்க விரும்புகிறேன். ஆனால் அது அப்படியாக கிரியை செய்கிறதில்லை. தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடம் பொறுமையின் கனி இருக்கிறது. ஆனால் அது வளர்ந்து உள்ளிருந்து வெளிப்பட அனுமதிக்க வேண்டும். அது ஒரு ஆவிக்குறிய கருத்துக்கும் மேல் இருக்க வேண்டும். உண்மையான பொறுமையானது நம் அனுதின வாழ்விலும், சூழ்நிலையிலும் கிரியை செய்ய வேண்டும். விசேஷமாக நாம் ஏதோவொன்றை உடனடியாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் போது நமக்குப் பொறுமை தேவை.

நாம் கடையிலோ, போக்குவரத்து நெரிசலிலோ அல்லது ஒருவர் வரக் காத்திருக்கும் போதோ நம் ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்க காத்திருக்கும் போதோ, நாம் நம்முடைய வாழ்வை அனுபவிக்க வேண்டுமென்றால், சமாதானத்தைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்றால் நமக்குப் பொறுமை தேவை. ‘ஞானத்தின் துணைவன் பொறுமை’ என்றார் பரிசுத்த அகஸ்டின். பொறுமையானது கசப்பானதாகவும், புளிப்பாகவும் காணப்படலாம், ஆனால் அதின் கனியோ இனிப்பு.

அநேக சமயங்களிலே நாம் காத்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்றால் அந்த காரியங்களை உபயோகித்து நம்மிடம் பொறுமையை வளர்க்கிறார். தேவன் தம்முடைய பிள்ளைகள் விரும்புகிறதை கொடுக்கிறதில்லை. ஏனென்றால், நாம் பொறுமையாயிருப்பது தேவனுக்கு அதைவிட முக்கியம். இதை

அனேக பெற்றோர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த முக்கியமான கோட்பாட்டைப் பற்றி அறியாத மக்களால் நம் உலகம் நிறைந்திருப்பது வருத்தப்படத்தக்கது. அவர்கள் உடனே எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கின்றனர்.

உதாரணமாக சிலர் அவர்களின் வாழ்விலே அவர்களுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும் கடனுக்குள்ளாக சென்று விடுகின்றனர். சிலர் தடை செய்யப்படாத உணர்ச்சிகளைப் பின்பற்றுவதால் அவர்கள் ஏற்றவராக இல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ளுகின்றனர். நமக்கு உடனே எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற தவறான நம்பிக்கையானது சந்தோஷமற்ற வாழ்வையும், அநேக கெட்ட மனப்பான்மைகளையும் வளர்த்து விடுகின்றது.

தேவனுடைய தன்மையை அறிந்து கொள்ளும் வரை அவர் நம்மைக் காத்திருக்க செய்கிறாரென்பதை என்னால் நம்ப முடியவில்லை. காத்திருப்பது நல்லது என்று நம்புவது கூட கடினமானது. அது தவறான பயிற்சியினாலும், நம் மாம்சத்தினாலும் ஏற்படுகிறது. காத்திருப்பது நல்லது, ஏனென்றால் நாம் விரும்புவதைக் காத்திருந்து பெற்றுக் கொள்ளும் போது அது நம்மை நன்றியுள்ளவர்களாக்குகிறது.

பொறுமையின்மை நம் வாழ்விலே அழுத்தங்களை அதிகரிக்கிறது. ஆனால் நாம் காத்துக் கொண்டிருக்கையிலே தேவனை நம்புவது அந்த அழுத்தத்தை நீக்கி விடுகிறது. நாம் தேவனை மகிமைப்படுத்தும் ஒரு நல்ல மனப்பான்மையோடு காத்திருக்க செய்கிறது. நம்புவதால் ஏற்படும் பலன் உண்மையிலுமே அழகானது. நம்மைக் கஷ்டப்படுத்துபவற்றைத் தேவன் பார்த்துக் கொள்கிறாரென்று நாம் நம்பும் போது பலனளிக்காத மற்ற காரியங்களிலே நம் கவனத்தை வைக்காமல் நம்மை விடுதலையாக்குகிறது. அது நாம் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொள்ள உதவுகிறது. நாம் நாமாக எல்லோருடனும் இனைந்து வாழவும் உதவுகிறது. நம்பிக்கையானது விரக்த்தியையும் அழுத்தத்தையும் நம் வாழ்விலிருந்து அகற்றி விடுகிறது. பிறரிடம் கோபப்படுவதற்கும்

கடினமாக நடந்து கொள்வதற்கும் இது தான் முக்கியமான காரணமாக இருக்கிறது. நாம் பிறரைக் காயப்படுத்தி கனிவற்று நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவதில்லை. ஆனால் நம்முடைய ஆத்துமா குழப்பமடைந்திருக்கும் போது நாம் மக்களை எப்படி நடத்துகிறோம் என்பதை விட எப்படி உணர்கிறோம் என்பதிலேயே கவனத்தை செலுத்துகிறோம். நாம் எவ்வளவு கடினமாக நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணராமல் கூட இருக்கிறோம். ஆனால் மக்கள் உணர்ந்து கொள்வார்கள். தொடர்ந்து அப்படியே நடந்து கொள்வோமேயென்றால் நம்மைத் தவிர்த்து விடுவார்கள்.

தேவனை நம்பும் சிலாக்கியத்தை நான் பெற்றிருப்பதை முற்றிலுமாக விரும்புகின்றேன். அதேபோல் வருத்தமாகவும், பயத்தோடும், விரக்தியோடும் அழுத்தத்தால் நிறைந்திருப்பதை முற்றிலுமாக வெறுக்கிறேன். வாழ்க்கையை எப்படிச் சந்திக்க வேண்டுமென தீர்மானத்தை எடுக்கிறீர்களென்றால், தேவனை நம்புவதுதான் சிறந்த தேர்வு என்று உங்களுக்கு உறுதியாக கூறுகிறேன்.

அத்தியாயம் 8

# தேவன் நல்லவரானால் மக்கள் ஏன் வருத்தப்படுகின்றனர்?

ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.

ரோமர் 8:18

வருத்தப்படுதல், கஷ்டப்படுவதைப் பற்றிப் பேசுவது மிகவும் கடினமான ஒன்று. எனவே இதை மிகுந்த ஜெபத்தோடு அணுகுகிறேன். எல்லாவற்றிற்கும் நான் பதில் வைத்திருப்பதாக நான் கூறவில்லை. ஆயினும் இதைப் பற்றி நான் பேசாவிட்டால் தேவனை நம்புவது என்ற இந்தப் புத்தகத்தை என்னால் எழுத முடியாது. ஏனென்றால் அதிகமாக கேட்கப்படும் கேள்வி 'தேவன் நல்லவரென்றால் மக்கள் ஏன் கஷ்டப்படுகின்றனர்' என்பதே.

கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகள் ஏன் கஷ்டபடுகின்றனர் என்று கேட்காமலிருக்கலாம். என்னவாக இருந்தாலும் அவர்கள் தேவனை நம்புவதில்லை. ஒருவேளை அவர்கள் கஷ்டங்கள் எதனால் என்று நம்மால் அறிந்து கொள்ள முடியும். எனவே நம் கேள்வியானது ஏன் கிறிஸ்தவர்கள் கஷ்டப்படுகின்றனர். தேவன் நம்மை நேசிக்கிறார், நாம் ஒரு சமாதானமான சந்தோஷமான வாழ்வைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார் என்றெல்லாம் நமக்கு போதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைக் கஷ்டங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் போதிக்கிறார்.

மக்கள் இம்மாதிரியான கேள்விகளை கேட்பதுண்டு

- “தேவன் ஏன் கஷ்டங்களை கொடுக்க வேண்டும் ?”
- “தேவன் கஷ்டங்களை அனுமதிக்கின்றாரா ?”
- “தேவன் ஆளுகிறவரனால் கஷ்டங்களை ஏன் நிறுத்தக்கூடாது ?”
- “அவர் ஏன் பசி, துஷ்பிரயோகம், வியாதி மற்றும் கஷ்டங்களை ஏற்படுத்தும் ஆயிரக்கணக்கான காரியங்களை அனுமதிக்கிறார் ?”
- “சிறு பிள்ளைகள் ஏன் சில சமயம் புற்றுநோயினால் கஷ்டப்படுகின்றனர் ?”
- “நல்லவர்கள் ஏன் சில சமயங்களில் இளம் வயதிலேயே மரிக்கின்றனர் ?”
- “பஞ்சம் அல்லது கொலை நடக்கும் போது தேவன் ஏன் ஏதாவதொன்றை செய்யக்கூடாது ?”

*தேவன் நல்லவரென்று எனக்குத் தெரியும். எனவே நான் முற்றிலுமாக அறிந்து கொள்ள கூடாதவொன்றிற்குப் பதிலாக அதை மட்டுமே கவனிக்கத் தெரிந்து கொள்கிறேன்.*

இது போன்ற கேள்விகள் ஒருவரை பைத்தியமே ஆக்கி விடலாம். இவைகளுக்கு நான் பதில் கொடுக்க வேண்டுமென்றால், ‘எனக்கு தெரியாது’ என்று தான் தொடங்குவேன். தேவன் நல்லவர் என்பதை அறிந்திருக்கிறேன். எனவே எனக்கு எதை முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லையோ அதில் கவனத்தை செலுத்துவதற்கு பதிலாக தேவன் நல்லவராக இருக்கிறார் என்பதிலே கவனம் செலுத்துவேன். நாம் குழப்பத்தால் சிறைபிடிக்கப்படாமல் நம்முடைய தனிப்பட்ட கஷ்டங்களையும், நம்மைச் சுற்றி நடக்கும் கஷ்டங்களையும் சமாளிக்க தேவனுடைய நன்மையைப் பற்றிய உறுதியான நம்பிக்கை நமக்கு உதவுகிறது. ஒரு

அறைக்குள்ளாகச் சென்று தேவனே இது ஏன் நடந்தது என்று கதறுவது உங்களுக்கு உதவுமேயென்றால் அப்படி செய்யுங்கள். ஆனால் பதிலை பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்கும் தயாராய் இருங்கள். பின்னர் ஒன்று தேவனை நம்புவது அல்லது விரக்தியடைவது இவற்றில் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலே எனக்கு விளங்காத எல்லாவற்றைப் பற்றியும் ஏன் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். அதிகமான நேரத்தைக் குழப்பத்திலும் விரக்தியிலுமே கழித்தேன். என்னுடைய பதில் இல்லாத கேள்விகள் நான் தேவனோடு இருந்த உறவைப் பாதித்துக் கொண்டிருந்தது. இறுதியாக நான் தேவனிடமிருந்து பதிலை கேட்ப்தை நிறுத்திக் கொண்டு முற்றிலுமாக அவரை நம்ப தீர்மானித்தேன். விசஷேமாக நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதும், என் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை அறியாமலிருந்த போதும் அவரை நம்பினேன்.

என் தகப்பனால் பதினைந்து ஆண்டுகளாக பாலியல் துஷ்பிரயோகத்தால் கஷ்டப்பட்டும் பின்னர் அந்த துஷ்பிரயோகத்தின் விளைவால் மற்றொரு இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாய் கஷ்டப்பட்டவளாக இருந்தேன். சிறு பிள்ளையாக நான் இருந்த சூழ்நிலையிலிருந்து தேவன் என்னை விடுவிக்க வேண்டுமென ஜெபித்தேன் ஆனால் அவர் விடுவிக்கவில்லை. அவர் என்னை அதிலிருந்து விடுவிக்காமல் போனாலும் அதனூடே செல்ல தேவன் எனக்கு பெலன் கொடுத்தார். அதிலிருந்து மீண்டு வர எனக்குக் கிருபை கொடுத்தார். அநேக வேளைகளிலே தேவன் நமக்கு செய்திருப்பதை பார்க்காமல் அவர் நமக்கு செய்யாததையேப் பார்க்கின்றோம். நாம் செய்யக்கூடிய பெரிய்

> *எப்போதுமே, தேவன் நமக்கு என்ன செய்தாரென்பதை காண்பதற்கு பதிலாக அவர் நமக்கு செய்யாததை பார்க்கின்றோம்.*

தவறுகளில் அதுவும் ஒன்று உங்கள் வாழ்விலே நியாயமற்றுக் காணப்படுவதைக் கொண்டு துக்கப்பட்டுக் கொண்டிராமல், நீங்கள் பெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றி சந்தோஷப்பட தீர்மானிக்கலாமே. நீங்கள் விளங்கிக் கொள்ள இயலாத ஒன்று தேவனுடைய நன்மையைக் குருடாக்கி விட அனுமதிக்காதீர்.

சில காரியங்கள் ஏன் நடக்கிறது, இல்லை என்பதைப் பற்றி எப்போதும் நாம் அறிந்து கொள்வதில்லை ஆனால் தேவனுடைய ஆராய்ந்து அறியமுடியாத ஞானத்திற்குள் அநேக காரியங்கள் நிச்சயமாகவே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது. அறிந்து கொள்ள இயலாத காரியங்கள் நாம் பாலோகத்திற்குச் செல்லும் வரை அவை நமக்கு இரகசியங்களாகத்தானிருக்கிறது. இந்த வேதவாக்கியத்தைக் கவனியுங்கள்.

> ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!
>
> ரோமர் 11:33

நாம் தேவனைத் தேடும் போது இரகசியங்களை அறிந்து கொள்ள உதவுவதாக வாக்களித்திருக்கிறார் (எபே 1:17) ஆனாலும் அப். பவுலினால் நாம் கொஞ்சம் தான் ஒரு பகுதியைத்தான் அறிந்திருக்கிறோம். இயேசுவோடு நாம் என்றென்றும் இருக்கும் வரை முகமுகமாய் பார்க்கும் வரை முழுவதுமாய் அறிந்து கொள்ள மாட்டோம் என்று கூறுகிறார். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். (1 கொரி 13:9-10)

நம்பிக்கைக்கு பதிலளிக்கப்படாத சில கேள்விகளும் தேவைப்படுகிறது என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. அனேக காரியங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்துகின்றார். மிகவும் கடினமான பிரச்சினைகளுக்குப் பதிலையும் கொடுக்கிறார். ஆனால்

> *நம்பிக்கைக்கு பதிலளிக்கப்படாத கேள்விகள் உண்டு.*

தேவன் பதில் கொடுத்தாலும் அதை நம்மால் பெற்றுக் கொள்ள இயலாத அநேக சந்தர்ப்பங்கள் இருக்கிறது. தேவன் மட்டுமே அறிந்திருக்கும் சில காரியங்களை நம்முடைய குறைந்த அறிவால் அறிந்து கொள்ள இயலாது என்று நம்புகிறேன். நாம் அறிந்து கொள்ள வேண்டிய காரியத்தை அவர் நமக்குக் காண்பிக்கிறார், மற்றதை மறைக்கிறார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் முன்னோக்கி வாழ்கிறோம் ஆனால் பின்னால் திரும்பி பார்க்கும் போது தான் விளங்கிக் கொள்கிறோம். அனேக வேதனை மிகுந்த காரியங்கள் எனக்கு நடைபெற்ற போது என்னால் அதை அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் நான் திரும்பிப் பார்க்கும் போது முன்பு நான் பார்த்ததைப் போலில்லாமல் வேறு விதமாகப் பார்க்கிறேன். ஏனென்றால் நான் சகித்துக் கொண்ட முந்தய வலியிலிருந்து கிடைத்த நன்மையைப் பார்க்கிறேன். ஏனென்றால் நான் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறேன். தாவீது இவ்வாறாக சொல்கிறார் கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை. (சங்கீதம் 131:1)

தாவீது, தேவனுடைய இரகசியங்களுக்குள் எந்தவொரு மனிதனும் விளங்கிக் கொள்ளாத காரியங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார். நாம் கேள்விகளை குறைத்துக் கொண்டு தேவனை அதிகமாக நம்ப வேண்டும். லீ ஸ்ட்ரோபெல் -லின் இந்த கூற்றை நான் அதிகமாக விரும்புகிறேன். “கஷ்டங்களைப் பற்றிய தேவனின் இறுதி பதில் ஒரு விளக்கமன்று அது ஒரு அவதாரம்.”

தேவன் இயேசுவை நம்முடைய பாவங்களுக்க்காக பாடுபடவும் மரிக்கவும் அனுப்பினார். அவரை நம்பும் அனைவருக்கும் அவர் விடுதலையை வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் எப்போது எப்படி

விடுதலை வரும் என்று அவர் சொல்லவில்லை. அது வரும் வரை நமக்கு தேவனை நம்பும் சிலாக்கியமும், அவருடைய ஆறுதலையும் நம் கஷ்டங்களினூடே பெற்றுக் கொள்ளும் பாக்கியம் இருக்கிறது.

நமக்கு அன்பானவர் இளம் வயதிலே வியாதிப்பட்டு மரிக்கும் போது, தேவன் எப்போது விடுதலையாக்குவார் என்று நான் எப்படி நம்பு முடியும் என்று நாம் சொல்லலாம். அவரை நம்புபவரை அவர் விடுவிக்கிறார் என்பதில் நான் எப்போதுமே உறுதியாக இருக்கிறேன். அது நாம் இந்த பூமியில் இருக்கும் போது இல்லாமலிருக்கலாம் ஆனால் அவரோடு நாம் பரலோகில் சேர்ந்து கொள்ளும் போது அங்கே வேதனை கண்ணீர் என்று எந்த விதமான பாடுகளும் இல்லை.

நான் ஒருமுறை குழந்தையாக இருந்த போது மாடிப்படியிலே விழுந்து தன் முதுகை உடைத்துக் கொண்ட ஒரு இளைஞனின் வல்லமையான கதையைக் கேட்டேன். அவன் தன் வாழ் நாள் முழுவதும் ஆஸ்பத்திரிக்கு போவதும் வருவதுமாகவே இருந்தான். பதினேழு வயதுக்குள்ளாக அவன் பதிமூன்று ஆண்டுகள் ஆஸ்பத்திரியிலேயே கழித்தான். ஆனால் அவன் தேவன் நியாயமானவர் என்று நினைத்ததாக கூறினான். எப்படி உன்னால் அப்படி நினைக்க முடிகிறதென்று கேட்ட போது அவன், தேவன் எனக்கு நித்தியம் முழுவதும் இதற்காக ஈடுசெய்வார் என்று பதில் சொன்னான்.

இந்த மாதிரி கதைகளை நான் கேட்கையிலும், பயங்கரமான பாடுகளை அனுபவித்தும் இன்றும் தேவனை நம்புகிறவர்களை சந்திக்கும் போது என் ஆவியிலே எப்படி உணருகிறேன் என்பதை விவரிப்பது கடினமானது. என்னால் சொல்ல இயன்றதெல்லாம் அவர்கள் நம்பிக்கை அழகானது. அவர்களை, எல்லா கால நிலைகளிலும் தேவன் மேல் விசுவாசமாயிருப்பவர்களுக்கான நல்ல முன் மாதிரியாக பார்க்கிறேன். காரியங்களெல்லாம் அவர்கள் விருப்பம் போல் நடக்கும் போதும், அவர்கள் ஜெபங்களுக்கு சீக்கிரமாய் பதிலளிக்கப்படும் போதும் தேவன் பேரிலே நம்பிக்கையாய் இருப்பது ஒன்று. ஆனால் பாடுபட்டுக் கொண்டும், அநேக காலம் ஜெபித்துக்

கொண்டு விடுதலைக்காக காத்திருக்கும் போது அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பது மற்றொன்று. இரண்டாவதை செய்ய இன்னும் அதிகமான விசுவாசம் தேவைப்படுகிறது.

## தேவன் நல்லவரா ?

ஆம் தேவன் நல்லவரே! அவரின் தன்மை, நன்மை, வேறு விதமாக அவரால் இருக்க இயலாது. ஏதோவொன்று நமக்கு நன்றாக தெரியாததால், நம்மால் நன்றாக உணர முடியாதலால் தேவன் நல்லவரில்லை என்று அர்த்தமாகாது. தேவன் நல்லவர் என்று கிட்டத்தட்ட 700 வேத வாக்கியங்கள் கூறுகிறது. யாக்கோபிலுள்ள இந்த வசனம் எனக்குப் பிடிக்கும்.

> நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.
>
> யாக் 1:7

ஒவ்வொரு நன்மையும் தேவனிடமிருந்து வருகிறது. அந்த சத்தியத்திலே எந்தவித மாற்றமும் இல்லை. இதை நான் சொல்லும் போது சிலர் என்னிடம் 'தேவன் எப்போதுமே நல்லவராக இருந்தால், ஏன் மக்கள் பாடுபடுகின்றனர் ?' என்று கேட்பார்களென்று உறுதியாக நம்புகிறேன். நாம் ஏன் பாடுபடுகிறோம் என்பதற்கு அநேக காரணங்கள் இருக்கிறது. ஆனால் அவற்றில் ஒன்று கூட தேவனால் ஏற்படுகிறதில்லை. அவர் பாடுகளை ஆக்கியவரல்ல. சாத்தானே! நாம் நல்லவர்களாக இல்லாவிடினும், தேவன் நல்லவராகையால், வாழ்க்கையின் எந்தவொரு சூழ்நிலையையும் நன்மையாக மாற்ற முடியும். இதிலிருந்து எந்தவொரு நன்மையும் வர இயலாது என்று நினைக்கத்தக்க பயங்கரமான சூழ்நிலையை நீங்கள் அறிந்தோ அல்லதி அறியாமலோ பெற்றிருக்கலாம். ஆனால் தேவனால் அதை மாற்ற இயலும்.

சிறு பிள்ளையாக நான் அனுபவித்த துஷ்பிரயோகத்தை தேவன் என் நன்மைக்காவும், அநேகரின் நன்மைக்காகவும் மாற்றியிருக்கிறர் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். இந்த விளங்கிக் கொள்ளுதலானது நான் கசப்புள்ளவளாகவும், என்னை துஷ்பிரயோகம் செய்தவர்களை வெறுத்துக் கொண்டும், சுய பரிதாபத்தால் நிறைந்தவளாகவும் இருந்த போது பெற்றுக் கொள்ளவில்லை. தீமையான காரியத்தை எடுத்து அதை நண்மையாக மாற்ற அவரை நம்பின போது தான் கொஞ்சம் கொஞ்சமாக அது நடை பெறத் தொடங்கினது. உங்களுக்கு இதே மாதிரி நடக்கலாம். தேவனை எல்லா காலங்களிலும் நம்புங்கள் என்று உற்சாகப்படுத்துகிறேன். ஏனென்றால் உங்களுக்குத் தேவையான உதவியை கொடுக்க இதுதான் ஒரே வழி. நாம் தேவனை நம்பவில்லையென்றால் குழப்பமும் க்சப்பும் தான் கிடைக்கும்.

தேவன் நல்லவர், அவர் செய்வதும் நன்மையே (சங்கீதம் 119:68). எனவே பாடுகள் நம் நன்மைக்காக இருக்க முடியுமா? பாடுகளால் நாம் ஒடுக்கப்படும் போது, தீமையானவற்றை எடுத்து நம்முள் நன்மையானதை செய்ய வேண்டுமென தேவன் விரும்புவதால் நம்மை விடுவிக்க நாம் விரும்புவதற்கும் அதிகமான நேரத்தை அவர் எடுத்துக் கொள்கின்றாரா? ஆம் சாத்தியமே. நாம் விருப்பப்படாத காரியங்களை அனுபவித்ததால் ஏற்பட்ட அற்புதமான காரியங்களுக்கு நம்மில் அநேகர் சாட்சிகளாக உள்ளனர். நம்மை தெரிந்து கொள்ள சொல்லியிருந்தால், நாம் எல்லா பாடுகளையும் தவிர்த்து விடுவோம். ஆனால் நமக்கு எப்போதுமே அந்த வாய்ப்பு இல்லை; ஆனாலும் அதை நன்மையாக மாற்ற அவரை நம்பவும் நம்பாமலிருக்கவும் நமக்கு வாய்ப்பிருக்கிறது.

இதைப் பற்றி பின்னர் விளக்கமாக பார்க்கலாம். ஆனால் இப்போது நம்முடைய பாடுகளின் சில அர்த்தங்களை நாம் புரிந்து கொள்ள முயன்று முன் தேவன் நல்லவரென்றும் அவர் நல்ல காரியங்களை செய்கிறார் என்பதை எந்த கேள்விக்கும் அப்பாற்பட்டு நம்பிக்கையை நம் இருதயங்களிலே அஸ்திபாரமாக நாம் கொண்டிருக்க வேண்டும்.

ஆதியிலே நாம் இப்போது அனுபவிக்கும் காரியங்களை அவர் சிருஷ்டித்த பின், அவர் எல்லாவற்றையும் நோக்கிப்பார்த்தார். அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. ஆதி 1:31

"தேவன் நல்லவரென்றால் பின்னர் ஏன் அவர் இந்த உலகத்தை பாடுகளின்றியும், துயரங்களின்றியும் சிருஷ்டிக்கவில்லை ?" என்ற கேள்வியை சிலர் கேட்டிருக்கின்றனர். அவர் அப்படித்தான் செய்தார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஏதேன் தோட்டத்தையும், தேவன் மனிதனுக்காக கொண்டிருந்த திட்டத்தையும் பார்க்க வேண்டும் எல்லாமே நன்றாக இருந்ததாக நாம் காண்கின்றோம். ஆயினும் தேவன் மனிதனுக்கு சுய சித்தத்தைக் கொடுத்தார், ஆனால் அதின் விளைவு பாடுகளே. எந்த சுதந்திரமும் இல்லாமல் ஒரு பொம்மையைப் போல் அவரை நேசிக்காமல், அவரை தாராளமாக சுதந்திரத்தோடு நேசிப்பவர்களாக இருக்க வேண்டுமென விரும்பினார். நாம் நம்முடைய சுய சித்தத்தை உபயோகித்து அவருடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்பினார். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சித்தத்தை தெரிந்து கொள்ளவில்லை. அதின் முடிவு, வேதனை உலகத்தில் தோன்றியது. ஆதாம் ஏவாளின் இந்த துயரமான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு வந்தார். ஆனால் அவர் செய்ததின் முழுமையை நாம் பரலோகம் செல்லும் வரை பார்க்க மாட்டோம். பவுல் எபேசியர் நிருபத்திலே (எபே 1:14) "அவர் நம் முழு மீட்புக்கும், சுதந்திரத்திற்கும் நம்முடைய அச்சாரமாக இருக்கிறார் என்று சொல்லுகிறார்."

*தேவன் நம்மை நம்முடைய சத்துருக்களினின்று கொஞ்சம் கொஞ்சமாகவே விடுவிக்கிறார்.*

அந்த வசனமானது நமக்கு பலவற்றை வெளிப்படுத்துகிறது. நாம் இயேசுவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்

கொள்ளும் போது நம் வாழ்க்கையிலிருக்கும் காரியங்கள் செம்மையாகின்றது. அவரிடமிருந்து நாம் அதிகம் க்ற்றுக் கொள்கையில் அவருடைய சித்தத்திற்கு எப்படி கீழ்ப்படிந்து நடப்பது என்பது இன்னும் செம்மையானதாக மாறுகின்றது சாலமோன், நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் வெளிச்சம் வரும் மட்டும் பிரகாசமாக மாறிக் கொண்டேயிருக்கிறது என்று சொல்லுகிறார் (நீதி 4:18). மேலும் உபாகமம் 7:22, தேவன் நம்மை நம்முடைய சத்துருக்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்கிறார் என்று கூறுகிறது.

தேவனுடைய பிள்ளைகளின் முழு மீட்புக்கென்று காத்திருக்கிறதால் முழு பூமியும் கூட வியாகுலப்படுகிறது. இந்த வசனமானது சத்தியத்தை வல்லமையாய் வெளிப்படுத்துகிறது.

> அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.
>
> ரோமர் 8:23

இப்போது நாம் தேவனுடைய நன்மையை சிறிதளவு சுவைத்திருக்கிறோம், ஆனால் அதை முழுவதுமாக அனுபவிக்கும் நாள் வருகிறது. உணர்ச்சிகள் இருக்கும் வரை பாவம் இருக்கும். பாவம் இருக்கும் வரை பாடுகள் இருக்கும். நாம் இந்த பூமியிலே இருக்கும் வரை நம்முடைய எல்லா பாடுகளிலிருந்தும் விடுவிப்பாரென தேவன் வாக்கு பண்ணவில்லை. ஆனால் நம்மை அவைகளுக்கு மேலாக உயர்த்தும் உயிர்த்தெழுதலை அனுபவிக்க முடியுமென்று அவர் வாக்கு பண்ணியிருக்கிறார். (பிலி 3:10) வேறு விதமாக சொல்ல வேண்டுமெனில், ‘அதை நாம் சந்தோஷமாகவும் நன்னடத்தையோடும் சகித்துக் கொள்ள உதவுகிறார். இந்த உலகிலே நமக்கு உபத்திரவங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் நாம் திடன் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர் உலகத்தை ஜெயித்திருக்கிறேன் என்று சொல்லுகிறார் (யோவான் 16:33)

இந்த உலகில் நான் இருக்கையிலே தேவனுடைய நன்மையை எவ்வளவு முடியுமோ அவ்வளவாக நான் அனுபவிக்கிறேன். நான் தேவனோடு இருக்கும் போது இன்னும் நல்ல காரியங்களை எதிர்பார்க்கின்றேன். "தேவன் நல்லவர்" என்பதைத் தவிற வேறு எதையும் நான் ஒருபோதும் சொல்லக் கூடாதென நான் ஜெபிக்கிறேன். நாம் என்னதான் பாடுகளையும் துயரங்களையும் இந்த உலகிலே சந்தித்தாலும் அவையெல்லாம் தேவனுடைய தவறல்ல - தேவன் நல்லவர்!

## பாடுகள் நிரந்தரமல்ல

நாம் பாடுபடும் போது நம்மை உற்சாகப்படுத்தும் காரியங்களில் ஒன்று அவை நிரந்தரமல்ல என்பதே. இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு எவ்வளவு தான் காரியங்கள் தீமையாக நடந்தாலும் தேவனோடு வாழும் அந்த வாழ்க்கைக்காக ஆவலோடு காத்திருக்கலாம்.

> அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.
>
> வெளி 21:4

வேதனையளிகும் அநேக காரியங்கள் நாம் மரித்து பரலோகத்திற்கு போகு முன் தீர்க்கப்படுகிறது. வாழ்க்கை முழுவதும் அப்படியே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும், அதுவும் நிறைவு பெறும். நினைத்துப் பார்க்க முடியாத சந்தோஷத்தால் அவை மாறும். நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையிலே, *இதுவும் கடந்து போகும்* என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால்

> *காயங்கள் ஆறிபோகும் ஏமாற்றங்கள் புதிய கனவுகளாக மாறும். ஒன்றின் முடிவு மற்றொன்றின் தொடக்கம்.*

அவற்றால் நாம் மேற்கொள்ளப்படாமலிருக்க அது உதவும். சமீபத்திலே எனக்கு சளி தொல்லையினால் 35 நாட்களாக தலை வலியினால் கஷ்டப்பட்டேன். 'இதுவும் கடந்து விடும்' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேன். அப்படியே ஆனது. ஆனால் அதிக காலமாக நாம் பாடு படும் போது, பொதுவாகவே 'இதற்கு முடிவே இல்லை' என்று எண்ணத் தொடங்குகிறோம். ஆனாலும் அநேக காரியங்களுக்கு முடிவு உண்டு. உடைந்த இருதயங்கள் குணமடையும். இயேசு நம் வாழ்விலே கிரியை செய்ய அனுமதிக்கும் போது அப்படியேயாகும் சங்கீதம் 147:3 'அவர் உடைந்த இருதயங்களை கட்டுகிறாரென்று' வாசிக்கிறோம். காயங்கள் ஆறிப்போகும், ஏமாற்றங்கள் புதிய கனவுகளாக மாறும். ஒரு காரியத்தின் முடிவு மற்றொரு காரியத்தின் வாசலைத் திறக்கின்றது.

நாம் எல்லோருமே வாழ்வை திரும்பிப் பார்த்தால், வேதனையான பல சூழ்நிலைகள் இருந்திருப்பதை நினைவு கூறலாம். ஆயினும் அந்த காரியங்களெல்லாம் தீர்க்கப்பட்டு அவற்றால் நாம் இன்னும் பாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறதில்லை. 30 வருடங்களாக என்னை முடமாக்க கூடிய அளவு என் முதுகிலே அதிகமான வலியைக் கொண்டிருந்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புதிய மருத்துவரைச் சந்தித்தேன். நான் எடுத்திராத ஒரு பரிசோதனைக்கு என்னை உட்படுத்தினார். எனக்கு முதுகு பிரச்சினை ஏற்படுத்தியது அநேகமாக என்னில் பிறப்பிலேயே இருந்த ஒரு குறை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இன்று இருக்கும் அற்புதமான தொழில் நுட்பங்களால், இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். முன்பு என்னால் செய்ய இயலாத காரியங்களை இப்போது நான் செய்கிறேன். ஒருவர் தனக்கு 35 ஆண்டுகளாக அதே பிரச்சினை இருக்குமென்றால் அது நிரந்தரமான சூழ்நிலை என்று நினைத்துக் கொள்கிறார். ஆனால் என்னுடைய கதையிலே அதற்கு ஒரு முடிவு இருந்தது. அது எனக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுத்தது.

நாம் பாடுகளிலிருந்து மீண்டு வரும் நம்பிக்கையை விட்டு விடக் கூடாது. முன்னேற்றமடைவோம் என்ற நம்பிக்கை, நம்பிக்கையற்று

இருப்பதை விட மேலானது. திடீரென்று ஏற்படும் இழப்பிலிருந்து உங்கள் இருதயம் மீழ முடியுமா ? ஆம் ஏனென்றால் நம்முடைய தேவன் சகல ஆறுதலின் தேவன், அவரால் எல்லா காரியங்களையும் செய்ய இயலும்.

அப். பவுல் நம்மெல்லாரையும் விட மிகுந்த பாடுகளை அனுபவித்தார். ஆனால் அதை அதி சீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவம் என்று கூறுகிறார்.

> மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.
>
> 2 கொரி 4:17

நாம் தேவனைத் தெரிந்து கொள்ளும் போது பவுலுக்கிருந்த அதே மனப்பான்மை நமக்கும் கூட தேவையாயிருக்கிறது. அவர் தான் காணக்கூடியவைகளை காணாமல், காணக்கூடாதவைகளை காண்பதாகக் கூறுகிறார். (2 கொரி 4:18) வேறு விதமாக பவுல், மாம்சத்திலிருக்கும் ஜீவனை விட ஆவியிலிருக்கும் ஜீவனையே பார்த்தார். அவரின் பாடுகளின் மத்தியிலும் தேவனுடைய நன்மையை நம்பினார். அவர் தேவனுடைய வார்த்தையின் படி பாடுகளெல்லாம் சந்தோஷமாக்கப் படும் மகிமையான இடத்திலே தன்னுடைய நித்தியத்தை செலவிடுவேனென்று நம்பினார்.

அத்தியாயம் 9

# தேவன் பாடுகளை அனுமதிக்கின்றாரா?

வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.

சங்கீதம் 135:6

“தேவன் பாடுகளையும் துயரங்களையும் கொடுக்கிறாரென்று நான் நம்புகிறதில்லை” என்று ஒருவர் சொல்லலாம். அவர் அதை செய்கிறதில்லை, ஆனால் அவர் அதை அனுமதிக்கிறாரா? ஆம் அப்படி அனுமதிப்பாரேயென்றால், அதின் நோக்கம் என்ன? அவர் அதை அனுமதிக்கிறதற்கும், செய்கிறதற்குமான வித்தியாசம் என்ன? தீமையயும் துயரங்களையும் நான் அனுபவிக்கும் படி அனுமதிக்கும் தேவனை நான் எப்படி நம்புவது? இத்தகைய கேள்விகள் இருக்கிறதென்று அறிவேன். ஏனெனில் அவற்றிற்கான பதிலை மக்கள் என்னிடம் கேட்கிறார்கள்.

“விஞ்ஞானம் மேலே ஒருவர் இருக்கிறாரென்பதை நம்பாமலிருக்கச் செய்யவில்லை. ஆனால் இந்த உலகத்திலிருக்கும் பாடுகளும் தீமைகளுமே அப்படி செய்து விட்டது” என்று ஒருவர் சொல்லக்கேட்டிருக்கிறேன். தேவன் நல்லவர் என்று சொல்லப்படுவதுடன் இத்தகைய தீமையும் நிறைந்திருப்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நம்மில் சிலருக்கு

விசுவாசமானது இந்த எல்லா கேள்விகளுக்கும் மேலாக இருக்கிறது, ஆனால் அனேகருக்கு இதற்கான பதில் தேவைப்படுகிறது.

ஒரு தீய தகப்பன் அளித்த வேதனைதான் என்னை தேவனிடம் விசுவாசமாக இருக்க உதவியது. வேதனையும் வலியும் நான் வாழவே இயலாது என்ற அளவுக்கு இருந்தது. தேவனுடனான என்னுடைய உறவின் மூலமே நான் சமாதானத்தையும், நம்பிக்கையயும், குணமாக்குதலையும் பெற்றுக் கொண்டேன். தேவன அறிந்து அவரை விசுவாசித்ததால் கிடைத்த பலன்கள் எனக்கிருந்த கேள்விகளை விட அதிகமாக இருந்தது. இப்போதோ தேவனிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொள்ளும் நாள் வரை அல்லது எல்லா கேள்விகளுக்குமான பதில் கிடைக்கும் இடமாகிய பரலோகத்திற்கு செல்லும் வரை, அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டேன்.

ஆயினும் மக்கள் கேட்கும் கேள்விகளை நான் விளங்கிக் கொள்கிறேன். அப்படி கேட்பது தவறு என்று நான் நினைக்கவில்லை. நம்முடைய கேள்விகளால் தேவன் இடறலடைகிறதில்லை. ஆனால் அவைகளுக்கு பதில் கொடுப்பது தகுந்ததே என்று காண்கிறார். எத்தனை கேள்விகளுக்கான பதிலை நாம் பெற்றுக் கொண்டிருந்தாலும், வாழ்க்கையிலே எந்த அர்த்தமும் இல்லாததைப் போன்று தோன்றும் போது, தேவனை நம்பலாமா என்று தீர்மானிக்க இன்னும் அநேக கேள்விகள் இருக்கத்தான் செய்கிறது.

தேவன் பாடுகளை ‘அனுமதிக்கின்றாரா’ என்ற கேள்விக்கு என்னால் முடிந்த அளவு பதில் கொடுக்க விரும்புகிறேன். ஆனாலும் என்னுடைய பதில்கள் விசேஷமாக தேவனை நம்பாமலிருக்க சாக்கு போக்கு பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு விளங்காது என்பதை முன் கூட்டியே சொல்ல விரும்புகிறேன். எல்லாவற்றையும் மனதளவிலே புரிந்து கொள்ள வேண்டுமென விரும்புபவர்களுக்கும் இது திருப்தியளிக்காது. அறிவுக்கான நம்முடைய தேடுதல் நல்லதே, ஆனால் அதில் அதிகமாக செயல்படும் போது எதிரானதாக

மாறிவிடுகின்றது. நீதிமொழிகளிலே வாழ்க்கை முழுவதற்குமான வசனம் காணப்படுகிறது.

> உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.
>
> நீதி 3:5-7

*நம் சொந்த புத்தியின் மேல் சாரும் போது சமாதானம் இல்லை.*

நம்முடைய சுய புத்தியின் மேல் நாம் சார்ந்திருக்கும் போது சமாதானம் இல்லை. ஏன் இது நடந்தது? ஏன் எனக்கு நடந்தது? என்பதே நம்முடைய எதிராளியான சாத்தானின் முதல் ஏமாற்றும் தந்திரமாகும். தேவனுடனான நம்முடைய உறவிலே நம்மை பின்னுக்கு இழுக்கும் முயற்சியாகும். நான் பின்னோக்கி ஏதேன் தோட்டத்திற்கு சென்று, அவன் எவ்விதம் ஏவாளின் மனதிலே கேள்விகளை கொடுத்தானென்றும், அது படிப்படியாக அவர்களைப் பாவத்திற்குள்ளாக நடத்தியதென்றும், அது எப்படி தேவன் மனிதனுக்காக கொண்டிருந்த திட்டத்தையே மாற்றி விட்டதென்பதையும் காணலாம். “தோட்டத்திலுள்ள ஒவ்வொரு மரத்தின் கனியையும் புசிக்கக்கூடாதென்று தேவன் உண்மையாகவே சொன்னாரா” என்று சாத்தான் ஸ்தீரியிடம் கேட்டான். (ஆதி 3:1) அந்த கேள்வியானது சாத்தான் கேட்க வேண்டியதல்லாத மற்றொரு கேள்விக்குள்ளாக நடத்தியது. தோட்டத்திலுள்ள எல்லா மரங்களின் கனியும் நல்லதென்றால், ஏன் அவற்றில் ஒன்றை புசிக்கக் கூடாதென்கிறார்? அதன் பின் ஏவாள் யோசிக்கத் தொடங்கினாள்.

பகுத்தறிதலானது அவளை ஏமாற்றியது. அது வாழ்க்கையின் பாதையையே மாற்றி விட்டது.

தேவன் பாடுகளும் துயரங்களுமற்ற ஒரு பூரணமான உலகைத்தான் படைத்தார். ஆதாமும் ஏவாளும் அதிகாரம் செலுத்தி, உலகை ஆண்டு கீழ்ப்படுத்தி எல்லா வளங்களையும் தேவனுக்காகவும் மனிதனுக்காகவும் உபயோகிக்க வேண்டுமென விரும்பினார் (ஆதி 1:28). இந்த உலகத்தில் தேவன் பாடுகளைக் கொண்டு வரவில்லை. அவர் படைத்த மனிதனும் மனுஷியும் தான் கொண்டு வந்தனர். தேவனுக்கு கீழ்ப்படிவதற்குப் பதிலாக, சாத்தானுக்கு கீழ்படிந்து புசியாதே என்று தேவன் சொன்ன அந்த கனியைப் புசித்த உடனே அவர்கள் பாடுகள் தொடங்கின. அந்த ஒரு தீர்மானத்தால், தேவனின் அன்பையும் ஐக்கியத்தையும் அனுபவிப்பதிலிருந்து விலகி பயத்தினால் அவருக்கு ஒளிந்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். (ஆதி 3:8)

தேவன் ஆளுகிறார். ஆம் அவரால் எதையும் எப்போதும் எங்கேயும் எவருக்கும் செய்ய இயலும். நாம் ஜெபிக்கிறோம், அந்த ஜெபங்களெல்லாம் தேவனுடைய அதிகாரத்தை சார்ந்தே இருக்கிறது. தேவனால் எல்லாம் கூடும் (மத் 19:26) என்ற வாக்கை சார்ந்திருக்கிறோம். இருந்தாலும் தேவன் மனிதனுக்கு சுய சித்தத்தை கொடுக்கத் தெரிந்து கொண்டார். நாம் தேவனுக்கு கீழ்ப்படிவோமோ அல்லது நம் விருப்பம் போல் சொந்த வழியில் செல்வோமோ?

தேவன் நம்மை நேசிக்கிறார். நாம் அவரை நேசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அன்பு பலவந்தம் பண்ணுமேயானால் அது உண்மையான அன்பல்ல. “அன்பு தெரிந்து கொள்ளுகிறது. எங்கே சுயசித்தம் இருக்கிறதோ அங்கே எப்போதும் தீமை இருக்கும். ஆனால் தீமை எங்கே இருக்கிறதோ அங்கே ஒரு இரட்சகர் இருக்க முடியும். எங்கே இரட்சகர் இன்ருல்லிறாரோ அங்கே மீட்பு இருக்க முடியும். எங்கே மீட்பு இருக்கிறதோ அங்கே மறு சீரமைப்பும் இருக்கிறது”என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

தேவன் தம்முடைய முன்னறிவிப்பின் படியே, மனிதன் தவறாக தெரிந்து கொள்ளுவான் அதனால் பாடுகளுக்கும் கஷ்டங்களுக்கும் கதவைத் திறந்து விடுவான் என்று அறிந்திருந்தும் மனிதனுக்கு சிய சித்தத்தைக் கொடுத்தார். ஆனால் தேவன் நம்மை உதவியற்று விட்டு விடவில்லை. தேவன் பாடுகள் இவ்வுலகிலே வர அனுமதித்தார். அது தெரிந்து கொள்ளும் திறனில்லாமலிருக்கும் பொம்மையை விட சிறந்தது.

பதிலே இல்லாத எந்தவொரு பிரச்சினையும் தேவனுக்கு இல்லை. என்ன நடக்கும் என்று அறிந்தவராக காலத்தின் தொடக்கம் முதலே தம்முடைய ஒரே குமாரனான இயேசு கிரயம் செலுத்தவும், அதனால் மனிதனோடு ஒரு தொடர்பை ஏற்படுத்தவும் திட்டமிட்டார். பாடுகளிலிருந்து தப்பிக் கொள்ளும் போக்கைத் தேவன் ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் இவ்வுலகில் இன்னும் பாவம் இருக்கிறது. பாவம் இருக்கும் வரை பாடுகளும் இருக்கும். ஆனால் இயேசுவின் மூலமாக, தேவன் பாவத்திற்கான மன்னிப்பையும், ஆறுதலையும், கிருபையயும், பெலனையும், பாடுகளையும் நமக்குத் தேவையான எல்லா உதவிகளையும் கொடுத்திருக்கிறார். பாடுகளைச் சகித்துக் கொள்ள பொறுமை நமக்குத் தேவையாயிருக்கிறது. அவர் இன்னும் கொஞ்சம் அதிகமாக நாம் வரை நம்பினால், நம்முடைய மிகப்பெரிய பாடுகளையும், நன்மைக்கேதுவாக மாற்றுவார் என்று சொல்லுகிறார்.

> அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.
>
> ரோமர் 8:28

ஒரு காரியத்திலிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்ள, அது நல்லதாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. இதுவே தேவன்

> *ஒரு காரியத்திலிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்ள அது நல்லதாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.*

நல்லவரென்றும், நன்மையானது எல்லா அநீதி மற்றும் தனிப்பட்ட பாடுகளின் தீய விளைவுகளையும் விழுங்கி விடும் என்பதற்கான அத்தாட்சியாகும். வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் அல்ல, தேவனை நம்ப வேண்டும் என்பதற்காகவே அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவன் பேரிலே விசுவாசம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த வாழ்விலே பாடுகளை நாம் அனுபவிப்போம். இயேசு, இந்த உலகிலே நமக்கு உபத்திரவம் உண்டு என்று தான் சொன்னார். ஆனால் இந்த உண்மைக்கு ஒரு வாக்குதத்தத்தையும் கொடுத்தார். "நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) பாவம் பாடுகளை உண்டாக்கியது. அதற்கான பதில் இயேசுவே! தேவன் நம்மை உதவியற்றவராக விட்டு விடவில்லை.

நாம் தேவனில்லாமல் பாடுபடுவோமென்றால் அவர் சரியான வேளையிலே நம்மை விடுவிப்பார் அல்லது அதை நன்மையாக மாற்றுவார் என்று நம்பி ஏன் பாடுபடக் கூடாது. தேவனை நம்ப வேண்டும் என்பதைத்தான் நான் அறிவுறுத்துகிறேன். அவரை நம்புவது, பெற்றுக்கொள்ள நம்மை ஏதுவாக்குகிறது. ஆனால் நம்பாமலிருப்பது, விடுவிக்கப்படுவோம், குணமாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை இல்லமலே பாடுபடும் படி செய்து விடுகிறது.

தேவன் தம்மிலே அன்பு கூறுகிறவர்களுக்கு, நம்புகிறவர்களுக்குத், தம் சித்தத்தை விரும்புகிறவர்களுக்கு எல்லா காரியங்களையும் நன்மையாக மாற்றித் தருகிறார். நாம் விடுதலையோடு தெரிந்து கொள்ளும் சுய சித்தத்தோடு பிறந்திருக்கிறோம். நாம் பாடுபடும் போது அவரை நம்பவோ நம்பாமலிருக்கவோ தெரிந்து கொள்ளலாம்.

## எல்லா பாடுகளும் பாவத்தின் விளைவே

பாவம் இல்லாமலிருக்குமானால் பாடுகளும் இருக்காது. எல்லா பாடுகளும் தீமையும் பாவத்தின் விளைவே. அது நம்முடைய பாவத்தின் விளைவோ அல்லது மற்றொருவரின் பாவத்தின் விளைவோ அல்லது விழுந்து போன உலகிலே வாழுவதின் மறைமுகமான விளைவாகவும் இருக்கலாம். சாத்தான் பாவத்தின் காரணன். அவன் சோதிக்கிறவன், ஏமாற்றுகிறவன். எனவே சாத்தானே பிரச்சினைகளின் ஊற்று என்று கூறலாம். ஆனால் நாம் நம்முடைய சுய சித்தத்தைக் கொண்டு யாருக்கு கீழ்ப்படிகிறோம் என்பதை நாம் பார்க்க வேண்டும். நம் வாழ்க்கைகான தேவனுடைய அறிவுறுரைகளை விசுவாசித்து கீழ்ப்படிகிறோமா அல்லது சாத்தானின் பொய்யின் மூலமாக மாம்ச உணர்ச்சிகள் நம்மை ஆண்டு கொள்ள அனுமதிக்கிறோமா? நம் உணர்ச்சிகளுக்கு ஏற்ற விதமாக தற்காலிகமான சிற்றின்பங்களை ஏவாளுக்கு அளித்தது போல நமக்கும் அளிக்கிறான். ஆனால் தேவனோ தற்காலிகமான சிற்றின்பங்களையும் கடந்து செல்லும் ஒரு வாழ்வை அளிக்கிறார். அவரோடு சரியான ஒரு உறவையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும், அவருடன் பங்கெடுத்து ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் ஒரு அர்த்தமுள்ள வாழ்வையும் அளிக்கிறார்.

உங்களுடைய பாடுகளை ஏதோவொரு தனிப்பட்ட பாவத்தோடு இணைக்க முயற்சிக்க வேண்டாம் என உங்களை எச்சரிக்கிறேன். அநேக நோயாளிகள், இந்த வியாதியைப் பெற என்ன தவறு செய்தேன் என்ற குற்ற உணர்வால் தங்கள் வேதனையை இன்னும் அதிகரித்துக் கொள்ளுகிறார்கள். நாம் நம்முடைய தனிப்பட்ட பாவத்தால் கதவைத் திறந்து விடக்கூடும் என்றாலும், நாம் எதுவும் செய்யாமல் கூட இருந்திருக்கலாம். அது பாவத்தின் விளைவாக ஏற்படக்கூடிய வியாதி நிறைந்த இவ்வுலகில் வாழுவதால் கூட ஏற்பட்டிருக்கலாம். ஏற்கனவே ஒரு துயரமான வேதனையான காரியத்தால் பாடனுபவித்துக் கொண்டிருக்கும் போது, மேலும் ஒரு குற்றவுணர்வால் உங்களை நீங்களே வதைத்துக் கொள்ள வேண்டாம். நாம் செய்த தவற்றை

தேவன் சுட்டிக் காட்ட விரும்பும் போது கூட, அவர் நம்மை குற்றவுணர்வடையச் செய்ய விரும்புகிறதில்லை. தேவன் உணர்த்துகிறார்; நாம் மனந்திரும்பி அவரது மன்னிப்பை பெற்றுக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தை அவர் அளிக்கிறார். தேவன் நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை; அது சாத்தானின் கிரியை.

மக்கள் ஏன் பாடுகளை அனுபவிக்கின்றனர்? ஏன் இந்த உலகம் தீமையால் நிறைந்திருக்கிறது" என்பதை அறிந்து கொள்வதற்கு முன் வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதையே அதிகம் அறிந்து கொள்ள விரும்புகின்றனர். மனிதனுக்கு பிரச்சினை பாடுகள் இருந்தாலும், திருப்திப்படுத்த முடியாத சிற்றின்பங்களும் இருக்கிறது. இந்தியாவை போன்ற ஒரு நாட்டிலே எவ்வளவு பக்தியிருந்தாலும், எல்லாவிதமான பாடுகளாலும் நிரம்பி இருக்கிறது. தவறான பக்தியால் நிறைந்திருந்தாலும், அங்கிருக்கும் மக்கள் தேவனைத் தேடுகின்றனர். தங்களைத் தவிர வேறொன்றை ஆராதிப்பதை அவர்கள் நம்பியிருகின்றனர். ஆனால் தேவன் பேரிலுள்ள மகத்தான விசுவாசத்தால் பிறந்திருந்தாலும் மேற்கத்திய நாடுகள் எல்லாவிதமான சிறின்பங்களையும் அனுபவித்துக் கொண்டு அவரை விட்டு வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறது. சுருக்கமாக, மேற்கத்திய உலகம், தேவனிடம் உமக்கு இடமில்லை என்று சொல்லி விட்டது. தேசமாக நாம் மனித பக்திக்கு நேராய் சென்று கொண்டிருக்கிறோம். அதாவது தேவனில்லாமல் மனிதனே ஆண்டு கொள்வது. மேலும் பாவம் அதிகரிக்கும் போது, அதிக பாடுகளும் தீமையும் அதிகரிக்கும். ஆனால் எவ்வளவு தான் ஒரு தேசம் தேவனை விட்டுத் திரும்பினாலும், எவனொருவன் எல்லாகாரியங்களிலும் அவரை நம்பி அவரிடமாக திரும்புவானென்றால், அவன் தேவனுடைய உதவியைப் பெற்றுக் கொள்வான். அந்த மனிதன் விடுதலையயும் பாதுகாப்பையும் அனுபவிப்பான். அவை நமக்கு இல்லாமலிராது என்று வேதம் நமக்கு வாக்களிக்கிறதில்லை. நாம் இந்த உலகத்திலே இருக்கிறோம். இந்த உலகம் பாவத்தால் நிறைந்திருக்கிறது. எனவே அதின் எல்லா விளைவுகளையும் நம்மால் தவிர்க்க இயலாது.

பாடுகளை இரண்டு வகையாக பிரிக்கலாம். முதலாவது நெறி சம்பந்தபட்ட தீர்மானத்தால் விளைவது. மற்றொன்று இயற்கையான பாடுகள். இதில் வெள்ளம், புயல் போன்ற இயற்கை பேரழிவுகள் உள்ளடங்கும். இத்தகைய பேரழிவுகள் தேவனிடமிருந்து வருகிறதா அல்லது தேவனால் அனுமதிக்கப்பட்டவையா? வேத வல்லுநர்கள் சிலர் ஆம் எனும் சிலர் இல்லையென்றும் நினைக்கின்றனர். இதைப்பற்றி வாதத்தின் அடிப்படையிலே ஒரு விவாதத்திற்குள்ளாக செல்வதை விட, பாவத்தின் சுமையிலே பூமி அங்கலாய்ப்பதாக பார்க்கிறேன்.

இயற்கை பேரழிவுகளால், நல்ல குற்றமற்ற மக்கள் வருந்துகின்றனர். ஏன் இந்த பேரழிவு ஏற்பட்டது என்று விவாதிப்பதை விட, அத்தகைய மக்களுக்கு உதவ விரும்புகிறேன். தேவனை நம்புபவர் கூட இயற்கைப் பேரழிவால் மோசமாக பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய காரியங்களுக்கு நம்மால் விளக்கமளிக்க முடியாது. ஆனால் தேவனை நம்புகிறவர்களுக்கு உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரக்கமும் கனிவும் எப்போதுமே நியாய தீர்ப்பை ஜெயிக்கும்.

## உதவி எப்போது கிடைக்கும்?

சில சமயங்களில் தேவன் உதவுவது போலவும், வேறொரு சமயம் உதவாதது போலவும் தோன்றும். எனக்கு அப்படித் தோன்றினாலும், அது அப்படியாக இல்லை. நான் விரும்பும் உதவியை, நான் விரும்பும் விதத்திலே தேவன் கொடுக்காமலிருக்கும் போது அவருடைய குணாதியசத்தை அறிந்திருப்பது, எனக்கு எந்த வழி சிறந்ததோ அந்த வழியில் உதவுவார் என்று நம்புகிறேன். நாம் என்ன விரும்புகிறோமோ அதைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருப்பதால், தேவன் நமக்கு அதை கொடுக்கவில்லையென்றால் அவர் உதவி செய்யவில்லை என்று உணர்கிறோம். நாம் விரும்புவதைப் பற்றி அளவுக்கதிகமாக நினைத்துக் கொண்டிருப்பது தேவன் நமக்கு உதவி செய்து கொண்டிருப்பதை காண இயலாத படி செய்து விடுகிறது.

பின்னர் நமக்கு ‘காலம்’ என்ற பிரச்சினையும் இருக்கிறது. சில சமயங்களில் நாம் ஜெபிக்கும் போது தேவன் நமக்கு உடனே உதவுகிறார், விடுவிக்கின்றார் ஆனால் மற்ற சமயங்களில் நாம் புரிந்து கொள்ள இயலாத சமயத்தில் உதவி வருகிறது. என்னை கஷ்டப்படுத்தும் ஒன்றில் நான் சென்று கொண்டிருந்தால், அதிலிருந்து தேவன் என்னை விடுதலையாக்குவாரென்றால் அதற்கு முன் ஏன் மாதக்கணக்காக ஆண்டுக்கணக்காக காத்திருக்க வேண்டும்? அவர் தம்முடைய சொந்தக் காரணங்களைக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்மோடு எப்போதாவது தான் பகிர்ந்து கொள்வார். சில சமயங்களில் நம்முடைய பாடுகளை நமக்குள் ஏதாவதொன்றை செய்ய உபயோகிக்கின்றார். நம்முடைய நல்ல காலங்களிலே அவர் அதைச் செய்ய நாம் அனுமதிக்கமாட்டோம்.

‘வலி கவனிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. நம்முடைய சிற்றின்பங்களிலே தேவன் நம் காதுகளில் கிசுகிசுகிறார். மனசாட்சியிலே பேசுகிறார். ஆனால் நம் வலிகளிலே கூச்சலிடுகிறார். ஒரு செவிட்டு உலகை எழுப்புவதற்கு அவருடைய ஒலி பெருக்கி அது’ என்று சி.எஸ் லூயிஸ் கூறுகிறார்.

நாம் தேவனிடம் கேட்கும் போது அப்போது தான் அதை நாம் முதன் முறையாக கேட்கிறோம் என்ற அவசியம் இல்லை. சில சமயங்களிலே, ஒரு காரியத்தைப் பற்றிய என்னுடைய எண்ணங்களே வேறுபட்டிருக்கும் தேவனுடைய எண்ணங்களை ஏற்றுக் கொள்ளத் தடுக்கின்றது. என்னுடைய வறண்ட கண்களுக்கான தேவனுடைய பதில் நான் அதிக தண்ணீர் அருந்த வேண்டுமென்பதாக இருந்ததென்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஆனால் நான் ஏற்கனவே அதிக தண்ணீர் குடிக்கிறேனென்று நினைத்ததால் அவருடைய பதிலை ஏற்றுக் கொள்ளவில்லை. ‘ஒருவேளை நீங்கள் அதிக தண்ணீர் குடிக்க வேண்டுமென்று என்னிடம் சொன்ன பலரை அவர் உபயோகித்தார். ஆனால் நானோ, ஏற்கனவே நான் அதிக தண்ணீர் குடிக்கிறேன் என உடனே பதில் சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன்.’

2 இராஜாக்களின் புத்தகம் 5-ம் அதிகாரத்திலே நாகமான் என்ற ஒருவன் இருக்கிறான். அவன் சீரியாவின் படைத்தலைவன், ஒரு வீரன், ஆனால் அவன் ஒரு குஷ்டரோகியாக இருந்தான். எலிசா தீர்க்கதரிசி தன்னைக் குணப்படுத்த முடியும் என்ற செய்தியை தன் பணிப்பெண்ணின் மூலம் தெரிந்து கொண்டான். எனவே சீரியா இராஜாவிடமிருந்து வனை குணமாக்கும் படி ஒரு கடிதத்தை பெற்றுக் கொண்டு எலிசாவிடம் சென்றனர். நாகமான் வந்த போது எலிசா அவனிடம் தனிப்பட்ட முறையில் பேசவில்லை ஆனால் அவன் யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகினால் சொஸ்தமடைவான் என்ற செய்தியை வேறொருவர் மூலமாக அனுப்பினார். நாகமான் கோபத்துடன் சென்று விட்டான். ஏனென்றால், அவன், தேவ மனிதன் தன்னிடமாய் வந்து தன்னைத் தொட்டு குணமாக்குவார் என்று நினைத்திருந்தான். அவன் ஒரு படைத்தளபதியாக இருந்த படியால் ராஜரீக நடத்துதலுக்கு பழக்கப்பட்டிருந்தான். ஆனால் அச்சமயம் அப்படியாக இருக்கவில்லை.

ஒரு ஆற்றிலே குளிக்க வேண்டுமென்றால் அதற்கு இவ்வளவு தூரம் பிரயாணப்பட்டு வர வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவன் வசித்த இடத்திலே அதை விட நல்ல பெரிய ஆறுகள் இருக்கிறதென்று கோபத்துடன்/ஆத்திரத்துடன் சென்றான் என்று வேதம் கூறுகிறது. ஆனால் அவனுடைய வேலைக்காரரில் ஒருவர் “என் தகப்பனே, தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?” (2 இராஜாக்கள் 5:13) என்று கேட்டான். தேவன் அவனுக்கு தேவைப்பட்ட சுகத்தை பெறாமல் தடுத்துக் கொண்டிருந்த அவனுடைய பெருமையை வேலைக்காரன் மூலம் காண்பித்தார். நாம் எவ்வளவு தரம், இது இப்படியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினக்கிறோம். தேவன் வேறொரு வழியை நமக்குக் காண்பிக்கும்போது அதை நாம் புறக்கணைத்து விடுகிறோம். ஏனென்றால் அதை நாம் அறிந்து

கொள்ள இயலாமலிருக்கிறோம் அல்லது அதனால் இடறலடைகின்றோம்.

"...எல்லா மனிதனும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாகவும் இருக்கக் கடவர்கள் , என்று தேவனுடைய வார்த்தைக் கூறுகிறது." (யாக் 1:19) நாம் பொதுவாக கேட்பதற்கும் சற்று அதிகமாக கவனித்துக் கேட்போமென்றால், நமக்கு தேவையான சில பதில்களை பெற்றுக் கொள்வோமென்று நினைக்கிறேன். இது எனக்கு தெரிந்த விஷயம்.

நான் இளம், முதிர்ச்சியடையாத கிறிஸ்தவளாக என்னை நானே அதிகமாக விரக்தியடையச் செய்தேன். ஏனென்றால் நான் எப்போதுமே எனக்குப் பிடிக்காத விளங்காதவற்றைப் பற்றி "ஏன்" என்று அறிந்து கொள்ள விரும்பினேன். தேவனே என் ஊழியம் வளர ஏன் இவ்வளவு காலம் எடுக்கிறது? தேவனே நான் ஜெபிக்கின்றேன். ஏன் இன்னும் டேவையும் என் பிள்ளைகளையும் மாற்றவில்லை? இதற்கான பதில் எனக்கு இப்போது தெரிந்து விட்டது. அவர் என்னுடைய ஊழியத்தையும் குடுபத்தையும் மாற்ற விரும்பவில்லை. மாற வேண்டியவள் நானாக இருந்தேன். அச்சமயத்திலே அதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு நான் முதிர்ச்சியடைந்திருக்கவில்லை. இந்த அனுபவங்களெல்லாம் நாம் தவறான கேள்விகளைக் கேட்பதாலும், சில சமயங்களிலே நாம் கேட்டதைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமில்லாதிருப்பதாலும் பதிலளிப்பதற்குத் தேவன் காத்திருக்கிறார் என்பதைக் கற்றுக் கொடுத்தது. கீழே வரி கேள்வி என்னவாக இருந்தாலும், பதில் எப்போதுமே ஒன்று தான், தேவனை நம்பு!

> *சில சமயங்களிலே நாம் தவறான கேள்விகளைக் கேட்பதால், தேவன் பதில் கொடுக்க காத்திருக்க வேண்டியிருக்கிறது.*

அத்தியாயம் 10

# நாம் பாடுபடுவதற்கான காரணங்கள் (பகுதி 1)

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1 தெச 5:18

நாம் பாடுகளை முழுவதுமாக விளங்கிக் கொள்ளா விட்டாலும் அதைப் பற்றி கற்றுக் கொள்ளக்கூடிய காரியங்களுமிருக்கிறது. அப்படி செய்வது ஞானமானது. நாம் ஒன்றை விளங்கிக் கொள்ளும் போது

அதைப்பற்றி குழம்பியிருக்கும் போது இருப்பதை விட சுலபமாக அதை சகித்துக் கொள்ள இயலுகிறது. நமக்கு விளங்கிக் கொள்ளுதல் இல்லாமலிருக்கும் போது பாரம் இரண்டு மடங்காக கனக்கிறது. நாம் ஏன் பாடுபடுகிறோம் என்பதற்கான பதில்களில் பெரும்பாலானவை ஆவிக்குறிய முதிர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் அந்த வளர்ச்சியில் தான் எனக்குக் கிடைத்ததென்று கண்டுபிடித்திருக்கிறேன். உதாரணமாக சில ஆடுகள் எனக்குப் பயனுள்ளதாக அமைந்தது என்பதைக் கற்றிருக்கிறேன். சிலவற்றை ஏற்றுக் கொண்டு, அது என்னில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும் படி நான் அனுமதிக்க வேண்டும். மேலும் சிலவற்றிற்கு நான் எதிர்த்து நிற்க வேண்டும். ஏனென்றால் சாத்தானின் எண்ணம் என்னை அழிக்க வேண்டுமென்பதே. எதிர்காலத்தில் நான் தேவனுக்குள்ளாக வளர்கையில், ஒருவேளை நான் விளங்கிக் கொள்ளுவேன். ஆனால்

இப்போதோ, நான் என்ன கற்றுக் கொண்டேனோ அதை உங்களிடம் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

வருந்திக் கொண்டிருக்கும் ஆத்துமாவிற்கு, நம் வாழ்க்கையிலே இருக்கும் அநேக ஆசீர்வாதங்களுக்காக நன்றியோடிருப்பது பெலனளிக்கும் ஒரு ஊட்டச் சத்து மருந்தைப் போன்றதாகும். நம்முடைய பாடுகளைப் பற்றி நாம் எவ்வளவு அதிகம் கவனிப்போமென்றால் அவ்வளவு அதிகமாய் கஷ்டப்படுவோம். ஆனால் நன்றியோடிருக்க வேண்டிய காயங்களைக் கண்டறிந்து அவற்றைப் பற்றி கவனித்துடனிருப்பது பலனளிக்கிறது. ஒருவர் தேவன் நல்லவரென்று நம்பினால், மோசமான பாடுகளின் மத்தியிலும் தேவன் பேரிலே அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பலமுள்ளதென்றும், வாழ்க்கையின் எல்லா பருவங்களையும் சகித்துக் கொள்வார்களென்பதும் நிரூபிக்கப்படுகிறது.

பாடுகளின் மத்தியிலே நம்முடைய நன்றி நிறைந்த வார்த்தைகளானது, விசேஷமாக நியாயமற்ற பாடுகளின் நடுவில், நான் அறிந்த எல்லாவற்றிற்கும் மேல் தேவன் பேரிலே நாம் கொண்டிருக்கும் அத்தாட்சியாக இருக்கிறது. பாடுகள் நிஜமானவை, அது வேதனையானவை. அது சில சமயங்களிலே பயங்கரமானதாகவும், தாங்கொண்ணாததாகவும் காணப்படுகிறது. அது சரீரத்தையோ, ஆவியோ, மனதையோ, உணர்வுகளையோ, பணத்தையோ அல்லது உறவுகளையோ சார்ந்ததாக இருக்கிறது. நம்மில் யாரும் கஷ்டப்பட்டிாத அளவிற்கு இயேசு கஷ்டப்பட்டார். ஆனாலும் அவர் தாம் பட்ட பாடுகளால் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டாரென்று வேதம் கூறுகிறது. (எபி 5:8) இயேசு ஒருபோதும் கீழ்ப்படியாமலிருக்கவில்லை. அவர் நன்றியுள்ளவராக இருந்தார். எப்போதுமே ஒரு அன்பான மனப்பான்மையை வெளிப்படுத்தினார். ஆனால் அவரது பாடுகளின் மூலமாக தேவனுக்குக் கீழ்ப்படிவதின் விலைக்கிரயம் என்ன என்பதை அவர் அனுபவித்தார். நம்முடைய இரட்புக்கான காரணராக அவர் மாற, அந்தக் கிரயத்தை செலுத்த அவர்

*இயேசு தாம் சென்றிராத இடத்திற்கு நம்மைச் செல்ல சொல்வதில்லை.*

விரும்பினார் (எபி 5:9; 12:2) இந்த வாழ்விலே நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு வலியையும் விளங்கிக் கொள்ளும் ஒரு பிரதான ஆசாரியர் அவரே (எபி 4:15). இயேசு தான் செல்லாத இடத்திற்கு நம்மைச் செல்ல சொல்லவில்லை. அவர் எபோதுமே முன்னே சென்று நான் நடந்து செல்ல வேண்டிய பாதையை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறாரென்பதை அறிந்து கொள்வது எனக்கு ஆறுதலளிக்கிறது.

இதையெல்லாம் மனதிலே கொண்டவளாக, வாழ்விலே சில சமயங்களிலே நாம் பாடுபடும் போது மனதிலே வைத்துக் கொள்ள வேண்டிய சில காரியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

## பாவமே எல்லா பாடுகளின் வேராக இருக்கிறது

நம்முடைய பாடுகளின் காரணம் நம் பாவம், வேறொருவரின் பாவம் அல்லது விழுந்து போன இந்த உலகிலே வாழ்வதின் பலன் என்பதை நாம் ஏற்கனவே நிர்ணயித்து விட்டோம். நாம் நன்கு விளங்கிக்கொள்ள இதை கொஞ்சம் பிரிக்க விரும்புகிறேன். மனிதன் வேதனையோ வியாகுலமோ அனுபவிக்க வேண்டுமென்பது தேவனுடைய ஆதி திட்டமன்று. அதற்காக அவரை குற்றப்படுத்துவது நியாமற்றது.

நம்மில் அனேகர், நம் வாழ்விலே பாடுபடும் கரியங்களோடு பாவமும் வியாதியும் இணைக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் கேட்கும் போது, நம் பாவத்தைக் கண்டுபிடிக்க நம்மை நாமே ஆராயத்தொடங்குவோம். நான் செய்த ஏதோவொன்று வியாதி வரக்காரணமாயிருக்கலாம், என்றாலும் எப்போதுமே அப்படியில்லை. அது பொதுவான காரணமாகவும் இருக்கிறதில்லை.

வேதத்திலே, இயேசு ஒரு குறிப்பிட்ட பாவத்தை, ஒரு குறிப்பிட்ட வியாதியோடோ, சுகவீனத்தோடோ தொடர்புபடுத்துவதற்கு எந்தவொரு உதாரணமும் கிடையாது. அவர் நம்மைச் சுகமாக்குகிறவர். அவர் அனேகந்தரம் மக்களை சுகமாக்கி, தாம் வியாதியை சுகமாக்கக் கூடுமென்றால் பின்னர் நிச்சயமாகவே நம்முடைய பாவங்களையும் மன்னிக்க இயலும். (மாற்கு 2:9-11). தேவனுடைய வார்த்தையை முறையாகவும் ஆழமாகவும் படிக்கும் போது கிறிஸ்துவின் பாடுகளுக்கான பிராயச்சித்த பலியிலே குணப்படுத்தலும் பாவமன்னிப்பும் உள்ளடக்கபட்டுள்ளது. (ஏசா 53:4-5) தேவன் ஒரே சமயத்தில் சுகமாக்குகிறவராகவும் வியாதிக்குக் காரணராகவும் இருக்க இயலாது. தேவன் நல்லவர், பிசாசு கெட்டவன் என்பதை நம் இருதயங்களிலே எப்போதும் நன்கு பதிந்து வைத்துக் கொள்ளுவோம்.

குளிர்காலத்தில் ஒவ்வொரு வருடமும் சளி காய்ச்சல் போன்ற வியாதிகள் ஏற்படும் போது நல்லவர்கள், கெட்டவர்கள், சிறியோர், பெரியவர் என அனைவருமே இதனால் பாதிக்கப்படுகின்றனர். அது அப்படியாக ஏற்படுகிறது. பாவிகளுக்குத் தான் சளி பிடிக்கிறது, சளி பிடிக்காவிடில் அவர் பாவம் செய்யாதவர் என்றெல்லாம் ஒன்றுமில்லை. ஆயினும் வியாதி வரும் போது, தேவனே இந்த வியாதி எனக்கு வர நான் எவ்விதத்திலும் கதவைத் திறந்து விட்டிருக்கிறேனா என்று கேட்பது ஞானமான காரியமாகும். அனேகந்தரம் நம்மைப் பராமரிப்பதிலே நாம் குறைவுள்ளவர்களாக இருப்பதால் நம்முடைய நோய் எதிர்ப்பு சக்தியை அது குறைத்திருக்கலாம். அதனால் நாம் நம்மை நன்றாக பராமரித்திருப்போமேயானால் அது நேரிட்டிருக்காது. எதிர்காலத்தில் நாம் தவிர்க்க வேண்டிய ஏதோவொன்றை தேவன் நமக்குக் காண்பித்திருந்தாலும் காண்பிக்காத தருணங்களும் இருக்கின்றன. அவர் அமைதியாக இருக்கும் போது நான் சுகத்திற்க்காக கேட்கின்றேன். தேவன் அதை நன்மையாக மாற்றித் தரும் படி அவரை நம்புகிறேன்.

நாம் சளி காய்ச்சலைப் பற்றி பேசும்போது இதனைப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கிறது. ஆனால் வியாதி புற்று நோயாகவோ மற்ற வேதன மிகுந்த வாழ்வா சாவா என்ற சூழ்நிலையாக இருக்கும் போது அது மிகவும் கடினமாகும். சூழ்நிலை அதிக கடினமாக இருக்கும் போது அதை விளங்கிக் கொள்வதும் கடினமாக இருக்கும்.

1989-ல் நான் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டேன். நான் என் சரீரத்தை நன்கு கவனிக்க ஞானமாக இருந்திருந்தால், அதைத் தவிர்த்திருக்கலாம் என்பதை உணர்ந்தேன். அந்த சமயத்திலே எங்களுடைய ஊழியமானது புதியதாக இருந்தது. தேவனை எப்படி நம்புவது என்பதைப் பற்றி அதிகம் அறியாமலும் பொறுமையாக இருப்பதையும் நான் அறியாமலிருந்ததால், அழுத்ததிற்குள்ளாகவே தொடர்ந்து இருந்தேன். அதுவும் மிகவும் வேதனையளிக்கிறதாகவும், கடினமானதாகவும் இருந்தது. நான் போதுமான அளவு தூங்கவில்லை. எனக்கு சரியான உடற்பயிற்சி கிடைக்கவில்லை. நான் மிகவும் கடினமாக உழைத்தேன். எனக்கு போதிய ஓய்வு கிடைக்கவில்லை. நான் ஆரோக்கியமற்ற உணவை அதிகமாக உண்டேன். அதிக அளவிலான காப்பி அருந்தினேன். போதிய அளவு தண்ணீர் பருகவில்லை. நான் அடிக்கடி கோபமாகவும், ஏமாற்றமடைந்தவளாகவும் காணப்பட்டேன். நான் விரக்தியடைந்திருந்தேன். இப்படியாக பட்டியல் நீண்டு கொண்டே போனது. அதன் விளைவு, ஹார்மோன் சமநிலை பாதிக்கப்பட்டு மாதவிடாய் சுழற்சியைப் பாதித்ததால் மருத்துவரிடம் செல்ல நேர்ந்தது. அவர் கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சியையைப் பரிந்துரைத்தார். பின்னர் எஸ்ரோஜன் ஹார்மோன் ஊசிகளைப் போட்டார். அது எனக்கு அதிக உதவியது. பின்னர் ஒவ்வொரு பத்து நாளைக்கு ஒரு ஊசி போட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கு பின்னர் ஒரு வருடம் கழித்து எஸ்ரோஜன் ஹார்மோனை சார்ந்து வளரக்கூடிய அபாயகரமான மார்பகப் புற்று நோயால் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டியதாயிற்று.

இந்த சூழ்நிலையிலே என்னை நான் நன்கு பராமரித்துக் கொள்ளாததால் குற்றப்படுத்தவோ சிட்சிக்கவோ இல்லை. அந்த அறுவை சிகிச்சை வெற்றியடைந்ததால் எனக்கு மேலும் எந்த மருத்துவ உதவியும் தேவைப்படவில்லை. எனக்கு அதுவே ஒரு அற்புதமாக இருந்தது. ஆனால் தேவனோ அந்த சூழ்நிலையை உபயோகித்து, என் சரீரம் அவருடைய ஆலயமாக இருப்பதால் அதற்கு நான் கனத்தைக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி எனக்கும் போதிக்க தொடங்கினார். இப்போது என்னுடைய சரீர ஆரோக்கியத்திற்கு அனுதினமும் நல்ல தீர்மானங்களை எடுக்கிறேன். நாம் கிரயத்திற்கு கொள்ளப்பட்டு தேவனுக்குச் சொந்தமான படியால், நம்முடைய சரீரங்கள் தேவனுடைய ஆவியாக இருக்கிறபடியால், நம்முடைய சரீரங்களை அவமதித்து துஷ்பிரயோகம் செய்வது பாவம் என்று நம்பக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறேன். இந்த எண்ணம் உங்கள் எண்ணத்திற்கு மிகவும் அப்பாற்பட்டதாக தெரிந்தால் தற்போதைக்கு அதை விட்டு விடுங்கள். உங்களை நீங்கள் நன்கு பராமரித்துக் கொள்ள உற்சாகப்படுத்துகிறேன்.

நான் மக்களுடன் பேசுகையிலே, பெரும்பாலோனாரோர் தங்கள் சரீரங்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர். நமக்கு ஆரோக்கியமாக இருப்பதின் முக்கியத்துவம் தெரியாமல் கூட இருக்கலாம். ஆனால் அவை எல்லாவற்றிற்கும் தேவனிடம் கேட்பது ஞானமாகும். ‘ஆவியிலும் ஆத்துமாவிலும் சரீரத்திலும் ஆரோக்கியமாக இருப்பது எப்படி’ என்ற ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்க உங்களை அறிவுறுத்துகின்றேன். நீங்கள் முன்னர் குருடாக இருந்த அநேக காரியங்களுக்கு உங்கள் கண்கள் திறக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

எனக்கு புற்று நோய் இருந்த போது தேவன் என் மேல் அதிக இரக்கமுள்ளவராகவும் கிருபையுள்ளவராகவும் இருந்தார். அதன் விளைவும் மிக சிறப்பாக இருந்தது. என்னுடைய இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கையிலே மக்கள் தங்களை நன்றாக கவனித்துக்

கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. வியாதிகள் நோய்களின் பின்னால் இருக்கும் எல்லா காரியங்களும் எனக்குத் தெரியாது. ஆனால் நாம் நம்முடைய ஆரோக்கியத்தில் முதலீடு செய்து முடிந்த அளவு பெலத்துடன் இருக்க வேண்டுமென்பதை அறிந்திருக்கிறேன். சாத்தான் எவனை விழுங்கலாமென்று வகைதேடி சுற்றித் திரிகிறான். அது நானாக இல்லாதபடி முடிந்த அளவு என்னை பாதுகாத்துக்கொள்ளப் பார்க்கிறேன். 1 பேதுரு 5:8 சொல்லுகிறது பேதுரு நாம் சமநிலை தவறாதவர்களாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார். நான் நிச்சயமாகவே சமநிலையற்றிருந்தேன். தேவனுடைய வார்த்தையிலே காணப்படும் அவருடைய ஆரோக்கியமான விதிகளை நாம் உடைத்து விட்டு எந்த விளைவும் ஏற்படக்கூடாதென்று எதிர்பார்க்கக்கூடாது. குறைந்த பட்சம் நாம் நம்மை ஒழுங்காக பராமரிக்காவிட்டால் மிகவும் களைப்புடன் இருப்போம்.

சமீபத்திலே என் இடுப்பு எலும்பு சரியாக உருவாகாததாலும், மூட்டு வாதத்தாலும், நான் முழு இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாயிருந்தது. நான் சுகமானதைப் பற்றி ஆச்சரியமடைந்தாலும், நான் அதிகம் உழைத்ததால் சில நாட்களுக்கு வேதனையை அனுபவித்தேன். அந்த வலியானது, மெதுவாக செல், உன் செயல்பாடுகளைக் குறைத்துக் கொள், இன்னும் அதிக பொறுமையாக இரு என்று என் சரீரம் சொல்லும்படியாக இருந்தது. என் மருத்துவர் கூட நான் என்ன செய்ய வேண்டுமென்பது என் வலியைப் பொறுத்தது என்றார். நீங்கள் ஒரு நாளிலே அதிக வேலை செய்தால், மறு நாள் அதிகப்படியான வலி இருக்குமேயென்றால், பின்னர் அடுத்த நாள் உங்கள் செயல்பாடுகளைக் குறைத்துக் கொண்டு வலி அடங்க உதவுங்கள் என்றார். பவுல் எபேசியருக்கு எழுதியதைப் போன்று (எபே 6:13) கிறிஸ்துவிலே நிலைத்திருங்கள். அவரின் அன்பிலே நிலைத்திருங்கள். அவர் உங்களைச் சுகமாக்க அவரை நம்புங்கள். நீங்கள் செய்ய வேண்டுமென்று தேவன் காண்பிக்கும் காரியத்தைச் செய்யுங்கள். பின்னர் அவரது அன்பிலே

முழு சுகமாகுதலையும், சீரடைவதையும் எதிர்பார்த்து இளைப்பாறுங்கள்.

## ஞானி முட்டாளை விட குறைவாகப் பாடுபடுறான்

ஒரு ஞானவான் எல்லா பாடுகளையும் தடுக்க இயலாவிட்டாலும், முட்டாள் செய்யும் அனேக காரியங்களை அவன் தவிர்க்கிறான். தேவனுடைய விதிப்படி நாம் விதைப்பதை அறுப்போம். (கலா 6:7; மத் 7:1-2; லூக்கா 6:31). எனக்கு அது ஒரு தெளிவிக்கும் எண்ணமாகும். இதை நாம் அனுதினமும் நினைக்க வேண்டும்.

ஒருவன் தன் மனைவிக்கு பல சந்தர்ப்பங்களில் உண்மையற்றவனாக இருந்திருப்பானேயானால், அவன் நல்லுறவை இழந்து விடுவான். அது அவனுடைய தவறே. அவன் விதைத்ததை அவன் அறுக்கிறான். ஒருவன் உணர்ச்சிவசப்பட்டும் அளவுக்கதிகமாகவும் செலவழிப்பானேயென்றால் கடன் பட்டு விடுவான். அது அவனுடைய சொந்த தவறே. அவன் முட்டாள்தனமாக விதைத்திருக்கிறதால் அதன் பலனை அறுத்துக் கொண்டிருக்கிறான்.

> மூடனுடைய உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும்.மூடனுடைய வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக் கண்ணி.
>
> நீதி 18:6-7

> ஒரு புத்திமானின் வார்த்தைகள் எவ்வளவு பலனளிக்கிறதென்பதைக் குறிக்கவும் அநேக வசனங்களிருக்கின்றன. இது ஒரு உதாரணம்:
>
> நீதி 12:18

ஞானமான வார்த்தைகளைப் பேச முயற்சிப்பதோடு, ஞானமான செயல்களையும் செய்ய நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஞானம் தான் நாம் தேடத்தகுந்த விலையேறப் பெற்றதென்று நீதிமொழிகள் நமக்குப் போதிக்கின்றது. ஞானிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வாக்குதத்தங்களெல்லாம் அனேகமாகவும், விரும்பத்தக்கதாகவும் இருக்கிறது. தயவு, ஐஸ்வரியம், நீண்ட ஆயுள், உயர்வு, தெளிவு, பாதுகாப்பு போன்று இன்னும் சில.

நாம் எடுக்கும் ஒவ்வொரு புத்தியீனமான தெரிந்து கொள்ளுதலின் பலனை நாம் உடனேயே அறுப்பதில்லை என்பது தெரியாமலிருந்தால் பிரச்சினைகளை அனுபவிப்போம். தேவனுடைய மன்னிப்பையும் அவருடைய இரக்கத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடிவதால் அவருக்கு ஸ்தோத்திரம். ஆனால் நாம் தொடர்ந்து முட்டாள்தனமாக விதைப்போமென்றால் அதன் பலனை அறுப்போம். பாடுகளையும் அனுபவிப்போம்.

சன்மார்க்கமான நெறியின் மேல் அஸ்திபாரம் போடப்பட்ட ஒரு உலகிலே நாம் வாழ்கிறோம். ஒழுக்ககேடான நடத்தைகளுக்கு விளைவு உண்டு. உதாரணமாக ஒருவன் மது அருந்தி விட்டு காரை ஓட்டினால் அவர்கள் காயமடையக்கூடும் அல்லது வேறொருவரை காயமடையச் செய்யக்கூடும். ஒருவர் தொடர்ந்து கோபமடைவாரென்றால் தனியாகத்தான் இருக்க வேண்டியிருக்கும். ஒருவர் மற்றொருவரை கொலை செய்தால் அவர்கள் நிச்சயமாகவே மன்னிக்கப்படுவர் ஆனால் சிறைச்சாலையில் தங்கள் வாழ் நாளை கழிக்க நேரிடும். ஒவ்வொரு நாளும் நம்முடைய வார்த்தைகள் எப்படிப்பட்ட விளைவுகளைக் கொண்டிருக்கின்றன என்பதைச் சிந்திக்கத் தொடங்க வேண்டும். அது ஞானமாய் தீர்மானங்களை எடுக்க உதவும்.

அப். பேதுரு நமக்கு உகந்த ஆடுகள், ஏற்றதல்லாத பாடுகளைக் குறித்து பேசுகிறார். அவர் தவறான காரியங்களுக்காக நியாயமாய் பாடுபடுவதை விட சரியான காரியங்களுக்காக அநியாயமாய்

பாடுபடுவதே மேல் என்று கூறுகிறார். (1 பேதுரு 2:19-20; 4:15-16) நான் தேவனுடைய வார்த்தையை எவ்வளவு அதிகமாய் படிக்கிறேனோ அவ்வளவு அதிகமாய் அதிலிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறேன். அதை என் வாழ்விலே செயல் படுத்துவதால் மிகவும் குறைவாகவே பாடுபடுகிறேன். நம் வாழ்க்கைக்கான அறிவுரைப் புத்தகம் வேதாகமம்! நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்தையும் ஜாக்கிரதையாக எடுக்க உதவுகிறது. அது மிகவும் முக்கியம். ஏனென்றால் ஒவ்வொரு தெரிந்து கொள்ளுதலுக்கும் விளைவுகளுண்டு. தேவனுடைய வார்த்தையை பின்பற்றுபவர்கள் தங்களுடைய சூழ் நிலைக்கு ஒருபோதும் பலியாக வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் சூழ்நிலையை மேற்கொள்ளத்தக்க தீர்மானங்களை எடுப்பதோடில்லாமல் அதனால் அவர்கள் பாடம் கற்றுக் கொள்ளவும் முடியும். தேவனுடைய வார்த்தையை நான் கற்றுக் கொள்ளுவதற்கு முன் பாலியல் துஷ்பிரயோகத்தின் இரையாக இருந்தேன். ஆனால் இப்போதோ அதின் தாக்கத்திலிருந்து நான் விடுபட்டிருக்கிறேன். ஏனென்றால் தேவனுடைய வழிகளோடு இணைந்து செல்லும் காரியங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

## நம் கிறிஸ்தவ விசுவாசத்தின் நிமித்தமாக நாம் உபத்திரவப்படுவோம்

பவுல் தீமோத்தேயுவுக்கு, யார் தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழ விரும்புகிறார்களோ அவர்கள் தங்கள் பக்தியினிமித்தமாக உபத்திரவப்படுவார்கள் என்று நினைவுபடுத்தினார். (2 தீமோ 3:12) பவுல், மேலும் அவர் உபத்திரவபட்டிருந்தாலும் அவற்றிலிருந்தெல்லாம் விடுவிக்கப்பட்டிருக்கிறாரென்றும் சொல்லுகிறார் (2 தீமோ 3:11). எல்லாவிதமான உபத்திரவங்களினூடேயும் நமக்கு விடுதலையின்

நம்பிக்கை இருக்கிறது. அந்த விடுதலைக்காக தேவனை நம்பும் சிலாக்கியமும் இருக்கிறதற்காக நன்றியோடிருக்கிறேன். நாம் சில காலம் பொறுமையாக இருந்து கஷ்டங்களைச் சகித்துக் கொள்ள

வேண்டியிருக்கலாம், ஆனால் தேவன் உண்மையுள்ளவர். அவர் நம்மை விடுவிக்கும் வரை நாம் விரும்பினால், அந்த உபத்திரவங்களை நல்ல மனபான்மையோடு சகித்துக்கொள்ளத் தேவையான பெலனை அளிப்பார்.

கிறிஸ்துவுக்காக நீண்ட காலம் காலூன்றி நின்றிருந்தும் எவ்விதமான உபத்திரவங்களையும் நான் அனுபவிக்கவில்லை என்று நம்மில் வெகு சிலரே சொல்ல முடியும். அநேகந்தரம் இந்த உபத்திரவங்கள் புறக்கணிப்பின் வடிவத்தில் வருகின்றது. இதில் என்னுடைய தனிப்பட்ட அனுபவங்கள் மிகவும் ஆழமானவை, வேதனையளிக்ககூடியவை. தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் படி தேவனுடைய அழைப்பை என் வாழ்விலே பெற்றுக் கொண்ட போது, நான் என்னுடைய சபையை விட்டு வெளியேறும் படி சொல்லப்பட்டேன். மேலும் என் குடும்பத்தினரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் புறக்கணிப்பை அனுபவித்தேன். மனிதர்களாக வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பது அதிக கடினமாக இருக்கின்றது. எல்லோருமே நம்மைப் போன்று இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படியில்லையென்றால் நம் எண்ணங்கள், கருத்துக்கள் நடத்தைகளெல்லாம் தாக்கப்படுவதாக உணர்கிறோம்.

பெண்களுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த விதிகளிலிருந்து நான் வெளியே வந்தேன். தேவனிடமிருந்து கேட்டேன் என நம்பினேன். மக்கள் ஆவேசத்தால் கொந்தளிக்க அதுவே போதுமானதாக இருந்தது. நான் என்னை யாரென்று எண்ணினேன்? எனக்கு சரியான கல்வி அறிவு இல்லை. நான் ஒரு பெண்ணாக இருந்தேன். எங்களுடைய பக்தி வட்டத்திலே பெண்கள் இத்தகைய காரியத்தைச் செய்யவில்லை. அதை நான் அப்போது உணரவில்லை. ஆனால் நான் அதைச் செய்யாமல் விட்டு விடும் படி செய்ய அது சாத்தானின் முதல் படியாக இருந்தது. நான் எங்கே எப்படி இருந்தேனோ அப்படியே இருக்க முயற்சித்தேன். அதுவே நிர்பந்தமாகவும் நிறைவைக் கொடுப்பதாகவும் இருந்தது.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியிடமிருந்து, அவர்கள் உபத்திரவப்படுவார்கள் என்ற எச்சரிப்பைப் பெற்றுக் கொண்டார்கள். ஆயினும் தைரியமாக அவர்கள் முன்னேறிச் சென்றனர். சத்தியத்தைக் கேட்டு அதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் (மேலோட்டமாக) கொஞ்ச காலம் மட்டும் நிலைத்திருந்தனர். உபத்திரவங்களும் பாடுகளும் ஏற்பட்ட போது அவர்கள் உடனடியாக இடறலடைந்து தடுமாறி விழுந்து விட்டனர் என்று இயேசு போதித்தார் (மாற்கு 4:16-17).

நாமனைவருமே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று விரும்புகிறோம். புறக்கணிப்பின் வேதனையில் எவருமே சந்தோஷப்படுவதில்லை. அது ஒரு உணர்வுப் பூர்வமான வேதனை. அதின் பாதிப்பு நீண்ட காலம் நமக்குள்ளே இருக்கும். இயேசு சிறுமைப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டார் (ஏசா 53:3). யோவான் 15:25-ல் அவர் எவ்வித முகாந்திரமுமின்றி வெறுக்கப்பட்டாரென்று வேதம் சொல்லுகிறது. அவர் நல்லவராக இருந்தார் எந்த தவறும் செய்யவில்லை. ஆனாலும் உபத்திரவப்படுத்தப்பட்டார். சீஷன் தேவனைக் காட்டிலும் மேலானவனில்லை என்று சொல்லுகிறார். (லூக்கா 6:40) அவர் பாடனுபவித்தவரென்றால் நாமும் பாடனுபவிப்போமென்று எதிர்பார்க்கலாமே.

> ஆரம்ப காலத்திலே எனக்கு விளங்கிக் கொள்ள எனக்கு மிகவும் கடினமாக இருந்த இரண்டு வசனங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்
>
> 1 பேதுரு 2:19-21

நான் பாடுபடும் போது தேவன் ஏன் அதில் பிரியப்படுகிறாரென்பதை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. பின்னர் தான் என்னுடைய பாடுகளும் வேதனையும் அவரை பிரியப்படுத்துகிறதில்லை, ஆனால் அவருக்காக அதை நான் ஏற்றுக் கொள்ள விரும்புகிறதே அவரை பிரியப்படுத்துகிறது என்பதை

நான் உணர்ந்து கொண்டேன். நம்முடைய பாடுகள் தேவனை மகிமைப்படுத்துகிறதில்லை, ஆனால் பாடுபடும் போது ஒரு நல்ல மனப்பான்மையைப் பெற்றிருப்பதே அவரை மகிமைப்படுத்துகிறது. நாம் பாடுபடும் போதெல்லாம் தேவனும் நம்முடன் பாடுபடுகிறார். நம் பிள்ளைகள் பாடுபடும் போது நாம் எப்படி பாடுபடுகிறோமோ அது போல. தேவனுடைய அன்பினின்று எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது. அவர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார். ஒரு ஷணப்பொழுதென்றாலும் விட மாட்டார். (ரோமர் 8:38-39; எபி 13:5) அவர் நம்மைக் கைவிட்டதைப் போல உணர்ந்தாலும் இயேசு சிலுவையில் உணர்ந்ததைப் போன்று அவர் விட்டு விடவில்லை. தற்போது நீங்கள் எதையெல்லாம் சிந்தித்து கொண்டிருக்கிறீர்களோ அதிலெல்லாம் தேவன் உங்களோடிருக்கிறார். உங்கள் விடுதலைக்காகவும் சுகத்திற்காகவும் திட்டங்களைக் கொண்டிருக்கிறாரென்பதை அறிந்து கொள்ளுங்கள்.

*தற்போது நீங்கள் எதைச் சந்தித்துக் கொண்டிருந்தாலும் தேவன் உங்களோடிருக்கிறாரென்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் விடுதலைக்கும் சுகத்திற்கும் அவர் ஒரு திட்டம் கொண்டிருக்கிறார்.*

நாம் நீதியினிமித்தம் உபத்திரவப்படும் போது பாக்கியவான்களாக இருக்கிறோம் என்றும் பரலோகத்திலே நம்முடைய பலன் மிகவும் அதிகமாக இருக்கும் என்றும் இயேசு சொன்னார் (மத் 5:10-12). ஒருவேளை நீங்கள் என்னைப் போன்று பரலோகத்திற்குச் சென்று பலனைப் பார்க்கும் வரைக் காத்திருக்க விருப்பமற்றிருப்பீர்களென்றால், இயேசு அவர் நிமைத்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் எதையாவது விட்டுக் கொடுத்திருப்பீகளென்றால், இந்த வாழ்நாள் காலத்திலேயும்,

வருங்காலத்திலும் அதின் பலனை அனுபவிப்போமென்று இயேசு கூறுகிறார். (மாற்கு 10:29-30). இந்த இரண்டு வசனங்களிலே பரலோகத்திலும் பூலோகத்திலும் பலன் வாக்களிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம்.

தேவனை நம் முழு இருதயத்தோடும் சேவிக்க நாம் விட்டு விட வேண்டிய காரியங்களில் ஒன்று நம்முடைய மதிப்பு ஆகும். இயேசு தம்மை வெறுமையாக்கிக் கொண்டார் (பிலி 2:7) இப்போது ஏன் என்று விளங்கிக் கொள்வது எனக்குச் சுலபமாக இருக்கிறது. மக்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று அதிகமாக யோசிப்பார்களென்றால் நாம் கிறிஸ்துவை ஒருபோதும் அதிகமாக பின்பற்ற மாட்டோம். தேவன் என்னை அழைத்த போது நான், தெரிந்தவர்களிடம் என்னுடைய மதிப்பைத் தியாகம் செய்தேன். இப்போது அதற்கான பலனை அவர் எனக்கு அளித்திருக்கிறார். முன்பு நான் விட்டு விட வேண்டியிருந்த நண்பர்களின் எண்ணிக்கையை விட அதிகமான நண்பர்களை இப்போது பெற்றிருக்கிறேன்.

தம்மை கருத்தாய் தேடுகிறவர்களுக்குத் தேவன் பலனளிக்கிறார் (எபி 11:6). நீங்கள் உபத்திரவப்படும் போது தேவன் உங்களுக்காக திட்டம் பண்ணி வைத்திருக்கிற பலனை ஆவலோடு எதிர்பாருங்கள்! உங்கள் மதிப்பை இழந்து நீங்கள் கஷ்டப்படுகிறீர்களென்றாலோ அல்லது தேவன் பேரிலே நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தினிமித்தம் அநியாயமாக நியாயந்தீர்க்கப்பட்டு குற்றப்படுத்தப்படுவீர்களென்றால் கலங்காதீர்கள். தேவனைத் தொடர்ந்து நம்புங்கள். உங்கள் பலனுக்காக காத்திருங்கள்.

அத்தியாயம் 11

# நாம் பாடுபடுவதற்கான காரணங்கள் (பாகம் 2)

முந்தைய அதிகாரத்திலே நாம் ஏன் பாடுபடுகிறோம் என்பதற்கான மூன்று காரணங்களை பற்றி சொன்னேன். முதலாவது பாவம் இருப்பதால், இரண்டாவது ஞானமான தெரிந்து கொள்ளுதலைச் செய்யாததால் பாடுபடுகிறோம். மூன்றாவதாக தேவன் பேரிலே விசுவாசம் இருப்பதால் நாம் உபத்திரவப்படுகின்றோம். இந்த அதிகாரத்திலே நாம் ஏன் பாடுபடுகிறோம் என்பதற்கான காரணங்களைத் தொடர விரும்புகின்றேன். தேவனுடனான உங்கள் நடையில் இது உங்களுக்கு உதவியாக இருக்க விரும்புகிறேன்.

## நாம் பிறருடைய பாவங்களால் அநியாயமாக பாடுபடுகிறோம்

இந்த வகையான பாடுகள் தாங்கிக் கொள்ள கடினமாக இருக்கும் ஏனென்றால் நாம் முற்றிலும் கபடற்றவர்களென்று உணர்கிறோம். ஆனால் நம்முடைய கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டு நாம் பாடுபடுகின்றோம். நாம் கொண்டிருக்கும் முதல் எண்ணமானது *இது நியாயமற்றது, நிச்சயமாகவே நியாயமற்றது*. ஆனால் வாழ்க்கை எப்போதும் நியாயமாக இல்லாமலிருந்தும் தேவன் பேரிலே தங்கள் நம்பிக்கையை வைப்பவர்கள் அவருடைய நீதியை, நியாயத்தை அவருடைய நேரத்திலே பார்க்க முடியும். தேவன் நியாயத்தை நேசிக்கிற படியால் அவர் தீமையை நன்மையாக மாற்ற பிரியப்படுகிறார்.

அவரே நம்முடைய நியாதிபதி, நாம் அநியாயமாக நடத்தப்படும் போது ஈடு செய்கிறார்.

அது சிறு பிராயத்திலே ஏற்பட்ட துஷ்பிரயோகமாக இருக்கலாம். உங்கள் சறுமத்தின் நிறத்தால் அநியாயமாக நடத்தப்பட்டிருக்கலாம். அல்லது உங்கள் பாலினம், தேசம் அல்லது ஆயிரக்கணக்கான பிற காரணங்களால் அநியாயமாக நடத்தப்பட்டிருக்கலாம். அநியாயமான நடத்துதல் எப்பொழுதும் ஆழமாக காயப்படுத்துகிறது. அதை நாம் சரியாக்காவிட்டால் நாம் வாழும் முறையைப் பாதிக்கும் அளவுக்கு ஆழமான காயங்களையும் வடுக்களையும் நம் ஆத்துமாவிலே ஏற்படுத்தும். என்னை அதிகமாக உற்சாகப்படுத்தும் தேவனுடைய குணாதசியங்களில் ஒன்று தேவன் நீதியானவர் என்பதே. நாம் நும்முடைய நம்பிக்கையை இந்த வசனத்திலே வைக்கலாம்.

> பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.
>
> எபி 10:30

வாவ்! இதுவொரு அற்புதமான ஆறுதல் அளிக்கக்கூடிய ஒரு வேத வாக்கியம். ஒருவரின் அநியாயமான நடத்துதலினால் நீங்கள் பாடுபடுவீர்களென்றால் இந்த வசனத்தை நீங்கள் உங்கள் இருதயத்திலே ஒளித்து வைத்துக் கொண்டு தேவன் இந்த வாக்குத்தத்தை உங்கள் வாழ்விலே நிறைவேற்ற அவரை நம்புங்கள்.

அநேக சந்தர்பங்களிலே நான் என் சொந்த வாழ்விலே தேவனுடைய நீதியை அனுபவித்திருக்கிறேன். என் ஊழியத்தின் ஆரம்பத்திலே நான் அனுபவித்த புறக்கணிப்பைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அநேக ஆண்டுகள் ஆனாலும் என்னை ஆழமாக காயப்படுத்திய அநேகர் அவர்களின் தவறான முறைக்காக மன்னிப்புக் கேட்டனர்.

அநியாயத்திற்காக பாடனுபவிப்பீர்களேயானால் அதற்காய் ஈடுகட்டப்படுவீர்கள். ஒருவர் உங்களை அநியாயமாய் நடத்தியதால் தேவன் உங்களை ஆசீர்வதித்து கனப்படுத்துவதைப் போன்ற அருமையான காரியம் வேறு எதுவும் இல்லை. தேவன் நம்மை நியாயப்படுத்துவதைப் பார்க்க நாம் விரும்புவோமேயென்றால் நாம் சந்திக்க நேர்ந்த அநியாயங்களுக்காக மற்ற மக்கள் நமக்கு ஈடுசெய்ய வேண்டுமென்று அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள் முயற்சிப்பதை விட்டு விட வேண்டும்.

என் தகப்பனால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு என் தாயால் அத்தகைய சூழ்நிலையிலும் கைவிடப்பட்டு மற்ற உறவினர்களின் உதவியையும் பெற்றுக் கொள்ள இயலாமல் இருந்த போது என் மனப்பான்மை விஷம் போன்றதாய் இருந்தது. என்னைக் காயப்படுத்தியவரையும் உதவாமலிருந்தவர்களையும் காயப்படுத்த விரும்பினேன். நான் கசப்பானவளாகவும் வெறுப்பால் நிறைந்தவளாகவும் இந்த உலகமே எனக்குக் கடன் பட்டிருக்கிறதாகவும் உணர்ந்தேன். எந்தவொரு மனப்பான்மையும் எனக்குப் பலனளிக்கவில்லை. அவை என்னுடைய பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. என்னை நன்றாக உணரச் செய்யவும் இல்லை. நான் துஷ்பிரயோகப்பட்டிருந்தேன். அதுவே மிகவும் மோசம். ஆனால் அநேக ஆண்டுகளுக்குப் பின்னும் நான் அதற்கு இரையாக இருந்தேன். அதில் மிகவும் சிக்கிக் கொண்டிருந்தேன். எனக்கு ஒரு நல்ல சராசரியான ஆரோக்கியமான வாழ்க்கை இராது என்று நம்பினேன்.

நான் ஒரு கிறிஸ்தவளாக இருந்தேன். ஆனால் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை அறிந்திருக்கவில்லை. நான் மறுபடியும் பிறந்திருந்தேன். ஆனாலும் தேவனுடைய வழிகளைக் கற்றுக் கொண்டு அதைப் பின்பற்றாமல் என் வழிகளிலேயே சென்று கொண்டிருந்தேன். பின் தேவன் நீதியை விரும்புகிறாரென்பதை கற்றுக் கொண்டேன். என் கடந்த காலக் காரியங்களை என்னுடைய வழியில் முயலாமல் அவரே பார்த்துக் கொள்ள வேண்டுமென்று

விரும்பினேன். பின் எல்லாமே எனக்கு மாறத்தொடங்கியது. அதெல்லம் ஒரே இரவிலே நடந்து முடிந்து விட்டதென்று சொல்ல மாட்டேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக என் உடைந்த மனது சுகமானது. தேவன் நிச்சயமாகவே எனக்கு செய்யப்பட்ட தீமையானவற்றை எடுத்து அவற்றை நன்மையாக மாற்றி விட்டார்.

தேவன், நாம் நம்முடைய கடந்த கால காயத்தை விட்டு விட்டு நம் எதிரிகளை முழுமையாக மன்னிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர், அவர்களை நடத்துவது போல அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். என் தகப்பன் நாளடைவிலே என்னிடம் மன்னிப்பு கேட்டார், அழுகையுடன் மனம் திரும்பினார். அவரை ஞானஸ்நானத்திற்கு நேராய் நடத்தும் படியான சிலாக்கியத்தை பெற்றுக் கொண்டேன். அவர் என்னிடம், என்னைப் பற்றி எவ்வளவு பெருமைப்படுகிறாரென்றும் ஊழியத்தில் நான் செய்கிறதைப்பற்றி பெருமைப்படுகிறதாகவும் கூறினார்.

வாழ்க்கையிலே நம்முடைய அநேகப்பாடுகள் தீயவரின் நியாயமற்ற நடத்துதலால் ஏற்படுகிறதென்றும் அவற்றுள் சில நம்மை நேசிக்கிறேன் என்றும் சொல்லும் மக்களிடமிருந்தே வருகிறது என்று சொல்லலாம். இப்படியாக இருக்கும் போது காயங்களும் இன்னும் ஆழமாக இருக்கிறது. ஆனால் எவ்வளவு ஆழமானதாகும் கடுமையான பிரச்சினையாக இருந்தாலும் தேவனால் சந்திக்க இயலும். நம்மைக் குணப்படுத்தி அதிலிருந்து நன்மையைக் கொண்டு வந்து கடந்த கால வேதனைகளை ஈடுகட்ட இயலும்.

அவர் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்கு பதிலாக ஆனைந்தன தைலத்தையும் கொடுக்கிறார். (ஏசாயா 61:1-3)

> நாம் எதை இழந்து போனோமோ அதற்கு ஈடுகட்ட விரும்புகிறார். உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன்

தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்.

உபா 30:3

யாருமே வாழ்க்கையில் வருத்தங்களோ பாடுகளோ இருக்க விரும்புவதில்லை. ஆனால் நீங்கள் அதனூடே சென்று கொண்டிருக்கும் பொழுது, தேவனுடைய வழியைப் பின்பற்றுவோமேயானால் அவர் நன்மை செய்வாரென்று நம்புவோமேயென்றால் உங்களுக்கு ஈடுசெய்ய அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

## தேவன் மட்டுமே மாற்ற இயலும் காரியங்களை நாம் மாற்ற முயற்சிப்பதால் பாடனுபவிக்கிறோம்

என்னுடைய அதிகப்படியான, உணர்வுப்பூர்வமான பாடுகள் குறைய நான் முதலாவதாக கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களில் ஒன்று நான் இந்த உலகத்தை கட்டுப்படுத்தவில்லை என்பதே. இயற்கையாகவே உறுதியான மனப்பான்மையோடும் வலிமையான மனப்பான்மையும் கொண்டவளாக எனக்கு அதிகாரம் இல்லாத அநேக காரியங்களைக் கட்டுப்படுத்தி மாற்ற அதிகமாக போராடிக்கொண்டிருந்தேன். தேவன் என்னுடைய ரம்மியமற்ற சூழ்நிலையை மாற்றுவதை விட என்னை மாற்றுவதிலே அதிக விருப்பம் கொண்டிருந்தாரென்பதைப் புரிந்து கொள்ள பல வருடங்களானது. ஆம் நான், என் வாழ்வில் இருந்தவர்கள் எனக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்னை மகிழ்ச்சியாக வைக்க வேண்டுமென்பதற்காக அவர்களை மாற்ற முயன்று போராடிக்கொண்டிருந்தேன். ஆனால் தேவன் மட்டுமே மனிதர்களை மாற்ற முடியும் என்றும் அவர்கள் விரும்பாவிட்டல் அவராலும் எதுவும் செய்ய இயலாது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது (அது மிக எளிதில் துரிதமாக கிடைக்கவில்லை)

மக்கள், அவர்கள் எங்கே இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அப்படியாக இல்லாமல் அவர்கள் எங்கேயிருக்கிறார்களோ அந்த இடத்திலேயே அவர்களை மதிக்க நான் கற்றுக் கொண்ட போது (இன்னும் அதை கற்றுக் கொண்டிருக்கிறேன்) என்னுடைய நிறையப்பாடுகளும் துயரங்களும் நின்று போயின. எனக்கு அதிகப்படியான மனத்தாழ்மை தேவைப்பட்டது. தேவன் நம்மைத் தாழ்த்தும் படி அழைத்தாலும் நம்மில் வெகு சிலரே அதை மனமுவந்து செய்ய விரும்புகிறோம். எனவே அவர் அதை நமக்காக செய்கிறார். அவர், அதை நம்மை விரக்தியடையச் செய்து கோபப்படுத்துபவர்களோடு இருக்கும் படியான சூழலில் இருக்க செய்து அதின் விளைவாக நம்மை மாற்றுகிறார். இறுதியாக நம்மில் ஆழ்ந்திருக்கும் பிரச்சினைகளைச் சரிபடுத்தவே தேவன் அவர்களை உபயோகிக்கிறாரென்பதை நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

நீங்கள் ஆரம்பத்திலே நினைத்ததை விட, பிரச்சினைகளுக்கான உங்கள் பிரதிக்கிரியையே உங்கள் உண்மையான பிரச்சினை என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? டேவ் என்னுடைய தேவைகளை சந்திக்காததால் நான் சந்தோஷமில்லாமல் இருந்தேன் என்று பல ஆண்டுகளாக நினைத்தேன். ஆனால் என்னுடைய சுயநலமான மனப்பான்மையே உண்மையான பிரச்சினை என்பதை தேவன் காண்பித்தார். அவரை மாற்ற நான் முயற்சித்துக் கொண்டேயிருந்தேன். ஆனால் என்னுடைய எந்த முயற்சியும் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்கவில்லை. ஏனென்றால் என்னுடைய பிரச்சினைக்கான வேரைப் பிடுங்க தேவன் அந்த சூழ்நிலையை உபயோகித்துக் கொண்டிருந்தார். தாவீது என்னும் ஒரு சிறுவன் அரசனாகும் படி அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான் என்று வேத வசனம் கூறுகிறது. ஆனால் அவன் அந்த கிரீடத்தை அடைவதற்கு முன் அவன் அந்த துன்மார்க்கமான அரசனுக்கு கீழ் வேலை செய்ய வேண்டியதாயிருந்தது. சவுலால் தாவீதுக்கு ஏற்பட்டதெல்லாம் அநியாயமாகக் காணப்பட்டது. ஆனாலும் அதிலே ஒரு நோக்கமிருந்தது.

தாவீது சவுலைப்போல் அரசனாவதற்கு முன் அவனுக்குள்ளிருந்த 'சவுலை' முறியடிக்க சவுல் ராஜாவை தேவன் உபயோகித்தாரென்று நான் கேட்டிருக்கிறேன். என்னுடைய சொந்த வாழ்விலே அது உண்மையாக இருக்கிறதென்று அறிந்திருக்கிறேன். என்னுடைய தகப்பனின் நடத்தையிலிருந்த கொடூரத்தை நான் திரும்பிப் பார்க்கும் போது நான் அந்த சுபாவங்களிலிருந்து அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டேன் என்பதை உணர்கிறேன். ஆனால் அப்போது அதை உணரவில்லை. ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். ஆனால் சிறுமியாக நான் அனுபவித்த பாடுகளால் கடின இருதயமுள்ளவளாக இருந்தேன். என்னுடைய வழிகளெல்லாம் கடினமானதாக இருந்தது. மக்கள் என்ன செய்ய வேண்டும் செய்யக் கூடாது என்று நான் நினைத்ததைப் பற்றி கடுமையான சட்டத்தைப் பின்பற்றுபவளாக இருந்தேன். என்னோடு உறவாக இருக்க வேண்டுமென்றால் என்னுடைய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். 'என்னுடைய' என்ற வார்த்தையை வலியுறுத்துகிறேன். எனக்கு பக்தி இருந்தது. ஆனால் நான் செய்ய வேண்டிய வேலையைச் செய்யத் தேவையான குணாதிசயம் என்னிடம் இல்லை. என்னுடைய நடத்தைக்கு நான் குருடாக இருந்தேன். ஏனென்றால் அது சரியாக்கப்பட வேண்டிய என் ஆத்துமாவிலே இருந்த காயங்களும் வடுக்களும் வேறூன்றப்பட்டிருந்தது. ஒரு கிறிஸ்தவளாக இருப்பதென்பது நம்முடைய வாழ்நாள் முழுவதும் நம் நடத்தையை சரியாக்க வேண்டுமென்பதில்லை, ஆனால் இயேசு நம்மை உள்ளிருந்து புறம்பாக நம்மை அவருடைய சாயலாக மாற்றும் படி நாம் அனுமதிக்க வேண்டும்.

என்னை நல்ல விதமாக நடத்தாத ஒரு ஆவிக்குரிய தலைவனையும், இன்னும் சிலரையும் உபயோகித்து அவர்கள் என்னை நடத்தியது போல நான் ஒருவரையும் நடத்தக் கூடாது என்பதைக் கற்றுக் கொடுத்தார். இத்தகைய மக்களுடன் அநேக ஆண்டுகள் என்னை வைத்ததின் மூலம் தேவன் எனக்கு உதவினார். அது எனக்கு அதிக வலியுள்ளதாக இருந்த போதிலும் அதிகமாக

உதவியது. என்னை சிறந்தவளாக மாற்றியது. நாம் இப்படி இருக்கிறோமே என்று நினைத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக நாம் உண்மையாகவே எப்படி இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள நமக்கு சில கஷ்டங்களோ அல்லது அசௌகரியங்களோ வேண்டுமென்று நினைக்கிறேன். நம்முடைய எண்ணங்களானது பெருமையால் மூடப்பட்டு பிறரை நியாயந்தீர்க்க முயலுவோம். அவர்களை நாம் குற்றப்படுத்தும் சில காரியங்களை நாமே செய்தாலும் நாம் அதைப் பாராமலிருப்போம் (ரோமர் 2:1).

இந்த பகுதியிலே பேதுருவை ஒரு முன் மாதிரியாக காண்கிறேன். பேதுரு துறுதுறுவென்றிருந்தார். அதிகமாக பேசினார். அவர் பெரிய காரியங்களுக்காக குறிக்கப்பட்டிருந்தார். ஆனால் தன்னைப் பற்றி நினைத்துக் கொள்வதற்கும் அதிகமாக தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார். அவருடைய சொந்த நலனுக்காக அவருடைய மனப்பான்மை சரியாக்கப்பட வேண்டியிருந்தது. சாத்தான் அவனை கோதுமையைப் புடைப்பதைப் போன்று சோதனைகளைக் கொண்டு வந்தான். ஆனாலும் அவளது விசுவாசம் ஒழிந்து போகாத படி ஜெபித்தேன் என்று இயேசு அவனிடம் சொன்ன போது, உடனே தான் சிறைச்சாலைக்குச் செல்லவும் மரிப்பதற்கும் கூட தயாராய் இருப்பதாய் கூறினார். ஆனால் அன்று கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தான் அவனுடைய தோல்வியால் தன்னை மீண்டும் பரிசோதனை செய்தான். மன்னிப்பும் தேவனுடைய உதவி தேவைப்படும் ஒரு பலவீனமான மனுஷனாக இருந்தான் (லூக்கா 22:31-34; 55-62). இயேசு பேதுருவுக்காக ஜெபித்தேன் என்று சொன்ன போது, பேதுரு அவருக்கு நன்றி செலுத்தியிருக்க வேண்டும். அவனுக்குத் தேவையான எல்லா உதவியும் அவனுக்குத் தேவை என்பதை ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்.

கிறிஸ்துவை மறுதலித்த பின் மனந்திரும்பி மனங்கசந்து அழுதான். பின்னர் அவன் ஒரு மிகப்பெரிய அப்போஸ்தலனாக மாறினான். நம்முடைய பெலவீனங்கள் நமக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறதில்லை. ஆனால் அவற்றை சரிபடுத்த நாம்

விரும்பாலிருப்பது தான் பிரச்சினை. நான் அனுதினமும், தேவனிடம் நமக்கு உதவி செய்யவும் அவர் விருப்பம் போல் நம்மில் செய்ய ஏதாவது இருக்குமேயென்றால் அதைக் காண்பிக்கவும் கேட்பது ஞானமானது.

ஏற்ற காலத்தில் அவர் நம்மை உயர்த்தும் படி அவருடைய பலத்த கைக்குள் நாம் அடங்கி இருக்க வேண்டுமென்று பேதுரு நமக்கு அறிவுறுத்துகிறார் (1 பேதுரு 5:6). அடங்கி இருப்பது கடினமாக இருப்பதால் அதினின்று விடுபட போராடாமல் அவற்றின் கீழ் அடங்கி இருப்பது நலம். நம்மில் எவருமே பாடுபட விரும்புவதில்லை. ஆனால் பாடுபடுவதற்கும் விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தன்னையும் தன் பிள்ளைகளையும் சரீரப்பிரகாரமாக துஷ்பிரயோகம் செய்யும் ஒரு மனிதனை ஒரு பெண் மணந்திருக்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அந்த சூழ்நிலையிலே அவள் நிச்சயமாகவே அந்த துஷ்பிரயோகத்தின் கீழ் இருக்கக் கூடாது. அவள் அந்த மனிதனை விட்டு விட வேண்டும். என் தகப்பன் எனக்கு செய்து கொண்டிருப்பதை அறிந்தும் என் தாய் அவருடனே இருந்தார். அவள் தன்னுடைய முழு வாழ்வில் செய்த தவறுகளிலேயே அதுதான் மோசமானதாக இருந்தது.

ஆனால், ஒருவள் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறாளென்று வைத்துக் கொள்வோம். அவள் மட்டும் தான் அங்கே கிறிஸ்தவள். என்வே கிறிஸ்துவுக்காக அவள் மட்டுமே சாட்சி. அவள் புறக்கணிக்கப்பட்டும், மற்ற வேலைக்காரர்களால் பரிகசிக்கப்பட்டும் அவளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பதவி உயர்வு அவளுக்கு கொடுக்கப்படாமலிருகுமேயென்றால், அவள் அந்த இடத்தை விட்டு விட வேண்டுமா? அல்லது தேவன், அவள் அதை விட்டு விட வேண்டுமென்று விரும்புவாரேயென்றால் அதை அவளுக்குத் தெளிவு படுத்தவும், இல்லையென்றால் அவரது சித்தம் நடைபெற வேண்டுமென்றும் ஜெபிக்க வேண்டுமா? இந்த காரியத்திலே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, தேவன், அவள் அந்த கஷ்டத்தில் இருக்க வேண்டுமென்று விரும்பலாம். ஏனென்றால் அங்கே அவரைப்

பிரதிபலிக்க அவருக்கு அங்கே ஒரு கருவி தேவைப்படுகிறது. (2 தீமோ 4:2) சொல்லுகிறதாவது, சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும், வசதியாக இராவிட்டாலும், வரவேற்கப்பட்டாலும் படா விட்டாலும் தேவனைச் சேவிக்கும் படி நாம் ஆயத்தமாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்.

ஒரு சூழ்நிலையோ, ஒரு நபரோ நமக்கு பாடுகளை ஏற்படுத்தும் போது, அதை எவ்வாறு சமாளிக்க வேண்டுமென்பதை தேவனிடம் கேட்க வேண்டும். நாம் பாடுபடும் போது, வழிநடத்துதலுக்காக பரிசுத்த ஆவியிடம் கேட்காத படி தீர்மானங்களை எடுப்பது ஞானமற்ற காரியமாகும். பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது, அவர்கள் ஆவிக்குரியவர்களாக இருப்பார்களேயென்றால் அவர்கள் பிறருடைய தவறுகளை பொறுத்துக் கொள்வார்கள் என்று கூறுகிறார். (கலா 6:2) ‘இதை நான் சகித்துக் கொள்ளப்போவதில்லை’ என்று சொல்லத்தான் நான் முதலாவதாக விரும்புவேன். ஆனால் இயேசு என்னை சகித்துக் கொள்கிறார். அவர் அப்படி செய்கிறதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்.

> *தேவன் நமக்குத் தேவையான கிருபையை எப்போதும் தருவார்*

தேவன் எப்போதுமே நமக்குக் கிருபையை கொடுக்கிறாரென்பதை, என் வாழ்க்கையில் அநேக காரியங்களில் உணர்ந்திருக்கிறேன். வேறுவிதமாக சொல்ல வேண்டுமென்றால், நாம் எங்கே இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அங்கே நாம் இருக்கத் தேவையான கிருபையை அளிக்கிறார். பிறருக்கோ அது நிர்பந்தமாக இருக்கும். என்னுடைய ஆரம்ப நாட்களை நான் திரும்பி பார்க்கையிலே, நான் ஏதோ ஒன்றின் நிமித்தமாக போராடிக் கொண்டிருந்தேன் அது ஒன்றிலையென்றால் மற்றொன்று. என் மன நிலையோ முற்றிலுமாக என் சூழ்நிலையால் கட்டப்பட்டிருந்தது. உதாரணமாக, என்னுடைய கூட்டத்திற்கு மக்கள் திரளாக வந்தால் சந்தோஷமாக இருந்தது, கூட்டம் வரவில்லையெனில் மிகவும்

சோர்வுற்றவளாக அநேக எதிர்மறையான காரியங்களை சொன்னேன். எனவே மக்கள் கூட்டத்தை அதிகரிப்பதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தோம். ஆனால், அதனால் இன்னும் கீழாக சென்று கொண்டிருந்தேன். இறுதியாக என்னால் மாற்ற முடியாத ஒன்றை மாற்ற முயன்று கொண்டிருந்தேன் என்பதை உணர்ந்தேன். ஆனால் தேவனால் அது முடியும். சரியான நேரத்திலே அவர் அதை மாற்றுவார். உண்மையாகவே நம்முடைய காலங்கள் அவருடைய கரங்களில் இருக்கிறது. (சங்கீதம் 31:5) நாளடைவிலே தேவனிடம் என் கவலைகளையெல்லாம் கொடுத்தேன். அவர் வாக்களித்ததைப் போல சமாதானம் எனக்குள்ளே வந்தது (பிலி 4:6-7).

எங்களுடைய கூட்டத்திற்கு இப்பொழுது அதிக கூட்டம் வருகிறது. ஆனாலும் ஏதோவொரு காரணத்திற்காக சில இடங்களில் கூட்டம் இருப்பதில்லை. அது எனக்கு விருப்பமில்லை தான் ஆனாலும் முன்பு அது என்னை தொந்தரவு செய்ததைப் போல இப்போது செய்கிறதில்லை. ஏனென்றால் அதற்காக நான் போராடுவதில்லை. அதனூடாக நான் செல்கிறேன் அடுத்த கட்டத்திற்கு செல்கிறேன்.

அடுத்த முறை உணர்ச்சி ரீதியாகவும் மன ரீதியாகவும் உங்களுக்கு விருப்பமில்லாத ஒன்றை மாற்ற முயன்று மனக் கஷ்டம் வரும் போது தேவன் மாத்திரமே செய்யக்கூடிய ஒன்றை நீங்கள் செய்ய முயன்று கொண்டிருக்கிறீர்களா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். அப்படியென்றால் நீங்கள் அதை செய்வதை விட்டு விட்டு ஆண்டவர் அதை செய்யும் படி அனுமதியுங்கள் என்று உங்களிடம் வருந்தி கேட்டுக் கொள்கிறேன்.

## நாம் பூரணமற்ற உலகத்திலே வாழ்வதால் பாடுபடுகிறோம்

நாம் நம்முடைய தனிப்பட்ட பாவத்தாலும் மற்றவரின் பாவத்தாலும் கஷ்டப்படுகிறோம் என்பதை பார்த்தோம். ஆனால் இன்னொரு பெரிய

காரணம் என்னவெனில் நாம் பாவம் நிறைந்த உலகில் வாழ்வதே. எவ்வளவு அதிகமாக பூமி நிலைத்திருக்கிறதோ அவ்வளவு அதிகமாக தீமை பெருகிறது. ஒவ்வொரு தலைமுறையினரும் உலகில் எவ்வளவாக பாவம் அதிகரிக்கிறதென்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். நான் சிறுமியாக இருந்த போது, பெரியவர்கள் காரியங்கள் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைப் பற்றி பேசினர். இப்போது நாம் உலகம் செல்லும் போக்கைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாக சொல்லுகிறோம். தேவன் வர தாமதிப்பாரேயென்றால் நம் பிள்ளைகள் கூட அவ்வாறு அதிர்ச்சி அடைவர். தீமையும் துன்மார்க்கமும் பெருகிக் கொண்டே இருக்கிறது. அது அப்படியே நிலைத்திருக்கிறதில்லை, ஆனால் அது பெருகிக் கொண்டேயிருக்கிறது. எங்கள் பட்டணத்திலே முதலாவது செய்தித்தாள் வழங்கும் பையன் கொள்ளையடிக்கப்பட்டதை டேவ் ஞாபகத்தில் வைத்திருக்கிறார். அது 1950-ல் நடைபெற்றது. அது மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நடந்ததை அவர்களால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. ஆனால் இன்று நடைபெறும் காரியங்களை நாம் பார்த்தால் இன்னும் அதிக அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. இன்னும் அதிகமான பாடுகள் இருக்கப் போகிறது. நமக்கு எல்லா பதில்களும் இல்லாவிட்டாலும் தேவனை நம்பும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

தேவன் பேரிலே நம்பிக்கை வைத்திருப்பவர்களை தேவன் பாதுகாக்கின்றாரா? நிச்சயமாக அவர் அவ்வாறு செய்கிறாரென்று நம்புகிறேன். தேவன் எப்படி ஒருவரை பாதுகாத்தார் என்ற கதையை நாம் கேட்கிறோம். நமக்கும் அத்தகைய கதைகள் இருக்கிறது. ஆனால் அவருடைய பாதுகாப்பு நமக்கு இல்லாமல் இருப்பதைப் போன்று தோன்றி நாம் விளங்கிக் கொள்ள இயலாத அளவுக்குப் பாடுபடும் போது லீ ஸ்ட்ரோபெல் என்பவரின் கூற்றை நினைவில் கொள்ளுங்கள். 'பாடுகளுக்கான இறுதியான பதில் விளக்கமல்ல; அது அவதாரம்' எவராலும் அதை விளங்கிக் கொள்ள் இயலாது. ஆனால் இயேசுவால் எல்லாவற்றையும் மீட்டெடுக்க இயலும்.

செயின்ட் லூயிஸ் பட்டணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் ஒருவர் தன் வீட்டையும் அதிலிருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டார். அவர் எங்களுடைய மருத்துவ ஊழியங்களின் தலைவர். அவர் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்களுக்கு உதவி அநேக தியாகங்களைச் செய்திருக்கிறார். அவர் ஒரு பக்தியுள்ள பெண். பக்தியுள்ள குடும்பத்திலிருந்து வந்தார். அவளுக்கு ஏன் இது நடக்க வேண்டும்? சில சமயங்களிலே நாம் இவ்வுலகிலே இருப்பதால் வேதனையான காரியங்கள் நடைபெறுகிறது. நற்செய்தி என்னவெனில் தேவன் அவளுடைய சூழ்நிலையை மீட்டெடுத்துக் கொண்டிருக்கிறார். மக்களும் பல்வேறு ஊழியங்களும் அவள் தன் வீட்டைக் கட்டவும், தேவையானவற்றை வாங்கவும் உதவி செய்கின்றனர். இதெல்லம் முடியும் போது அவளுக்கு ஒரு நல்ல வீடும் முன்பு பெற்றிருந்த பொருட்களையும் திரும்ப பெற்றுக் கொள்வாள்.

வேறு கிறிஸ்தவர்கள் அவ்வாறு வீடுகளை இழந்தும் திரும்ப பெற்றுக் கொள்ளாமலிருப்பதையும் நான் அறிவேன். தேவன் அவர்களைப் பாதுகாத்ததாக உணர்கிறேன். நாம் அவர்களது சாட்சிகளைக் கேட்கும் போது அவர்களுடன் சேர்ந்து களிகூறுகிறோம். ஏன் சிலர் பாதுகாக்கப்படுகின்றனர், சிலருக்கோ பாதுகாப்பு இல்லை? மீண்டுமாக நாம் விளக்கங்களைக் கண்டுபிடிப்பதில் கவனத்தைச் செலுத்தக் கூடாது. தேவன் அதிலிருந்து நம்மை மீட்டெடுத்து அந்த வேதனையை ஆதாயமாக்குவதை நோக்குவோம்.

அத்தியாயம் 12

# பாடுகளின் மறுபக்கத்திலே

அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்;
அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது.

சங்கீதம் 105:18

பெரிய காரியங்களைச் செய்யும் கனவுகளோடிருந்த வாலிபன் யோசேப்பு, யாக்கோபுடைய இளைய குமரனாய் இருந்த படியாலும் அவனால் அதிகமாக நேசிக்கப்பட்டதாலும், அவனுடைய சகோதரர்களால் வெறுக்கப்பட்டான். அவர்கள் அவனைப் பார்த்து பொறாமைப்பட்டனர். அவர்களின் வெறுப்பு எவ்வளவு அதிகமாக இருந்ததென்றால், ஒரு நாள் அவர்கள் அவனைப் பிடித்து அடிமை வியாபாரிகளிடம் விற்று விட்டு பின்னர் இரத்தத்தில் தோய்ந்த ஆடையை கொண்டு வந்து ஏதோவொரு துஷ்டமிருகம் அவனைக் கொன்று போட்டதென்று அவைகளின் தகப்பனிடம் பொய் சொன்னார்கள்.

யோசேப்பு அநேக ஆண்டுகள் கஷ்டப்பட்டார். அதிகமான பாடுகளைப் பட வைத்த அநியாயமான சூழ்நிலைகளுக்குள்ளே சென்றான். ஆனாலும் அவன் தேவனுக்கு உண்மையாக இருந்தான். அவரைத் தொடர்ந்து நம்பினான். அவன் எங்கெல்லாம் இருந்தானோ அங்கெல்லாம் தேவன் தயவைக் கட்டளையிட்டார். நாளடைவிலே அவன் எகிப்திலே பார்வோனுக்கு அடுத்த நிலையிலே வைக்கப்பட்டான். அதன் விளைவாக, தேவன் யோசேப்பை, அநேக ஜனங்களையும் அவனுடைய சொந்த குடும்பத்தாரையும் பஞ்சத்தினின்று விடுவிக்கும் படி உபயோகித்தார். யோசேப்பின்

சகோதரர்கள் பல வருடங்களுக்கு முன் அவனுக்கு செய்த கொடூரத்தால் அவர்களைப் பழிவாங்கும் நிலையில் இருந்த போதும் அவ்வாறு செய்யவில்லை. அதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது.

> பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.
>
> ஆதி 50:18-20

நாம் ஜாக்கிரதையாக தியானிப்போமென்றால் இந்த வசனங்கள் மிகவும் அருமையானவைகள். யோசேப்பு கடந்து சென்ற அனைத்தினிமித்தமாக கசப்பாக இருப்பதற்கு பதிலாகதேவனுடைய கரம் அந்த சூழ்நிலையிலிருந்தும் நன்மையை கொண்டு வருவதை பார்த்தான். இப்போது கசப்பாக இருப்பதற்கு பதில் அவனுடைய சகோதரர்களுக்கு உதவ ஆயத்தமாக இருந்தான். மேலும் அவர்களை பார்த்து அவன் சொன்னதாவது

> ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.
>
> ஆதி 50:21

ஒருவர் துயரமான அநியாயமான முறையிலே நடத்தப்பட்டும், எப்படி காரியங்களைக் கையாள வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படிக் கையாண்டான் என்று சொல்லும் போது

யோசேப்பு தான் முன் நிற்கிறார். அவன் பராக்கிரமசாலியாக இருந்தான் என்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. அவன் 110 ஆண்டுகள் உயிருடன் இருந்தான். அவன் பாடுபட்ட ஆண்டுகளுக்கு மேல் பல ஆண்டுகள் நன்மை மிகுந்த ஆண்டுகளை அனுபவித்திருப்பான். அவன் தன்னுடைய பாடுகளின் அடுத்த பக்கத்திலே பெரிய வெற்றியை அனுபவித்தான். அவனுடைய பாடுகள் அவனை மேன்மையான வாழ்க்கைக்கு உயர்த்தியது. நம் பாடுகளின் மத்தியிலும் நாம் நிலைத்திருந்து தேவனைத் தொடர்ந்து நம்புவோமேயென்றால் பெரிய பொறுப்புகளையும் ஆசீர்வாதங்களையும் நம்மிடம் ஒப்படைக்கும் அளவுக்கு நம்பகரமாக இருக்கக் கூடியவர்களாக நாம் இருப்போம்.

*நம்மைக் காயப்படுத்தியவர்களை நாம் மன்னிக்க விரும்பும் போது, நாம் நமக்கே ஒரு நன்மையை செய்து கொள்கிறோம்.*

நம்மைக் காயப்படுத்தியவர்களை நாம் மன்னிக்க மனவுவந்தவர்களாக நாம் இருக்கும் போது நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம். ஏனென்றால் கசப்பு நிறைந்தவர்களாக இருந்து கொண்டு அதே சமயம் வாழ்க்கையை அனுபவிப்பது இயலாத காரியம். யோசேப்பின் வாழ்விலே நாம் காணக்கூடிய இந்த முன் மாதிரியை நாம் பின்பற்றத்தக்க ஒரு மாதிரியாகும். யோசேப்பு அடிமையாக விற்கப்பட்ட ஆண்டுகளில், குற்றமற்ற ஒரு காரியத்திற்காக அவன் 13 ஆண்டுகள் சிறையில் இருக்க நேர்ந்தது. அவன் இரும்பு சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தான். சங்கீதம் 105-ல் நாம் ஏற்கனவே மேற்கோள் காட்டியதைப் போன்று ‘அவன் ஆத்துமா இரும்பிலே அடைபட்டிருந்தது’ என்று சொல்லப்படுகிறது. அதன் அர்த்தம் என்ன? இதைப் பற்றி யோசித்தால், அது அவனை பலவானாக மாற்றியது. அவனுடைய பாடுகள் அவனைச் சிறந்தவனாக மாற்றியது. எகிப்தை ஆளும் அளவுக்கு அவனைப் பலப்படுத்தியது.

“நம் பாடுகள் நம்மை சிறந்தவர்களாகவோ அல்லது கசப்பானவர்களாகவோ மாற்றும் என்ற சொல்லை நாம் அடிக்கடி

கேட்டிருக்கலாம். அது மிகவும் உண்மையே. வேதனை மிகுந்த சூழ்நிலைகளிலெல்லாம் தேவனை நம்புவது இறுதியிலே பலனளிக்கிறது. அதில் ஒன்று உங்களைப் பலமாக்குகிறது.

ஏசாயாவின் புத்தகத்திலே தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக, அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தவைகளைப் பற்றிப் பயப்படவேண்டாம். ஏனென்றால் அவர் அவர்களைப் பெலப்படுத்துகிறார் என்று சொல்லுகிறார்.

> நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.
>
> இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.
>
> ஏசாயா 41:10,15

நாம் எதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோமோ அதைக் கொண்டு நாம் முன்பு இருந்ததை விட நம்மைச் சிறந்தவர்களாகவும் பலவான்களாகவும் மாற்ற தேவன் அதை உபயோகிக்கிறரென்பதற்கு அது ஒரு உதாரணம். ஆனால் இவையெல்லாமே நாம் நம் வாழ்க்கையிலே எதிர் கொள்ளும் வேதனையான காரியங்களிலே அவரை நாம் முற்றிலுமாக நம்ப விரும்புகிறோமா இல்லையா என்பதில் உள்ளது. தற்போது நீங்கள் என்னதான் அனுபவித்துக் கொண்டிருந்தாலும் இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கானது தான். உங்களுடைய எதிரிகள் தீமை செய்ய விரும்பலாம். ஆனால் தேவன் அதை நன்மையாக மாற்றுகிறார். அப்படி செய்யும் போது உங்களை சிறந்தவர்களாக மாற்றி விடுகிறார். வாழ்க்கை கடினமாகவும் வேதனையானதாகவும் இருக்கும் போது தேவன் உங்களை நேசிக்கிறாரென்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள்

பயப்படத் தேவையில்லை. இதை தெளிவு படுத்த நான் கேள்விப்பட்ட ஒரு கதையை சொல்லுகிறேன்.

ஒருவன் அப்போது தான் திருமணம் செய்திருந்தான். தன்னுடைய மனைவியுடன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். அந்தப் பிரயாணத்திலே அவர்கள் ஒரு ஏரியைக் கடக்க வேண்டிய்தாயிருந்தது. அப்படிக் கடந்து கடக்கும் போது ஒரு பெரிய புயல் தோன்றி அவர்கள் படகை அலைக்களித்தது அந்த பெண் மிகவும் பயந்தாள். ஆனால் அவளின் கணவனோ அமைதியாக இருந்தான். அவன் ஏன் பயப்படவில்லை என்று அவனை கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

அவன் புன்முறுவலுடன் ஒரு கத்தியை அதின் உறையிலிருந்து எடுத்து அந்தப் பெண்ணைக் குத்துவது போன்று காட்டினான். அவளோ கொஞ்சம் கூட பயப்படவில்லை. ஏன் பயப்படவில்லை என்று கேட்ட பொழுது, அவள் சொன்னாள், நான் ஏன் பயப்பட வேண்டும் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் அதனால் உங்களால் என்னை குத்த இயலாது என்று சொன்னாள்.

அவன் சொன்னான். அதனால் தான் நானும் இந்த புயலைப் பார்த்து பயப்படவில்லை. தேவன் நம்மை நேசிக்கிறார். அதனால் என்ன நடந்தாலும் அவர் அதை நன்மையாக மாற்றி விடுவார் என்றான். வாழ்க்கையிலே எத்தனைப் புயலை நாம் சந்திக்க நேர்ந்தாலும், எப்போதுமே தேவனுடைய கரங்களில் பத்திரமாக இருக்கிறோம்.

## மனதுருக்கமும் அனுதாபமும்

என் வாழ்வில் நான் பட்ட பாடுகளானது என்னைப் போன்று பாடுபடுவோர் மீது ஒரு பெரிய மனதுருக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாம் வேதனையை அனுபவிக்காமல் இருந்தால் மற்றவர் வேதனையையும் புரிந்து கொள்வது கடினமானதாக இருக்கும்.

அறிவுரைகள் கூறுவது சுலபமானது. ஆனால் அனுபவம் ஏதுமில்லதபடியால் நம் மனப்பான்மையானது அதை ஏற்றுக்

கொள்ளாது. எனக்கு 25 வயது என்று வைத்துக் கொள்வோம். வாழ்க்கை சுலபமாகவே இருக்கிறது. என் தேவைகளை என் பெற்றோர் சந்திக்கின்றனர். நான் விரும்பியதையெல்லாம் கொடுக்கின்றனர். நான் புத்திசாலி எனவே நல்ல மதிப்பெண் பெறுவது கடினமன்று. நான் படிப்பை முடிப்பதற்கு முன்பே என் தந்தை எனக்குப் பிடித்த வேலையை வாங்கி கொடுக்கிறார். வாழ்க்கை நன்றாக இருக்கிறது. இப்போது என் பணியிடத்திலே எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவும் சோர்வாக இருக்கிறார். என்ன தவறு என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அதற்கு முயற்சி செய்யவும் இல்லை. நாளடைவில் என் தோழி தன்னுடைய பணக்கஷ்டத்தைப் பற்றி என்னிடம் கூற முயலுகிறார். உடனே உன் பெற்றோரை அழைத்து உனக்கு உதவும் படி கேள் என்று சொல்கிறேன். ஏனென்றால் நான் அதைத்தான் செய்வேன். அவளின் பெற்றோர் அவள் வளரும் போது அவளை மிகவும் துன்புறுத்தினர் என்றும், அவர்கள் அப்போது பிரிந்திருக்கின்றனர் எனவே அவர்களிடமிருந்து உதவி பெறுவது இயலாது என்றும் கூறுகிறாள். எனக்கு அந்த அனுபவம் இல்லாததால் நான் 'கவலைப்படாதே, ஏதாவது வழிபிறக்கும்' என்று உணர்ச்சியற்று சொல்லி கடந்து விடுகிறேன்.

என்னுடைய தோழியோ வறுமையுடன் தனியாக விடப்பட்டாள். இதில் மிகவும் துக்ககரமான காரியம் என்னவெனில் நான் என் பெற்றோர்களினால் பொருளாதார ரீதியாக மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். அவளுக்கு நானே உதவி செய்திருக்க இயலும். ஆனால் நான் பாடுகளை அனுபவித்திராததால் கஷ்டப்படுவோர் மீது என்னால் அனுதாபமாக இருக்க முடியவில்லை.

இவ்விதமாக அநேகர் இவ்வுலகில் இருக்கின்றனர். அவர்கள் தீயவர்கள் அல்ல, ஆனால் அனுபவமற்றவர்கள். அவர்களைச் சிறந்தவர்களாக மாற்றும் சில கஷ்டங்களை அவர்கள் சந்திக்கும் போது மாறுவார்கள்.

சுலபமான வாழ்க்கை அமையப் பெற்ற அந்த 25 வயது பெண்ணைப் போன்றவள் நானில்லை. நான் வளரும் போது என்னை நேசிக்கவோ

அல்லது எந்த வகையிலாவது எனக்கு உதவிய பெற்றோர் இருக்கவில்லை. அவர்கள் என்னை துஷ்பிரயோகம் செய்தனர். என்னுடைய சிறுபிள்ளைப் பருவமானது பயத்தாலும் பாடுகளாலும் தனிமையாலும் நிறைந்திருந்தது. பாடுபடுவோர் மீது அதிக மனதுருக்கத்துடன் என் சிறு வயது முதல் வளர்ந்து வந்தேன் என்று சொல்வதற்கு விருப்பம் தான், ஆனால் எனக்கு அதனால் ஒரு கடின இருதயமே கிடைத்தது. கிறிஸ்துவுடனான ஒரு ஆழமான உறவும் இன்னும் பல வருடங்கள் தனிப்பட்ட வலிகளையும் பாடுகளையும் அனுபவித்த பின்னரே மாறினேன்.

எனக்கு கேன்சர் நோய் வந்த போது, அதனால் பாதிக்கப்பட்டவக்ள் மீது அதிகமான மனதுருக்கம் வந்தது. பத்து வருடங்கள் தலைவலியால் அவதிப்பட்ட போது, தலைவலியால் அவதிப்பட்டவர்களுக்காய் மனதுருக்கத்தோடு ஜெபிக்கும் விசுவாசத்தைப் பெற்றேன். தேவனுடைய வார்த்தாயாலும் அவருடைய கிருபையாலும் என்னை பாலியல் ரீதியாக என்னை துன்புறுத்திய என் தகப்பனை என்னால் மன்னிக்க முடிந்தது. வெறுப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருப்பதற்கு பதிலாக மன்னிப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது என்பதை முதன் முதலாக நான் அறிந்து கொண்டேன். ஒன்றுமே இல்லாமல் ஒரு ஊழியத்தை தொடங்கினேன். ஆனால் தேவன் ஒரு தரிசனத்தை கொண்டிருந்தார். 40 ஆண்டுகளுக்குப் பின்னும் நான் அதை செய்கிறேன். நான் அனுபவத்தால் பலவற்றை கற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதற்கு நான் விலை செலுத்த வேண்டியதாயிருந்தது. என்னைக் குற்றப்படுத்திக் குறை கூறின அநேகருண்டு. ஆனாலும் அத்தகைய சூழ்நிலையில் நான் ஆறுதல் பெற்றேன். இப்போதோ அநேகருக்கு நான் ஆறுதலாக இருக்கிறேன். நாம் கஷ்டப்படும் போது அவரே நம்மை ஆறுதல் படுத்துவதின் மூலம் நாம் பிறருக்கு ஆறுதல் அளிக்கும் கிருபையை தேவன் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

> நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.

> தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.
>
> 2 கொரி 1:3-4

நான் அனுபவித்துக் கொண்டிருந்ததைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள முயன்றது நினைவில் உள்ளது. ஆனால் எனக்கு எப்படி உதவுவது என்பது எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. அவர்களுக்கு என்னுடைய வலியைப் புரிந்து கொள்ள இயலவில்லை.ஏனன்றால் அவர்களை எந்த வலியும் ஏற்பட்டிருக்கவில்லை. தேவன் அவர்களைத் தேற்ற தேவை ஏற்படாததால் அவர்களால் என்னைத் தேற்ற இயலவில்லை. அல்லது ஒருவேளை அவர்களுக்குத் தேவைப்பட்டிருந்தும் அதை எப்படி கேட்டுப்பெற்றுக் கொள்வது என்பதை அவர்கள அறியாதிருந்தனர். நம்மிடம் இல்லாததை நம்மால் கொடுக்க இயலாது என்பதை நான் அடிக்கடி கூறுவதுண்டு. முதலாவதாக நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் அவர் நமக்குக் கொடுத்திருப்பது நம் மூலமாய் பிறருக்கு செல்லும்.

மக்கள் தங்கள் பிரச்சினைகளோடு நம்மிடம் வரும் பொழுது, அநேகந்தரம் நம்மால் அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க இயலாது என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர் அவர்களுக்கு உண்மையாகவே தேவைப்படுவதெல்லாம் புரிந்து கொள்ளுதல், ஆறுதல் மற்றும் மனதுருக்கமே. பாடுகளின் அடுத்த பக்கத்திலே நாம் அதிக மிருதுவானவர்களாகவும், கனிவானவர்களாகவும், மென்மை மற்றும் மனதுருக்கம் பெற்றவர்களாய் மாறி விடுகிறோம். இந்த குணங்கள் நம் தேவனிடத்தில் நாம் நேசிக்கிற சிலவாகும். மேலும் அவர் சார்பாக அவைகள் நாம் ஊழியஞ்ச்செய்ய தகுதிப் பெறும்.

பாடுகளின் அடுத்த பக்கத்திற்கு வரும் போது, பிறருக்கான அனுதாபத்தை நாம் வளர்த்துக் கொண்டிருப்பது அதனால் ஏற்படும் ஆசீர்வாதங்களில் ஒன்று. காயப்படுவோருக்கு மனதுருக்கம் என்ற எளிய வரமானது மிகவும் விலையேறப்பட்டதாக இருக்கிறது.

நம் பாடுகள் மட்டுமே நாம் பிறருக்கும் உதவும் தகுதியை பெற்றுத்தருவதில்லை. நிச்சயமாகவே எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றிருப்பவர்களையும் தேவனால் உபயோகிக்க முடியும். உபயோகிக்கிறார். எல்லோருமே வாழ்க்கையிலே பல்வேறு வழிகளிலே பாடனுபவிக்கிறோம்.

## தேவனோடு ஒரு ஆழமான உறவு

பாடுகளின் அடுத்த பக்கம் இருப்பதாக நான் கண்டுபிடித்தவைகளில் ஒன்று தேவனுடனான ஒரு ஆழமான உறவு. தேவன் தவிர நமக்கு உதவி செய்ய யாருமே இல்லை என்ற ஒரு தருணத்திலே, அவர் பேரிலே நாம் நம்பிக்கையை வைப்போமேயானால், அவர் யாராக இருக்கிறாரென்றும், அவர் எவ்வளவு நல்லவராக இருக்கிறாரென்பதை அனுபவித்து ஆச்சரியப்படுவோம். அவருடைய உண்மைத்தன்மையை, நீதியை, கனிவை, இரக்கத்தை, கிருபையை, ஞானத்தை, வல்லமையைப் போன்ற இன்னும் அநேக காரியங்களை நாம் அனுப்விப்போம். பவுல் கிறிஸ்துவை அறியவும், அவர் யாராக இருக்கிறாரென்பதை இன்னும் ஆழமாகவும், நெருக்கமாகவும் அறிந்து கொள்வதே அவருடைய நோக்கமாக இருக்கிறதென்று கூறுகிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்து கொள்ள விரும்புவதாகவும், அவருடைய பாடுகளிலே ஐக்கியப்படவும் விரும்புவதாகவும் கூறுகிறார். (பிலி 3:10)

இந்த வேத வாக்கியத்திலே பல வல்லமையான காரியங்கள் இருக்கின்றன

1. *பவுல் தீர்மானமாக இருந்தார்*

வாழ்க்கையிலே நாம் ஏதாவது சாதிக்க விரும்புவோமென்றால், அதற்கு

தீர்மானம் தேவைப்படுகிறது. நாம் ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ செய்யும் சரியான காரியம் வெற்றியைக் கொண்டு வருவதில்லை. ஆனால் சரியானதை நாம் திரும்ப திரும்பச் செய்வதே விரும்பத்தக்க பலனைக் கொண்டு வருகிறது.

2. *பவுல் கிறிஸ்துவை அதிக ஆழமாகவும் நெருக்கமாகவும் அறிந்து கொள்ள விரும்பினார்*

அவரிடத்திலே ஒரு நெருக்கமான தனிப்பட்ட உறவு கொண்டிருக்க விரும்பினார். அதை விரும்பும் எவருக்கும், இயேசுவை முழு மனதோடு தேட விரும்புவர்களுக்கும் கிடைக்கிறது.

3. *பவுல் கிறிஸ்து என்ற நபரின் அதிசயங்களை அதிக பலமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ள விரும்பினார்.*

பவுல் கிறிஸ்துவை அறிந்திருந்தார். தமஸ்குவுக்கு போகும் வழியிலே அவருடன் ஒரு அற்புதமான சந்திப்பு ஏற்பட்டது. ஆனாலும் இன்னும் அதிகமான வெற்றிக்காகத் தேடிக்கொண்டிருந்தார். நான் ஆவிக்குரிய ரீதியாக வளராமல் இருக்கும் போது ஒருபோதும் திருப்தியாக இருக்கக்கூடாது. இயேசு எவ்வளவு அற்புதமானவர் என்பதைக் கற்றுக் கொள்ள எவ்வளவு அதிகம் இருக்கிறது. நாம் அவரை அதிகம் தேடும் போது அதிகமாக அறிந்து கொள்ளுவோம். அவரோடு நாம் நம் வாழ்க்கைப் பயணத்தை செய்யும் போது நாம் எவ்விதமான எவ்விதமான சூழ்நிலையிலும் அவர் நம்மோடு இருக்கிறார் என்பதைக் கண்டு கொள்வோம். அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை.

4. *நாம் இந்த சரீரத்திலே இன்னும் இருக்கையிலே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினார்*

நாம் இயேசுவை உண்மையாகவே ஆழமாகவும் நெருக்கமாக்வும் அறிந்திருக்கும் போது கடினமான சமயங்களிலும், சமாதானமும்

சந்தோஷமும் இருக்கும். நாம் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும், எவ்வளவு வேதனையைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையாக இருந்தாலும் அவற்றிலிருந்து நல்லதை நடப்பிக்கும் படி அவரை நம்புவோம். இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமை நமக்கு இருக்கும் போது நாம் ஒரு தோற்கடிக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டியதில்லை.

நம்முடைய வாழ்விலே தேவனுடைய வல்லமையை அனுபவிக்கும் போது, அடுத்த முறை நமக்கு ஒரு தேவை ஏற்படும்போது அவரை நம்புவது அதிக சுலபமாக மாறி விடுகிறது. தேவனுடைய வல்லமயை நமக்குள்ளும் நம் மூலமாகவும் காண்பிக்க விரும்புகிறார். அவர் நம்மை விடுவிக்க மட்டும் விரும்பவில்லை, ஆனால் மக்களை கிறிஸ்துவின் பால் ஈர்க்கும் நபர்களாய் நம்மை உபயோகிக்க விரும்புகிறார்.

நீங்களும் நானும் ஒரு பயங்கரமான கஷ்டத்தினூடே சென்று கொண்டிருக்கையிலே நாம் தேவனை நம்பி ஒரு சந்தோஷமான சமாதானமான மனப்பான்மையுடன் இருப்பதை மற்றவர்கள் பார்க்கும் போது தேவனுடைய வல்லமைக்கு அது ஒரு சாட்சியாக இருக்கிறது. எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டாலும் நாம் பொறுமையாக இருக்கும் போது அது தேவனுடைய வல்லமைக்கு சாட்சியாக இருக்கிறது. பின்னர் நாம் விடுதலையை அனுபவிக்கும் போது தேவன் உண்மையுள்ளவராக இருப்பதை அவர்கள் காணும் போது அது அவருடைய பிரயசன்னம் மற்றும் வல்லமைக்கும் நமக்கு உதவ வேண்டுமென்ற அவருடைய விருப்பத்திற்கும் சாட்சியாக இருக்கிறது. ஒருவர் தன் வாழ்வை கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்க, நம்முடைய தனிப்பட்ட முன்மாதிரியானது ஒரு காரணமாக அமைகின்றது.

*நம்முடைய தனிப்பட்ட முன்மாதிரியானது இருக்கலாம், அது ஒரு நபர் கிறிஸ்துவுக்கு தன் உயிரைக் கொடுக்கும்.*

5. *கிறிஸ்துவின் சாயலுக்குள்ளாக அவரை உருமாற்ற அவருடைய பாடுகள் உதவுமேயென்றால் அதனைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகவும் பவுல் கூறுகிறார்*

அப்படியென்றால் இயேசு சிலுவையிலே தொங்கியதைப் போன்று நாமும் தொங்க வேண்டுவதில்லை. கிறிஸ்துவைப் போன்று நாம் இறப்பதற்கும், நம் மூலமாக அவர் மகிமைப்படுவதைப் பார்க்க நாம் என்னென்ன சந்திக்க வேண்டுமோ, அதையெல்லாம் சந்திக்க விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

> *நாம் பாடுகளை அனுபவிக்கவேண்டுமென்றால், அதினின்று ஏன் சில நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது?*

பின் நாட்களிலே நமக்குப் பலனளிக்கக் கூடிய காரியங்களை நாம் கற்றுக் கொள்ள தேவன் நமக்கு பாடுகளையும் சோதனைகளையும் கொடுக்கிறரென்று அர்த்தமாகுமா? தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் படி அவர் அவர்களை வீட்டிற்குப் பின்புறமாக அழைத்துச் சென்று நன்றாக அடி உதை கொடிக்கிறவர் அவரல்ல.

நமக்கு பிரச்சினைகளோ கஷ்டங்களோ நேரிடும் போது அதை தேவன் நம் வாழ்விலே அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற அனுமதித்திருக்கலாம். நாம் பாடுகளை அனுமதிப்போமேயென்றால் அதனால் ஏன் சில பலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடாது? என் வாழ்விலே நான் தேவனின்றி பாடுகளை அனுபவித்திருக்கிறேன். தேவனோடு அனுபவிப்பது எப்போதுமே சிறந்தது என்று சொல்லுகிறேன். நம் விடுதலைக்கான திட்டத்தை எப்போதுமே தேவன் வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன். ஆனால் அதை நம் வளர்ச்சிக்கும், குணாதிசயத்தை வளர்க்கவும், கொஞ்ச காலம் தாழ்த்தலாம். நம்முடைய வாழ்க்கையிலே அவருடைய நேரமானது பூரணமாகிறது. நாம் காத்திருக்கையிலே அவரை நம்பும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## பரிசை பெற்றுக்கொள்ளும் சந்தோஷத்திற்காக

சிலுவையின் இலட்சையை அவர் வெறுத்தாலும் அதின் மறுபக்கத்திலே அவருக்கு கிடைக்கும் பரிசைப் பெற்றுக் கொள்ளும் சந்தோஷத்தினால் அவர் அதை சகித்தார் (எபி 12:2) அநேகர் தாங்கள் கடந்து சென்ற காரியங்களை எதற்காகவும் விட்டுவிட மாட்டோம் என்று என்னிடம் கூறியிருக்கின்றனர். ஏனென்றால் அது அவர்களை ஆச்சரிய விதத்தில் மாற்றி தேவனிடம் கொண்டு வந்தது நெருங்கி வருவதற்காகவே.

நாம் எந்தக் காரியங்களினூடே கடந்து செல்கிறோமோ அதனூடாக நாம் சென்று கொண்டிருக்கும் போது அதை வெறுக்கலாம். எவருமே வேதனை பாடுகளை அனுபவிக்கும் படி விரும்புகிறதில்லை. ஆனால் மறு பக்கத்திலே கிடைக்கும் பரிசின் மீது நம் மனதை வைப்போமேயென்றால் அதை நாம் அதிக சந்தோஷமாக சகித்துக் கொள்ள இயலும். நாம் இப்போது எவ்வளவு மோசமாக கஷ்டப்பட்டாலும், எவ்வளவு காலம் கஷ்டப்பட்டாலும், தேவனுடைய நன்மையை நாம் காண்போமென்று தொடர்ந்து விசுவாசிப்போமேயென்றால் நாம் வெற்றியின் இனிமையை சுவைப்போம்.

*நாம் சென்றடைய, கடந்து செல்ல வேண்டும்.*

நாம் இலக்கை சென்றடைய, சிலவற்றை கடந்து செல்ல வேண்டுமென்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. கஷ்டங்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் ஏனென்றால் உங்கள் திராணிக்கு மிஞ்சி அவர் உங்களைச் சோதிக்கமாட்டார். அவர் உங்களுடன் இருந்து உங்களுக்கு உதவுவார், வழிநடத்துவார்.

அத்தியாயம் 13

# அனுதினமும்

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்.

யாத் 16:4

தேவன் இஸ்ரவேலருக்கு வானத்திலிருந்து மன்னாவப் பொழிந்த போது, அது அவர்களை போஷிக்க மட்டுமல்ல. அவர்கள் அவர் மேல் கொண்டிருந்த விசுவாசத்தை சோதிக்கவும் தான். அன்றைக்கு தேவையானதை மாத்திரமே அவர்கள் சேகரிக்க வேண்டும். பின் அடுத்த நாளைக்கு தேவன் அவர்களுக்குக் கொடுப்பார் என்று அவரை நம்ப வேண்டும் என கட்டளைக் கொடுத்தார். அவர்களில் அநேகருக்கு அது எவ்வளவு கஷ்டமானதாக இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் வனாந்திரத்தில் இருந்தனர், உணவு ஏதும் இல்லை, உணவு கிடைக்க எந்த வழியும் இல்லை. அவர்களின் பயம் அதிகமாக இருக்குமென்று நிச்சயமாக நம்புகிறேன். என்னுடையது அப்படியாக இருந்திருக்கும்!

நாம் தேவனை நம்புகிறோமா இல்லையா என்று சில சமயங்களிலே அவர் நம்மை சோதிக்கிறார். இஸ்ரவேலர்கள் அடுத்த நாளின் பகுதியை அன்றே சேகரிக்க முயன்றார்கள் அது அழுகிப் போய் நாற்றம் எடுத்தது.

நாளைக்கு நமக்குத் தேவைப்படுவதை எவ்வளவு தரம் பயத்தினாலும் பகுத்தறிவினாலும் இன்றே சேகரிக்க முயலுகிறோம். அது நம்மை நிர்பந்தத்துக்குள்ளாக்குகிறது.

சமீபத்திலே நான் ஒருநாள் காலை எழுந்தவுடனே நான் செய்து முடிக்க வேண்டிய காரியங்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினேன். அவையெல்லாம் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் செய்து முடிக்க வேண்டியவையாக இருந்தது.அதற்காக ஆயத்தம் செய்ய வேண்டியிருந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பேச வேண்டியிருந்தது. இரண்டொரு கூட்டங்கள் இருந்தது. பல தனிப்பட்ட நிகழ்வுகளும் இருந்தது. அடுத்த 30 நாட்களில் நான் செய்ய வேண்டியவை பற்றி எவ்வளவு அதிகமாக யோசித்தேனோ அவ்வளவு அதிகமாக நான் பாரமாகவும் அழுத்தமாகவும் உணர்ந்தேன். நான் ஏற்கனவே அறிந்த ஒன்றை தேவன் என் இருதயத்திலே பேசினார். அது என்னவென்றால், “ஒவ்வொரு நாளாக வாழ்”. உடனே அந்த அழுத்தம் என்னை விட்டு எடுபடுவதை உணர்ந்தேன். ஏனென்றால் நாம் ஒவ்வொரு நாளாக வாழ்வோமேயென்றால் நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படி வாழ்வதற்கு உதவுவாரென்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அறிந்து நான் அனுபவித்த பல சந்தர்ப்பங்கள் எனக்கு உண்டு. நாம் ஒவ்வொரு நாளாக வாழ வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

நாளைய தினத்தைப் பற்றி இன்று நாம் கவலைப்படுவோமேயானால், இன்றைய தினத்தை விரயமாக்கி விடுவோம். அது பயனளிக்காது! இயேசு நாம் நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படக்கூடாது என்று கூறுகிறார். ஏனெனில் அதற்கு அதின் பிரச்சினைகள் இருக்கிறது (மத் 6:34) நம் பிரச்சினைகளை நினைத்து விரக்தியடைவதற்குப் பதிலாய் தேவன் பேரிலே நம் நம்பிக்கையை வைக்கும் போது அவர் நமக்கு உதவுகிறார்.

2013ல் ‘அனுதினமும் தேவனை நம்புவது’ என்ற அன்றாட தியானத்தை வெளியிட்டோம். அது எங்களுடைய மிகவும் பிரசித்தி

பெற்ற தியான நூலாகும். நாம் செய்யக்கூடும் என்று உணரும் வகையிலுள்ள ஒன்றை அது அளித்தது. நம் வாழ்க்கையை முழுவதுமாக ஒரே பார்வையில் பார்க்கும் போதோ அல்லது ஒரு வாரம் அல்லது மாதமாக பார்த்தாலோ அது நமக்கு மிஞ்சியதாக தோன்றுகிறது. ஆனால் ஒவ்வொரு நாளாக பார்க்கும் போது அது சாத்தியப்படுகிறது. மதுபானத்திற்கு அடிமையாக இருப்பவர்கள், அந்த பழக்கத்தை விட்டு விட உதவி கோரி வரும் போது அது பயனளிக்கிறது. மதுபானம் அருந்தாமல் தங்கள் எஞ்சிய வாழ்நாளை வாழ் இயலாது என்று அநேக மக்கள் சொல்லுகின்றனர். தோற்று விடுவோம் என்ற பயம் அவர்களைத் தொடங்கவிடாத படி செய்கின்றது. அன்னல் ஒரு நாளிலே ஒரு தரம் மது அருந்தாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணமானது செய்யக்கூடியதாக தோன்றுகிறது. ஒரு நாள் குடிவெறியில்லாமல் இருக்க வேண்டுமென்பதே அவர்கள் இலக்காக இருக்கினறது. அவர்களில் அநேகர் எத்தனை நாட்க்ள் ஏன் வருடங்கள் கூட தெளிந்த புத்தியுள்ளவர்களாக இன்னும் இருக்கின்றனர்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து நேராக இந்த கோட்பாடு எடுக்கப்பட்டிருப்பதால் நம் வாழ்வின் அநேக பகுதிகளிலே இது பயனளிக்கிறது. நாம் கடனிலிருந்து மீளாமல் உடற்பயிற்சி செய்யலாம், எடையை குறைக்கலாம், கல்லூரி பட்டம் பெறலாம், மன நலம் குன்றிய பிள்ளையை வளர்க்கலாம் அல்லது நாம் செய்ய வேண்டியது எதுவாக இருந்தாலும் தேவன் பேரிலே நம்பிக்கையை வைத்து ஒவ்வொரு நாளாக வாழ்வோமேயென்றால் இவையெல்லாம் சாத்தியமாகும்.

பெயர் அறியப்படாதவரின் இந்தக் கூற்று எனக்குப் பிடிக்கும். "நான் ஒவ்வொரு நாளாக வாழ விரும்புகிறேன். ஆனால் சில சமயங்களிலே பல நாட்கள் ஒன்றாக சேர்ந்து என்னைத் தாக்குகிறது.

## விசுவாசம் நம்பிக்கை இவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசம்

விசுவாசம், நம்பிக்கை என்ற இரண்டு வார்த்தைகளும் ஒன்றிற்குப்

பதில் மற்றொன்று உபயோகிக்கப்படுகின்றது. ஆனால் அதிலே வித்தியாசம் இருக்கின்றது. அநேக விதங்களிலே இந்த இரண்டும் ஒரே அர்த்தம் உடையதாக காணப்படுகிறது, ஏனென்றால் இவ்விரண்டிற்குமே தேவன் பேரில் நம்பிக்கைத் தேவைப்படுகிறது. ஆனால் விசுவாசம் ஒரு பெயர்சொல்லாகும். எனவே அது நாம் பெற்றிருக்கும் ஒன்று, ஆனால் நம்பிக்கை என்பது வினைச்சொல்லாகும். அது நாம் செய்யும் ஒன்றாகும்.

*நம்பிக்கை விசுவாசத்தின் செயல்பாடாக இருக்கிறது.*

தேவன் நமக்கு விசுவாசத்தை கொடுக்கின்றார். ஒவ்வொருவருக்கும் அவனவனுடைய அளவுக்குத்தக்கதாக விசுவாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 12:3). ஆனால் அதைக் கொண்டு என்ன செய்கிறார் என்பது தனி நபரை சார்ந்தது. நம்பிக்கையானது விசுவாசத்தை செயல்படுத்துவதாகும். அது கட்டவிழ்க்கப்பட்ட விசுவாசமாகும். தேவனைத் தவிர மற்ற எந்தெந்த காரியங்களின் மீதெல்லாம் மக்கள் விசுவாசத்தை வைக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். உலகின் பொருளாதார அமைப்புகள், அரசாங்கம், கல்வி, மற்ற மக்கள், ஓய்வு ஊதியப் பணம், வேலை மற்றும் தங்கள் மீது நம்பிக்கை வைக்கின்றனர். இவையெல்லாவற்றிற்கும் ஒரே ஆதாரம் தேவன் மட்டுமே.

"தேவன் பேரிலே உங்கள் நம்பிக்கையை வை" என்பதின் மேல் உங்கள் கவனத்தை வைக்க விரும்புகிறேன். "வை" என்பது வினைச்சொல். நாம் ஏதோவொன்றின் மேல் கவனத்தை வைப்போமாயின் அதைச் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை அது சார்ந்ததாக இருக்கிறது. நான் இந்த வேலையை முடித்த பிறகு அடுத்த முறை உபயோகிப்பதற்கு இந்த கணினியை சார்ஜ் செய்யலாம் அல்லது அப்படியே விட்டு விடலாம். பின் அது பயனற்றதாக இருக்கும். அது சார்ஜ் குறையாது என்று எண்ணிக் கொள்ளலாம். ஆனால் சார்ஜ் தீர்ந்து போகும் போது நான் ஏமாற்றமடைவேன். தேவன் பேரில் அல்லாமல் நாம் வேறொன்றின் பேரிலோ அல்லது வேறொருவர் மீதோ

நம்பிக்கையை வைக்கும் போது இப்படித்தான் ஆகிறது. காரியங்களெல்லாம் நன்றாக நடக்கும் என்று எண்ணிக் கொள்கிறோம். ஆனால் எப்போதுமே அப்படி இல்லை என்று அனுபவம் கற்றுக் கொடுக்கிறது.

நாம் நம்பக்கூடிய காரியங்களும் நபர்களும் இருக்கின்றனர் தான். ஆனாலும் விளைவுகளால் எப்போதும் திருப்தியடைவோன் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. என் வாழ்விலே முக்கால் பகுதியை தேவனுடன் வாழ்ந்த பின் என் நம்பிக்கையை அவர் மீது வைத்ததால் ஏற்பட்ட விளைவுகளால் நான் நிச்சயமாகவே திருப்தியடைந்திருக்கிறேன். நான் காரியங்கள் எப்படி நடக்கும் என்று நினைத்திருப்பதைப் போன்றோ அல்லது நான் விரும்பியதைப் போன்றோ நடக்காவிட்டாலும் எது சிறந்ததோ அதையே தேவன் நடப்பித்தாரென்று உணர்ந்திருக்கிறேன்.

நீங்கள் இப்படியாக செய்திருபீர்களென்றால் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் பேரிலே நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்பீர்களா? அன்றாடம் ஒவ்வொரு நாளாக இதைச் செய்ய யோசியுங்கள். அப்போது செய்வதற்கு சுலபமாகி விடும். தேவனை இன்றைக்கு உங்களால் நம்ப இயலுகிறதா? இன்றைக்காக தேவன் பேரிலே நம்பிக்கையை வைக்கிறீர்களா? இன்றைக்கு எத்தகைய சவால்களை நீங்கள் சந்தித்துக் கொண்டிருந்தாலும் அதை அவரிடம் விட்டு விட்டு அவர் பேரிலே உங்கள் நம்பிக்கையை வைப்பீர்களா?

தேவன் பேரிலே நம்பிக்கையை வைப்போம் என்று சொன்ன பலரைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. அது அவர்கள் எடுத்த தீர்மானம். தேவன் பேரிலே தங்கள் நம்பிக்கையை வைப்பதைப் பற்றி பேசும்போது வேதாகம எழுத்தாளர்கள் 'நான் வைப்பேன்' என்ற பதத்தை உபயோகிக்கின்றனர். தீர்மானம் எடுப்பதுதான் முதல் பகுதி. பின்னர் அதைப் பின்பற்றுவோம். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாக இருப்பினும் அதைச் செய்ய வேண்டும். சிறிய அளவிலான இலக்குகள் பின்னாளில் பெரியவைகளை அடைய உதவும்.

வேதாகமம் சொல்லுகிறதாவது:

> என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்.
>
> சங்கீதம் 7:1

> நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?
>
> சங்கீதம் 56:3-4

வாழ்க்கை நன்றாக இருக்கும் போது தேவன் பேரிலே நம்பிக்கையை வைப்பது சுலபமானது. ஆனால் அப்படி இல்லாத போது மிகவும் கடினமாக காணப்படுகிறது. மிகவும் வேதனையளிக்கக் கூடிய அல்லது துக்ககரமான ஒன்றை நீங்கள் சந்தித்துக் கொண்டிருப்பீர்களானால் இது மிகவும் கடினமானது தான். ஆனாலும் நம்மால் செய்ய முடியாததொன்றை தேவன் நம்மை செய்ய சொல்வதில்லை. நாம் தேவனை ஒவ்வொரு நாளாக நம்பலாம். 'தேவன் மேல் என் நம்பிக்கையை வைப்பேன்' என்று ஆயிரம் முறை சொல்ல வேண்டியிருந்தாலும் அது செய்யக்கூடியதே. அது தேவனை கனப்படுத்துவதோடு சுமக்க இயலாத தேவையில்லாத பாரத்தையும் நம்மை விட்டு எடுத்துப் போடும்.

1989-ல் மார்பக புற்று நோய் எனக்கிருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்ட போது அது மிகவும் பயத்தை ஏற்படுத்தியது. நான் முதலாவது செய்தது கவலைப்பட்டது தான். 'என்னவாகும்' என்பதால் என் மனம் நிறைந்து விட்டது. ஆனால் 'தேவனே உம்மை நம்புகிறேன்' என்று சொல்லும் படி தேவன் சொன்னார். என்னுடைய பயங்கள் கவலைகளைப்பற்றி பேசுவதற்கு பதிலாக, அவ்வாறு சொல்ல வேண்டும் என்று சொன்னார். சில நாட்கள் அவ்வாறு நான் திரும்ப

திரும்ப சொல்ல வேண்டியதாயிருந்தது. ஆனாலும் நான் தொடர்ந்து சொன்னேன். இறுதியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நாள் வந்தது. புற்றுநோய் பரவி இருக்கிறதா என்று பார்க்கும் பரிசோதனையும் அதில் அடங்கும். அப்படியென்றால் அந்த சோதனையின் பதில் கிடைக்கும் வரை அன்றாடம் தேவன் பேரிலே அதிக நம்பிக்கை வைத்து காத்திருக்க வேண்டியதாயிருந்தது. அதிக காலம் எடுத்துக் கொள்வதைப் போல தோன்றியது. ஆனாலும் ஒவ்வொரு நாளும் 'தேவனே உம்மை நம்புகிறேன்' என்று சொன்னேன். இறுதியாக பரிசோதனையின் அறிக்கை வந்தது. அது நல்லதாக இருந்தது. லிம்ப் நோடுகளிலே புற்றுநோய் இல்லை. ஆனால் மேலும் வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்பதைப் பற்றி மருத்துவர்கள் அறிந்திருக்கவில்லை. புற்றுநோய் மருத்துவர்கள் தாம் அதைப் பற்றி என்னிடம் சொல்ல முடியும். எனவே புற்றுநோய் மருத்துவரை சந்திக்க முயன்றேன். ஆம் அவரைப் பார்க்க கொஞ்ச காலம் எடுத்துக் கொண்டது தான். எனவே அடுத்த சில மாதங்கள் என் வாழ்க்கை இருப்பதற்கு தேவனை தான் சார்ந்திருக்க வேண்டியதாயிருந்தது. பதிலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தையும் அதற்காக காத்திருப்பதையும் நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட சமயங்களிலே மோசமான நிலைபற்றி யோசிக்க எனக்கு அநேக தருணங்கள் இருந்தது. ஆனாலும் நான் தேவனை நம்பும் படி எனக்கு அவர் நினைப்பூட்டினார். இறுதியாக நான் அந்த புற்றுநோய் நிபுணரை சந்தித்த போது, மேலும் எவ்வித மருத்துவமும் அதற்குத் தேவையில்லை ஏனென்றால் அந்த புற்றுநோய் முழுவதுமாக நீக்கப்பட்டு விட்டது என்று சொன்னார். நான் எப்போதும் போல இருக்கலாம். ஆனால் வருடம் ஒரு முறை பரிசோதித்துக் கொள்ளலாம் என்று கூறினார். என்ன ஒரு விடுதலை! 500 கிலோ எடை என்னை விட்டு விழுந்ததைப் போல் உணர்ந்தேன். பின்னர் அநேக ஆண்டுகள் அந்த பரிசோதனையை செய்து கொள்ள வேண்டிய சமயம் வரும் போது, இதை நான் மீண்டுமாக செயல்படுத்த வேண்டும். ஒரு வருடம் அவ்வாறு ஸ்கேன் செய்யும் போது, ஏதோவொரு மாற்றம் இருப்பதாகக்

கண்டு மீண்டு ஸ்கேன் செய்ய வேண்டுமென்று சொன்னார். *'அந்த கேன்சர் மீண்டுமாக வந்திருக்குமோ? மற்ற இடங்களுக்கு பரவி இருக்குமோ?'* என்ற கேள்விகளும் இதைப்போன்ற இன்னும் பல கேள்விகளும் என் மனதிலே தோன்றின. ஆனால் நான் எப்படியாக இருந்தாலும் தேவனே நான் உம்மை நம்பியிருக்கிறேன் என்று சொன்னேன்.

நான் அந்த பரிசோதனையயும் ஏற்றுக் கொண்டேன். அதிலும் எதுவுமே இல்லை! மீண்டுமொருமுறை எனக்குப் புற்றுநோய் இல்லை என்ற அறிக்கை வந்தது. இப்போது 27 ஆண்டுகள் அது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

1 தீமோ 6:12லே பவுல் தீமோத்தியுவிடம் சொன்னதைப் போன்று தேவன் பேரிலே உங்கள் நம்பிக்கையை வைக்க விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் பேராட வேண்டியிருப்பதை நான் உணர்ந்தேன். இதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே கூறினேன். பிசாசு நம்மை பயத்தால் நிறைக்க எந்தவொரு சூழ்நிலையையும் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறான். ஆனாலும் நாம் தேவன் பேரிலே நம்பிக்கை வைக்கும் போது அவனுடைய திட்டத்தை முறியடிக்க இயலும். இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கையிலே கடந்த காலங்களிலே நீங்கள் தேவனை நம்பியிருந்தும் உங்கள் விருப்பம் போல காரியங்கள் நடைபெறவில்லையே என உணரலாம். அப்படியென்றால் அது ஆச்சரியமில்லை. ஏனென்றால் நம் விருப்பம் போல் காரியங்கள் நடைபெறுவதில்லை. தேவனை முழுமையாய் நம்புவது என்பது நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்வதல்ல. நாம் தேவனை நம்ப தீர்மானிக்கும் போது விளைவு எதுவாக இருந்தாலும் அவரை முழுமையாக நம்ப நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவர் சிறந்ததை அறிந்திருக்கிறாரென்று நம்பி கனத்தை அவருக்குக் கொடுக்கின்றோம்.

'(யோபு 13:15)' அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சொன்னபோது அவருடைய முழு

நம்பிக்கையயும் நம்மால் காண முடிகிறது. யோபு தன்னுடைய மீட்பர் உயிரோடிருக்கிறாரென்றும் முடிவிலே அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் அறிந்திருந்தார் (யோபு 19:25). தேவன் பேரிலே யோபு காண்பித்த உறுதியான விசுவாசமும் நம்பிக்கையுமே யோபுவின் புத்தகத்திலே அதி முக்கியமான செய்தியாகும். நாம் அநேகந்தரம் அவர் ஏன் கஷ்டப்பட்டார் என்றே நோக்குவதால் இந்த புத்தகத்திலுள்ள பிற பாடங்களை காணாமல் விட்டு விடுகிறோம். யோபினுடைய விசுவாசம் என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. நான் என்ன அனுபவித்துக் கொண்டிருந்தாலும் இந்த வேத வாக்கியங்களெல்லாம் என்னைப் பெலப்படுத்துகிறதென்பதை அறிந்திருக்கிறேன்.

யோபு குறை பட்டுக் கொண்டான் தான். அவன் சகித்துக் கொண்டிருப்பதற்கு மேல் தகுதி பெற்றவன் என்று நினைத்தான். ஆனாலும் தேவனை நம்புவதை அவன் நிறுத்தவேயில்லை. முடிவிலே தேவன் அவன் இழந்ததை விட இரண்டு மடங்கு கொடுத்தார். அதுவொரு மேன்மையான உணர்வு என்று நான் நினைக்கிறேன். தேவன் மேல் தங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து வைப்பவர்களுக்கு தேவன் பலனளிக்கிறாரென்று நம்புகிறேன். நம்மில் யாராவது துயரமான காரியங்களினூடே கடந்து செல்லும் போது கொஞ்சமேனும் குறைபட்டுக் கொள்ளாமல் இருக்கிறோமா? யோபைப் போல் நாமும் துயரப்படும் தகுதி பெறாதவர் என்று தான் நினைக்கிறோம். ஆனால் இவ்வனைத்தின் மத்தியிலும் ஒவ்வொரு நாளாக தேவனை நம்ப நாம் தெரிந்து கொள்ளலம். அப்படிச் செய்வோமேயென்றால் எதற்குள்ளும் நாம் கடந்து செல்லலாம்.

## என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும்?

நாம் அனைவருமே நம்முடைய எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள நினைக்கிறோம். மக்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பி ஆயிரக்கணக்கான பணத்தைக் குறி சொல்லுகிறவர்களிடமும், மனநல நிபுணர்களிடமும்

செலவழிக்கின்றனர். இத்தகைய பழக்கங்களை தேவனுடைய வார்த்தை கண்டிக்கிறது. இத்தகைய காரியங்களில் ம்க்கள் அதிகமான பணத்தைச் செலவிடுகின்றனர் என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. நான் தேவனை நம்பும்போது, அத்தகைய காரியங்களை செய்ய வேண்டியதில்லை. ஏனென்றால் அவர் தம்முடைய சொந்த நேரத்திலே அதை நமக்கு வெளிப்படுத்துவார். அதுவரை அவரை நம்புவோம்.

எதிர்காலத்தைப் பற்றிய ஒரு சிறந்த காரியம் என்னவெனில், அது ஒவ்வொரு நாளாக நடைபெறுகிறது, என்றார் ஆபிரகாம் லிங்கன். நாம் எதிர்காலத்தைப் பற்றி உண்மையாகவே அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஆனால் அதை அறிந்து கொள்ளும் போது, அறிந்திராமலே இருக்கலாம் என்று நினைப்போம். ஒவ்வொரு வாழ்வும், நல்ல மற்றும் நல்லதல்லாத காரியங்களால் நிறைந்திருக்கிறது. நம்முடைய எதிர்காலத்தை நாம் காண்போமேயானால், அதின் ஒரு பகுதியைப் பற்றி நாம் சந்தோஷப்படுவோம். ஆனால் மற்ற கடினமான வேதனையான காரியங்களைப் பார்க்கும்போது அந்த சந்தோஷம் மறைந்து விடும்.

கடினமான நாட்களை நாம் ஒவ்வொரு நாளாக பார்க்கும் போது நாம் சோர்வடையாமல் தொடர உதவுகிறது. நாம் தேவன் பேரிலே நம்பிக்கையை வைத்து அவரை சார்ந்து இருப்போமேயானால் ஒரு நாளிலே நாம் எதையும் செய்ய இயலும். நம்முடைய பிரச்சினைகளைப் பற்றி அளவுக்கு அதிகமாக யோசிப்பதானது நாம் மனதளவிலே சோர்வுற்று வாழ்க்கையிலே இருக்கும் சுவாரஸ்யத்தை இழந்து விடச்செய்கிறது. நாம் நம்முடைய எதிர்காலத்தை அறிவோமேயென்றால் அதிலே நாம் பார்த்த கடினமான காரியங்களைப் பற்றி கவலைப்படுவோம். அதிலே மூழ்கிப்போய் விடுவோம். நாம் நம் எதிர்காலத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்புவாரேயென்றால், அதற்கான ஆயத்தங்களையெல்லம் செய்திருப்பார். நம்மிடம் இருந்து அவர் மறைக்கும் எதுவும் நல்லகாரணத்திற்குத்தான். சரியான சமயத்திலே அவர் நமக்கு அதை வெளிப்படுத்துவார்.

சில சமயங்களிலே நாம் தாழ்ந்திருக்கிறோம். சில சமயங்களிலே நாம் வாழ்ந்திருக்கிறோம். இத்தைகைய இரண்டு சமயங்களிலும் நாம் திருப்தியாக இருக்க வேண்டுமென்று பவுல் நம்மை உற்சாகப்படுத்துகிறார் (பிலி 4:11-12). தேவன் இவ்விரண்டையும் நம் வாழ்விலே உபயோகிக்கின்றார். எல்லா பருவங்களும் ஒரே மாதிரியானவையல்ல. ஆனால் அவையெல்லாம் இணைந்து செயல் படும் போது ஒரு அழகான வாழ்க்கை அமைகிறது. நாம் நீண்டதொரு பனிக்காலத்தைச் சகிக்கும்போது அது காலப்போக்கிலே வசந்த காலமாகிறது. மீண்டுமாக நம் வாழ்விலே பூக்கள் பூக்கிறது.

என் எதிர்காலத்திலே எனக்கு இருப்பது என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் அது மிக ரம்மியமாக இருக்கும் என்று நம்புகிறேன். உங்களுடையதும் அவ்வாறு இருக்கும் என்று நம்புகிறேன். நாம் வாழ்க்கையை ஒவ்வொரு நாளாக வாழ்வோம். நம் முழு மனதாலும் இருதயத்தாலும் தேவனை நம்புவதால் கிடைக்கும் வெற்றியை அனுபவிப்போம். நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்பட்டு இன்றைய தினத்தை விரயமாக்கும் தவறை செய்யாதீர்கள் தேவன் உங்களை தங்கள் உள்ளங்கையிலே வைத்திருக்கிறார். அவருடைய மனதிலே நீங்கள் இருக்கின்றீர்கள். உங்கள் பெலனாக இருக்கிற அவர் மூலமாக நீங்கள் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வீர்கள் (பிலி 4:13).

அத்தியாயம் 14

# அறியப்படாதது

உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.

ஏசாயா 50:10

நம் வாழ்க்கையிலே நடைபெறுவதைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். அல்லது எதைப் பெற்றுக் கோள்ள வேண்டுமோ அதைப் பெற்றுக் கொள்ளும் போது தேவனை நம்புவது ஒன்று. ஆயினும் நம்முடைய சூழ்நிலையைப் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ எதையும் அறிந்திராத போது அவரை நம்புவது முற்றிலும் வேறான காரியமாகும்.

சார்லஸ் ஸ்பர்ஜன் சொன்னார். “வெளிச்சத்தில் தேவனை நம்புவது ஒன்றுமில்லை. ஆனால் இருளிலே தேவனை நம்புவது தான் விசுவாசம்.” மனிதனுக்கு காரியங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் இருக்கிறது. அவன் எல்லாவற்றைப் பற்றியும் அறிந்திருக்க விரும்புகிறான்.ஏனென்றால் அவன் வாழ்க்கையின் மேல் அது அவனுக்கு ஒரு அதிகாரத்தை அளிக்கிறது. ஆனால் தேவனுடனான ஒரு உறவுக்குள்ளாக நாம் பிரவேசிக்கும் போது, கட்டுப்படுத்துவதை விட்டு விட்டு நம் வழிகளை அவர் நடத்த அவரை நம்ப வேண்டும். அநேகர் தேவனிடமிருந்து உதவியை பெற்றுக் கொள்ளாமல் அதை செய்ய மாட்டோம். எனவே தேவன் நமக்கு உதவுகிறார். நம்மால் கண்டறிய முடியாத சூழ்நிலைக்குள்ளே நாம் மாட்டிக் கொள்ள

அனுமதிக்கிறார். பின்னர் விடையை நாம் கண்டுபிடிக்க விரும்பும் போது அதை நமக்கு கொடுக்கிறதில்லை. வாழ்க்கை அநேக மர்மங்களால் நிறைந்திருக்கிறது. அவற்றை நாம் கையாளும் முறைகளெல்லாம் அளவிடக்கூடியதே. தேவனுடைய ஞானத்திற்குள்ளாக மட்டும் நிறைந்திருக்கும் காரியங்களைப் பற்றி அறிந்து கொள்ள முயன்று நாம் குழம்பி போகலாம் அல்லது விரக்தியடையலாம். அல்லது நம் வாழ்விலே என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள மற்றவர்களின் உள்நோக்கிற்காக அவர்கள் மனதை ஆராயலாம். சில சமயங்களிலே அது உதவினாலும் நம் குழப்பத்தை அதிகரிக்கும். சமாதானம் பெற்றுக் கொள்ள சிறந்த வழி தேவனை நம்ப கற்றுக் கொள்வதாகும். தேவனுக்கு நம்முடைய கனத்தைக் காண்பிக்கும் வழிகளுள் ஒன்று அவரை நம்புவது. அது கனத்தைக் காண்பிக்கிறது. நாம் அவர் வார்த்தையை நம்புகிறோம் என்றும் அவரது குணத்தை நம்புகிறோம் என்று அறிவிக்கிறது.

*சமாதானம் பெற துரிதமான பாதை தேவனை நம்பக்கற்றுக் கொள்வதே.*

வாழ்வின் எல்லா பதில்களையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தின் வேர் பயத்தின் ஆவியேயாகும். அடுத்து என்ன நடக்கப்போகிறது, எதிர்காலத்தில் காயங்களெல்லாம் எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்ள நாம் விரும்புகிறோம். எந்தவிதமான ஆச்சரியத்தையும் நாம் விரும்புவதில்லை. சந்தோஷமாக அனுபவிக்க இயலாத எதையும் நாம் விரும்புவதில்லை.

தேவன், உள் நோக்கை சில சமயங்களில் வெளிப்படுத்தினாலும் எல்லா நேரங்களிலும் அப்படிச் செய்வதில்லை. அவ்வாறு அவர் அதை அளிக்காத போது நம்பிக்கைப் பாதுகாப்பாக இருக்கிறது. நாம் தேவனை நம்பி பொறுமையாக இருக்கும் போது அவர் ஒரு போதும் நம்மைக் கைவிடுகிறதில்லை.

அறிந்து கொள்ளாமலிருத்தல் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. ஏதாவதொரு அர்த்தத்தை கண்டுபிடிக்க நம் மனம் தாவிக்கொண்டே

இருக்கிறது. ஆனால் நாம் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டோம் என்று நினைக்கும் போதோ நாம் இன்னும் தவறாக இருக்கக்கூடும். நம் வாழ்விலே எல்லாமே நன்றாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் நம் வாழ்க்கை அழகாக இருப்பதற்குப் பதிலாக குழப்பமாக இருக்கும் தருணங்களும் இருக்கிறது. யாருமே தாம் விரும்புகிறதை செய்கிறதில்லை. நாம் உணர்வதெல்லாம் விரக்தி மட்டுமே. என் வாழ்க்கையிலே அநேக சமயங்களிலே என்ன நடக்கப்போகிறதென்பதிலே என் எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறேன். பின்னர் அவை அப்படியாக நடக்காத போது ஏமாற்றமடைந்திருக்கிறேன்.

இத்தகைய சூழ்நிலைகள் நாம் கற்றுக் கொள்ளும் பாதையாக உபயோகிக்கப்படலாம். ஆனால் அது அவ்வாறு நடைபெற நாம் அமைதியாகி நம்முடைய எண்ணங்களிலே நாம் எங்கே தவறினோம் என்பதை தேவன் காட்டும் படி கேட்க வேண்டும். என்னைப் பொறுத்த வரை தேவன் என்ன விரும்புகிறார் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் என்ன நடக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அதற்கேற்ப திட்டமிட்டேன். "ஆண்டவரே இப்படியாகத்தான் நான் நடக்கும் படி விரும்புகிறேன். ஆனாலும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்று சொல்லுவதே நாம் நம் சூழ்நிலைகளைப் பற்றி எடுக்கக்கூடிய விசுவாசத்தின் படியாகும்.

என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலே, தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவராக, அவர் எனக்கு வெளிப்படுத்தினவற்றை நடைமுறை படுத்த என் தோழிகள் எனக்கு உதவுவார்கள். எனக்கு உதவி செய்வார்கள் என்று சில தோழிகளைத் தேர்ந்தெடுத்தேன். இதை நான் ஜெபிக்காமல் செய்தேன். இயேசு தம்முடைய சீஷர்களை தெரிந்தெடுத்த போது அதைச் செய்யும் முன் அவர் இரவு முழுவதும் ஜெபித்தார். (லூக்கா 6:12-13)

நான் தெரிந்தெடுத்தவர்கள் தேவனுடைய தெரிவு அல்ல. எனக்கு அதிகமான உணர்வு ரீதியான வேதனையளிக்கும் காரியமாக அது மாறிவிட்டது. அவர்கள் என்னைப் பற்றி வம்பு பேசினார்கள்.

பொய்யாய்ப் பேசினார்கள். தவறாக குற்றம் சாட்டினார்கள். என்னுடைய இலக்கை நான் தொடரும் முன்னர் என்னை தடம் புரளவே செய்து விட்டனர்.

நாம் யாருடன் பழக தெரிவு செய்கிறோம் என்பது அதிக முக்கியமானதாகும். நெருக்கமாக இணைக்கப்படுவதற்கு அது மிகவும் முக்கியமானதாகும். சாத்தான் அடிக்கடி மக்களை உபயோக்கிறான். கிறிஸ்தவர்களைக் கூட நம்மை பெலனிளக்கச் செய்ய உபயோகிப்பான். மக்கள் நேர்மையானவர்களாக இருக்கலாம், ஆனாலும் தவறானவர்களாக இருக்கலாம். முற்றிலும் தவறான காரியங்களை இந்த மக்கள் என்னைப் பற்றி தேவனிடமிருந்து கேட்பதாக நினைத்தனர். அவர்களின் பெருமையே அவர்களின் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று.

*நாம் எடுக்கும் ஒவ்வொரு முக்கியமான தீர்மானத்திற்கும் முன் ஜெபிக்க வேண்டும்.*

என் வாழ்விலே இந்த மாதிரியான அநேக சூழ்நிலைகளால், கடினமான முறையிலே நாம் எடுக்கும் முக்கியமான தேர்வுகளிலே ஜெபம் முன்னதாக செய்யப்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். நம்முடைய உலகம் எல்லாம் தேவனுக்குப் பிரீதியாக இருக்கிறதில்லை. திட்டமிட்ட பின் தேவன் உங்கள் திட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமென்ற தவற்றை செய்யாதீர்கள். முதலாவதாக ஜெபியுங்கள். பின்னர் உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நல்ல சித்தத்திற்குள்ளாக பரிசுத்த ஆவியானவர் உங்களை நடத்திச் செல்ல அனுமதியுங்கள்.

## அறிந்து கொள்ளாமலிருப்பதில் திருப்தியடைதல்

அப்போஸ்தலனாகிய பவுல் அதிகம் கற்றவர். ஆனாலும் தன்னுடைய

வாழ்விலே, ‘சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைத் தவிர வேறெதையும் உங்களிடத்திலிருந்து அறியாதிருக்க தீர்மானித்திருக்கிறேன்’ (1 கொரி 2:2) என்று சொல்லும் நிலைக்கு வந்தார். சுவிசேஷத்தை ஜனங்களுக்குச் கொடுக்கையிலே கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கும் இரட்சிப்பானது மர்மமானதாகவும் தேவனுடைய இரகசியமாகவும் இருக்கிறது என்று சொன்னார். ஆனாலும் அதை விளங்கிக்கொள்ள முயற்சிக்காமல் அதை நம்பத் தெரிந்து கொண்டார். எளிமையான சிறு பிள்ளையைப் போன்ற விசுவாசத்தின் பலன்களை அனுபவிக்க மறுக்கும் அநேகர் இருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையின் நுட்பங்களையும் அவர் மூலமாக கிடைக்கும் இரட்சிப்பையும் மனதளவில் அறிந்து கொள்ள விரும்புகின்றனர். ஆனால் அவை இருதயத்தால் மட்டுமே அறிந்து முடியும் மனதால் அல்ல.

நம் வாழ்விலே எந்தவொரு விடையளிக்கப்படாத கேள்விகள் இருக்குமேயென்றால் விசுவாசத்திற்கு அது தேவையில்லை. விசுவாசமானது விடைக்கான இடத்தை எடுத்துக் கொள்ளுகிறது என்று சொல்லலாம். நாம் வார்த்தையை அறிந்து கொள்ள நாட வேண்டும் தேவனை அறிந்து கொள்ளவும் அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளவும் நாட வேண்டும். அதற்கு பதிலாக நம்முடைய சூழ்நிலைக்கான பதிலை நாம் தேடிக்கொண்டிருக்கக்கூடாது. நாம் ஏதாவது பிரச்சினையை சந்திக்கும் போது நாம் என்ன செய்யப்போகிறோம் என்று மக்கள் கேட்கும் போது நாம் எனக்கு ‘தெரியாது’ என்று சொல்லிவிடலாம். நீங்கள் எல்லாவற்றைப் பற்றியும் ஜெபிக்கின்றீர்கள் ஏனென்றால் ஏற்ற வேளையிலே தேவன் உங்களுக்குத் திசைகாட்டுவாரென்று உங்கள் இருதயத்திலே உறுதியாக நம்புகிறீர்களென்றும் அவர்களிடம் சொல்லுங்கள். சற்று அதிகமான நம்பிக்கையயே வெளிப்படுத்துவீர்களென்றாலும் உங்கள் விசுவாசத்தை வார்த்தையாலே சொல்லுவது எப்போதுமே நல்லது. நாம் தேவனை நம்பத் தெரிந்து கொள்ளுவோமேயென்றால் நம் உணர்வுகளும் நம் தீர்மானத்தோடு இணைந்து கொள்ளும்.

நம் வாழ்விலே இருக்கும் மர்மங்களுக்கு விடைகளை நாடுவதில் நிச்சயம் எந்த தவறும் இல்லை. ஆனால் நாம் குழப்பமடைந்து விரக்தியடையும் போது நாம் நம் தேடலிலே அதிக தூரம் சென்று விட்டோம் என்பது அறிகுறியாகி விடுகிறது.

மக்கள் வாழ்விலே அதிகமான குழப்பங்களை அனுபவிக்கின்றனர். அவற்றில் பெரும்பான்மையானவை சமநிலையற்ற சூழ்நிலையினாலும் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியத்தாலுமே ஏற்படுகிறது. உங்களுடைய தற்போதைய சூழ்நிலையைப் பற்றி எவ்வித விளங்கிக்கொள்ளுதலும் இல்லாமல் இருட்டில் நீங்கள் இருக்கும் போது தேவன் பேரிலே நீங்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கின்றீர்களா? இத்தகைய விசுவாசத்தைதான் தேவன் எதிர்பார்க்கின்றார். நாம் இருளிலே இருக்கும் போது அல்லது அவருடைய கிருபையையோ பிரசன்னத்தையோ உணராமல் வாழ்க்கை மர்மமாக இருக்கும் போது அவரை நாம் நம்ப வேண்டுமென்று விரும்புகிறார். இத்தகைய சமயங்கள் நாம் நம் விசுவாசத்திலே வளருவதற்கு உதவுவதால் அவை நிச்சயமாகவே நன்மையானவையே. வேதாகமம் அற்ப விசுவாசம், பெரிய விசுவசத்தைப் பற்றி பேசுகின்றது. கடினமான சமயங்களில் தேவனை நம்புவதின் மூலம் பெரிய விசுவாசத்தை நாம் வளர்த்துக் கொள்ள முயலும் போது அற்ப காரியங்களால் நாம் ஏன் திருப்தியடைய வேண்டும்.

## “அறிந்து கொள்ள வேண்டும்”

சமீபத்திலே ஒரு திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே இரண்டு துப்பறியும் நிபுணர்கள் இரண்டு அளவிலான தெளிவோடு காணப்பட்டனர். ஒருவர் அந்த காரியத்தைப் பற்றி அதிகமாக அறிந்தவராகவும், மறவரோ அதைப்பற்றி அறியாதவராகவும் இருந்தனர். அவன் விபரங்களை தெரிவிக்கும் படி கேட்ட போது “அறிந்து கொள்ள தேவை என்றால் கொடுக்கப்படும்” என்றனர். வேறுவிதமாக கூற வேண்டுமென்றால் அந்த காரியத்தில்

ஈடுபட்டிருபவர்களுக்கு மட்டும் தான் அதைப்பற்றிய முழுவிபரங்களும் கொடுக்கப்படும் என்பதே.

தேவனும் நம்முடன் அத்தகைய முறையிலே செயல்படுகிறாரென்று நான் நினைக்கிறேன். எந்த காரியத்தையாவது நாம் அறிந்து கொள்ள வேண்டுமேயானால் அவர் நமக்கு சொல்லுவார் என்பதிலே நாம் உறுதியாக இருக்கலாம். அல்லது நமக்கு அறிந்து கொள்ளத் தேவை இல்லையென்றோ அதைப் பற்றி அறிந்து கொள்ளாமல் இருப்பது நல்லது என்றோ அவர் நம்மிடம் சொல்ல மாட்டார். அதனால் நாம் திருப்தியடைய வேண்டும் அல்லது திருப்தியாக இருக்க முடியும்.

சில காரியங்களைப் பற்றின அறிவானது நம் ஆத்துமாவை பாரப்படுத்தி நம்மைக் கவலைக்குள்ளக்கிவிடும். நம்மில் எவருக்குமே அது தேவைப்படாது. அத்தகைய சமயங்களிலே அறிந்திராமலிருப்பது அதிக சந்தோஷத்தைத் தரக்கூடியதாக இருக்கும். கடந்த வாரத்திலே ஒருவருடன் நான் தொலைபேசியிலே பேசிக்கொண்டிருந்தேன். எங்கள் இருவருக்கும் தெரிந்திருந்தவரின் வாழ்வில் இருந்த ஒழுக்கக்கேடைப்பற்றி சுவாரஸ்யமான கருத்து எழுந்தது. நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம் அதே சமயம் பிறரைப் பற்றி பேசவதே கூடாதென்று கவனமாக இருந்தோம். என் தோழி அந்த சூழ்நிலையைப் பற்றி ஒரு கேள்வியைக் கேட்டாள். அதற்கு பதிலளிக்க வேண்டுமா என்பதைப் பற்றி யோசிக்கும் முன்பே அவள் ‘விட்டு விடு’ அதைப்பற்றி அறிந்து கொள்ள நான் விரும்பவில்லை என்றாள்.

அது ஆவிக்குரிய முதிர்ச்சியைக் காட்டுகின்றது. இது நம்மனைவருக்கும் ஒரு மாதிரியாக இருக்கக்கூடும் ஆர்வத்தினிமித்தம் ஏதாவது அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவதற்கும் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தி அறிந்து கொள்ள விரும்புவதற்கும் அல்லது உண்மையாகவே அறிந்து கொள்ள அவசியம் இருக்கிறதென்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைப் பற்றி அறிந்து கொள்ளும் முயற்சியிலே பல கேள்விகளைக் கேட்டு நாம் குழப்பமடைந்து விரக்தியடைவதற்குப் பதிலாக தேவன் நமக்குத்

தேவை ஏற்பட்டால் அறிந்து கொள்ள செய்வாரென்று நாம் ஏன் அவரை நம்பக்கூடாது?

வேதத்திலே தேவனோடு வழக்காடும் ப்டி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தேவன் வெளிப்படுத்த சித்தமில்லாமலிருக்கும் காரியங்களைக் கண்டுபிடிக்க முயலுவதைப்பற்றியதல்ல. தேவனுடைய சித்தத்திற்குட்பட்டும் அப்பாற்பட்டும் பகுத்தறிவதைப்பற்றித் தெரிந்துகொள்ள இவ்விரண்டு வேதாகம எடுத்துக்காட்டுகள் நமக்கு உதவுகின்றன.

> வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.
> ஏசாயா 1:18

> உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,
> நீதி 3:5

தேவனிடத்தில் கேள்விகளைக் கேட்பதில் தவறில்லை. அவர் நம்மோடு வழக்காட விரும்புகிறார். ஆனால் அது ஆரோக்கியம் இல்லாமல் இருக்கும் படி செய்து விடாதீர். உங்கள் வாழ்விலே சமாதானமே நாடுவராக இருக்கட்டும். (கொலோ 3:15). வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமானால், உங்கள் கேள்விகளிலே தேவன் பிரியப்படுகிறாரா என்பதை சமாதானமே நிரூபிக்கட்டும்.

## வழியே இல்லாதது போன்று தோன்றும் போது

நம் பிரச்சினைகளுக்குத் தீர்வே இல்லையென்று உறுதியாக நம்புவுவோமேயானால் பயம் நம்மை பற்றிக் கொள்ளும். இதற்கு எந்த வழியும் இல்லை என்று எவ்வளவு முறை பிறர்

சொல்லக்கேட்டிருக்கிறோம். நமக்கு வழி தெரியாமல் இருப்பதால் வழியே இல்லை என்று அர்த்தமாகாது. இயேசு தம்மைப் பற்றி “நானே வழி” என்றார். (யோவான் 14:6).

*நமக்கு வழி தெரியாமல் இருப்பதால் வழியே இல்லை என்று அர்த்தமாகாது.*

ஏசாயா, தேவன் குருடரை அவர்கள் அறியாத பாதையில் நடத்துவாரென்று சொல்லுகிறார். (ஏசாயா 42:16) தேவன் நம்மை இருளிலே நடத்தக்கூடியவாராக இருக்கிறார். ஏனென்றால் இருளும் ஒளியும் அவருக்குச் சமம். நடந்து கொண்டிருப்பவைகளைப்பற்றி அறியாமல் நாம் இருளிலே இருக்கலாம். ஆனால் தேவன் வெளிச்சமாக இருக்கிறார். அவர் ஒருபோதும் இருளிலே வாசம் செய்கிறதில்லை. சங்கீதக்காரனாகிய தாவீது தேவனை நம்புவதைப்பற்றி எழுதுகையிலே இவ்வாறு எழுதுகிறார்.

> நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,
>
> அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.
>
> இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.
>
> உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.
>
> சங்கீதம் 139:9-12

நமக்கு நீண்ட கால சோதனையோ அல்லது மிகவும் கடினமான சூழ்நிலையோ வரும் போது நாம் சோர்வுற்று நம் வாழ்விலே இதுவே நிரந்தரமான சூழ்நிலையாக இருந்து விடுமோ என்று நினைக்கத்தொடங்குகிறோம். *“எனக்குத் தெரிந்த அனைத்தையும்*

*செய்து விட்டேன், எதுவும் நடக்கவில்லை. இது இப்படியே நிரந்தரமாகத்தான் இருக்கும்*" என்று நினைக்கிறோம். ஆனால் தேவனோ வேறு கதையை சொல்லுகிறார். அவர் சொல்லுவதாவது

> முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.
>
> இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.
>
> ஏசாயா 43:18-19

இந்த வேதவாக்கியங்களெல்லாம் பல்வேறு தருணங்களிலே எனக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. அது உங்களுக்கும் அப்படியே செய்ய ஜெபிக்கின்றேன்.

நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது '*தேவன் ஒரு வழியை ஆயத்தம் செய்வார்*' என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்விலே எந்த வழியும் இல்லை என்று தோன்றிய போது அவர் ஏற்படுத்திய வழியைப் பற்றி யோசியுங்கள். அப்படி அவர் மீண்டுமாக செய்வார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவருடைய வழிகள் நம்முடைய வழிகளைப் போன்றதல்ல. ஆனால் ஏசாயா சொன்னதைப் போன்று 'அவர் வனாந்திரத்திலேயும் வழியை ஆயத்தப்படுத்துவார்' நம் வாழ்வின் பாலைவனமான சமயங்களிலும் அவரால் ஆறுகளை ஏற்படுத்த முடியும்.

அவர் வழியை ஏற்படுத்துவாரென்று நாம் தீர்மானித்தாலும், அது மற்றொரு கேள்விக்குள்ளாக நம்மை வழி நடத்தும். 'அவர் அதை எப்போது செய்வார்?' தேவனுக்கு மட்டும் தான் அது தெரியும். அனேகந்தரம் நாம் அவரிடம் அதைப்பற்றி கேட்டாலும் நமக்கு பதில் கொடுக்க அவர் விருப்பம் காட்டுவதில்லை. ஏனென்றால் நாம் அவரை நம்ப வேண்டுமென்று விரும்புகிறார்.

அத்தியாயம் 15

# தேவனுடைய காத்திருக்கும் அறையிலே (பகுதி 1)

*"இரண்டு மிக வலிய போர்வீரர்கள் பொறுமையும் காலமும் தான்"*

- லியோ டால்ஸ்டாய்

இரண்டு மிக சக்தி வாய்ந்த வீரர்கள் பொறுமையாக இருக்கிறார்கள். நீங்கள் என்னைப் போன்று இருப்பீர்களென்றால் வாழ்க்கையிலே இருக்கும் பெரிய சவால்களிலே பொறுமையாக இருக்கக் கற்று கொள்வது தான். ஒரு மருத்துவ மனையின் காத்திருக்கும் அறையிலே, நண்பர்கள், உறவினர்களாக அன்புக்குறிரவர் ஒருவரின் அறுவை சிகிச்சைக்குப் பின் மருத்துவர் சொல்லும் வார்த்தைகளுக்காக காத்திருந்த சந்தர்ப்பம் உங்களுக்கு உண்டா? அநேகர் எதிர்பார்ப்போடும் அவர்களின் முகபாவம் கவலை நிறைந்ததாகவும் காணப்படும். விளைவுகளைப் பற்றிய வார்த்தைக்காக காத்திருக்கின்றனர். ஆனால் அச்சமயம் அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் காத்துக் கொண்டேயிருக்கின்றனர். செய்தி நல்லதாக இருக்குமா கெட்டதாக இருக்குமா? எதிர்பார்ப்பதற்கும் மேல் அதிக நேரம் ஆகுமென்றால், அந்த காத்திருப்பானது மிகுந்த கவலையை அளிக்கக்கூடும்; அவர்களின் எண்ணங்கள் இருண்டதாகவும் எதிர்மறையானதாகவும் மாறிவிடக்கூடும். அதை விளங்கிக்கொள்ள முடியும்.

பெரிய கேள்வி என்னவெனில் தேவனின் காத்திருக்கும் அறையிலே இருக்கையிலே எப்படி இருக்கின்றோம்? நாம்

கவலையுடன் இருக்கின்றோமா அல்லது நற்செய்தியை எதிர்பார்த்து பொறுமையுடன் காத்திருக்கிறோமா? நாம் நினைத்ததற்கு மேல் நம் காத்திருப்பு இருக்குமேயென்றால் நாம் நேர்மறையாகவும் எதிர்பார்ப்புடனும் இருக்கின்றோமா? நாம் தேவனை நம்புகிறோம் என்று சொல்லுகிறோம், ஆனால் அவரை நம்புவதால் விளையும் கனியை நாம் காட்டுகின்றோமா?

## கடவுளே எப்போதும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது

தேவன் எப்போதுமே காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். தேவன் எந்தக் காரியத்தைப் பற்றியும் அவசரப்படுகிறதில்லை. நாமோ எப்போதுமே எல்லாவற்றைப் பற்றியும் அவசரப்படுகிறோம். தேவன் வழியை ஏற்படுத்துவார் என்பதில் திருப்தியடைவதில்லை. அவர் எப்போது வழியை ஏற்படுத்துவார் என்று அறிந்து கொள்ள விரும்புகிறோம். என்ன செய்யப்பட வேண்டுமோ அதை ஏற்ற வேளையிலே செய்வார் என்று வேதம் வாக்களிக்கிறது. ஆனால் ஏற்ற சமயம் எப்போது? அது எவ்வளவு காலம் என்பதை அவர் நமக்கு தெரிவிப்பதில்லை. ஆயினும் நாம் அது அவ்வளவு நீண்டகாலமாக இருக்காது என்பதைப்பற்றி உறுதியாக இருக்கலாம். நம்மால் எது முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அதற்கு மேல் அவர் நம்மை விட மாட்டார்.

> பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்.
>
> 2 பேதுரு 3:8

தேவன் காரியங்களை நித்தியத்தின் வெளிச்சத்திலே காண்கிறார். ஆதலால் அவர் அவசரப்படுவதில்லை. அவர் முடிவை ஆரம்பத்திலேயே காண்கிறார். நாம் எங்கே சொல்கிறோமோ அங்கே

அவர் ஏற்கனவே இருந்திருக்கிறார். என்ன நடக்கும் என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். அவர் என்ன செய்கிறாரோ அதற்கான சரியான காரணத்தைக் கொண்டிருக்கிறார். அதை நம்ப நாம் கற்றுக் கொள்வது நமக்கு மிகவும் உதவுகிறது. நாம் சில காரியங்களைக் கையாள முதிர்ச்சியடையும் முன் அவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறோம். ஆனால் தேவன் சரியான நேரத்தை அறிந்திருக்கிறார். சரியான நேரம் வரை அவர் நமக்கு எதையும் கொடுக்க மாட்டார் என்று நான் உறுதியாக சொல்ல முடியும். தேவன் ஒருவேளை 'காத்திரு' என்றோ 'இல்லை' என்றோ சொல்லுவார். ஆனாலும் அவர் எதைத் தீர்மானித்தாலும் அது சரியான நேரத்திலே செய்யப்பட்ட சரியான காரியமாகும். நம் வாழ்க்கையைப் பற்றியும் அவருடனான நம்முடைய தொடர்பைப்பற்றியும் தேவன் செய்யும் அனைத்தும் நம் நன்மைக்கே!

கலா 5:22-ன் படி தேவனுடைய பிள்ளைகளாக நமக்குள்ளே பொறுமையின் கனி இருக்கிறது. ஆனால் அது வெளிப்படுவதற்கு முன் தேவனோடு பல வருடங்கள் நடக்க வேண்டியிருக்கிறது. அது நமக்குள்ளே ஒரு விதையாக விதைக்கப்பட்டிருக்கிறது. அது வளர்ந்து வலிமையடைய நம் அனுபவமும் தேவைப்படுகிறது.

மூல வார்த்தையாகிய கிரேக்க பதத்திலே பொறுமை என்பதற்கு 'கீழே தங்கியிருத்தல்' என்று அர்த்தமாகிறது. வேறு வார்த்தைகளிலே, ஏதோவொன்றோடு வேதனைப்பட்டாலும் அசவுகரியமாக இருந்தாலும், இணைந்திருப்பதாகும். காரியங்கள் முடியும் வரை இருப்பதாகும். நம்மில் அநேகர் பாடுகளிலிருந்து விலகி ஓட விரும்புகிறோம். கஷ்டங்களை எவ்வளவு காலம் என்பதை அறியாமலே சகிக்க வேண்டுமென்பது மிகவும் கடினமான காரியம். நாம் விரும்பும் நேரத்திலே விரும்பும் பதிலை தேவன் எப்போதும் கொடுக்கிறதில்லை. ஏனென்றால் அவர் நம்மை ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அர்ப்பணித்திருக்கிறார். நாம் அனுபவித்துக் கொண்டிருப்பதிலிருந்து உடனே விடுபடுவதை விட அதை அவர் அதிக முக்கியமானதாக கருதுகிறார்.

தேவனை நம்புவதைப் பற்றி நான் அதிகம் அறிந்து கொள்வதற்கு முன், தேவன் எனக்கு ஏதாவது செய்ய வேண்டியிருந்தும், அது அவருக்கு எளிதானதாக இருந்தும் அவர் அதைப் பற்றி ஒன்றும் செய்யாதிருப்பதைக் கண்ட போது அதிகமாக விரக்தியடைந்தேன். ஆனால் இப்போதோ என் சூழ்நிலைகளிலே எவ்வித மாற்றமும் ஏற்படாவிட்டாலும் தேவன் எனக்குள்ளே கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதை உணர்கிறேன். அவர் என் விசுவாசத்தை விரிவாக்கிக் கொண்டிருந்தார். அப்படிச் செய்வதின் மூலம் அவர் அதைப் பெருக்கி வலுப்படுத்திக் கொண்டிருந்தார். தேவனை நம்புவது எப்படி என்பதை நான் அறிந்திராததாலே காத்திருக்க வேண்டிய நேரத்தில் நிர்பந்தமுள்ளவளாக இருந்தேன். தேவனை நம்புவது எப்படி என்பதை அறிந்திருந்தால் என் காத்திருக்கலானது அவ்வளவு நீண்டதாக இருந்திருக்காது.

நாம் தேவனோடு அதிகமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள நம் வாழ்க்கையானது அதிக எளிமையானதாக மாறி விடுகிறது. அவர் பொதுவாக சீக்கிரமாக இல்லாவிட்டாலும் தாமதமாக இருக்கிறதில்லை. பொறுமையானது காத்திருக்கும் திறன் மட்டுமல்ல காத்திருக்கும் போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதைப் பற்றியதும் தான். வாழ்க்கையிலே அநேக காரியங்களுக்காக நாம் காத்திருக்கிறோம் ஆனால் பொறுமையாக காத்திருப்பது என்பதைத் தான் தேவன் விரும்புகிறார். தேவனுடைய குணத்திலே தவறு இல்லை, அவர் நல்லவர். நாம் நன்மையடைய அவ்வாறு செய்கிறார் என்று நம்பினால் ஒழிய பொறுமையாக காத்திருப்பது கூடாத காரியம். ஏதோவொரு காரியம் எனக்கு நன்றாக இருக்கிறது என்று நான் உணராததால் அது நல்ல காரியம் இல்லை என்றாகாது. நான் நினைத்தது தவறு என்பதை நாளடைவிலே பார்ப்பேன். காலப்போக்கிலே அது எனக்கு மிக நன்மையாக இருந்தது என்றும் பார்ப்பேன்.

## அது ஒருபோதும் தாமதமாக இல்லை

மார்த்தாளும் மரியாளும் தங்கள் சகோதரன் சுகவீனமாக இருக்கிறான் என்ற செய்தியை இயேசுவுக்கு அனுப்பினர். வேதம், இயேசு மார்த்தாள்

மரியாள் லாசருவை நேசித்தார் என்றும் அவர்கள் அவருடைய அன்பான நண்பர்கள் என்று சொல்லுகிறது. அப்படியெல்லாம் சொன்ன பின்னரும், லாசரு சுகவீனமாக இருக்கிறான் என்று கேள்விப்பட்டும் அவனைப் பார்க்க செல்லுமுன் அவர் எங்கேயிருந்தாரோ அதே இடத்திலே இன்னும் இரண்டு நாட்கள் தங்கினார். (யோவான் 11:3-6) இயேசு வந்த போது லாசரு மரித்து கல்லறையிலே நான்கு நாட்கள் இருந்திருந்தான். பொதுவான கேள்வி என்னவாக இருந்திருக்குமேயென்றால் அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஏன் காத்திருந்தார்?

அவர் காத்திருந்தார் ஏனென்றால் அவர் அவ்விடம் செல்லும் போது இனி ஒன்றும் செய்ய முடியாது என்று தோன்றும் அளவிற்கு அந்த சூழ்நிலை மாற வேண்டும். இயேசு அங்கே சென்றடைந்த போது மார்த்தாள் 'ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்றாள். (யோவான் 11:21) "இயேசுவே நீர் விரும்பியிருந்தால் இது நடைபெறாமல் தடுத்திருக்கலாம்" என்று நம் சூழ்நிலைகளைப் பற்றி அடிக்கடி நினைக்கிறோம், சொல்லியுமிருக்கிறோம். மார்த்தாளைப் போன்றே நாமும் ஏமாற்றமடைந்திருக்கிறோம். சுலபமாக தேவனையடைய தடுக்கப்பட்டிருக்கிறோம் ஆனால் அனுமதிக்கப்பட்டிருக்கும் காரியத்தைப் பற்றி விளங்கிக் கொள்ளும் குறைபாட்டால் அப்படி சொல்லுகிறோம்.

லாசருவின் கதையைப் பற்றி நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்க்ளென்றால், இயேசு, அவன் பல நாட்க்ளுக்கு முன் மரித்திருப்பதை ஒரு தடையாக பார்க்கவில்லை. உண்மையாகவே அவர் அந்த சூழ்நிலை இயலாததொன்றாகக் காணப்படும்படி விரும்பினார். ஏனென்றால் லாசருவின் நண்பர்களும் உறவினர்களும், நாமும் கூட தேவனால் எல்லாம் கூடும் என்றும் என்ன செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்ய அவருக்கு எதுவும் தடையில்லை என்பதைக் கற்றுக்கொள்ள விரும்பினார். இயேசு லாசருவை மரணத்தினின்று எழுப்பினார். அதைப் பார்த்த பின் அனைவரும் சந்தோஷமடைந்திருப்பர். நான் தனிப்பட்ட முறையிலே

மரணத்திலிருந்து எழுந்தவரைப் பார்த்ததில்லை. தேவன் நம் வாழ்விலே அதிசயங்களைச் செய்ய இந்த கதை நம்மை உற்சாகப்படுத்தும்.

தேவன் நம் விருப்பம் போல் செய்ய வேண்டும் என்று எண்ணுவதற்கு பதிலாக, அவருடைய வழியே நம் வழியைக் காட்டிலும் எப்போதும் சிறந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய ஞானத்திற்குள்ளாக அநேக மர்மங்கள் அடங்கியிருக்கிறது. காரியங்கள் எல்லாம் இப்பொழுது நடப்பது போல் ஏன் நடக்கிறது என்பதை எப்போதுமே விளங்கிக் கொள்ள மாட்டோம், ஆனால் தேவனை நம்பும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். அது வேதனையைச் சகிக்கும் படி செய்கிறது

## பொறுமை வல்லமையுள்ளது

நாம் விரும்பும் காரியத்தை நாம் பெற்றுக் கொள்ள காத்திருக்கும் சமயத்திலே நம் வாழ்வை நாம் அனுபவிக்க பொறுமையானது நமக்கு வல்லமையை அளிக்கிறது. நம்மால் மாற்ற இயலாத காரியத்தைப் பற்றி நிர்பந்தமாக இருப்பதின் மூலம் நிறைய நேரம் விரயமாகிறது. சுவாரஸ்சியமற்ற காரியங்களை நம்மால் மாற்ற இயலுமென்றால், அப்படிச் செய்யலாம். ஆனால் நம்மால் மாற்ற இயலாதென்றால் பின் நாம் தேவனை நம்ப வேண்டும். அவர் என்ன செய்யப் போகிறாரென்பதைக் காண காத்திருக்கையிலே நிர்பந்தமாக இருக்கக் கூடாதென்று தீர்மானம் செய்ய வேண்டும். நாம் விரயமாக்கு ஒவ்வொரு நாளையும் நம்மால் திரும்ப பெற்றுக் கொள்ள இயலாது. ஒரு புத்திசாலியானவன் இவ்வுலகிலே தேவன் கொடுத்திருக்கும் எந்த நேரத்தையும் விரயமாக்குகிறதில்லை.

> *வாழ்க்கையின் பெரும் பகுதி, நம்மால் மாற்ற இயலாத காரியங்களைப் பற்றி நிர்பந்தமாக இருந்தே விரயமாகிற்து.*

விரக்தி, ஏமாற்றம், நிர்பந்தம் ஒரு கெட்ட சூழ்நிலையை நன்மையாக மாற்றினதில்லை. ஆனால் அது வியாதியையும், குறுகிய ஆயுளையும், பாழாக்கப்பட்ட உறவுகளையுமே உண்டு பண்ணியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு ஒரு பொறுமையுள்ள மனிதன். 'சம்பூரணமானவனாகவும், வளர்ச்சியடைந்தவனாகவும், ஒன்றிலும் குறைவற்றவனாகவும் இருக்கிறான் என்று கூறுகிறார். (யாக் 1:4). வாவ்! அது எனக்கு நன்றாக காணப்படுகிறது. உங்களுக்கும் அப்படியே செய்யும். அந்த வேத வாக்கியத்தை வாசிக்கும் போது அனேகந்தரம் 'நான் பொறுமையாக இருந்திருக்கலாம்' என்று நினைத்திருக்கிறேன். ஆனாலும் இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை. நாம் பொறுமையின்றி இருக்கலாம். அதற்கு ஒரு வழியிருக்கிறது. அது சரியான எண்ணங்களின் மூலம் ஏற்படுகிறது.

நான் சந்தோஷமாக இருக்க, நான் என்ன விரும்புகிறேனோ அதை பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைப்பேனேயென்றால், பின் என் சொந்த நினைவுகளே என்னை நிர்பந்தப்படுத்தும். ஆனால் நான் என்னுடைய நினைவுகளை தேவனை நம்புவதால் நிறைக்க வேண்டும். நான் அவருடைய இளைப்பாறுதலுக்குள் சென்று காத்துக் கொண்டிருக்கும் போது என் வாழ்க்கையை அனுபவிப்பேன் என்று நினைவுகளை மாற்றிக் கொள்ள வேண்டும். நம்முடைய பிரச்சினைகளைப் பற்றி தேவன் என்னவெல்லாம் செய்யப்போகிறாரோ அவையெல்லாம் நம்முடைய பொறுமையினாலே துரிதமாக்கப்படுவதில்லை. தேவன் நம் பட்சத்திலே கிரியை செய்ய எவ்வளவு காலம் நாம் காத்திருக்க வேண்டியிருந்தாலும் நாம் காத்துக் கொண்டிருக்கும் போது நம்மை சந்தோஷமாக வைத்துக் கொள்ளும் வல்லமை பொறுமைக்கு உண்டு.

ஒன்றுமே நடக்கவில்லை என்று நாம் நினைக்கும் போது ஏதோவொன்று எப்போதுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு மரம் எப்படி வளர்கிறது என்பதை கவனியுங்கள். அது வளர்கிறதை நம்மால் பார்க்க இயலாது. ஆனால் அது வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அது உயரமாகிறது. அதின் கிளைகள் விரிவடைகிறது. மெதுவாக வளரும் மரமே நல்ல சிறந்த கனிகளைக்

கொடுக்கும். அதே சூத்திரம் நமக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். நம் கிளைகள் விருத்தியடைவதை நம்மால் காணக்கூடாமல் இருக்கலாம், ஆனால் நம் வேர்கள் ஆழமாக செல்கிறது. என்றாவது ஒரு நாள் நாம் நிச்சயமாகவே நல்ல கனிகளைக் கொடுப்போம். நாம் காத்திருந்த சமயத்திலே வளர்ந்து கொண்டேயிருந்தோம் என்பதை உணர்வோம்.

## மறந்து விடு!

நாம் எதையாவது மிகவும் அருகிலிருந்து கவனிப்போமேயென்றால், அதின் வளர்ச்சியை நம்மால் கவனிக்க இயலாது. ஆனால் சிறிது காலம் தூர இருந்து விட்டு பின்னர் திரும்பி வந்து பார்க்கும் போது அதைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுவோம். நாங்கள் விற்க வேண்டிய நிலம் ஒன்று எங்களுக்கு இருந்தது. அது விற்பனைக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்தும் எதுவும் நடைபெறவில்லை.அதை எங்களால் விற்க இயலாமல் மட்டும் இல்லை, அதை எவரும் பார்க்கக்கூட இல்லை. மூன்று ஆண்டுகளில் ஒருவர் கூட அதைக் கேட்கவில்லை. அதை நான் விற்க வேண்டுமென்று விரும்பியதால் நான் மிகவும் விரக்தியடைந்தேன். அதைப் பற்றி அதிகமாக ஜெபித்தேன். அது விற்க்கப்பட்டதென்று விசுவாசத்தால் அறிக்கையும் செய்தேன். ஆனாலும் அது விற்கப்படாததால் ஒவ்வொரு நாளும் விரக்தியடைந்தேன். ஒரு நாள் காலையிலே நான் அதைப் பற்றி ஜெபிக்க தொடங்கிய போது தேவன் என் இருதயத்திலே பேசி சொன்னதாவது ‘*அதைப் பற்றி மறந்து விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்*’ என்றார்.உடனேயே அந்த ஒரு காரியத்தைப் பற்றி நான் அதிகமான நேரம் செலவழித்துக் கொண்டிருக்கிறேனென்றும் அதை என் எண்ணங்களிலிருந்து எடுத்து விட்டு அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறாரென்று நான் அவரை நம்ப வேண்டுமென்று சொல்லுகிறதையும் உணர்ந்து கொண்டேன்.

அந்த நிலத்தைப் பற்றிய நினைவுகள் என்னில் தோன்றும் போதெல்லாம் ‘தேவன் அதைப் பார்த்துக் கொள்வார்’ என்று

எண்ணினேன். இறுதியாக அதைப் பற்றி தேவனுடைய இளைப்பாறுதலுக்குள்ளாக சென்றேன். பின்னர் இரண்டு வாரங்களுக்குள் அந்த நிலம் விற்கப்பட்டது. அந்த மூன்று வருடங்கள் நான் காத்துக் கொண்டிருந்த போது நான் பொறுமையாக இருந்தேன் என்று சொல்லத்தான் விரும்புகிறேன். ஆனால் உண்மையென்னவெனில் நான் அப்படி இல்லை. அது அவ்வளவு காலம் எடுத்துக் கொள்வதற்கு என் பொறுமையின்மையும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். நான் தேவனுக்காக காத்திருக்கின்றோம் என்று அனேக வேளையிலே நினைக்கின்றோம், ஆனால் உண்மையிலேயே அவர் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறார்!

நம்முடைய பொறுமையின்மைக்கான முக்கிய காரணம் நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ள மாட்டோம் என பயமேயாகும். ஆனால் நாம் நம்முடைய எண்ணங்களை மாற்றிக் கொள்ள இயலும். அது நமக்கு மிகுந்த பலனளிக்கும் என்பதை மீண்டும் ஒருமுறை சொல்லிக் கொள்கிறேன். ‘ஒன்றும் நடக்கவில்லை என்று நினைப்பதற்கு பதிலாக, எதுவும் நடப்பது போல் தோன்றவில்லை ஆனால் தேவன் கிரியை செய்கிறாரென்று நான் நம்புகிறேன்!’ என்று சொல்லலாம்.

கடந்த காலத்திலே நடந்த அனைத்தையும், இப்போது நடந்து கொண்டிருப்பதையும் எதிர்காலத்தில் நடப்பவற்றையும் தேவன் அறிந்திருக்கிறார். அவை அனைத்தையும் அவர் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். அவர் அவசரப்படுவதும் இல்லை, பொறுமையின்றி இருப்பதும் இல்லை. நமக்கு நம் பதில் எப்படி எப்போது கிடைக்கும் என்பதை அறியாததாலேயே பொறுமையின்மை ஏற்படுகிறது. குறைவான விபரங்கள் பொறுமையின்மையை ஏற்படுத்தும். ஆனால் தேவனுடைய வார்த்தையும் அனுபவமும் சொல்வதென்னவெனில் அவருடைய நேரம் சரியானதென்றும் நாம் அதிகமாக வெறுக்கும் காத்திருப்பானது நம்மில் நன்மையான காரியங்களையே நடப்பிக்கும் என்பதே.

வேதத்திலே தேவனுடைய மனுஷர்களின் கதைகளை வாசிக்கின்றோம். நம்மில் அநேகர் அவர்களுடைய சாட்சி நம்முடையதாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்பியும் இருக்கிறோம். நம்மில் அநேகர் அவர்களின் அனுபவங்கள் நம்முடையதாக இருக்க வேண்டுமென்றும் குறைந்த பட்சமாக அவர்கள் ரசிக்கப்பட்டதைப் போன்று நாமும் ரசிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறோம். உண்மையிலேயே அவர்கள் மகா பெரியவர்கள் ஆனால் அவர்கள் அனைவரும் தேவனுடைய காத்திருக்கும் அறையிலே காத்திருந்தனர். மோசே வனாந்திரத்திலே 40 ஆண்டுகள் காத்திருந்தான். தாவீது ராஜாவாக முடிசூட்டப்பட்ட 20 ஆண்டுகள் காத்திருந்தான். அதிலே 15 ஆண்டுகள் சவுல் தன்னை கொன்று விடாமலிருக்க குகைகளிலே ஒளிந்து கொண்டிருந்தான். யோசேப்பு அவனுடைய விடுதலைக்காக 13 ஆண்டுகள் காத்திருந்தான். அதில் பத்து வருடங்களை சிறைச்சாலையிலே கழித்தான். தேவன் வாக்குப்பண்ணின குழந்தையைப் பெற்றுக் கொள்ளுமுன் ஆபிரகாம் இருபது ஆண்டுகள் காத்திருந்தான். நீங்களும் நானும் தேவனுடைய காத்திருக்கும் அறையிலே காத்திருப்போமேயென்றால், பிறர் படித்து ரசிக்கும் படியான ஒரு நல்ல சாட்சியை ஒரு நாள் நாமும் பெற்றிருப்போம்!

அத்தியாயம் 16

# தேவனின் காத்திருக்கும் அறை (பகுதி 2)

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

சங்கீதம் 27:14

தேவனுக்குக் காத்திருப்பது என்பதின் உண்மையான அர்த்தத்தை மக்கள் தவறாக புரிந்து கொள்ளுகிறார்கள். இது சாதாரணமாக நடப்பது தான், ஒன்றுமே செய்யாமலிருப்பது. நம்மில் அநேகருக்கு மிகவும் கடினமானது, தேவனுக்குக் காத்திருப்பது என்பதை தவறான முறையில் பார்ப்போமேயானால், அதை ஒழுங்காக செய்வதற்கு தடை ஏற்படுகிறது.

ஆங்கிலத்தில் காத்திருக்குதல்' என்ற பதத்தின் மூல பதத்தை நாம் ஆழமாக படிப்போமென்றால் தேவனுக்காக காத்திருப்பதென்பது ஆவிக்குரிய ரீதியாக அதிக செயலாற்றும் தண்மையாகும். நம்முடைய சூழ்நிலைகளை மாற்ற முயலுவதிலிருந்து நாம் செயலாற்றாமலிருக்க வேண்டுமென்று தேவன் சொன்னாலும், நாம் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருக்கக்கூடாதென்று கூறுகிறதில்லை. அவர் எனக்கு செய்து கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றிய எதிர்பார்ப்போடிருக்கும் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்புவதோடு நம் வாழ்விலே அவர் அற்புதமான காரியம் செய்வாரென்று எதிர்பார்க்கவும் நம்பிக்கையோடிருக்கவும் விரும்புகிறார். நாம் நம்முடைய சரீரக் கண்களால் அதைக் காணும்

முன் அவர் செய்வதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

தேவனுடைய காத்திருக்கும் அறையிலே நாம் இருக்கும் போது நம் எண்ணங்க்ளும் மனப்பான்மைகளும் நாம் அவற்றை சரியாக கையாளுவோமேயென்றால் நம்மை அதிக சந்தோசமாக வைத்திருக்கக்கூடும். இந்த இரண்டு வகையான எண்ணங்களை கவனியுங்கள். எது சந்தோஷத்தை உண்டாக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள்:

இத்தகைய எண்ணங்கள் இருக்கின்றன:

- எவ்வளவு காலம் காத்திருக்கின்றேன். இனியும் என்னால் காத்திருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை
- ஒன்றும் நடக்கவில்லை!
- தேவன் என்னை மறந்து விட்டாரென்று உணர்கிறேன்
- என்னுடைய பிரச்சினைக்கு எந்த தீர்வும் இல்லை என்று பயப்படுகிறேன்
- நான் விட்டுவிடப் போகிறேன்

மேலும் இத்தகைய எண்ணங்களும் இருக்கின்றன:

- தேவன் என்ன செய்யப் போகிறாரென்று பார்க்க ஆவலாக இருக்கிறேன்
- நான் இன்னும் எத்தகைய மாற்றத்தையும் காணா விட்டாலும், தேவன் கிரியை செய்து கொண்டிருக்கிறாரென்று நம்புகிறேன்.
- தேவன் என்னை நேசிக்கிறார். அவர் என் பிரச்சினைகளைப் பார்த்துக் கொள்வார்
- சங்கீதம் 139:9 தேவன் என்னைப் பற்றி எந்த நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறாரென்று சொல்லுவதால் அவர் என்னை மறந்துவிடவில்லை என்று அறிந்திருக்கிறேன் நான் பயத்தில் வாழ மாட்டேன்.
- நான் விட்டு விட மாட்டேன்!

அதிகமான சந்தோஷத்தை எவ்வித எண்ணங்கள் ஏற்படுத்தும் என்பது தெரிந்ததாகவே இருக்கிறது. அப்படியென்றால் நாம் ஏன் எதிர்மறையான எண்ணங்களையும் மனப்பான்மையையும் கொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுல் ரோமர் 8:6 ல் சொல்லப்பட்ட மாம்ச சிந்தையானது பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஏற்படும் உணர்வும் பகுத்தறிவுமேயாகும். அது பாவத்திற்குள்ளாக வழிநடத்தும் அறிவை சார்ந்திருக்கிறது. எனவே அதை நாம் பின்பற்றுவோமேயானால் நாம் நம் சூழ்நிலைகளின் தோற்றத்தைப் பொருத்துதான் தீர்மானங்களை எடுக்க வேண்டும். வேறு வழியே இல்லை. ஆனால் நாம் ஆவியின் சிந்தையோடு நினைப்போமேயென்றால், அதே வார்த்தையிலே கூறப்பட்டிருப்பதைப் போன்று நமக்கு ஜீவனும் நம் ஆத்துமாவிலே சமாதானமும் வாக்களிக்கப்படுகிறது. ஆவியின் சிந்தையோடு, நாம் தேவன் சிந்திப்பதைப் போன்று சிந்திக்கலாம். காரியங்கள் எவ்விதமாகத் தோன்றினாலும், நம் எண்ணங்கள் நம்பிக்கையால் நிறைந்திருக்கும்.

## நீங்கள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

நாம் மாம்ச சிந்தையோடோ அல்லது ஆவியின் சிந்தையோடே சிந்திக்க தெரிந்து கொள்ளுதல் நம்முடையதே. அநேகர், துக்கமே எல்லா எதிர்மறையான, நம்பிக்கையற்ற பயம் நிறந்த சந்தேகமான எண்ணங்களுக்கு ஊற்று என்ற உணர்வில்லாமல் இருக்கின்றனர். தேவனுடைய வார்த்தையோடு இணைந்து செல்லாத எல்லா தவறான எண்ணங்களை அவருடைய வார்த்தையோடு இணைந்து செல்வதை அவர்கள் விரும்பினால், தெரிந்து கொள்வதின் மூலம் தங்கள் சொந்த எண்ணங்களைக் கொண்டிருக்கலாம் என்பதை அறியாமலிருக்கின்றனர்.

2 கொரி 4 ம் அதிகாரத்திலே பவுல், தானும் பிற விசுவாசிகளும் அனுபவித்த அதிக கடினமான சூழ்நிலைகளைப் பற்றி விவரிக்கிறார்.

அவர் எல்லாவிதத்திலும் நெருக்கப்பட்டும் (அழுத்தப்பட்டு, கலக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு) ஒடுங்கிப்போகவில்லை. கலக்கமடையவில்லை, குழப்பமடையவில்லை, வழி காணாமல் இருக்கவில்லை, உபத்திரவப்பட்டும் கைவிடப்படவில்லை. பாதிக்கப்பட்டும் மிதிபட்டு அழிக்கப்படவில்லை என்று சொல்லுகிறார். ஏன் என்று அவர் சொல்லுகிறார்.

> ஏனெனில், காணப்படுகிறவைகள்
> அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ
> நித்தியமானவைகள்.
>
> 2 கொரி 4:18

பவுல் யாருக்கு ஊழியம் செய்தாரோ அவர்களெல்லாரும் மோசமான சூழ்நிலைகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் அதைப் பார்த்தனர் என்றும் நம்புகிறேன். ஆனாலும் அவர்கள் வேறொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இயேசுவையும், அவரது விடுதலை, வெற்றியைப்பற்றிய வாக்குத்தத்தையும் பார்த்தனர். அவர்கள் சரீரக் கண்களால் மட்டும் பார்க்கவில்லை ஆவிக்குரிய கண்களலும் பார்த்தனர். ஆனாலும் அவை உண்மையானவை என்று நம்பினர்.

நாம் நம்முடைய சரீரக் கண்களால் காண இயலாவிட்டாலும் தேவனை விசுவாசிக்கின்றோம். நாம் தேவ தூதர்களையும், புவியீர்ப்புத்தன்மையையும், மேகம் நிறைந்த நாட்களிலே சூரியனைக் காணாவிட்டாலும் இருக்கிறதென்று நாம் நம்புகிறோம். எனவே நாம் எந்த அடையாளத்தையும் இன்னும் காணாமல் இருக்கும் போது நாம் காத்துக் கொண்டிருக்கும் போது தேவன் கிரியை செய்து கொண்டிருக்கிறாரென்று ஏன் நாம் நம்பக்கூடாது? நாம் நம்மை அப்படியாக பழக்கப்படுத்தவில்லை. ஆனால் அதை மாற்ற முடியும்.

நம்முடைய உண்மையான வாழ்க்கை நமக்குள் தான் இருக்கிறது. நமக்குள்ளே நடைபெறுவது நம் சூழ்நிலைகளைக் காட்டிலும் மிகவும் முக்கியமானவை. நம்மைச் சுற்றிலும் நம் சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருப்பினும், நாம் ஒரு நல்ல மனப்பான்மையை

கொண்டிருந்து தேவனைச் சார்ந்து காத்திருப்போமேயென்றால் நாம் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அனுபவிக்கலாம். சிறைபட்டிருக்கும் ஒருவன் நேற்மறியாக நினைக்க கற்றுக் கொண்டு ஒரு நல்ல மனப்பான்மையைக் கொண்டிருக்கும்போது அவன் சிறைச்சாலைக்கு வெளியே விடுதலையோடிருந்தும் வெறுப்பினாலும் கசப்பினாலும் நிறைந்து ஒரு எதிர்மறையான மனப்பான்மையைக் கொண்டிருப்பவனை விடவும் விடுதலையாக இருக்கின்றான் என்று நான் நம்புகிறேன். எவனும் அவனுடைய வாழ்க்கையின் தரத்தை நல்ல காரியங்களை நினைப்பதாலும் நம்பிக்கையுடைய மனப்பான்மையைக் கொண்டிருப்பதாலும் உடனடியாக மேம்படுத்திக் கொள்ளலாம்.

நமக்கு நல்ல சூழ்நிலைகளும், நிறைய பணமும், நல்ல வேலையும் குடும்பமும் இருக்கலாம். ஆனாலும் நாம் நன்றி கெட்டவர்களாகவும், சுய நலமுள்ளவர்களாகவும் நம்மைக் காயப்படுத்தினவர்களின் மேல் கோபமுள்ளவர்களாகவும், வாழும் போது ஒரு நிர்பந்தமான வாழ்க்கையைத்தான் வாழ்கிறோம். ஆனால் நமக்கு ஒரு கடினமான சூழ்நிலை இருக்கலாம், தனியாக வாழலாம், பணப்பற்றாக்குறையுடன் இருக்கலாம். ஆனலும் நாம் நன்றியுள்ளவர்களாக பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கும் படி நம் நேரத்தை செலவிட முயற்சிக்கும் போது சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்றிருப்போம்.

உங்கள் எண்ணங்களும் மனப்பான்மைகளும் உங்களுக்கு சொந்தமே. யாருமே நீங்கள் விரும்பாவிட்டால் கெட்ட மனப்பான்மையைக் கொண்டிருக்க செய்ய முடியாது. யோசேப்பு, தேவன் அவனுக்கு விடுதலை கொடுக்கும் படி காத்திருந்த அந்த 13 வருடங்களிலே நம்பிக்கை மற்றும் நல்மனப்பான்மையைத்தவிர வேறெதுவும் கொண்டிருந்ததாக

> *“உங்கள் மனப்பான்மையும் எண்ணங்களும் உங்களுக்கு சொந்தமானது. நீங்கள் விரும்பாவிட்டால், யாரும் மோசமான ஒன்றை உருவாக்க முடியும்.*

வேதத்திலே எந்த சாட்சியும் இல்லை. அவனுக்கு அவனுடைய வாழ்க்கையைப் பற்றிய ஒரு கனவு இருந்தது. அது நனவாகும் என்ற நம்பிக்கையை அவனுடைய சூழ்நிலைகள் எவ்விதத்திலும் காண்பிக்காத போதும் அவன் அதை விட்டு விடவில்லை. (யோசேப்பின் கதையை ஆதி 37-50 வரை வாசிக்கலாம்)

ஆபிரகாமுக்கு ஒரு குமாரன் பிறப்பானென்று தேவன் வாக்களித்ததைப் பெற்றுக் கொள்ள 20 வருடங்கள் அவன் காத்திருந்தான். தேவனுடைய காத்திருக்கும் அறையிலே 20 வருடங்கள் காத்திருந்தான். அது நெடுங்காலமாகும்.

அதை விட்டு விடும் படி அவனுக்கு அனேக தருணங்கள் இருந்திருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். ஆனாலும், நம்ப அவனுக்கு எந்த காரணமும் இல்லாதிருந்தும் அவன் தன் கனவு நனவாகுமென்றும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் காண்பானென்றும் நம்பிக்கொண்டிருந்தான். அவனுடைய சொந்த சரீரத்தின் இயலாமையைப் பார்த்த போதும் நினைத்த போதும், சாராளின் மலட்டு கர்ப்பத்தைக் கண்ட போதும், எவ்வித அவிசுவாசமோ, நம்பிக்கையற்ற தன்மையோ அவனை உறுதியில்லாமலிருக்கச் செய்யவில்லை. அவன் தேவனுக்குத் துதியும் மகிமையும் செலுத்தின போது அவன் பெலவானாக மாறினான். துதி என்பது தேவனுடைய நன்மையைப் பற்றிய ஒரு வர்ணனை. எனவே ஆபிரகாம், தன் வாழ்னாள் முழுவதும் தேவன் அவனுக்குச் செய்தவற்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கலாம். அவன் தேவனுடைய காத்திருக்கும் அறையிலே இருந்த போது நல்ல காரியங்களைப் பற்றி நினைக்க அவன் எடுத்த தெரிந்து கொள்ளுதலானது அவனைப் பெலப்படுத்தியது (ரோமர் 4:18-21 பார்க்கவும்).

உங்கள் வாழ்விலே தற்போது நீங்கள் தேவனுடைய காத்திருக்கும் அறையிலே இருக்கின்றீர்களா? அங்கே நீங்கள் நீண்ட காலமாக இருக்கின்றீர்களா? நீங்கள் எதிர்பார்த்ததை விட அது அதிக காலம் எடுக்கிறதா? எப்படி நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள்

எண்ணங்கள் என்ன? மனப்பான்மை என்ன? எல்லா காரியங்களையும் நன்றாக செய்யும் தேவனுக்காகப் பொறுமையோடு காத்திருக்க உதவும் எண்ணங்களையும், மனப்பான்மைகளையும் தெரிந்து கொள்ள உங்களை வேண்டுகிறேன்.

## நம்பிக்கையுடன் காத்திருத்தல்

நம்பிக்கையென்பது நாம் பெற்றுக் கொள்ள காத்திருக்கவோ, உணரவோ வேண்டியதொன்றல்ல. நம்முடைய சூழ்நிலை எவ்வளவு கடினமாக காணப்பட்டாலும் அதைப் பெற்றுக் கொள்ள நாம் தீர்மானிக்கலாம். நம்முடைய முந்தைய ஆசீர்வாதங்களை அவர் இரண்டு மடங்காக திரும்ப கொடுப்பார். (சகரியா 9:12). வேறு வார்த்தைகளிலே, என்ன நடந்தாலும், நம்பாமல் என்னால் இருக்க முடியாது என்ற அளவுக்கு நம்பிக்கையாலே நீங்கள் சிறைபிடிக்கப்படுவீர்கள் என்றால் பின்னர் உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் இழந்த எதையும் அவர் திரும்பக் கொடுப்பார். இரண்டத்தனையாகக் கொடுப்பார்.

காரியங்கள் நன்றாக மாற வேண்டுமென்று விரும்புவது நம்பிக்கையல்ல. அதை நாம் ஜாக்கிரதையாக பற்றிக் கொண்டிருக்கும் போது நமக்கு உதவும் காரியங்களில் ஒன்று, தேவனுடைய வார்த்தையை ஜாக்கிரதையாக படித்து தியானிப்பதாகும். தேவனுடைய வார்த்தையிலே வல்லமை இருக்கின்றது. அவர் மேல் தங்கள் நம்பிக்கையை வைப்பவர்களை அது பெலப்படுத்தி உற்சாகப்படுத்துகிறது.

தேவன் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற 20 ஆண்டுகள் காத்திருந்த இளம் சங்கீதக்காரனாகிய தாவீது இவ்வாறு சொன்னான்.

> கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா
> காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை
> நம்பியிருக்கிறேன்.
>
> சங்கீதம் 130:5

நம்பிக்கைக்கு ஒரு அடிப்படை வேண்டும், நம்ப ஒரு காரணம் இருக்க வேண்டும். தாவீது தன் காரணம் தேவ வார்த்தையே என்றான். தேவனுடைய வார்த்தை நிறைவேற, அவரின் உண்மைத்தன்மையின் மேல் நம்பிக்கையை வைத்தான்.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதும், தியானிப்பதும் ஏன் அவ்வளவு முக்கியம்? அது விதயாகும். விதை எப்போதுமே அதனுடையதை விளைவிக்கும். வார்த்தையானது வளம் மிகுந்த (மிருதுவான) நிலத்திலே ஊன்றப்பட்டால், அறுவடையைத் தவிர வேறு எதையும் அதனால் செய்ய இயலாது. தேவனுடைய வார்த்தை முழுவதிலும் நாம் இந்த சூத்திரத்தைக் காண்கிறோம். ஆனால் மாற்கு 4-ம் அதிகாரம் இந்த உண்மைக்குள் ஒரு ஆழமான கருத்தைக் கொடுக்கிறது. விதைகளைப் பற்றிப் பேசும்போது, அது கீழ்க்காண்பவைகளைக் கூறுகிறது.

> வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.
>
> மாற்கு 4:20

நீங்கள் தேவனுடைய வார்த்தையை எவ்வளவு முறை முடியுமோ அவ்வளவு முறை படிக்க, கவனிக்க, தியானிக்க வேண்டுமென்றும் அதை விசுவாசிக்கும் இருதயத்தோடும், சாந்தமான இருதயத்தோடும் செய்ய வேண்டுமென வருந்திக் கேட்டுக் கொள்கிறேன். வார்த்தையானது நம் இருதயங்களிலே ஊன்றப்பட்டு வேர்விடும் போது, ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறது என்று யாக்கோபு கூறுகிறார் (யாக் 1:21). தேவனுடைய வார்த்தையானது நம்மை மாற்றி, நாம் எவ்வாறு இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறாரோ அவ்வாறு இருக்கவும், நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்யவும் நமக்கு உதவுகிறது. நாம் அவருடைய காத்திருக்கும் அறையிலே இருக்கும் போது நாம் விட்டு விட தேவன் விரும்புகிறதில்லை. நம்முடைய

விடிவுக்கான சமயம் வரும் வரை நாம் உறுதியாக நிற்கத் தேவையான வல்லமையை அவருடைய வார்த்தை நமக்களிக்கிறது.

தேவன் பேரிலும் அவருடைய வார்த்தையின் பேரிலும் உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். எந்த நேரத்திலும் நற்செய்தியைக் கேட்க எதிர்பாருங்கள். நாம் நம்பிகையுடன் வாழும் போது, நம்முடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலையைப் பார்க்க முடியும். நம் யாத்திரையை அனுபவிக்க முடியும்.

## நீங்கள் காத்திருக்கும் போது கீழ்படிந்திருங்கள்

> நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டுபோவதை நீ காண்பாய்.
>
> சங்கீதம் 37:34

நம் வாழ்விலே வெற்றிகளைப் பார்க்க நம்பிக்கையுடன் காத்திருப்பது ஒரு காரியமாகும். ஆனால் காத்திருந்து அவருடைய வழிகளின் படி நடப்பதென்பது நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு காரியமாகும். நம் அனைவருக்குமே கீழ்ப்படிதலின் முக்கியத்துவம் தெரிந்திருக்கும். ஆனால் நல்ல காலங்களில் அது எவ்வளவு கடினமாக இருந்தாலும், கடினமான காலங்களிலே, சூழ்நிலைகளைக் சகித்துக் கொண்டும், நெடுங்காலமாக நாம் எந்த மாற்றத்தையும் காணாமலிருக்கும் போதும் அது எவ்வளவு கடினமாக இருக்குமென்பதை நாம் உணர வேண்டும். அத்தகைய சமயங்களில் நாம் சரியான காரியங்களை அதாவது பிறரிடம் அன்பாக கனிவாக இருப்பதோ உதவுவதோ அல்லது ஊழியம் செய்வதோ, நாம் சரியான காரியங்களை செய்ய வேண்டுமென்று எப்போதுமே நமக்குத் தோன்றாது.

நம் வாழ்விலே அழுத்தங்கள் இருக்கும் போது ஆவியின் கனியைக் காட்டுவது அதிக கஷ்டம். ஜெபிக்கவோ தேவனுடைய வார்த்தையைப் படிக்கவோ வேண்டுமென்பது இன்னும் கடினம்; ஆயினும் இவைகள்

*சரியான காரியங்கள் நமக்கு நடைபெறாத போது, சரியான காரியங்களைச் செய்வது தான் நாம் செய்யத்தக்க மிகுந்த வல்லமையான காரியங்களுள் ஒன்றாகும்*

தான் அதிமுக்கியமான தருணங்கள். சரியான காரியங்கள் நமக்குப் நடைபெறாத போது சரியானவற்றைச் செய்வது தான் நாம் செய்யத்தக்க வல்லமையான காரியமாகும். சரியானதைச் செய்வதிலே தளர்ந்து போக வேண்டாமென்றும், நாம் சோர்ந்து போகாமலிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போமென்று பவுல் சொல்லுகிறார் (கலா 6:9). தேவனுடைய காத்திருக்கும் அறையிலே நீங்கள் இருக்கும் போது சரியான காரியங்களைச் செய்து கொண்டேயிருங்களென்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அதை நீங்கள் அவரை நேசிப்பதாலும் அவர் உங்களுக்காக செய்த எல்லவற்றையும் நீங்கள் பாராட்டுவதற்காகவும் செய்யுங்கள்!

நாம் விசுவாசத்திலே நடக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். விசுவாசத்தால் நடப்பதென்பது நாம் பார்ப்பதை வைத்துக் கொண்டோஉணர்வதை வைத்தோ நடப்பதில்லை. ஆனால் சரி என்று நாம் எதை அறிந்திருக்கின்றோமோ அப்படியாக நடப்பதே. சரியானதை சரியானதாக இருப்பதற்காக செய்வது மிகவும் வல்லமையான காரியமாகும். அது நாம் தேவனை நம்புகிறோம், நம் சூழ்நிலைகள் என்னவாக இருந்தாலும் அவரைக் கனப்படுத்த நம்மை அர்ப்பணித்திருக்கிறோமென்பதை தெளிவாக கூறுகிறது.

நாம் உறுதியாக அசையாமல், தேவனுடைய சேவையிலே மிகுந்திருக்கும் போது நம் பாடுகள் அல்லது செயல்கள் வீணாகாது என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது (1 கொரி 15:58) தேவன் வேறெவருமே பார்க்காவிட்டாலும் எப்போதுமே உண்மைத் தன்மையைப் பார்க்கிறார். சோதனைகளின் போது உறுதியாக நிலைத்திருப்பவர்கள் வெற்றியாளரின் ஜீவ கிரீடத்தைப் பெறுவர். (யாக் 1:12).

நாம் தேவனுடைய காத்திருக்கும் அறையிலே இருக்கும் போதே அவரை நம்பி நம் பலனுக்காக காத்திருப்போமாக. தேவனால் எல்லாம் கூடும் என்ற நம்பிக்கையிலே மனம் மகிழ்வோமாக!

அத்தியாயம் 17

# கடவுள் அமைதியாக இருக்கிறார்

தேவனே, மவுனமாயிராதேயும், பேசாமலிராதேயும்; தேவனே, சும்மாயிராதேயும்.

சங்கீதம் 83:1

"*தேவன் இங்கே வந்து என்னுடன் அமர்ந்து நான் என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதை என்னிடம் சொல்லட்டும்*" என்று அநேக சமயங்களில் நான் நினைத்ததுண்டு. உங்கள் வாழ்விலும் இதே போன்று எப்போதாவது நீங்கள் நினைத்திருக்கலாம். அது நம் காரியங்களை அதிக சுலபமாக்கி விடும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் தேவனுக்கு வேறு கருத்துக்கள் இருக்கலாம்.ஏனென்றால் அவர் செய்யும் படி தெரிந்துகொள்வது அதுவல்ல. நம்முடைய வழியிலே அவர் காரியங்களைச் செய்ய விரும்பாவிட்டால் பின்னர் அவருடைய வழியிலே எப்படி செய்வது என்பதை நான் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் அமைதலாக இருக்கும் போது நாம் அவரை நம்ப வேண்டுமென்று அவர் விரும்புகிறார்!

தேவன் நம்மை விட்டு வெகு தொலைவாக சென்று விட்டாரென்று எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? நம் வாழ்விலே தேவன் செய்யும் எதையும் நம்மால் காணாமலிருக்கும் போது அவர் சொல்லும் எதையும் நம்மால் கேட்காமலிருக்கும் பொழுது சிக்கலான பாதையிலே நம் வழியைக் கண்டுபிடிக்க நாம் இருளிலே

*தேவன் உங்களை விட்டு தூரமாக சென்று விட்டார்களென்று நினைக்கிறீர்களா?*

தடவித்திரிகிற மாதிரி உணருகிறோம். இத்தகைய சமயங்கள் நம் விசுவாசத்திற்குச் சவாலாக இருந்தாலும் நமக்கு ஒரு முக்கியமான பாடத்தை அது கற்றுக் கொடுக்கிறது. அது தேவன் அமைதலாக இருக்கும் போது அவரை நம்பு என்பது. அவர் அமைதியாக இருக்கிறாரென்பதால் அவர் எதுவும் செய்து கொண்டிருக்கவில்லை என்று அர்த்தமாகாது.

பழைய ஏற்பாடு மூடப்பட்டு புதிய ஏற்பாடு திறக்கும் வரை நானூறு ஆண்டுகள் தேவன் அமைதியாக இருந்தார். ஆனாலும் அந்த சமயங்களிலும் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது அது மேசியாவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தது. காலம் நிறைவேறின போது இயேசு பிறந்தாரென்று வேதம் சொல்லுகிறது. (கலா 4:4). தேவன் எப்போதுமே சரியான நேரத்தைக் கொண்டிருக்கிறார். அவர் ஆயத்தமடைந்த பின் பேசுவார். அவர் பேசும் வரை கேட்டுக் கொண்டிருக்கவும், எதிர்பார்ப்போடு காத்திருப்பதும் நம் கடமையாகும்.

1 இராஜா 17:1 லே எலியாவைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன் சொல்லுகிறதென்றால், பல ஆண்டுகளுக்கு மழை பெய்யாது என்று மக்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்னார். அது போலவே $3^1/_2$ ஆண்டுகள் மழை பெய்யவேயில்லை. மக்கள் மிகப்பெரிய வறட்சியால் கஷ்டப்பட்டனர். அந்நாட்களிலே எலியா அவ்வளவு பிரசித்தி பெற்றவராயும் இல்லை. தேவனிடமிருந்து புதிதான ஒன்றை கேட்க வேண்டுமென விரும்பியிருக்கலாம். ஆனால் 1 இராஜா 18:1 படி “நீண்ட காலத்திற்கு பின் மூன்றாம் வருடத்திலே தேவனுடைய வார்த்தை எலியாவிற்குத் தோன்றி” வேறொரு வழிமுறையை சொன்னார். இம்முறை மழை பெய்யும் என்பதே அது பெய்தது.

தேவனை நம்பியவர்களுடன், அவர் அமைதியாக இருந்த பல்வேறு உதாரணங்களும் இருக்கிறது. அவர் யோபுவுடன் அமைதியாக இருந்தார். ஆபிரகாமுடன் அமைதியாக இருந்தார்.தேவனைக் காணவோ அவரிடமிருந்து கேட்கவோ இயலாத யோபு அடைந்த வியாகுல்த்திப் பற்றி யோபு 23ம் அதிகாரம் ஒரு தெளிவான காட்சியைக் கொடுக்கிறது.

> நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்துசேர்ந்து,
>
> யோபு 23:3

> இதோ, நான் முன்னாகப்போனாலும் அவர் இல்லை; பின்னாகப்போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியைசெய்தும் அவரைக் காணேன்; வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார். யோபு 23:8-9

இந்த பயங்கரமான தேவனுடைய அமைதியின் மத்தியிலே யோபுவினுடைய விசுவாச உரையினைக் கவனியுங்கள்

> ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.
>
> யோபு 23:10

யோபுவால் தேவனைப் பார்க்கவோ கேட்கவோ இயலாவிட்டாலும், தேவன் அவனைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறாரென்றும் அவனைப் பற்றி கரிசனையாக இருக்கிறாரென்றும் நம்பினான். தேவன் அவனை எப்போது விடுவிப்பார் என்பதைப் பேசினான்.

தன்னுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கை அர்ப்பணிக்கும் போது ஏற்பட்ட தேவனுடைய மவுனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. தேவன் ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும் உண்மைத்தன்மையையும் சோதிக்கும் பொருட்டு அவனுடைய ஒரே குமாரனை பலியிட வேண்டுமென்றார். கடைசி நொடி வரை ஆபிரகாமுக்கு விசுவாசம் இருந்தது. அவன் தேவனுடைய உண்மைத்தண்மையை அதிகம் உணர்ந்தவனாக இருந்தான். அவன் ஈசாக்கை கொன்றாலும் தேவன் அவனை உயிரோடு எழுப்புவார் என்று உறுதியாக நம்பினான் (ஆதி 22:1-22).

யோபு, ஆபிரகாமுக்கு வந்த நிலையைப் போன்று எனக்கு வந்ததில்லை. ஆனால் என் காரியத்திலும் தேவன் மௌனமாக இருந்திருக்கிறார். இத்தகைய சமயங்களிலே தான் தேவன் நம்மோடில்லை அவர் நம்மைப் பற்றி அக்கறையாக இல்லை என்று நினைக்க சோதிக்கப்படுகிறோம். தேவனிடமிருந்து கேட்கும் திறனை நாம் இழந்து விட்டோம் என்றும் நாம் நினைக்கலாம்.

அநேக ஆண்டுகளாக தேவனிடமிருந்து கேட்க முயன்று நான் என்னையே அழுத்தத்துக்குள்ளாக்கியிருக்கிறேன். ஆனால், இறுதியாக தேவன் என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புவாரேயென்றால் அது என்னவென்று நான் நிச்சயமாக அறிந்து கொள்ள அவர் பல வழிகளைக் கொண்டிருக்கிறாரென்று உணர்ந்தேன். உங்களால் கூடாமல் இருக்கும்போது தேவனிடமிருந்து கேட்க முயன்று பின்னர் இயலாததால் விரக்தியடையாமல், தேவன் உங்களிடம் பேச விரும்புவாரேயென்றால் அவர் தம்மை தெளிவாக வெளிப்படுத்துவாரென்று நம்புங்கள்.

தேவனிடமிருந்து நீங்கள் கேட்காமல் இருக்கையில் பயப்படாமல், அவரிடமிருந்து கேட்போம் என்று விசுவாசியுங்கள். நீங்க்ள் அவருடைய சத்தத்தை உண்மையாகவே கேட்க விரும்புகிறீர்களென்றும் அதைப் பின்பற்ற ஆயத்தமாயிருக்கிறீர்களென்றும் அவர் அறிவாரேயென்றால் ஏற்ற சமயத்திலே உங்களிடம் பேசாமல் இருக்க மாட்டார். காலம் நிறைவேறும் போது அல்லது ஏற்ற சமயத்திலே தேவன் எலியாவிடம் மீண்டுமாக பேசின. உங்களிடமும் மீண்டும் பேசுவார்!

## தேவன் மௌனமாக இருக்கும் பொது செய்யக்கூடிய ஆறு காரியங்கள்

1. *தேவன் மௌனமாக இருக்கும் போது கடைசியாக அவர் உங்களிடம் என்ன செய்யச் சொன்னாரோ அதை செய்யுங்கள்.*

பவுல் விசுவாசிகளுக்கு, அவர்கள் மீண்டும் அடிமைத்தனத்தின்

நுகத்துக்குட்பட்டு வஞ்சிக்கப்படாதபடி அவர்களுக்கான சுதந்திரங்களிலே நிலைத்திருக்கும் படி உறுதியாக நிற்கும் படி கற்பிக்கின்றார். (கலா 5:1) நீங்கள் பெற்றிருப்பதை உறுதியாய் பற்றிக் கொண்டிருங்கள். தேவனுடைய மௌனம் உங்களை சோர்வுறச் செய்து உங்கள் விசுவாசத்தை தளர்ந்துவிடச் செய்ய அனுமதிக்காதீர்.

நான் அறிந்திராத அநேக காரியங்கள் இருக்கிறது, நான் அறிந்திருக்கும் அநேக காரியங்களும் இருக்கிறது. என் வாழ்விலே தற்சமயத்தில் நான் செய்ய வேண்டிய அனைத்தையும் மும்முரமாக செய்து கொண்டிருக்கிறேன். 'உங்கள் ஊழியத்திலே அடுத்தது என்ன?' என்று அடிக்கடி என்னிடம் கேட்பதுண்டு. எதிர்காலத்தை பற்றி நான் அறிந்திராததால் அதற்கான பதில் என்னிடம் இல்லை. நான் எதையாவது திட்டம் பண்ணி வைத்திருப்பேனானால் அதை நான் சொல்வேன். ஆனால் அநேகந்தரம் அது அப்படி இல்லாததால், நம்மில் அநேகர் செய்வதையே நான் செய்கின்றேன். அதாவது ஒவ்வொரு நாளாக வாழ்தல். தேவனை நம்புதல். பிறரைப் போலவே எனக்கும் அடுத்தது என்ன என்பது ஆச்சரியமே

அநேகர் என்னிடம் கேட்கும் மற்றொரு கேள்வி என்னவென்றால் "தேவன் உங்களிடம் சொல்வது என்ன?." விசேஷமாக ஒவ்வொரு ஆண்டின் முதலாம் நாளிலே இது கேட்கப்படுகிறது. கால அட்டவனையிலே பக்கம் மாற்றப்பட்டதால் தேவனிடமிருந்து எனக்கும் புதிய வெளிப்படுத்துதல் கிடைத்திருக்கும் என்பதாலே. வருடத்தின் முதலாம் நாள் என்பதால் தேவனிடமிருந்து ஒரு விசேஷித்த வார்த்தை கிடைத்திருக்கும் என்று அர்த்தம் இல்லை. ஏதோவொரு குறிப்பிட்ட நரகத்திலே நமக்கு வேண்டியதை பொத்தனை அமுக்கினால் பெற்றுக் கொள்ளக்கூடிய இயந்திரம் அல்ல தேவன். அவர் தெரிந்து கொள்ளும் சமயத்திலே பேசுகிறார், அவர் மௌனமாக இருக்கும் போது நாம் செய்ய அறிந்திருப்பதையே தொடர்ந்து செய்கிறோம்.

சமீபத்தில் நானும் டேவும் சில நண்பர்களுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தோம். ஏனென்றால், ஒரு தம்பதி திருமணம் செய்து

கொண்டபோது கணவன் மிகவும் பயபக்தியுள்ளவராக இருந்ததால், மனைவி தினமும் வாசிக்கத்தக்க ஒரு குறிப்பிட்ட வேத பகுதியைக் குறித்துக் கொடுத்தார். அவர் ஒரு ஆலயத்திலே துணை போதகராக இருந்தார். வீட்டிற்கு வந்தவுடன் முதலாவதாக கேட்கும் சில காரியங்களில் ஒன்று “இன்று தேவன் உனக்கு காண்பித்தது என்ன” என்பதே. அதனால் அவள் அடைந்த அழுத்தத்தையும், ‘ஒன்றும் இல்லை’ என்று சொல்லும் போது அவள் தோற்றுப் போனவளாக உணர்ந்திருப்பதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க இயலுகிறது. இப்போது அது தமாஷாக இருக்கிறது ஆனால் அப்போது அது அப்படியாக இல்லை. உங்களையோ அல்லது வேறொருவரையோ ‘தேவனிடமிருந்து வார்த்தை’ என்பதால் அழுத்தத்துக்குள்ளாக்காதீர்கள்.

*2. தேவனுடைய மௌனம் உங்களுக்கான பாராட்டாகக்கூட இருக்கலாம்.*

எவ்விதக் குறிப்பிட்ட வழிமுறைகளையும் அவர் உங்களுக்குக் கொடாமல் இருக்கலாம். ஏனென்றால் சரியான தீர்மானங்களை எடுக்க அவர் உங்களை நம்புகிறார். நாம் எடுக்க வேண்டிய ஒவ்வொரு அடியையும் தேவன் சொல்லுவாரென்று நினைப்பது தவறாகும். அத்தகைய உறவு பெற்றோருக்கும் குழந்தைக்கும் கிடையாது. என்னுடைய இரண்டு மகன்களில் ஒருவர் இன்று காலையிலே என்னிடம் ‘மதியம் வருகிறேன்’ என்றான். அவன் வரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற ஒரு பட்டியலை அவனுக்கு நான் அனுப்பவில்லை. நான் அவனை நம்புகிறேன். என் விருப்பம் அவனுக்குத் தெரியும். அதற்கேற்றபடி அவன் நடந்து கொள்வான். உதாரணமாக அவன் வந்தவுடன் கதவை அடைப்பான். பிறர் தங்கள் காரை எடுக்க வசதியாக தன் காரை நிறுத்துவான். எனக்கு அறிமுகமில்லாதவரை தன்னுடன் அழைத்து வர மாட்டான். அவனிடம் இந்த காரியங்களை நான் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் அவன் என் இருதய விருப்பத்தை ஏற்கனவே அறிந்திருக்கிறான்.

தேவன் தம்முடைய வார்த்தையின் படியும், சித்தம் மற்றும் குணத்தின் படியும் தீர்மானங்களை எடுக்க நமக்கு விடுதலை கொடுத்திருக்கிறார். சமீபத்திலே ஒரு பிரசித்தி பெற்ற மனிதர், அவர் வாழ்விலே அவருக்கு எந்தவொரு முக்கியமான தருணத்திலேயும் எவ்வித குறிப்பிட்ட வழிமுறைகளையும் கொடுத்ததில்லை என்று கூற கேட்டேன். அவருக்கு உண்மையிலேயே மிக முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்த போது அது பற்றி தேவ வழிநடத்துதலுக்காக ஜெபித்த போது, சரியானவற்றைப் பற்றிய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை பல்வேறு காரியங்களை அவர் செய்து பார்க்க வேண்டியிருந்தது என்றார். தேவன் நமக்கு மௌனமாக இருப்பது போன்று காணப்பட்டாலும், அவர் தமது வார்த்தை, சமாதானம், ஞானம், கடந்த கால அனுபவங்கள் மற்றும் பிற காரியங்கள் என்று பல்வேறு முறைகளிலே நம்முடன் உரையாடிக் கொண்டேதானிருக்கிறார்.

*நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை தேவன் சரியாக உங்களிடம் சொல்லவில்லையென்றால், நீங்கள் சரியான தீர்மானங்களை எடுப்பீர்களென்று அவர் உங்களை நம்புகிறாரென்று தைரியமாக இருங்கள்!*

நீங்கள் எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று தேவன் உங்களிடம் சொல்லவில்லையென்றால், அவர் நீங்கள் சரியான தீர்மானங்களை எடுப்பீர்கள் என்று உங்களை நம்புகிறார். நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தை ஓட்டுவது முடியாது. எனவே நம் வாழ்க்கையை ஓடும் நிலையிலே வைத்து, நாம் சரியான திசையிலே ஓடுகிறோமா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கும் முன் அதை ஓட்ட வேண்டிய தருணங்களும் உண்டு.

*3. எவருடனும் உங்களை ஒப்பிட்டுக் கொள்ளாதீர்*

எப்படி தேவன் அவர்களுடன் இடைபட்டாரென்பதை பிறர் சொல்லக் கேட்கும் போது நம்மிடமும் தேவன் அவ்வண்ணமே கிரியை செய்ய

வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுகிறோம். ஆனால் அவர் அப்படி செய்கிறதில்லை. தேவன் அவர்களின் படுக்கையிலே அமர்ந்து அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அறிவுரை கொடுக்கிறார் என்று சொல்லும் புத்தகங்களை நான் வாசித்திருக்கிறேன். 'தேவன் சொன்னார்' என்பது அவர்களுக்கு பிடித்தமான வார்த்தையாகும். நானும் இதை உபயோகிக்கின்றேன். உபயோகிக்க வேண்டியதற்கும் சற்று அதிகமாகவே உபயோகிக்கின்றேன். ஏனென்றால் நான் சொல்வதைப் புரிந்து கொள்பவர்கள் இருக்கின்றனர். நாம் தேவனால் தொடர்ந்து நடத்தப்படலாம். ஆனால் அப்படியென்றால் ஒவ்வொரு நாளும் அந்த நாள் முழுவதும் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றிய ஒரு படக்காட்சியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தேவனிடமிருந்து என்னை விட மிக துல்லியமாக காரியங்களை கேட்கும் மக்களை நான் அறிவேன். ஆனால் என்னை நான் எவரிடமும் ஒப்பிட்டுக் கொள்ளாமலிருக்க அறிந்திருக்கிறேன். அப்படி செய்வோமேயென்றால் நாம் தேவனுடைய தொடர்பில் நிறைவாக இருக்க மாட்டோம். தனிபட்ட நபர்களை பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு விதங்களிலே தேவன் கிரியை செய்கிறார். நாம் அதை நம்ப வேண்டும். நீங்கள் ஒருவருடன் சவுகரியமாக உணரும் போது ஒரு அறையிலே இருவரும் சமமாக அமர்ந்திருந்தாலும் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் இருக்கக்கூடும். சில நாட்களிலே தேவன் நும்முடன் இருக்கிறாரென்பதை விசுவாசிப்பது மட்டுமே போதுமானதாக இருக்கும்!

### *4. தேவன் பதிலளிக்கிறார் என்று நீங்கள் நினைக்காவிட்டாலும் அவரிடம் பேசிக் கொண்டேயிருங்கள்*

நாம் நம்மை வெளிப்படுத்தவேண்டும். நாம் எப்போதெல்லாம் விரும்புகிறோமோ அப்போதெல்லாம் எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் எவ்வளவு முறையானாலும் அவரிடம் பேசலாமென்று நமக்கு உறுதியளிக்கிறார். சங்கீதக்காரனாகிய தாவீது நிச்சயமாகவே தன்னுடைய இருதயத்தைத் தேவனிடம் ஊற்றி

விட்டார். அதை அவர் மிகுந்த நேர்மையுடன் செய்தார். நம்மில் அநேகருக்கு நம்மிடம் பிறர் பேசினால் போதும் என்று உணரும் தருணங்கள் இருக்கிறது. அவர் என்ன சொல்லப்போகிறாரென்பதில் அதிக அக்கறை காட்ட மாட்டீர்கள்; ஒருவர் நீங்கள் சொல்வதைக் கேட்கவும் உங்கள் இரகசியங்களைக் காக்கவும் விரும்புவீர்கள். இதிலே தேவன் வல்லவராக இருக்கிறார்.

5. *எதையுமே கேட்காவிட்டாலும் கவனித்துக் கொண்டேயிருங்கள்*

தொடர்ந்து கவனித்துக் கொண்டேயிருப்பதானது உங்கள் இருதயத்தை தேவனுக்குத் திறந்தவர்களாக இருக்கிறீர்களென்றும் அவருக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் காட்டுகிறது. நான் அடிக்கடி, அவர் என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறாரென்பதற்காக அமைதியாக இருக்க சிறிது நேரம் எடுத்துக் கொள்வேன். நீதிமொழிகளிலே அவர் சொன்னதற்கு கீழ்ப்படிவேன்.

> உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்;
> அப்பொழுது அவர் உன் பாதைகளைச்
> செவ்வைப்படுத்துவார்.
>
> நீதி 3:6

அந்தக் கேள்வியைக் கேட்கும் போது நான் எதையுமே கேட்கா விட்டாலும் என்னுடைய கவனமானது இன்னும் விலையேறப் பெற்றதென்று நினைக்கிறேன். நான் கேள்வி கேட்கும் போது தேவன் ஒருவேளை அமைதியாக இருக்கலாம். ஆனால் என்னுடைய சூழ்நிலைகளை நடத்தும் முறையானது என் சூழ்நிலைக்கான பலனை அடைய அவர் அதிலே ஈடுபட்டிருந்தாரென்பதைத் தெளிவாக அறிந்து கொண்டேன்.

6. *தேவன் உங்களை ஆராயும் படி கேளுங்கள்*

தாவீது தன்னுடைய இருதயத்திலே ஏதாவது தவறு இருக்கிறதா என்று பார்க்கும் படி தன்னை ஆராயும் படி கேட்கின்றார் (சங்கீதம் 26:2;

139:23-24). இது ஒரு தைரியமான படியாகும். ஆனால் உண்மையாகவே தேவனுடைய சித்தத்தை அது எப்படியாக இருந்தாலும் விரும்புகிறோமா?

தேவனிடமிருந்து தெளிவாக கேட்காமலிருக்கும் படி நம்மை ஏதாவது தடுத்துக் கொண்டிருக்கக்கூடுமா? ஒரு பாவம், தவறான மனப்பான்மை அல்லது தேவனிடமிருந்து எப்படி கேட்பது என்பதைப் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல் போன்ற ஏதாவது நம்மை தடுத்துக் கொண்டிருக்கலாம். சத்தியத்தை அறிந்து கொள்ள நாம் பயப்பட வேண்டாம், ஏனென்றால் அது நம்மை விடுதலையாக்கும். தேவன் மௌனமாக இருக்கும் போது நாம் எதுவும் தவறாக செய்து கொண்டிராமலிருக்கலாம் ஆனால் அதைக் கண்டுபிடிப்பதிலே எந்த தவறும் இல்லை.

தேவன் யோபுவுடன் நீண்ட காலம் மௌமாக இருந்தாலும், நாளடைவிலே அவனுக்குப் பதிலளித்தார். ஆனால் அவர் பதிலளித்த போது யோபு எதிர்பார்த்திராத சில காரியங்களை அவனிடம் அவர் சொல்ல வேண்டியிருந்தது. விரக்தியினிமித்தமாக, தேவனிடம், அவன் அனுபவித்துக் கொண்டிருந்த கஷ்டத்திற்கு அவன் தகுதியற்றவன் என்றும், அதற்கான பதிலை கொடுக்கும் படியும் யோபு கேட்டான். தேவன் அவனை அநியாயமாக நடத்துகிறாரென்று அவன் நினைத்ததாக குறிப்பிட்டான். அதற்கு பின்னால் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆவிக்குரிய போராட்டத்தைப் பற்றி அவன் அறியவில்லை. நாமும் அப்படித்தான் அறியாமல் இருக்கின்றோம். யோபு மனந்திரும்பினாரென்று வேதம் கூறுகிறது. என்வே அவன் நிச்சயமாகவே பாவம் செய்திருந்தான்.

அவனுக்கு சோதனைகள் வந்த போது ஒவ்வொரு வழியிலும் அவன் நீதிமானாக இருந்தாலும் நாளடைவிலே யோபு, தேவன் அவனை சரியாக நடத்தவில்லை என்று நினைத்தான் (யோபு 42:3-6). அவனுடைய நீதி சுய நீதியாக மாறியது. அது எவருக்குமே ஆபத்து. யோபு நிச்சயமாகவே கடினமான தருணங்களுக்குள்ளாக சென்றான் தான். (நாம் அறிந்ததற்கும் மேல்). ஆனால் முடிவிலே, முன்பை விட

தேவனை இன்னும் அதிகமாக அறிந்து கொண்டதாக கூறினார். (யோபு 42:10-17).

பயணம் கடினமாகத்தானிருந்தது, ஆனால் முடிவிலே அது நன்றாக மாறி விட்டது! நாம் எதிர் பார்க்கக்கூடிய காரியமும் அதுவே. சாத்தான் தீமைக்கென்று நியமித்ததை, தேவன் நன்மையாக மாற்றினார் (ஆதி 50:20) என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அத்தியாயம் 18

# மாற்றம் ஏற்படும் சமயத்திலே தேவனை நம்புதல்

தங்கள் மனதை மாற்றிக் கொள்ள இயலாதவர்களால் எதையுமே மாற்ற இயலாது

- ஜார்ஜ் பெர்னாட் ஷா

அநேகர் மாற்றத்தை விரும்புகிறதில்லை. அதை மும்முரமாக எதிர்க்கின்றனர். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த உலகில் காரியங்கள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. எனவே அதை ஏற்க மறுப்பதால் எவ்வித பயனுமில்லை. மாற்றத்திற்கு நம் மனதை பழக்கிக் கொள்வது ஒன்றே நாம் செய்ய வேண்டியது. ஏனென்றால் அப்படி நடைபெறும் போது வாழ்க்கையைக் கையாள்வது சுலபமாகி விடுகிறது. மாற்றத்தைப் பற்றி சிலர் என்ன நினைக்கின்றனர், ஏன் நினைக்கின்றனர் என்பதைப் பார்ப்போம்.

சிலர் “மாற்றத்தை நான் வெறுக்கிறேன்” என்று உறுதியாக கூறுவர். அவர்கள் அவ்வாறாக உணரலாம். ஏனென்றால் அவர்கள் கட்டுப்பாட்டைத் தாண்டி இருக்கவோ அல்லது பாதுகாப்பின்மையை உணர்வதாலோ அல்லது புதிய காரியங்களைப் பற்றி பயப்படுவதாலோ அல்லது மாற்றத்தை விரும்பவில்லை என்று சொல்லும் பழக்கத்தைக் கொண்டிருப்பதாலோ அவ்வாறாக உணரலாம். நம்முடைய எண்ணங்களிலே சில நம்முடைய பழக்கமாக இருக்கலாம். அதை நம் சிறுபிராயத்திலே நம்மிலே தாக்கத்தை ஏற்படுத்திய சிலரிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கலாம் அல்லது இயேசு நாம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பும் சிறந்ததை நாம் பெற்றுக்

கொள்வதைத் தடுக்க சாத்தான் நம் மனதிலே கட்டியிருக்கும் கோட்டியாலும் இருக்கலாம்.

*நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் மாறாமலிருப்பது மாற்றமே. அதை எதிர்ப்பது, காற்றை வீச விடாமல் தடுப்பதைப் போன்றதாகும்.*

நம் எல்லோருடைய வாழ்விலும் மாற்றம் ஒன்றே மாறாதது. அதை எதிர்ப்பதென்பது காற்று வீச தொடங்கும்போது அதைத் தடுப்பதை போன்றதாகும். எனக்கு ஒரு பேரப்பிள்ளை இருக்கிறாள். அவள் திட்டமிடுகிறவள். அவள் திட்டம் பண்ணினதிலே ஏதாவது மாற்றம் ஏற்படுமேயென்றால் அதனை சரி செய்வது அவளுக்குக் கடினம்; அது அவளை கவலைக்குள்ளாக்கி விடும். ஆனால் நாம் செய்யும் எதுவும் மாற்றம் ஏற்படாமலிருக்கச் செய்யாது. குறைந்த பட்சமாக சில சந்தர்ப்பங்களிலாவது செய்யாது. நம் தடுக்கக்கூடிய சில மாற்றங்கள் இருக்கலாம். ஆனால் தேவன் திட்டம் பண்ணி வைத்திருக்கும் நன்மையைக்கூட நாம் தடுத்துக் கொண்டிருப்போம்!. நாம் இருக்கும் நிலையிலிருந்து நாம் விரும்பும் நிலைக்குச் செல்ல எந்தவொரு மாற்றமும் இல்லாமல் செல்ல முடியாது. நீங்கள் எப்போதும் செய்து கொண்டிருப்பதையே செய்து கொண்டு வேறு விதமான பலனைப் பெற்றுக் கொள்வது இயலாத காரியமாகும். சிலர் தாங்கள் என்ன பயனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனரோ அதைப் போன்றல்லாமல் வேறே பலனை விரும்புகின்றனர், ஆனாலும் அவர்கள் மாற்றத்தை வைராக்கியமாக எதிர்க்கின்றனர்.

## மாற்றத்தை பற்றி உங்கள் மனதை மாற்றிக் கொள்ளுங்கள்

மாற்றத்தை நீங்கள் விரும்பாவிட்டால், ஏன் என்று உங்களிடமே கேட்டுப்பாருங்கள். உங்கள் மனப்பான்மைக்கு பின்னால் இருக்கும் பகுத்தறிவை உங்களாலேயே புரிந்துகொள்ள இயலவில்லை என்பதைக் காண்பீர்கள். உங்கள் எண்ணங்களை மாற்றுவது, மாற்றத்தைப் பற்றிய

ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொடுக்கும் என்பதைக் காண்பீர்கள்.

மாற்றத்தைப் பற்றி நினைக்கும்போது, நம்மை நிர்பந்தமாக்குவதைத்தவிர நமக்கு வேறெந்த நன்மையும் செய்யக்கூடாத சில சேதப்படுத்தும் வழிகள் இதோ:

- மாற்றத்தை நான் வெறுக்கிறேன்
- மாற்றத்தை பற்றி நான் பயப்படுகிறேன்
- மாற்றத்தை நான் விரும்பவில்லை
- என் வாழ்விலே நடைபெறுவதைக் கட்டுப்படுத்த விரும்புகிறேன்
- இப்போது நடைபெறும் விதத்தை விரும்புகிறேன், அது மாற விரும்பவில்லை.

மாற்றத்தினூடே சந்தோஷமாக செல்ல நமக்கு உதவும் சில வழிகள் இதோ:

- மாற்றத்தை நான் விரும்புகிறேன்
- என் வாழ்க்கையிலே ஏற்படும் மாற்றங்களானது காரியங்களை மேம்படுத்தும் என்று எண்ணுகிறேன்
- இந்த மாற்றத்தின் பலனைக் காண வாஞ்சையாக இருக்கிறேன்
- நான் எப்படியெல்லாம் இருக்கக் கூடுமோ அப்படியெல்லாம் இருக்க விரும்புகிறேன். அதிலே மாற்றமும் ஒரு பகுதி என்று அறிந்திருக்கிறேன்.
- தேவன், நான் எங்கே இருக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அங்கே இருக்க விரும்புகிறேன். அதற்கு மாற்றம் தேவை என்பதை அறிகிறேன்.

தேவனுடைய வார்த்தை, சித்தத்தோடு இணைந்து செல்லக்கூடிய எண்ணங்களைத் தெரிந்து கொள்வதின் மூலம் நாமனைவருமே உள்ளத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவர் மட்டும் தான்

ஒருபோதும் மாறாததவர். மற்ற அனைத்தும் மாறக்கூடியதே என்று வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது (மல்கியா 3:6; எபி 12:27).

ஏதாவதொன்று மாறும் போது ஏற்கனவே செய்தது தவறு என்று அர்த்தமாகாது. சிறந்தது வருகிறது என்று அர்த்தம். இரண்டு மாத முன்னறிவிப்புக் கொடுத்து விட்டு தன் வேலையை ராஜினாமா செய்த ஒருவர் எங்கள் ஊழியங்களிலே வேலை செய்து கொண்டிருந்தார். அவருடைய இடத்தை நிரப்ப எவரும் இருக்கவில்லை. அவருடைய வேலை முக்கியமானதாக இருந்தது. அந்த இடத்தை நிரப்புவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. என்னால் அந்த அழுத்தத்தை உணர முடிந்தது. ஆனால் தேவன் அதைப்பார்த்துக் கொள்ளவும், இந்த மாற்றத்தினூடே நாங்கள் மேலே உயரவும் அவர் உதவ வேண்டுமென்று தொடர்ந்து அவரை நம்பிக் கொண்டிருந்தேன்.

அது எப்படி மாறியதென்றால், நாங்கள் அந்த இடத்தை நிரப்ப வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஏனென்றல் அவருடைய குழுவிலிருந்த வேறு இரண்டு பேர் வந்து 'நாங்கள் இன்னும் கொஞ்சம் அதிகமான பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள இயலும், முன்பை விட இன்னும் குறைந்த மக்களுடன் அந்த வேலையை செய்ய இயலும்' என்று சொன்னார்கள். அது ஆச்சரியமாக அமைந்து நாங்களும் அந்த மாற்றத்தால் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். எனவே ஆரம்பத்திலே நாங்கள் எதிர்த்தது, விரும்பாதது, நாங்கள் எதிர் பார்த்ததை விட மிகப் பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது.

எல்லாவற்றிற்கும் ஒரு காலம் இருக்கிறது. அதினதின் காலத்திலே எல்லாம் அழகாக இருக்கிறது. (தானி 2:1; பிர 3:1, 11) பூமி இருக்கும் வரையிலும் பருவங்களின் மாற்றம் இருந்து கொண்டேதானிருக்கும் என்று வேதத்திலே பார்க்கிறோம். (ஆதி 8:22). பனிக்காலம் முடிந்தால் வசந்த காலம், பின் வேனிற் காலம், பின் இலையுதிர்காலம், பின்னர் பனிக்காலம். அனுதினமும் தட்ப வெப்பமும், காற்றழுத்தமும், ஈரப்பதமும் மாறிக் கொண்டேயிருக்கிறது. தட்ப வெப்ப நிலை என்று வரும் போது நாம் மாற்றங்களை எதிர்பார்க்கிறோம். நம் வாழ்வின் மற்ற பகுதிகளிலும் நாம் மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டும். அது

எப்போதுமே நடைபெறும். நாம் வயதாகும் போது அநேக வழிகளில் மாறுகிறோம். நம்மை சுற்றிலும் இருப்பவர்களும் மாறுகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்புகளும் மாறும். அவர்களின் வாழ்விலும் காரியங்கள் மாறும்போது அவர்களுடனான நம் உறவிலும் நாம் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் பிள்ளைகள் வளர்ந்து வீட்டை விட்டு செல்லும்போது அவர்களுடனான நம் உறவுகளும் மாறும். ஆனால் அது நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை விட தாழ்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது வித்தியாசமாக இருக்கும். அவை எப்போதும் இருப்பதை விட மிகவும் சிறந்ததாக இருக்கலாம்.

அன்றொரு நாள் என் மகள் என் வீட்டிற்கு வந்தாள். எனக்கு யாராவது பேசக் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். என்வே அவள் வந்து சில நிமிடங்களிலே போகத்தயாரான பொழுது நான் ஏன் அவசரம், வந்து என்னுடன் சற்று நேரம் அமர்ந்திரு என்று கேட்டேன். அவளோ அம்மா நான் என் வீட்டிற்கு போக வேண்டும் எனக்கு குடும்பம் இருக்கிறது என்று சொன்னாள். என் உணர்வுகள் காயப்படும் திசைக்கு நேராக செல்லத் தொடங்கியது. ஆனால் தேவன் எனக்கு உதவும்படி கேட்டபோது அவளுக்கு என்னை சந்திப்பதோடு வேறு பல பொறுப்புகளும் இருக்கின்றன. அதனால் நான் காயப்பட்டு அவளுக்கு அதை மேலும் கடினமாக்கக் கூடாதென்று உணர்ந்தேன். என்னால் எவ்வித அழுத்தமும் ஏற்படாமல், அவள் விரும்புவதைப் போல வாழும் சுதந்திரத்தை அவள் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்பினேன். அவள் என்னுடன் அதிகமான நேரம் செலவிடுகிறாள், எனக்காக பல காரியங்களைச் செய்கிறாள், எனவே அவள் தன்னுடைய குடும்பத்திற்காக மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கும் போது என்னிடம் நேரம் செலவிடு என்று அவள் மேல் அழுத்தத்தை வைப்பது என் சுயநலமேயாகும். அது எங்களுடைய நல்ல உறவைப் பாதிக்கும். நாம் நம் பிள்ளைகள் வளர்ந்து தங்கள் சொந்த தீர்மானங்களை எடுக்க விட்டு விட வேண்டும் அவர்கள் எதையும் தேர்ந்தெடுக்க(நாம்

விரும்பாவிட்டாலும்) அவர்களுக்கு உரிமை உண்டு, அதை நாம் மதிக்க வேண்டும்.

அநேக சந்தர்ப்பங்களிலே பிள்ளைகள் வீட்டை விட்டு சென்ற பின் அதிக நிரந்தமாக உணர்கிறேன். விசஷேமாக அம்மாவிற்கு அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவள் தன் வாழ்க்கை முழுவதும் தன் பிள்ளைகளின் மேல் அன்பையும் கவனத்தையும் ஊற்றி இருக்கிறாள். ஒருவேளை அதிக அளவில் அவள் செய்திருக்கலாம். இப்போதோ அந்த பிள்ளை புதிய காரியங்களைச் செய்ய வெளியே சென்று விட்டது. அம்மாவோ புதிய திசையைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலே தனித்து விடப்பட்டாள். அவள் கொண்டிருக்கும் ஒரு பிரதிகிரியை என்னவென்றால், தன் பிள்ளை தன்னுடன் நேரம் செலவிட சொல்லி அழுத்தம் ஏறபடுத்தி அவர்களின் உறவை அழித்துக் கொள்ளலாம் அல்லது திறமையாக அவளுக்கேற்ப காரியங்களைக் கையாளலாம். அதனால் அவளுக்கென்று அவர்கள் செய்யும் அனைத்தும் மனமுவந்து செய்யாமல் கடமைக்கென்று சந்தோஷமற்று செய்யலாம். இதைவிட சிறந்ததென்னவென்றால், அவள் தன் பிள்ளை என்பதை விட்டு விட வேண்டும். தாய் பிள்ளை என்ற படி இல்லாமல் நட்பைச் சார்ந்த ஒரு புதிய உறவை அவர்கள் தொடங்கலாம். காரியங்களெல்லாம் மாறிக்கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்ட பின் புதிய முறையிலே சிந்திக்கத் தொடங்கிய பின்னும், தேவன் வேறொரு கதவைத் திறக்காமல், மற்றதை அடைப்பதில்லை என்பதைக் கண்டு கொள்வாள். அது கடந்த காலத்திலே அருமையாய் இருந்ததைப் போன்றே இருக்கும்.

எனக்கு அறிமுகமான ஒரு பெண் சமீபத்திலே “என் இருதயத்தை உடைக்க மாட்டாள் என்று நினைத்தவள் உடைத்து விட்டாள், உடைப்பாளென்று நினைத்தவள் உடைக்கவில்லை” என்று சொன்னாள். மற்றவர்கள் என்ன செய்வார்களென்று நினைக்கிறோமோ அதை எப்போதுமே செய்கிறதில்லை. அப்படி நடக்கும்போது, அது தேவனை நம்பும் படியான சிறந்த தருணமாகும்.நமக்குக் கடினமாக இருக்கும் காரியங்களிலே மக்கள் மாறலாம். ஆனாலும் அத்தகைய தருணங்களிலும் நாம் நேர்மையான

மனப்பான்மையைக் கொண்டிருந்து தேவனை தொடர்ந்து நம்புவோமேயென்றால் அது நமக்கு நன்மையானதாக மாறும். உண்மையாகவே தேவனை நம்புவது தான் எல்லாவற்றிற்கும் பதிலாகும். அது நாம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து நம் வழ்வில் மாற்றம் ஏற்படும் சமயங்களில் சமாதானமாக இருக்க நமக்குதவுகிறது.

தேவன் கடந்த காலத்திலே நடந்ததனைத்தையும் தற்போது நடந்து கொண்டிருப்பவற்றையும் எதிர்காலத்திலே நடக்க இருப்பவற்றையும் அறிந்திருக்கிறார். அவை அனைத்தின் மேலும் அவர் அதிகாரம் கொண்டிருக்கிறார். எனவே அவர் கவலையாகவோ, பொறுமையிழந்தவராகவோ காணப்படுகிறதில்லை. நம் பொறுமையின்மையும், கவலையும் நாம் அறிந்து கொள்ளாமலிருக்கும் காரியங்களில் தான் ஏற்படுகிறது. விசேஷமாக மாற்றங்கள் நடைபெறும் சமயங்களிலே அது நம்மை அசவுகரியமாக்குகின்றது. தேவன், எதிர்காலத்தில் நடைபெறும் காரியங்களைச் சொல்லக்கூடும். நம்முடைய வாழ்விலே காரியங்கள் எப்படி மாறக்கூடும் என்பதையும் வெளிப்படுத்தக்கூடும். ஆனால் அவர் அப்படி செய்கிறதில்லை. ஏனென்றால் நாம் அவரை நம்ப வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். அவரை நம்புவது நம் சிலாக்கியமாகும்.

நம் வாழ்விலே நமக்கு எதிர்பாராமல் மாற்றம் ஏற்படும் போது அல்லது திட்டமிட்ட மாற்றம் ஏற்படும் போது தேவன் மட்டுமே பதிலளிக்கக்கூடிய அநேக கேள்விகளை நம்மில் எழுப்புகிறது. நாமோ இப்போதே நம் வாழ்க்கைக்கான வரைபடத்தை அறிந்துகொள்ள விரும்புகிறோம்.ஆனால் நாம் நம் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் அனைத்தைப் பற்றியும் அறிந்து கொள்வோமேயானால், நம் அனுதின வாழ்வு சுவாரசியமில்லாமல் காணப்படும் அல்லது அதிக பயனுள்ளதாக மாறி விடும்.

தேவன் நல்லவர்; காரியங்கள் நடைபெறும் முன்பு அதைப்பற்றி நாம் அறிந்து கொள்வதுதான் சிறந்த காரியம் என்று அவர் அறிந்திருப்பாரேயானால் பின்னர் காரியங்களெல்லாம் அவ்விதம்

நடப்பதற்கான திட்டத்தை அவர் ஏற்படுத்தியிருப்பார். அவர் அப்படி செய்யவில்லையெனில் காத்திருப்பதும் ஆச்சரியப்படுவதுமே நமக்கான சிறந்த வழி என்பதைப் புரிந்து கொள்ளலாம். தேவனை நம்புவதாவது, நாம் அவரது வழிகளை நம்புவதாகும். நாம் விரும்புவதைக் கொடுக்க மட்டும் அவரை நம்பக்கூடாது. நம் வாழ்விலே அவருடைய சிறந்ததற்க்காக அவரை நம்ப வேண்டும். அது அவருடைய நேரம், அவர் கிரியை செய்யும் விதம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

மாற்றத்தை விரும்பாதவராக நீங்கள் இருப்பீர்களென்றால், மாற்றத்தைப் பற்றிய உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அது அநேகந்தரம் நம் வாழ்விலே சில அதிமுக்கியமான காரியங்களைப் பிறப்பிக்கின்றது

## ஆறு வற்றிப் போனது

நாம் நம் வாழ்க்கை எப்படி இருக்கிறதோ அப்படியே விரும்பலாம். ஆனால் மாறுவதற்கான தருணம் இது என்று தேவன் தீர்மானிப்பார். எலியாவுக்கு அப்படித்தான் நேர்ந்தது. ஆனால் அவன் அதைப் பற்றி குறை கூறியதாகவோ அதை விரும்பவில்லை என்று சொன்னதாகவோ எங்கேயும் குறிப்பிடவில்லை.

எலியா மிகவும் பஞ்சகாலத்திலே வாழ்ந்தார். ஆனால் தேவன் அற்புதமாக அவனைப் பராமரித்துக் கொண்டிருந்தார். அவன் ஒரு ஆற்றங்கரையிலே வாழ்ந்தான் ஒவ்வொரு நாளும் காகங்கள் அவனுக்கும் உணர்வு கொண்டுவந்து கொடுத்தது. நாளடைவில் அந்த ஆறு வற்றிப் போனது (1 இராஜா 17:7) தேவன் பின்னர் எலியாவிடம் அவனைப் பராமரிக்க ஒரு விதவை வசித்து வந்த வேறொரு பட்டணத்திற்குச் செல்லும் படி கூறினார். அவன் அங்கே சென்ற பொழுது அந்தப் பெண் தானும் தன் மகனும் இறந்து போகும் முன் தன் கடைசி வேளை உணவை உண்ணும் படி ஆயத்தம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். அது ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையாக இருந்தது. அதைப் பற்றி நானோ அல்லது மற்றவர்களோ

சந்தோஷப்படப்போவதில்லை. ஆனால் நான் சொன்னதைப் போன்று எந்தவிதத்திலும் எலியா குறைகூறவில்லை. அவன் அந்த விதவையிடம், அவள் தனக்கு முந்தி உணவளிப்பாயானால் அந்த பஞ்ச காலம் முழுவதும் உணவு குறையாது என்று சொன்னார் அவர் சொன்னதைப் போன்று அவள் செய்தாள். நிச்சயமாக அவளுக்கு நிறைய இருந்தது (1 இராஜா 17:8-16)

எலியாவின் வாழ்விலே நடைபெற்ற இந்த மாற்றமானது எலியாவை விட அந்த விதவைக்கு சாதகமாக இருந்தது. என் வாழ்விலும் உங்கள் வாழ்விலும் கூட, தேவன் ஏதோவொன்றை பிறருடைய நன்மைக்கென்று மாற்றுகிறார். அதனால் நமக்கு எந்த பயனும் இல்லை அல்லது கொஞ்சக் காலம் இரண்டு மூன்று அடி பின்வாங்கி இருக்கக்கூடும்; ஆனால் வேறொருவரின் வாழ்விலே மாற்றம் ஏற்பட அவர் நம்மை அவருடைய உதவியாளராக பயன்படுத்துகிறார். நாம் நமக்கான வேலையை முடித்தவுடன் நாம் விட்டு வந்த நிலையை விட வேறொரு நிலைக்கு தேவன் நம்மை உயர்த்துவாரென்று அவரை நம்பலாம்.

இயேசு நம் பாவங்களுக்காய் கிரயம் செலுத்தும் படியாய் நான் இந்த பூமிக்கு வந்து சிலுவையில் பாடுபட்டு மரிக்க சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது இருந்ததை விட பிதாவோடே பரலோகத்தில் இருப்பதை அதிகமாக விரும்பியிருப்பாரென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். ஆயினும் அவர் சந்தோஷமாக பிறருக்குச் செய்ய வேண்டியதை அதனால் பிறருக்கு ஏற்படும் நன்மையினிமித்தமாக ஏற்றுக் கொண்டார். நாம் தேவனால் பயன்படுத்தப்பட வேண்டுமென்று விரும்புவோமேயென்றால், நாம் விரும்பாத சில மாற்றங்கள் அவ்வப்போது நம்மிடையே ஏற்படுவது அவசியமாகிறது.

உங்களுடைய ஆறு வற்றிப் போகுமேயென்றால் மிகவும் அதிகமாக கவலைப்படாதீர். தேவன் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டிருக்கிறாரென்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். உதாரணமாக, ஒருவன் தான் செய்து கொண்டிருக்கும் வேலையை இழப்பானேயென்றால் அவன் மேல் திணிக்கப்பட்ட மாற்றத்தால்

பயப்படலாம். இதைப் புரிந்து கொள்ள இயலுகிறது. ஆனால் மாற்றம் ஏற்படும் வேளையிலே தொடர்ந்து தேவனை நம்புவது அந்த மாற்றம் அவனை முன்னோக்கி செலுத்தும் சக்தியாக அமைகிறது. எல்லா சூழ்நிலையிலும் தேவனை நம்புவது தான் சந்தோஷம், சமாதானம், வெற்றி நிறைந்த வாழ்வை வாழ கற்றுக் கொள்ள தேவையானதாகும்.

## புயல் முடிய காத்திருங்கள்

முப்பது ஆண்டுகளுக்கு முன் நாங்கள் அங்கமாக இருந்த சபையின் ஊழிய பொறுப்பிலிருந்து தேவன் நான் செய்யும் படி நடத்துவதாக நான் நம்பினதைச் செய்யும்படி விடுபட்டேன். அந்த சபையிலே ஊழியம் செய்ய எனக்கு நல்ல வாய்ப்புகள் இருந்தது. ஆனால் வேறொரு சூழ்நிலையிலே எனக்கு வேறு பல வாய்ப்புகள் இருக்கக் கூடும் என்று நம்பினேன் கொஞ்ச காலத்திற்கு அந்த மாற்றமானது எதையும் வளைவிக்காதது போன்று தோன்றியது. காலப்போக்கிலே காரியங்கள் மாறியது. நான் சரியான தீர்மானத்தை தான் எடுத்தேன் என்பதை நிரூபித்தது. ஆனால் நான் நினைத்ததற்கும் அதிகமான நேரத்தை அது எடுத்துக் கொண்டது. நீங்கள் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலே இருப்பீர்களென்றால், காரியங்கள் பலன் தரவில்லை என்று தோன்றுமேயென்றால், பொறுமையாக இருங்கள். நீங்கள் செய்யும்படி தேவன் உங்களை வழினடத்தும் காரியத்தை தொடர்ந்து செய்ய் உண்மையாக இருங்கள். உங்கள் விடிவுக்கு முன் விட்டு விடுவது இலட்சையானது. இப்படி யோசியுங்கள். வெளியே புயல் டிக்கும் போது நாம் உள்ளே இருக்க வேண்டும். அது நீங்கும் வரை காத்திருந்து விட்டு பின்னர் உங்கள் திட்டங்களை தொடங்குங்கள்.

நம் வாழ்விலே ஏற்படும் சில மாற்றங்கள் புயல்களைப் போன்று தோன்றும் . அவை திடீரென்று எதிர்பாராத வகையிலே நேரத்திலே ஏற்படும். நாம் திட்டமிட்டபடி நடைபெறாமல் தடுக்கும் எல்லா புயல்களுடன் வானிலை முன்னறிக்கையிலே இருப்பதில்லை. மாற்றத்தின் போது உணர்ச்சிகள் கொழுந்து விட்டு எரியும்போது எந்த

தீர்மானத்தையும் எடுக்கலாம் அவை அடங்கும் வரை காத்திருக்க வேண்டும். உணர்ச்சிகள் மேலும் கீழுமாக இருக்கும்போது தீர்மானங்களை எடுப்பது சிறந்ததன்று. மாற்றனளுக்கேற்ப நம்மை மாற்றிக் கொள்ள நமக்கு நேரம் வேண்டும். யோசிக்க நேரம் வேண்டும், தேவனிடமிருந்து கேட்க நேரம் வேண்டும். மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் முன்பு நீங்கள் சும்மா காத்திருக்கும் படி பரிந்துரைக்கிறேன். புதிய வழிகளுக்கு பழக உங்களுக்கு நேரம் கொடுங்கள். புதிய நபர்களுக்கு, பொறுப்புகளுக்கு பழகிக் கொள்ள நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். காத்திருக்கையிலே உங்கள் மனதை நேர்மறையான திசை நோக்கி வைத்துக் கொள்ளுங்கள். நல்ல காரியங்கள் நடக்கப்போகிறதென்று நம்புங்கள். நல்ல மனப்பான்மையைக் கொண்டிருங்கள்.

*மாற்றங்கள் ஏற்படும் சமயங்களிலே எந்தவொரு முக்கியமான தீர்மானத்தை எடுப்பதற்கு முன், நீங்கள் காத்திருப்பதை நான் பரிந்துரைக்கிறேன்.*

நம் வாழ்விலே நேரம் கொடுக்கும்போது காரியங்கள் எல்லாம் தானாக அடங்கிவிடும். எங்கள் ஊழியத்திலே சில முக்கியமான தலைவர்கள் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினர். அதில் எனக்கு எந்த விருப்பமும் இல்லை. ஆனால் அவர்கள் மேலிருந்த மரியாதையினிமித்தமாக அதைச் செய்யலாமென்று தீர்மானித்த தருணங்கள் நினைவில் இருக்கிறது. சிலகாலம் அது எனக்கு பிடிக்காமலிருந்தது. தேவன் ஏற்றுக் கொள்ளாத எதிர்மறையான குறைகூறும் உணர்வுகளை நான் எதிர்க்க வேண்டியிருந்தது. இறுதியாக பல மாதங்களுக்குப் பின் நான் ஒப்புரவானேன். நான் என் உணச்சிகளுக்கிணங்கி மாற்றங்களை விரும்பாததால், செய்யாமல் விட்டிருந்திருக்கலாம். அதைச் செய்யும் படியான அதிகாரத்தையும் நான் பெற்றிருந்தேன். ஆனால் இருதயத்தின் ஆழத்திலே நான் அப்படி இருக்ககூடாதென்று நான்

அறிந்திருந்ததால் காத்திருந்தேன். எனக்குள்ளாக இருந்த புயல் நிறைவுற்றது. மீண்டுமாக காரியங்கள் அமைதியானது. மாற்றங்கள் நன்றாக முடிந்தது. இறுதியிலே என்னுடன் வேலை செய்பவர்களின் அறிவுரையை கேட்டதற்காக நான் மகிழ்ந்தேன்.

ஒரு வேளை உங்கள் வேலை ஸ்தலத்திலே நீங்கள் எதுவும் செய்ய இயலாத நிலையிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது வேறொரு சூழ்நிலையிலே மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது அது உங்கள் வாழ்வலே ஒரு நபராகக் கூட இருக்கலாம் அதைப் பற்றி உங்களால் ஒன்றும் செய்ய இயலாமல் கூட இருக்கலாம். ஆனால் அதிலே சிறப்பாக இருக்கத் தீர்மானிப்பீர்களேயென்றால் நீங்களும் கூட புதிய சூழ்நிலை முந்தி இருந்ததை விட நன்றாக இருப்பதைக் காண்பீர்கள்.

சமீபத்திலே எப்போதும் போலில்லாமல் என் தலைமுடியானது சற்று குட்டையாக வெட்டப்பட்டு விட்டது. ஆரம்பத்திலே நான் அதை விரும்பவில்லை, ஆனால் இப்போதோ அதை நேசிக்கின்றேன். அது என்னை இளமையாக தோற்றமளிக்கச் செய்கிறது. பராமரிக்கவும் எளிமையாக இருக்கின்றது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக டேவ் மீசை வைத்திருந்தார். ஆனால் ஒரு நாள் அதை எடுத்து விட்டார். அவரது மேல் உதடு காணாமல் போய் விட்டதைப் போன்று தோன்றியது. நீண்ட நாட்களுக்கு எனக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் இப்போதோ அதை விரும்புகிறேன். அவர் இளமையாக தோற்றமளிக்கிறார். அவர் மீண்டும் மீசை வளர்ப்பதை நான் விரும்ப மாட்டேன். நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நாம் காரியங்களுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும். அப்படி செய்வோமானால் நாம் அதற்குப் பழகிக் கொள்வோம். வாழ்க்கையிலே நடைபெறும் மாற்றங்களை விரும்புவோம்.

அத்தியாயம் 19

# நான் உண்மையாகவே மாற விரும்புகிறேன்

*"ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கின்றனர், ஆனால் ஒருவரும் தன்னை மாற்ற நினைப்பதில்லை."*

- லியோ டால்ஸ்டாய்

நம் வாழ்விலே மாற வேண்டுமென்று சில காரியங்கள் இருக்கின்றன. அத்தகைய காரியங்களை மாற்ற தேவன் தீர்மானித்தால் நாம் மிகவும் சந்தோஷப்படுவோம். ஆனால் மாற வேண்டியவர்கள் நாமாக இருந்தால் என்னவாகும்?

என் சூழ்நிலைகளோ என்னைச் சுற்றியுள்ளவர்கள் மாறினாலோ நான் சந்தோஷமாக இருக்கக்கூடும் என்று நினைத்து பல ஆண்டுகளை வீணாக்கி விட்டேன். அவற்றை மாற்ற நான் முயன்றேன். தேவன் அதை மாற்ற வேண்டுமென ஜெபித்தேன். ஆனால் பின்னர் தேவன் என்னை மாற்ற விரும்புகிறார் என்பதைக் கண்டுபிடித்தேன். அந்த நேரம் வரை நான் மாற வேண்டியிருக்கிறது என்பதை நினைத்துக் கூட பார்க்கவில்லை. என் வாழ்விலே இருந்த சில ஏமாற்றங்களுக்கும், துக்கங்களுக்கும் அது தான் தீர்வாக இருந்தது. இறுதியாக என்னை நான் ஆராய்ந்த போது நான் மாறா விட்டால் எவரும் என்னை சந்தோஷமாக வைக்க முடியாது என்பதை உணர்ந்தேன். நான் எப்படி இருந்தேனோ அது எனக்கு பிடிக்கவில்லை. ஆனால் நான் சந்தோஷமாய் இல்லாமலிருந்ததற்கான காரணத்தைப் பிறர் மீதும், பிற காரியங்கள் மீதும் சுமத்த முயன்று அதில் அதிக நேரம் செலவழித்துக்

கொண்டிருந்ததால் உண்மையை முழுவதுமாக நான் இழந்து விட்டிருந்தேன்.

சாத்தான், நாம் பிறரிடம் என்ன தவறு இருக்கிறதென்பதை நோக்க விரும்புகிறான். ஏனென்றால் அப்போது நம்மிடம் என்ன தவறு இருக்கிறதென்பதைப் பார்க்க மாட்டோம். அவர்களைப் பற்றிய நம் தீர்ப்பானது நம்முடைய சொந்த தவறுகளுக்கு நம்மை குருடாக்கி விடுகிறது. இந்த உலகிலே என்னுடைய காலம் நிறைவேறின பின் நான் தேவன் முன் நின்று என்னைப் பற்றி கணக்கு ஒப்படைக்க வேண்டுமென்பது எனக்கு உதவியாயிருக்கிறது. (ரோமர் 14:12) அவர் என்னிடம் வேறு எவரைப் பற்றியும் கேட்கப்போவதில்லை. என்னைப் பற்றி மட்டும் தான் கேட்பார். எனவே என் வாழ்விலே தேவன் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்ய அனுமதிப்பதைத்தவிர பிறரையோ, பிறருடைய காரியங்களையோ மாற்ற வேண்டுமென்று முயற்சிப்பதை விட்டு விட வேண்டும்.

தேவன் நம்மிடம் நடத்தையைப் பற்றியோ மனப்பான்மையைப் பற்றியோ இடைபடும் போது அது மிகவும் குழப்பம்டையச் செய்வதாக இருக்கலாம். தேவனுடைய வார்த்தையானது இதை 'உணர்த்துதல்' என்று கூறுகிறது. அது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகும். நாம் ஏதோ தவறாக இருப்பதாக உணரலாம். ஆனால் அது என்னவென்று நமக்குத் தெரியாது. அதைக் கண்டறிய முயற்சிப்பதை விட்டு விட்டு தேவனை நம்புவதைப் பரிந்துரைக்கிறேன். மனதளவிலே நாம் அதிகமாக வாழ்கிறோமோ அவ்வளவு குறைவாக பகுத்தறியவும், தேவன் நமக்குக் காண்பிக்க விரும்புவதை உண்மையாக புரிந்து கொள்ள இயலாதவர்களாகவும் இருப்போம்.

உதாரணமாக நான் டேவிடம் ஏதோவொன்றைப்பற்றி வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். நான் என்னுடைய ஆவியிலே அசவுகரியமாக உணர்ந்தாலும் என்னுடைய தவறான நடத்தையைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் எனக்கு உணர்த்த முயற்சிக்கிறாரென்று நான் எண்ணுகிறதில்லை. ஏனென்றால் நான் என்னுடைய கருத்தைப் பற்றி அதாவது டேவ் தான் தவறு என்பதைப் பற்றி அதிக உறுதியாக நம்புகிறேன்.

அத்தகைய உணர்வுகள் எதற்காக என்பதை நாம் உடனடியாக கண்டறிந்து கொள்ள வேண்டும். அதுவரை நாம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை எதிர்ப்போம். நாம் என்ன செய்கிறோமென்பதை அறியாதிருப்போம். ஆனால் உண்மையை தேவன் நமக்குக் காண்பிக்க நாம் தேவனை நம்பும்போது, கற்றுக் கொள்வோம், சத்தியம் நம்மை விடுதலையாக்கும். நம் வாழ்வின் எந்த பகுதியிலும் வஞ்சிக்கப்படாத படி இருக்கவும், தேவன் தாமே இயேசு கிறிஸ்துவின் சாயலுக்குள்ளாக நம்மை மறுரூபப்படுத்தவும் ஜெபிப்பது ஞானமான காரியம் என்று நான் நம்புகிறேன்( ரோமர் 8:29-30)

## நீங்கள் மாற விரும்புகிறீர்களா?

நான் விதியை நம்புகிறேன், ஆனால் அது தானாக ஏற்படுவதில்லை. அதிலே நமக்கு எந்த பங்கும் இல்லை என்று நான் நினைக்கவில்லை. நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு வேலையை வைத்திருக்கிறார். ஆனால் நம்மை அவர் தம் விருப்பம் போல் உபயோகிக்கும் முன் நாம் மாற வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் படி என் வாழ்விலே தேவனுடைய அழைப்பைப் பெற்றுக் கொண்ட போது நான் மிகவும் மகிழ்ந்தேன். ஆனால் அவர் என் மூலமாக கிரியை செய்யும் முன் என்னிலே எவ்வளவு மாற்றம் செய்ய வேண்டியிருந்தது என்பதை அறியாதிருந்தேன்.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டிருக்கிறார். ஆனாலும் நாம் வழி விலகி தவறான திசையில் செல்லும் சமயங்களும் இருக்கிறது. தேவனுடைய உதவியால் நாம் எப்போதுமே நாம் அதைச் சரியாக மாற்றிக் கொள்வதற்காய் அவருக்கு ஸ்தோத்திரம். தேவனுடைய வழி நடத்துதலை நாம் பின்பற்றும் போது நம்முடைய தவறுகள் கூட ஆசீர்வாதமாக மாறுவதைக் காணலாம். வேதத்திலே தவறான பாதையிலே சென்று கொண்டிருந்த இரண்டு பேர் யாக்கோபும் பவுலும். ஆனால் தேவன் அவர்கள் வாழ்விலே கிரியை செய்ய அவர்கள் இருவரும் மாறினர். அவர்கள் பெரிய அளவிலான தவறு செய்திருந்தாலும் கூட, அற்புதமான வாழ்க்கையைப் பெற்றிருந்தனர்.

யாக்கோபு ஏமாற்றுகிறவனாக, வஞ்சிக்கிறவனாக இருந்தும் தேவனுடைய மனிதனாக மாறினான். (ஆதி 32:22-28) பவுலோ கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துகிறவனாக இருந்து ஒரு பெரிய அப்போஸ்தலனாக மாறினான் (அப் 7:5; 8:1-3; 9:1, 4, 17, 22) நீங்கள் மாறி உங்கள் இலக்கு நிறைவேற ஒருபோதும் காலம் தாமதமாவதில்லை.

*நீங்கள் மாற்றமடைந்து உங்கள் இலக்கு நிறைவேறுவதைப் பார்க்க ஒருபோதும் காலம் கடந்து விடவில்லை.*

அநேக வேளைகளிலே நம் சூழ்நிலைகளிலே ஏற்படும் மாற்றங்களை அனுபவிக்க முதலாவதாக நாம் மாற வாஞ்சிக்க வேண்டும். யாக்கோபும் பவுலும் தங்கள் சூழ்நிலைகளில் மாத்திரம் மாற்றங்களை அனுபவிக்கவில்லை. ஆனால் அவர்களிலே ஏற்பட வேண்டியிருந்த மாற்றங்களை அரவணைத்துக் கொண்டனர். உங்கள் வாழ்க்கையிலே காரியங்கள் நடைபெறுவதைப் பற்றி நீங்கள் கவலைப்படுவீர்களேயானால் உங்கள் வாழ்க்கையை தேவன் மாற்றும் படி ஜெபிப்பதற்கு முன் உங்களில் ஏதாவது அவர் மாற்ற வேண்டியிருக்குமேயானால் அதை மாற்றும் படி ஜெபியுங்கள். தேவன் நாம் யாராக இருக்க விரும்புகிறாரோ அப்படியாக நாம் விரும்புவோம். சீக்கிரமாகவே நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை செய்து கொண்டிருப்போம். நாம் எதை பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதைப் பெற்றுக் கொண்டிருப்போம். கிறிஸ்துவினுடைய சாயலுக்குள்ளாக நாம் மாற்றப்படுவது ஒரு நீண்ட வேதனை மிகுந்த பயணமாகும். ஆனால் நம்மிலே கிரியை செய்யும் ஆவியானவருடன் இணைந்து ஒத்துழைப்போமேயென்றால் அது நிச்சயமாகவே துரிதமாகவும் எளிமையாகவும் இருக்கும்.

சில சமயங்களிலே உங்கள் யாத்திரையிலே மாற்றமடைய வேண்டியவர் நீங்கள் மட்டுமே என்பது போல தோன்றும். விசேஷமாக தேவன் என்னில் மட்டுமே இடைபடுகிறாரென்று நான் உணர்ந்த

போது அது எனக்குக் கடினமாக இருந்தது. அதைப் பற்றி நான் அவரிடம் குறைபட்டுக் கொண்ட போது அவர் என் இருதயத்திலே ஜாய்ஸ், நீ உனக்கென்று நிறைய கேட்டிருக்கிறாய். வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்டார். ஆம் தேவன் எல்லோரோடும் கூடத்தான் கிரியை செய்கிறார். ஆனால் அவர் நம்மிலே ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களை எல்லோருமே கவனிப்பதில்லை, அரவணைத்து ஏற்றுக் கொள்வதில்லை. வேறொருவருடைய வாழ்க்கையிலே தேவன் என்ன செய்கிறார் என்ன செய்யவில்லை என்பதைப் பற்றி அதிகமாக கவலைப் பட்டுக் கொண்டிருக்காமல் உங்களிலே தேவன் செய்கிறதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உற்சாகப்படுத்துகிறேன்.

உங்கள் வாழ்க்கையிலே இந்த நேரத்திலே தேவன் கிரியை செய்து கொண்டிருப்பாரேயென்றால் நீங்கள் முன்பு இருந்ததைப் போன்று இப்போது இல்லை என்பது போல தோன்றும். ஆனாலும் நீங்கள் எப்படி இருக்கப் போகின்றீர்களோ அப்படியாக இன்னும் இல்லை. நடுவிலே மாட்டிக் கொண்டதைப் போல உணர்கிறீர்கள்! தேவன் உங்களுக்கு உதவாத படி உங்களால் பின்னாலும் முன்னாலும் செய்ய இயலவில்லை. தேவனோ தூங்கிக் கொண்டிருக்கும் படியாக தோன்றுகிறது. விட்டு விடும் படியான தருணம் இதுவன்று - தேவனை தொடர்ந்து நம்புங்கள்! தேவனை நம்புவதென்பது ஐந்து நிமிடத்திலே நடக்கும் காரியமன்று. அது ஒவ்வொரு நாளும் நடைபெறும் பயணமாகும். தேவன் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுகிறார். நீண்ட காலத்திற்குப் பின் நம் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து நாம் இருந்ததை விட உண்மையாகவே வேறு மாதிரி மாறிவிட்டோம் என்று உணரும் வரை நம்மில் ஏற்படும் மாற்றங்களை அனேகந்தரம் நம்மால் பகுத்தறிந்து பார்க்கக் கூட இயலவில்லை.நான் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே இல்லை, ஆனால் நான் எங்கே இருந்தேனோ அங்கே இல்லாததற்கு தேவனுக்கு நன்றி என்று அடிக்கடி சொல்வதுண்டு.

என் தகப்பனால் நான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்த படியால், ஆளுமைத் திறமையில் குறை பட்டிருந்தேன். அதை நான் ஒப்புக்

கொண்டு மாற்ற விரும்பிய பின்னும் அதற்கு நீண்ட காலம் பிடித்தது. உங்கள் முன்னேற்றம் மெதுவாக இருப்பது போல் தோன்றும் போது சோர்ந்து போகாதீர். தேவன் தாம் என்ன செய்கிறாரென்பதை அறிந்திருக்கிறாரென்பதை நம்பி, நீங்கள் மாறிக் கொண்டிருப்பதை அனுபவியுங்கள். நிர்ப்பந்தமாக இருப்பது மாற்றத்தைத் துரிதப்படுத்தாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நம் ஆவிக்குரிய முதிர்ச்சியின் பயணத்திலே, நாம் தேவனுடைய நேரத்தையும், வழிகளையும் தெரிந்து கொண்டிருப்பதைப் போன்று இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் இப்போதிருந்து அநேக ஆண்டுகளுக்கு பின் உங்கள் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும் பொழுது அவையெல்லாம் சம்பூரணமாக இருந்ததென்பதை உணருவீர்கள்.

கிறிஸ்துவின் சாயலுக்குள்ளாக மாற்றப்படுவதே எல்லாவற்றையும் விட பெரிய மாற்றமாகும். அது நம் வாழ்விலே அநேக பருவங்களினூடே கடந்து செல்கிறது. ஆனால் அவை ஒவ்வொன்றும் அதினதின் காலத்திலே உண்மையாகவே அழகாக இருக்கிறது. தேவன் நமக்கென்றே விசஷேமாக ஒரு திட்டத்தை வடிவமைத்திருக்கிறார். எனவே ஒவ்வொரு பருவத்தையும் அனுபவியுங்கள். தேவனை அனுபவியுங்கள். நீங்கள் பயணிக்கையிலே உங்கள் பயணத்தையும் அனுபவியுங்கள்!

> *கிறிஸ்துவின் சாயலுக்குள்ளக மறுரூபமாவதே எல்லா மாற்றத்தை விடவும் பெரிய மாற்றமாகும்.*

## காரியங்களை வித்தியாசமாக செய்யக் கற்றுக் கொள்ளுதல்

பல வருடங்களாக தேவன் என்னிலே ஏற்படுத்திய அற்புதமான

மாற்றங்களை நான் நினைத்துப் பார்க்கும் போது, அதில் ஒவ்வொன்றிலும், காரியங்களை நான் வேறு விதமாக செய்ய வேண்டியிருந்ததையும், நான் முன்பு செய்திருந்ததை விட வேறு விதமாக காரியங்களைச் செய்ய வேண்டியிருந்ததையும் உணர்கிறேன். உதாரணமாக நான் மிகவும் சுயநலமாக இருந்ததுண்டு. ஆனால் தேவன் என் சுயநலத்தின் ஆழத்தையும் அது என் வாழ்க்கையிலே ஏற்படுத்தின பிரச்சினைகளை வெளிப்படுத்திய போது நான் உண்மையாகவே மாற விரும்பினேன். ஆனால் சுய சித்தம் மெதுவாகத்தான் மரிக்கின்றது, அது அநேகந்தரம் மிகுந்த வேதனையளிக்கிறது. என்னுடைய சுயநலத்தின் ஆழத்தைப் பார்க்க எனக்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டது. காரியங்கள் நான் எதிர்பார்த்ததைப் போன்று நடைபெறாத போது, சந்தோஷமாய் ஒரு நல்ல மனப்பான்மையோடு இருப்பதை கற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டது. தேவனை நான் எவ்வளவு அதிகமாக நம்பக் கற்றுக் கொண்டேனோ அவ்வளவு சுலபமாக மாறினது, ஆனால் நிச்சயமாகவே அது ஒரே இரவிலே நடைபெறவில்லை!

சமாதானத்தை அனுபவிக்க, நான் மக்களுக்கும் காரியங்களுக்கும் ஏற்றவாறு என்னை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைக் கற்றுக் கொண்டேன். (ரோமர் 12:16). எப்போதுமே நான் நினைத்ததைப் பெற்றுக் கொள்வதை விட சமாதானத்தைக் கொண்டிருப்பது மேல் என்பதை முற்றிலுமாக உணர சில ஆண்டுகள் பிடித்தது. நாம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டிய காரியங்களுள் மிகவும் முக்கியமான காரியம் சமாதானம். அதை நாம் அதிகமாக விலை மதிப்போமேயென்றால் நாம் ஞானவான்களாக இருப்போம். சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள என்ன மாற்றங்கள் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய ஆயத்தமாக இருக்கும் அளவுக்கு சமாதானம் உங்களுக்குத் தேவையாக இருக்கிறதா?

ஒருவருடன் நான் ஒத்து செல்லாத போது நான் தான் சரி என்று நிரூபிக்க முயலுவதால் என் சமாதானத்தை நான் இழக்க நேரிடுமானால் அது பயனற்றதாகும். நாம் சரியானவர்கள் என்பதை நிரூபிப்பது தேவையென்றால் தேவன் அதை நிரூபிக்க அவரை

நம்பலாம். அப்படி இல்லையென்றால் நாம் எப்படி இருந்தாலும் திருப்தியாக இருக்கத் தெரிந்து கொள்ளலாம். கற்றுக் கொள்வது தீராததொன்றாகும். நம் வாழ்விலே அநேக பகுதிகளிலே நம் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டிருக்கிறோம். தேவனுடைய வழியைக் கற்றுக்கொள்வதும் அப்படித்தான். நான் இன்னும் அனுதினமும் அவருடனான என்னுடைய உறவைப் பற்றி கற்றுக் கொண்டுதானிருக்கிறேன். நீங்களும் அப்படித்தான் என்று நம்புகிறேன்.

## மாற்றத்தின் செயல்பாடு

நாம் மாற வேண்டுமென்று விரும்பி பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்விலே கிரியை செய்ய அனுமதித்தவுடன் கற்றுக் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான பாடம் இருக்கிறது. நம்மை நாமே மாற்றிக் கொள்ள இயலாது. உண்மையான மாற்றத்திற்கு நம்மில் என்ன நடைபெற வேண்டுமோ அதை தேவன் நடப்பிக்கும் படி அவரை நம்ப வேண்டும். நம்மில் அநேகர் போராடுகிறோம். பின்னர் விரக்தியடைகிறோம், ஏமாற்றமடைகிறோம். ஏனென்றால் நாம் நாமாக மாற முயற்சிக்கின்றோம், தோற்றுப் போகின்றோம். நாம் கொஞ்சம் முன்னேறுகிறோம், பின்னர் பழைய பழக்கத்திற்குள்ளாகவே விழுந்து விடுகிறோம். எனவே நாம் இன்னும் அதிகமாய் முயற்சிக்கத் தீர்மானிக்கின்றோம். நாம் எப்படி மாறக்கூடும் என்பதற்கு புதிய திட்டங்களையும் சூத்தியங்களையும் உருவாக்குகிறோம், ஆனாலும் நாம் வெற்றி பெறுகிறதில்லை.

நாம் மாற விரும்பினாலும் மாற முயற்சி செய்தாலும் ஏன் மாற இயலுகிறதில்லை? நாம் செய்ய விரும்பாததைச் செய்யாமலிருக்க நம்மால் ஏன் முடிகிறதில்லை? உதாரணமாக நான் யோசிக்காமல் பேசுகிறதால் என் உறவுகளிலே பிரச்சினை ஏற்படுகிறது என்று உறுதியாக நான் நம்புவதால் அந்த தன்மை மாற விரும்புகிறேன். அதை ஏன் என்னால் செய்ய இயலாது? அதற்கான பதில் எளிமையானது. தேவனில்லாத படி வெற்றி பெற இயலாது. நாம்

செய்யும் அனைத்திலும் நாம் உதவி கேட்கவும், அவருடைய உதவியைப் பெற்றுக் கொள்ளவும் அவர் விரும்புகிறார். தேவன் மாத்திரமே நம்மை உண்மையாக மாற்ற இயலும், ஏனென்றால் அது உள்ளே நடைபெறும் கிரியையாகும்.

நாம் தவறான காரியங்களைச் சொல்வதால் வாக்குவாதங்கள் ஏற்படாமலிருக்க, மௌனமாக இருக்க உண்மையாகவே முயற்சிப்போமேயானால் கொஞ்ச காலத்திற்கு வெற்றி பெறலாம். ஆனால் கவனமாக இல்லாத தருணத்திலே அந்த பிரச்சினை மீண்டுமாக தலையெடுக்கும். ஆனால் நம் எல்லா சம்பாஷனைகளிலும் தேவன் நமக்கு உதவ கற்றுக் கொண்டால், அவர் நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை மாற்றுகிறார் என்பதைக் கண்டு கொள்ளலாம். ஒரு நாள் நம் பிரச்சினைகள் ஒரு பொருட்டல்ல என்பதை உணர்வோம். நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவதை விட வேறு ஒன்றும் செய்ய இயலாது. ஏனென்றால் அவரே அதைச் செய்தாரென்று நாம் உணர்வோம். தேவனிலே நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே உண்மையான மாற்றத்தை அனுபவிப்பார்கள். தேவனுடைய திட்டம் இப்படியாக இருக்கின்றது. "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் அதிக கனியைக் கொடுப்பீர்கள். என்னால்ன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." (யோவான் 15:5)

நாமாகவே காரியங்களைச் செய்ய விரும்புவது மனித இயல்பு, அதனால் நம்மை பற்றி நாம் பெருமை பட்டுக் கொள்ளலாம், ஆனால் நாம் எல்லா காரியங்களிலும் அவரை நம்பவும் பின்னர் அவர் செய்த அனைத்திற்காகவும் அவருக்கு நன்றி செலுத்தவும் வேண்டுமென்று விரும்புகிறார்.

நீங்கள் உங்களுடனே போராடிக் கொண்டிருக்கிறீர்களா? உங்களில் இருக்கும் காரியங்களையோ அல்லது தேவனுடைய சித்தத்தோடு இணைந்து செல்லாத உங்களிலிருக்கும் காரியங்களையோ மாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கலாம் அல்லது ஒருவர் மீது கோபமாக இருக்கலாம், அவரை மன்னிக்க முயன்று கொண்டிருக்கலாம், வேறு

பல காரியங்களாக இருக்கலாம். நாம் முயற்சிப்பதால் மட்டுமே மாற இயலாது; நமக்கு தேவனுடைய உதவி தேவை.

*நமக்கு உண்மையான வெற்றி வேண்டுமென்றால் நாம் நம்முடைய சார்பற்ற சுதந்திரத்தை இயேசுவின் மேல் சார்ந்திருக்க விட்டு விட வேண்டும்.*

நம்முள் என்ன நடைபெற வேண்டுமோ அதை அவர் நடப்பிக்கும் படி ஜெபிக்கலாம். நம் நம்பிக்கையை அவர் மீது வைக்கலாம். நாம் எடுக்கும் எல்லா முயற்சியும் தேவனை சார்ந்ததாக இருக்க வேண்டும். இது எளிமையானதைப் போன்று தோன்றலாம், ஆனால் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அதிக கடினமான காரியங்களில் இதுவும் ஒன்று. ஏனென்றால் மாம்சமானது அதிக சுதந்திரமாக செயல்படக்கூடியது. நமக்கு உண்மையாய் வெற்றி வேண்டும் என்றால் நம்முடைய சுதந்திரத்தைச் சார்ந்திருக்கும் நிலையை விட்டு விட்டு அவரைச் சார்ந்து கொள்ள வேண்டும். சார்ந்திருக்கக் கற்றுக் கொள்! நம்பக் கற்றுக் கொள்!

அப். பவுல் ரோமர் 7:15-25லே தேவன் தாமே அவரைக் கிறிஸ்து மூலமாக விடுவிப்பார் என்பதைக் கற்றுக் கொண்டதை நம்முடன் பகிர்ந்து கொள்ளுகிறார். பவுல் சரியானதை செய்ய முயன்று தோற்றுப் போனது அவருக்குள்ளே நடந்த போராட்டம்.

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.

ரோமர் 7:24-25

இந்த வசனங்களிலே காணப்படும் தொனியானது, பவுல் சரியான பதிலை தான் கண்டுபிடித்ததைப் பற்றி அதிக உறுதியுடனும்

நிச்சயத்துடனும் இருக்கிறதாக எனக்கு தெளிவாக தோன்றுகிறது. அவருக்குள்ளே என்ன நடைபெற வேண்டுமோ அதை தேவன் தாமே செய்ய முடியும்! நம்மில் என்ன செய்யப்பட வேண்டுமோ அதை தேவன் தாமே செய்ய இயலும்!

## கேட்டுப் பெற்றுக்கொள்

நீங்கள் மாற வேண்டுமென்று விரும்பும்போது தேவன் அதை பார்க்கிறார், சந்தோஷப்படுகிறார். அடுத்த படி, என்ன செய்யப்பட வேண்டுமோ அதை தேவன் செய்யவும், மாறுவதற்கு உங்களுக்குத் தேவைப்படும் பெலத்தை அவர் கொடுக்கவும் அவரை நம்புவதாகும். அநேக வேளைகளிலே நாம் மாற விரும்பும்போது நாம் தேவனை அதற்குள் அனுமதிக்காமல் நாமாகவே முழுவதையும் செய்ய முயற்சிக்கிறோம். அது அவ்வாறு நடைபெறுகிறதில்லை!. அப்படி அப். பவுலுக்கு நடக்கவில்லை, நமக்கும் நடக்காது. எனவே தேவனுடைய சித்தம் நம்மில் நடைபெற நாமாக முயற்சி செய்யாமல் அவர் அதை நம்மில் நடத்த வேண்டுமென்று அவரை நம்ப வேண்டும்.

யாக்கோபு 4:6லே தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் பாவத்தை எதிர்க்கவும், நம் விசுவாசத்தையும், இரட்சிப்புக்கான நன்றியையும் பிரதிபலிக்கும் ஒரு கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ அவர் நமக்கு அதிகமான கிருபையைக் கொடுக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிருபையானது தேவனுடைய தயவும், உதவும் வல்லமையுமாகும். அது நம் வாழ்விலே தொடர்ந்து பாயாவிட்டால், நாம் விரக்தியடைந்து விடுவோம்.

இந்த சத்தியத்தை நான் கண்டுபிடித்த போது எவ்வளவு சந்தோஷப்பட்டேன் என்பது என் நினைவில் இருக்கிறது. நான் இப்படியாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்று நானாக நினைத்துக் கொண்டிருந்த படியால் அதிகமாக முயன்றேன், ஆனால் நான் தொடர்ந்து தோற்றுப் போனேன், மிகவும் குழப்பமடைந்தேன், விரக்தியுமடந்தேன். ஆயிரம் முறை முயன்று தோற்றுப் போனேன். நான் இனி செய்யப் போகிறதில்லை என்று

சொன்னேன். பின்னர் இன்னும் அதிகமாக முயன்றும் தோற்றுப் போனேன். ஆனால் இறுதியிலே என்னுடைய திட்டங்களிலே தேவனுடைய கிருபை இல்லாதிருப்பதைக் கற்றுக் கொண்டபோது, என்னை மாற்றும் படி அவரை நம்பத் தொடங்கினேன். வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள தொடங்கினேன்.

'அற்புதமான கிருபை' எவ்வளவு அழகாக இருக்கிறது! என்ற அருமையான பாடல் சொல்வதைப் போன்று கிருபை மிக அருமையானதாக இருக்கிறது. நம் வாழ்விலே கிருபைக்காய் தேவனிடம் கேட்க வேண்டும். யாக்கோபு 4:2 சொல்லுகிறது "நீங்கள் கேட்காததால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்." இது மிகவும் எளிமையானதே! கேளுங்கள்! உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படி கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் யோ 16:24 நான் மாறப் போராடிக் கொண்டிருந்த போது, முயன்று கொண்டிருந்தேன் ஆனால் கேட்கவில்லை.... நம்பவில்லை. பொதுவாக எல்லா கரியங்களிலும் தேவனை நம்புவதுதான் குறைவு படும் காரியமாக இருக்கிறது. நம்முடைய எல்லா மாமிச ரீதியான முயற்சிகளையும் தேவனை நம்புவதால் விட்டு விடும் போது, கிடைக்கும் பலனைக் கண்டு ஆச்சரியமடைவோம்!

## நம்முடைய பங்கு என்ன?

நாம் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும்போது கிறிஸ்துவின் சாயலுக்குள்ளாக மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகிறோமென்று தேவனுடைய வார்த்தையால் கற்பிக்கப்படுகிறோம். (2 கொரி 3:18) தேவனுடைய வார்த்தைக்கு நம்மை மாற்றக்கூடிய வல்லமை இருக்கிறதென்று நம்புவதே நம்முடைய பங்காகும். தேவனுடைய வார்த்தையை உங்க்ள் இருதயத்திற்குள்ளே மருந்தை உட்கொள்வதைப் போல் உட்கொண்டு அது கிரியை செய்யும் என்று நம்புங்கள். நம் ஆத்துமாவை மாற்றக்கூடிய வல்லமை தேவனுடைய வார்த்தைக்கு இருக்கிறதென்று யாக்கோபு சொல்லுகிறார் (யாக்கோபு 1:21).

தேவனுடைய வார்த்தையை நம்புவது அவரை நம்புவதற்கு சமம்! அனுதின ஆவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதைப் போன்று வார்த்தையை படிக்காதீர். ஆனால் மாறாக அது வல்லமையால் நிறைந்திருக்கிறது என்ற விளங்கிக்கொள்ளுதலோடு அதை அணுகுங்கள். அது உங்களுடைய அன்றாட உணவை நீங்கள் ஏற்றுக் கொள்வதைப் போல ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் நம்முடைய ஆவிக்குரிய பெலத்திற்காய் தேவைப்படும் உண்வு அது. உங்களுக்குள்ளே வேலை செய்ய வேண்டியதை அது செய்யும் என்று நம்புங்கள். மருத்துவரின் மருந்துச்சீட்டிலிருக்கும் மருந்துகளை நம் சரீரத்திலே சுகத்தைக் கொண்டு வரும் என்று நம்புவதைப் போன்று தேவனுடைய வார்த்தையிலிருக்கும் மருந்து (சுகமாக்கும் வல்லமை) நம் ஆத்துமாக்களை சுகமாக்கும் என்று நம்பலாம்.

நீங்கள் வாசித்துக் கொண்டிருப்பதை ஜெபமாக மாற்றுங்கள் என்று உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன். உதாரணமாக பிறரை நேசிக்க வேண்டுமென்ற குறிப்புகளை நீங்கள் வாசிக்கையிலே சும்மா வாசிக்காதீர்கள். ஆனால் பிறரை நேசிக்க தேவன் உங்களுக்கு உதவ வேண்டுமென்று கேளுங்கள். உங்கள் எதிராளிகளை மன்னிக்க வேண்டுமென்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி நீங்கள் வாசிக்கையிலே அதை ஜெபமாக மாற்றி விடுங்கள். எப்போதுமே மன்னிக்க துரிதமாகவும் இரக்கத்திலே தாராளமாகவும் இருக்க அவர் உங்களுக்கு உதவ தேவனிடம் கேளுங்கள். இப்படி செய்யும் போது நாம் தேவனுடைய வார்த்தையை படிப்பதோடில்லாமல் அதை நம் வாழ்விலே நிதர்சனமாக்க தேவனிடம் கேட்கின்றோம்.

நாம் செய்யக் கூடிய மிக வல்லமையான காரியம் என்னவெனில் தேவனை சார்ந்து அவர் மேல் நம்பிக்கை வைப்பதாகும்.

அத்தியாயம் 20

# மக்களை மாற்ற தேவனை நம்புதல்

"மக்கள் எங்கே இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அங்கே இருக்கும் போதல்ல, அவர்கள் இருக்கின்ற இடத்திலே அவர்களை மதியுங்கள்"

- ஜான் மேக்ஸ்வெல்

இவ்வுலகிலே மக்கள் செய்யக் கூடிய சுலபமான காரியங்களில் ஒன்று மற்றவரின் குறைகளை கண்டு பிடிப்பதாகும். இது மிகவும் துக்கக்கரமான காரியங்களில் ஒன்றாகும். நம்மனைவரிடமும் குற்றம் குறைகள் உண்டு, ஆயினும் பிறரை மாற்ற நாம் எடுக்கும் முயற்சியிலே, நம் வாழ்விலே மாற்றம் ஏற்பட வேண்டிய காரியங்களுக்கு நாம் குருடராகி விடுகிறோம்.

தேவன் மாத்திரமே உங்களை உண்மையாகவும் பலனளிக்கக்கூடிய விதத்திலும் மாற்ற முடியும். ஏனென்றால் மாற்றம் என்பது உள்ளிருந்து ஏற்படும் ஒன்றாகும். மனிதனின் நடவடிக்கை உண்மையாக மாற அவனுடைய இருதயம் மாற வேண்டும். தேவன் மாத்திரமே புதிய இருதயத்தைக் கொடுக்கமுடியும். எசே 36:26 ல் "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." அப்படியென்றால் தேவன் நமக்கு அவருடைய இருதயத்தையும் ஆவியையும் கொடுக்கிறார். கடினமான கல்லான இருதயத்தை நம்மிடம் இருந்து எடுத்து விட்டு அவருடைய தொடுதலுக்கும் சித்தத்திற்கும் முக்கியத்துவத்தை அளிக்கும்

இருதயத்தைக் கொடுக்கின்றார். இந்த மாற்றம் ஏற்படாமல், மக்கள் ஒருவரையொருவர் உண்மையாக நேசிப்பார்களென்றோ, சமாதானமாக இணைந்து செல்வார்களென்ற நம்பிக்கையோ இருக்காது.

உங்கள் வாழ்விலே இவர் மாற வேண்டும் என்று நீங்கள் விரும்பும் ஒரு நபர் இருக்கலாம். அவர் கணவனாகவோ, மனைவியாகவோ, பிள்ளைகளாகவோ, பெற்றோராகவோ, உறவினராகவோ, நண்பராகவோ அல்லது உடன் பணியாற்றுபவராகவோ இருக்கக் கூடும். மக்கள் தாங்கள் விரும்பினாலொழிய மாற மாட்டார்கள். எனவே அதற்கான முதற்படி அவர்களுக்காக ஜெபிப்பதாகும். அவர்கள் தங்கள் நடக்கையில் மாற வேண்டுமென்ற விருப்பத்தை தேவன் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்க வேண்டும். அதன்பின் அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களுக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்க வேண்டும். அவர்களிலே இருக்கக் கூடிய, உங்களுக்கு விருப்பம் இல்லாத காரியங்களை அல்ல, நல்ல குணங்களைக் கவனிக்க வேண்டும்.

## தாழ்மையுடன் ஜெபியுங்கள்

பிறருக்காக ஜெபிப்பது எல்லா மனத்தாழ்மையுடனும் செய்யப்பட வேண்டும் அல்லது விழுந்து விடுவோம். 1 கொரி 10:12 சொல்லுகிறது. “நிற்கிறேன் என்று நினைக்கிறவன் விழாமலிருக்கும் படி எச்சரிக்கையாயிருக்கக் கடவன்.” நாம் பொதுவாக இப்படியாக ஜெபிப்பதுண்டு.

> “பிதாவே நீர் இவர்கள் ____________________ அவர்கள் உண்மையாகவே மாற வேண்டியிருந்தால் மாற்றும் படி ஜெபிக்கின்றேன். அவர்களிடம் இல்லையெனில் என் இருதயத்தை மாற்றி, நான் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பார்க்க உதவும். எவ்விதத்திலாவது நான் மாற வேண்டியிருந்தால் என்னை மாற்றுவீராக. ஆமென்!”

தேவனுடைய வார்த்தையிலே தெளிவாக கொடுக்கப்பட்டிருப்பதால் பாவம் என்று நாம் அறிந்த அந்த காரியங்கள் இருக்கின்றன. ஆனால் சிலரை நமக்கு பிடிக்காது என்ற காரணத்தினால் அவர்களில் அநேக காரியங்கள் நமக்கு பிடிக்காமலிருக்கிறது. மக்கள் நம்மைப் போன்று இல்லாமலிருக்கும் போது அல்லது வேறு கருத்தைக் கொண்டிருக்கும் போது அவர்களிலே குற்றம் கண்டுபிடிப்பது மிக சுலபம். ஆனால் நம்முடைய வட்டத்தை விரிவுபடுத்தி நாம் உற்று நோக்கினால் எல்லா மனிதரிடமும் விலை மதிப்பு இருக்கிறதென்பதைக் கற்றுக் கொள்வோம்.

நம் வாழ்விலே நாம் கொண்டிருக்கும் மிகப் பெரிய போராட்டங்களில் ஒன்று, மற்றவர்களிடம் நாம் விரும்பாத காரியங்கள் தாம். நம்முடைய நலனுக்காக அவர்கள் மாற வேண்டுமென்று விரும்புகிறோம், ஆனால் அந்த மனப்பான்மை எவ்வளவு சுயநலமானது என்பதை நாம் நினைப்பதே இல்லை. அப்படியாகத்தான் நானும் இருந்தேன். நம்முடைய பெருமையினிமித்தமாக நாம் செய்வது தான் சரி, மற்றவர்கள் நாம் செய்வது போல் தான் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம். இந்த ஒரு மனப்பான்மையே அநேக விவாகரத்திற்குக் காரணமாக இருக்கிறது. பொதுவாக குடும்பங்களிலும் உறவுகளிடமும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது.

> *"தேவன் என்னை என்னிடம் அறிமுகம் செய்தது தான் என் வாழ்க்கையிலே ஏற்பட்ட மகா பெரிய அதிர்ச்சிகளுள் ஒன்று"*

மனத்தாழ்மைக்கு முதற் படி, பிறரிடம் இருப்பதை விட என்னிடம் அதிக தவறுகள் இருக்கலாம் என்று உணர்வதேயாகும். நாம் நம்முடைய தவறுகளைப் பார்க்கிறதில்லை. ஏனென்றால் பிறரிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதையே நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். நம் நடத்தையானது அற்புதமானதாக இல்லாமலிருக்கும் போது நாம் சாக்குப் போக்கு சொல்கிறோம். ஆனால் அதே அளவிலான இரக்கத்தை நாம் பிறருக்குக் கொடுப்பதில்லை.

தேவன் என்னை எனக்கு அறிமுகப்படுத்திய போது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நான் டேவ் மாற வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவன் என் ஜெபத்தைத் தடுத்தார். அதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நான் ஜெபிக்க முயன்று கொண்டிருந்தேன் தேவன் என் ஜெபத்தைத் தடுத்தார். இப்போது பின்னோக்கிப் பார்க்கும் போது நான் எவ்வளவு மதியீனமாக இருந்திருக்கிறேன் என்பதை உணர்ந்து வெட்கப்படுகிறேன். ஆனால் அந்த சமயத்திலே நான் முற்றிலும் அறியாதவளாக இருந்தேன். டேவுக்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவன் என்னைத் தடுத்து, டேவ் ஒரு பிரச்சினை இல்லை என்றும் நான் தான் பிரச்சினை என்றும் கூறினார். நான் அதிர்ச்சியடைந்தேன். அடுத்த மூன்று நாட்களுக்கு அதை விளக்கிக் காட்டினார். நான் எவ்வளவு சுயநலக்காரியாக இருக்கிறேன் என்றும் நான் நினைத்தது போல் நடைபெற்றால் தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்பதையும் வெளிப்படுத்தினார். அந்த மூன்று நாட்களின் பெரும் பகுதியிலே நான் அழுது கொண்டிருந்தேன். ஆனால் என் வாழ்விலே நடைபெற்ற சில ஆரோக்கியமான மாற்றங்களின் தொடக்கமாக அது இருந்தது.

## இரக்கத்தின் வல்லமை

இரக்கமானது எப்போதுமே நியாயத்தீர்ப்பின் மேல் வெற்றி சிறக்கிறது (யாக் 2:13). வேறு விதமாக சொல்ல வேண்டுமானால் இரக்கம் நியாத்தீர்ப்பை விட மேலானது. நம்முடைய சொந்த பெலவீனம், இயலாமை, தவறுகளின் ஆழத்தை உண்மையாகவே நாம் உணராதிருந்தால் பிறருக்கு இரக்கத்தை நாம் காட்ட இயலும் என்று நான் நினைக்கவிலை. ஒவ்வொரு நாளும் தேவன் நமக்கு எவ்வளவு இரக்கத்தைக் காண்பிக்கிறாரென்பதை உணரும்போது அது நாம் பிறருக்கு இரக்கத்தைக் காட்டுவதில் தாராளமாக இருக்கச் செய்கிறது. இரக்கத்தைப் பற்றி அறிந்திராத ஒரு அரசனும், அதை அறிந்திருந்த ஒரு தோட்டக்காரனைப் பற்றிய ஒரு அழகிய கதை இருக்கிறது.

ஒரு அரசனுக்கு ஒரு பெரிய தோப்பு இருந்தது. அதிலே அவன் வித விதமான பழ மரங்களை நட்டிருந்தான். அந்த பழங்களை பராமரிக்க

ஒரு திறமைசாலியான தோட்டக்காரனை நியமித்தான். ஒவ்வொரு நாளும் தோட்டக்காரன் ஒவ்வொரு மரத்திலிருந்தும் நன்கு கனிந்த சாறு நிறைந்த பழங்களை பறித்து கூடையிலே வைப்பான். ஒவ்வொரு காலை வேளையிலும் அரசவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தோட்டக்காரன் பழங்களை அரசனிடம் கொடுப்பதுண்டு.

ஒரு நாள் அந்த தோட்டக்காரன் செரிப்பழங்களைப் பறித்து அவற்றை அரசனிடம் எடுத்துச் சென்றான். அரசனின் மனநிலையோ அவ்வளவு நன்றாக இல்லை. அவன் ஒரு செரியை எடுத்து சுவைத்த போது அது புளிப்பாக இருந்தது. எனவே அவன் தன் கோபத்தைத் தோட்டக்காரனிடம் காட்டினான். கோபத்திலே அவன் ஒரு செரியை எடுத்து அதை அந்த தோட்டக்காரன் மீது எறிந்தான். அது அவன் நெற்றியிலே பட்டது, ஆனால் தோட்டக்காரனோ தேவன் இரக்கமுள்ளவர் என்று சொன்னான்.

மன்னர் விசாரித்தபோது, நீங்கள் காயம் அடைந்திருக்க வேண்டும், ஆனால் கடவுள் சொல்கிறார்: "கடவுள் இரக்கமுள்ளவர். ஏன்?

அவன் சொன்னான். மரியாதைக்குரியவரே, இன்று நான் உங்களுக்கு அன்னாசிப்பழம் கொண்டு வரலாமென்றிந்தேன் ஆனால் என் மனதை மாற்றிக் கொண்டேன். அதை என் மீது எறிந்திருப்பீர்களேயென்றால் நான் மிகவும் மோசமாக காயப்பட்டிருபேன். நான் என் மனதை மாற்றிக் கொள்ள தேவன் இரக்கமுள்ளவராக இருந்தார். காரியங்களெல்லாம் நன்றாக தோன்றாத போதும் தோட்டக்காரன் தேவனை நம்புவதற்கு கற்றுக்கொண்டிருந்தான். காரியங்கள் மோசமாக இருக்கக்கூடும், தேவனுடைய இரக்கம் இல்லாதபடி அவை அப்படித்தானிருக்கும்.

நாம் பிறருக்கு இரக்கம் காண்பிக்க தேவன் நமக்கு இரக்கம் காட்டுகிறார். அவர் நமக்கு உதாரத்துவமாய் கொடுக்கிறதை நாம் பிறருக்கு கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அவர் நம்மை மன்னிக்கிறார், அது போல் நாமும் மன்னிக்க எதிர்பார்க்கிறார். நம்மை எவ்வித நிபந்தனையுமின்றி நேசிக்கிறார், நாமும் அவ்வாறே நேசிக்க வேண்டுமென விரும்புகிறார். நம்முடைய தோல்விகளுக்கு அவர்

இரக்கத்தைக் கொடுக்கிறார். அதனால் நாம் நம் வாழ்க்கையை அனுபவிக்கவும் அவரை நன்றாக பிரதிபலிக்கவும் ஏதுவாக்கப்படுகிறோம். அந்த இரக்கமற்ற அரசன் அந்த தோட்டக்காரனின் இரக்கத்தைக் குறித்து யோசித்திருக்கலாம். நாம் மக்களுக்கு இரக்கத்தைக் காண்பிக்கும்போது அது அவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. விசஷேமாக அவர்கள் தண்டனைக்குட்பட்டவர்கள் என்று அறிந்திருக்கும்போது அதிக ஆச்சரியப்படுத்துகிறது.

உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் இரக்கம் காண்பிக்க வேண்டிய நிலையிலே யாராவது இருக்கிறார்களா? இரக்கமானது ஒரு ஈவு. அதை நாம் சம்பாதிக்க முடியாது. அதைப் பெற்றுக்கொள்ளத் தகுதியும் கிடையாது. ஆனால் அது இலவசமாக கொடுக்கப்படும் போது மக்கள் தேவ அன்பின் வல்லமையை அனுபவிக்கின்றனர்.

நான் சிறுமியாக இருந்த போது பாலியல் துஷ்பிரயோகம் செய்த என் தகப்பனை மன்னிக்கும் படி எனக்கும் டேவிற்க்கும் கர்த்தர் கிருபை செய்தார். நாங்கள் அவருடைய முதிர்வயதிலே அவரிடம் இரக்கம் பாராட்டினோம். அவர் மரிக்கும் வரை அவரைப் பராமரித்தோம். அவர் எங்களிடம் இவ்வாறாக சொன்னார். “நான் செய்ததற்காக அநேகர் என்னைக் கொன்று போட விரும்பியிருப்பார்கள். ஆனால் நீங்கள் எப்போதுமே என்னிடம் கனிவாக இருந்திருக்கின்றீர்கள்” என்றார். அவர் மரிப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இயேசுவை ஏற்றுக் கொண்டார், அதற்காய் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தேவன் எங்கள் மூலமாக அவருக்கு இரக்கம் காண்பித்தார். தேவன் நம் மூலமாகவும் நம்முடன் இணைந்தும் செயல்படுகிறார். நம் ஒவ்வொரையும் பயன்படுத்த அவர் விரும்புகிறார். உலகிலே கோடிக்கணக்கானோர் காயப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஏதோவொரு மதத்தைப் பின்பற்றி ஏமாற்றமடைந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இயேசுவை சந்திப்பார்களேயென்றால் ஒருபோதும் அவ்வாறு இருக்க மாட்டார்க்ள். உங்களுடைய மாதிரியின் மூலமாகத்தான் அவர் ஒருவரை அடைய முடியும். அவர்களுக்கு இயேசு எப்படி பட்டவர் என்பதை வெறுமனே

சொல்வதற்கு பதிலாக அவரை அவர்களுக்குக் காண்பிப்போம். செயல்களின் மூலம் காட்டாவிட்டால் நம் வார்த்தை வலிமையற்றதாக ஆகி விடும்.

என் தகப்பன் வாழ்க்கையின் பெரும் பகுதியிலே மோசமானவராக இருந்தபடியால் அவருடைய நடத்தைய மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அவரிடம் பல ஆண்டுகளாக பேச முயன்ற அநேகரை அறிவேன். அதினால் எந்த பிரயோஜனமும் இருக்க்வில்லை. ஆனால் அவர் தேவனுடைய இரக்கத்தை அனுபவித்த போது அது அவருடைய கடினமான இருதயத்தை உருக்கிற்று. தேவனால் அவரை மாற்ற முடிந்தது. அவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பின் உண்மையாகவே மாறினார். அவர் மேலும் மூன்று ஆண்டுகள் தான் வாழ்ந்தார். அவர் இன்று மோட்சத்தில் இருப்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## இலவசத் தேர்வு

தேவன் மக்களை அவர்களது சித்தத்திற்குப் புறம்பாக, காரியங்களை செய்ய வலியுறுத்துவதில்லை. நாமும் அவ்வாறு செய்யக் கூடாது. அவர்களையும் உங்களையும் கஷ்டப்படுத்தும் கெட்ட நடக்கையைப் பற்றி ஒருவருடன் பேச முயற்சிப்பதிலே தவறில்லை. ஆனால் அவர்கள் நம் வார்த்தையைப் புறக்கணித்தால், அவர்கள் மாற வேண்டுமென்று அவர்களை உணர்வடையச் செய்ய முயற்சித்துக் கொண்டேயிருப்போமேயென்றால் நாம் நம்முடைய நேரத்தை விரயமாக்கிக் கொண்டேயிருப்போம். பல ஆண்டுகளுக்குப் பின் சில ஆச்சரியமான மாற்றங்களை மக்களிடம் நான் கண்டதுண்டு. ஆனால் அது நான் அவர்களிடம் மாற வேண்டுமென சொல்லிக் கொண்டிருந்தால் ஏற்பட போவதில்லை. நாங்கள் ஜெபிக்கையிலே தேவனே மாற்றங்களை ஏற்படுத்தினார்.

ஒரு பெண்ணிற்கு இரட்சிக்கப்படாத புருஷன் இருப்பாரேயென்றால் அவள் அவனை, தேவனுக்கேற்ற நடக்கையால் ஆதாயப்படுத்திக் கொள்ளலாம், வெறும் சம்பாஷனையின் மூலமாக

அல்ல என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (1 பேதுரு 3:1) ஒரு பெண் தன் கணவன் மாற வேண்டுமென்று அவனுக்கு உணர்த்த முயற்சிக்கும் போது அவன் இன்னும் திடமாக நின்று மாறாமலிருக்கத் தீர்மானிப்பார். தேவன் ஒருவரை, ஒன்றை செய்யவும் செய்யாமலிருக்கவும் உணர்துவதிலே சிறந்தவராக இருக்கிறார். பிறரை மாற்ற முயலுவதை விட ஜெபிக்க அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். சிறந்த பலங்களை பார்ப்பீர்கள்.

## துணிகரம்

துணிகரம் என்ற பாவத்தைப் பற்றி நாம் அரிதாகத்தான் கேட்கிறோம். ஆனால் அதைப் பற்றி நாம் இன்னும் அதிகமாக கேட்க வேண்டும். துணிகரமானது பெருமையான இருதயத்திலிருந்து ஏற்படுகிறது. காரியங்களை யூகித்துக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாத இடத்திலே தீர்மானங்களை எடுக்கின்றனர். அனுமதி பெறாத காரியங்களைச் செய்கின்றனர்.

ஒரு துணிகரமான பணியாளர் அரிதாகத்தான் பதவியுயர்வு பெறுகிறார். ஒரு துணிகரமான பிள்ளை சிலாக்கியங்களை இழந்து விடுகிறது. மேலும் ஒரு துணிகரமான தேவ பிள்ளை அவருடைய பணியிலே வல்லமையாக உபயோகிக்கப்படும் முன் தேவனால் மாற்றப்பட வேண்டும். தேவனை அங்கீகரித்துக் கொள்ளாமல் நம் சொந்த முடிவுகளை எடுப்பது துணிகரம்.

மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்.

> நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும்

> உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.
>
> இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.
>
> யாக் 4:13-16

தேவன் அங்கீகரிக்காமல், ஜெபிக்காமல், அவரை நம்பாமல் காரியங்களை செயல்படுத்துவது பரலோகத்திலே மெச்சிக்கொள்ளப்படும் காரியமல்ல. அது பெருமையின் மனப்பான்மையாகும்.

ஒருவன் மாற வேண்டுமென்று தீர்மானித்துப் பின் அவரை மாற்றும் முயற்சியிலே ஈடுபடுவது துணிகரமாகும். அதனால் தான் தேவன் ஒருவரை மாற்ற வேண்டுமென்று ஜெபிக்கும் போது கூட நாம் ஒரு தாழ்மையின் மனப்பான்மையோடுதான் செய்ய வேண்டும். நம்மிலே கூட மாற்றப் பட வேண்டிய காரியங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்தவர்களாக அதைச் செய்ய வேண்டும்.

தேவன் என் மேல் பொறுமையாக இருக்கும்போது சந்தோஷப்படுகிறேன். ஆனால் பிறரிடம் அவர் பொறுமையாக இருப்பதைப் பற்றி பலமுறை அவரிடம் கேள்வி கேட்டதுண்டு. நம்மை சரியாக நடத்தாதவரை தேவன் ஏன் மாற்றவில்லை என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிவதில்லை. பவுலைப் பொறுத்த வரை தேவன் மக்களை மனந்திரும்புதலுக்குள் நடத்தும்படி அவர்களிடம் கனிவைக் காண்பிக்கிறார். நியாயத் தீர்ப்பைத் தாமதிக்கிறார் (ரோமர் 2:4) ஒருவரை மனந்திரும்புதலுக்குள்ளாக கொண்டு வரும் முயற்சியிலே கெட்ட நடக்கையைப் பொறுத்துக் கொண்டு இரக்கத்தைக் காண்பிக்க கூடுமேயென்றால் நாமும் கூட அதைச் செய்ய வேண்டும்.

தன்னிடம் பணியாற்றுபவர்களை சரியாக நடத்தாத ஒரு முதலாளியை ஒருமுறை நான் பெற்றிருந்தேன். கடின உழைப்பை அவர் பாராட்டவில்லை, சம்பளம் கொடுக்கவில்லை, எந்தவொரு சிறிய

தவறென்றாலும் அதைத் துரிதமாக திருத்துவார். மரியாதையுடன் நடத்தவும் மாட்டார். அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தார். தேவன் அதற்கு அனுமதித்திருந்தார். துணிகரமான மக்கள் தான் தேவனைக் கேள்வி கேட்பார்கள். அதற்குப் பதிலாக நான் ‘தேவனே நீர் அவரில் கிரியை செய்ய வேண்டும், அவர் உமக்குச் செவி கொடுத்து சரியானதைச் செய்ய வேண்டுமென ஜெபிக்கிறேன். அவர் என்னை காயப்படுத்துகிறார் தான். ஆனால் அவரது நடவடிக்கை உம்மை அதிகம் காயப்படுத்தும் என்பதை அறிவேன். தேவனே எங்கள் எல்லார் மேலும் நீர் கொண்டிருக்கும் அதிகப்படியான பொறுமைக்காய் நன்றி செலுத்துகிறேன்” என்று ஜெபித்திருக்கிறேன்.

தேவன் அவரைக் கடினமான முறையிலே மாற்றும் வரை அவர் மாறவில்லை. தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்திருந்தால் அவர் வாழ்க்கை சிறந்ததாக இருந்திருக்கும். அதைப் பற்றி யோசிக்கையிலே நான் துக்கப்படுகிறேன். இப்போது அதைப் பற்றி கோபப்பட்டுக் கொண்டிராமல் அவருக்காக இன்னும் அதிகமாக ஜெபித்திருக்கலாம் என்று எண்ணுகிறேன்.

பிறரை மாற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக அவர்களுக்காக ஜெபிப்போமேயென்றால் நாம் நம்முடைய வாழ்க்கையிலே இன்னும் அதிகமான சமாதானத்தை அனுபவிப்போம். தேவன் அவர் மட்டுமே செய்யக்கூடியதை செய்வார். நம் வாழ்விலே நாம் விரும்பும் மாற்றங்கள் நடைபெறாமல் நாம் காத்துக் கொண்டிருக்கையிலே தேவன் சொல்வதை செய்ய உறுதி செய்யுங்கள். நாம் அவருடைய கரங்களிலே மிருதுவாகவும், வனையப்படவும், உருவாக்கப்படவும் கூடியவர்களாக மாற்ற அவரை அழைப்போமாக!

அத்தியாயம் 21

# சந்தேகத்தை கையாளுதல்

*“விசுவாசத்தால் ஊன்றியதை சந்தேகத்தால் தோண்டாதீர்”*

எலிசபெத் எலியாட்

சந்தேகம் ஏற்படாமலிருந்தால், தேவனை நம்புவது நமக்கு எளிதாக இருக்கும்; ஆனால் அது ஏற்படுகிறது. எனவே அதைக் கையாளக் கற்றுக் கொள்ள வேண்டும். எதிலுமே எவ்வித எதிர்ப்பும் இருக்கக்கூடாது என்று ஆசைப்படுவது எளிது. ஆனால் அது யதார்த்தமானது இல்லை. சோதனைகள் மட்டும் இல்லாமலிருந்தால்! பயம் இல்லாமலிருந்தால்! சந்தேகம் இல்லாமலிருந்தால்! ஆனால் இவையெல்லம் இருக்கிறதே. ஆனால் அது ஒரு பிரச்சினையாக நாம் அனுமதிக்காதவரை, பிரச்சினையாக இராது. தேவனை நாம் சந்தேகப்படக்கூடாது, விசுவாசம் கொண்டிருக்க வேண்டுமென்று கூறுகிறார். ஆனால் எப்போதுமே சந்தேகம் ஏற்படாமலிருக்கும் என்றும் சொல்லுகிறதில்லை. நாம் சந்தேகப்படக்கூடாது என்று சொல்வதற்கான காரணம், அது வரும் என்று தேவன் அறிந்து வைத்திருக்கிறார். அப்படி வரும் போது நாம் அதைத் துரிதமாகவும், சரியாகவும் கையாள ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

சமீபத்திலே நம்பிக்கையைப் பற்றிய நேயர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைச் செய்து கொண்டிருந்தேன். ஒரு பெண் எங்கள் இணையதளம் மூலம் ஒரு கேள்வியை அனுப்பினார். அவள் சொன்னாள்; அவள் தேவனை நம்ப

முயற்சிக்கிறாள், விரும்புகிறாள், ஆனால் அவளைப் பிடித்திருக்கும் சந்தேகத்தை அவளால் நீக்க முடியவில்லை. என்ன செய்யலாம் என்று அவள் என்னைக் கேட்டாள்

*‘நம் சந்தேகங்களை நாம் சந்தேகப்படக் கற்றுக் கொள்ளலாம்’*

ஒருவேளை உங்களுக்கும் அத்தகைய கேள்வி இருக்கலாம். ஒரு காலத்திலே எனக்கும் இருந்தது. தேவன் மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் திருட வரும் சந்தேகத்தை நம்மால் தடுக்க இயலாது. ஆனால் சந்தேகம் வரும்போது அது நம்மைப் பாதிக்காமலிருக்க தெரிந்து கொள்ளலாம். நாம் நம் சந்தேகங்களைச் சந்தேகிக்கக் கற்றுக் கொள்ளலாம்.

நாம் ஒன்றை செய்யக் கூடாதென்று தேவன் சொல்லும் போது அதைச் செய்ய நாம் ஒருபோதும் சோதிக்கப்படாமலிருப்போம் என்றோ அல்லது அதைச்செய்ய வேண்டுமென்று தோன்றாமலிருக்குமென்றோ அல்லது அதைச் செய்வதை எதிர்க்க வேண்டுமென்றோ சொல்லவில்லை. நாம் பயப்படுவதற்குச் சந்தர்ப்பம் இருப்பதால் மட்டுமே ‘பயப்படாதே’ என்று சொல்லுகிறார். சந்தேகப்படுவதால் தான் ‘சந்தேகப்படாதே’ என்று சொல்லுகிறார்.

சந்தேகம் வரும். ஆனால் தேவனுடைய வாக்குதத்தைப் பற்றி அது நம்மை அசைக்கும் படி நாம் அனுமதிக்காமலிருக்கலாம்.

## வேதத்திலிருந்து ஒரு உதாரணம்

தேவனோடு உறவில் இருக்கும் ஒரு மனிதன் சந்தேகத்தை எப்படி கையாளுகிறான் என்பதை நாம் கற்றுக் கொள்ள விரும்பும் போது, ஆபிரகாம் தான் எனக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார். ஆபிரகாமும் சாராளும் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வர் என்ற வாக்குத்தத்தை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தான். அவன் சூழ்நிலையானது கூடாததாகக் காணப்பட்டது. ஏனென்றால் அவர்கள் இருவரும் பிள்ளைப்பேறு அடையும் காலத்தைக் கடந்திருந்தனர்.

வேதத்தின் படி ஆபிரகாமுக்கு நம்ப எந்த காரணமும் இருக்கவில்லை, ஆனாலும் அவன் விசுவாசத்தோடு நம்பினான் (ரோமர் 4:18)

அவன் தன்னுடைய சரீர இயலாமையைக் கண்ட போதும் சாராளுடைய மரித்துப் போன கர்ப்பத்தைக் கண்ட போதும் விசுவாசத்திலே ஆபிரகாம் இன்னும் தளராமலிருந்தான். (ரோமர் 4:19) அவிசுவாசமும், சந்தேகமும் தேவனுடைய வாக்குதத்தைப் பற்றி அவனைத் தள்ளாட செய்யவில்லை. ஏனென்றால் அவன் தேவனைத் துதிப்பதின் மூலம் பெலத்தைப் பெற்றுக் கொண்டான் (ரோமர் 4:20). தேவன் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் கொடுத்த வாக்குதத்தம், அவர்கள் நினைத்ததை விட அதிக நாட்கள் எடுத்துக் கொண்டாலும் அது நிறைவேறியது.

சந்தேகம் எப்படி மக்களைத் தேவனோடு முன்னோக்கி செல்லாமலிருக்க செய்கிறதென்பதை நினைத்துப் பார்க்கிறேன். எதிர்ப்புகள், கஷ்டங்கள், சில சமயங்களில் நியாயமற்ற நடத்தையை அனுபவித்திருந்தாலும் தேவனை நம்பினவர்களின் உதாரணங்களால் வேதம் நிறைந்திருக்கிறது. தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக சிறையிலடைக்கப்பட்டிருந்த போது நிச்சயமாகவே சந்தேகம் யோசேப்பிற்கு ஏற்பட்டிருக்கும். எஸ்தரும் தான் அழைக்கப்படாமல் இராஜாவின் முன் செல்ல ஆயத்தப்பட்டாள். பவுலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல பிரயாணப்பட்ட போது உபத்திரவம், சிறைவாசம், அடிகள், பசி மற்றும் பல கஷ்டங்கள் அவரை எதிர்நோக்கியிருந்தது. ஆயினும் இவர்கள் ஒவ்வொருவரும் தேவனின் உண்மைத்தன்மையை பார்த்தனர். விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தை போராடினர்.

## எதிர்ப்புகளை விளங்கிக் கொள்ளுதல்

நான் சமீபத்திலே உணர்ந்ததாவது, தேவனுடைய இரக்கத்தினால் ஏதோவொன்றிலிருந்து விடுபடுவதென்பது, அந்தக் காரியம் முற்றிலும் மறைந்து விட்டதென்று அர்த்தம் ஆகாது. நாம் நம்முடைய வேதனையான கடந்த காலத்திலிருந்து விடுபட்டிருக்கிறோம்.

ஆனாலும் அது நம் வாழ்விலே மீண்டும் நுழைய ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்குமா என்று அவ்வப்போது வந்து பார்க்கிறது.

லூக்கா 4-ம் அதிகாரத்திலே இயேசு வனாந்தரத்திலே சாத்தானால் சோதிக்கப்படும் படி பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினாரென்று பார்க்கிறோம். அவர் அங்கே இருந்த அந்த நாற்பது நாட்களிலே, பலவிதமான சோதனைகளை சந்தித்தார். ஒவ்வொன்றையும் வெற்றிகரமாக எதிர்த்தார். ஆனாலும் வேதம் சொல்லுகிறதாவது, வேதனைகள் நிறைவடைந்த போது சாத்தான் இன்னொரு நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து சென்று விட்டான் (லூக்கா 4:13). வேறு வார்த்தையிலே, இயேசு போராட்டத்தை வென்றார், ஆனாலும் வேறு பல போராட்டங்களும் வரும். எதிர்ப்புகளும் வரும்!

நாம் அனுபவிக்கும் கஷ்டங்களெல்லாம் தேவன் பேரிலே நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தைச் சோதிக்கின்றது. அது உபத்திரவத்தின குகையிலே நம்மைப் புடமிடுகிறது, உறுதியாகவும் அழிக்கப்பட இயலாததாகவும் மாற்றுகிறது. சந்தேகம், பயம், கவலை இவையெல்லாம் எதிர்ப்பின் பங்காகும். சந்தர்ப்பம் வாய்க்கும் போது எதிர்ப்பும் ஏற்படுகிறது. (1 கொரி 16:9) பவுல் தான் நன்மை செய்ய வேண்டுமென்று விரும்பும்போது தீமையே எப்போதும் வெளிப்படுகிறதென்று தேவன் சொல்லுகிறார் (ரோமர் 7:21). தீமை வரும் ஆனாலும் அது நம் விசுவாசத்தைத் தோற்கடிக்க அனுமதிக்கக் கூடாது.

எதிர்ப்புகள் அநேக விதங்களிலே வருகிறது. ஆனாலும் அவை எப்படி வந்தாலும் அதன் நோக்கமென்னவென்றால் தேவன் நமக்கு வாக்கு பண்ணியிருப்பதைப் பெற்றுக் கொள்வோமென்ற நம்பிக்கையை நாம் விட்டு விட வேண்டும் என்பதேயாகும்.

## *நம்மை எதிர்க்கும் மக்கள்*

நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய நாடிக் கொண்டிருக்கும் போது நம்மை எதிர்க்கும் மக்களை நாம் காண்போம். அப்போஸ்தலர்கள் பக்திக்குரிய தலைவர்களிடமிருந்தும், ரோமர்களிடமிருந்தும்

தொடர்ந்து எதிர்ப்பை சந்தித்து வந்தனர். இயேசுவும் அவரைப் புறக்கணித்தவர்களின் எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் அவரைத் தவறாக குற்றப்படுத்தினர், அவமதித்தனர். ஆனாலும் அவர் தம்முடைய பிதாவின் சித்தத்தை செய்வதிலேயே நோக்கமாக இருந்தார். சில சமயங்களிலே நம்மை எதிர்ப்பார்கள், அது இன்னும் வேதனையாக இருக்கும். இயேசுவின் சொந்த சகோதரர்கள் அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நினைத்தனர். அவருடனிருக்கத் தயங்கினர்.

## *நம்மை எதிர்க்கும் சூழ்நிலைகள்*

நமக்கு எதிராக நின்று நம் இலக்குகளை அடைய கடினமாக்கும் சூழ்நிலைகளைப் பற்றி நாமனைவரும் நன்கு அறிந்திருக்கிறோம். ஒருமுறை, நேரத்தையும் ஆற்றலையும் முழுவதும் எடுத்துக் கொண்டிருந்த காரியங்களைப் பற்றின பட்டியலை எடுத்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்திலே நான் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்தேன். தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான படபிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சொல்ல பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். முப்பது நட்களின் முடிவிலே, எதிர்க்கும் சூழ்நிலைகள் நிறைந்த ஒரு பெரிய பட்டியலைப் பெற்றிருந்தேன்.

இத்தகைய காரியங்கள் எல்லாம் நம்மை அதிக தொந்திரவுக்குள்ளாக்குகிறது. ஆனால் சில சூழ்நிலைகள் முக்கியமானது. நமது கவனத்தை அதிகமாக எடுத்துக் கொள்ளுகிறது. எதிர்ப்பு தோன்றும் போது நாம் செய்ய நினைக்கும் காரியத்தின் நடுவிலே அது நிற்கின்றது. நாம் நம் முழு இருதயத்தோடு தேவனை பின்பற்ற முயற்சிப்போமேயென்றால் நம்மை எதிர்க்க சாத்தான் ஒரு வழியைக் கண்டுபிடிப்பான் என்பதில் நாம் நிச்சயமாக இருக்கலாம்.

## *நம்மை எதிர்க்கும் உணர்ச்சிகளும் எண்ணங்களும்*

நாம் தேவன் பேரிலே கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தளர்த்தும்

நோக்கோடு வரும் உணர்ச்சிகளை எதிர் கொள்ளக்கூடும். சந்தேகம் அவைகளில் ஒன்று தான். இதோடு பயம், கவலை, பீதி, நம்பிக்கையின்மை போன்று இன்னும் அநேகம் இருக்கிறது. ஆயினும் நமக்கு முன்னால் சென்ற அநேக தேவப்பிள்ளைகள் கிறிஸ்து இயேசுவின் கிருபையால் இவைகளைக் கடந்து சென்று தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினர் என்பதால் நாம் உற்சாகமடையலாம். நாமும் அவ்வாறு செய்யலாம், செய்வோம்.

நாம் தேவனுடைய வார்த்தையிலே அறிவுறுத்தப்பட்டிருப்பதை போல 'விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்'(மத் 26:40-41; 1 பேதுரு 4:7) தேவனுக்கு கீழ்ப்படிவதைத் தடுக்கும் காரியங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். அவைகள் என்ன என்பதைக் கண்டுபிடித்து தேவனிடத்திலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் சுதந்திரத்தை அவை திருடிக்கொள்ள அனுமதிக்காதீர்கள்.

சந்தேகத்தைப் பொறுத்தவரை உங்களுக்கு விசுவாசம் இல்லையென்றோ தேவனை நம்பவில்லையென்றோ அர்த்தமாகாது. நாம் அவரை நம்புவதை நிறுத்த சாத்தான் சோதனைகளை கொண்டு வருகிறானென்று அர்த்தம். ஆனால் சந்தேகத்தின் ஊற்றை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதை நம்பக்கூடாது

உதாரணமாக என்னைப் பற்றி ஒருவர் குறை கூறினார் என்று நான் கேள்விப்படுகிறேனென்று வைத்துக் கொள்ளலாம். அவர் அநேகரை குறை கூறியிருந்தால் நான் கவலைப்படுவதில்லை ஏனென்றால் அவர் யாரென்பது எனக்குத் தெரியும். நாம் தேவனை நம்புவதைத் தடுக்க தேவனுக்கேற்காத உணர்ச்சிகளும் எண்ணங்களும் ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்? சோதனைக்குட்படாதபடி ஜெபிக்க் வேண்டும் என்று இயேசு சொன்னார் (லூக்கா 22:40). சோதனைகள் வரும், ஆனால் அதை ஏற்றுக் கொள்ளவோ கொள்ளாமலிருக்கவோ தெரிந்து கொள்ளலாம்.

நான் பயப்படுவதால் கோழையுமில்லை, சந்தேகப்படுவதால் தேவனை நம்பாமலிருக்கிறேன் என்றும் அர்த்தமில்லை. நாம் நம் எதிரியை இனங்கண்டு கொள்ளாமலிருந்தால் அவனைத் தோற்கடிக்க

முடியாது. சந்தேகமானது பயத்தின் நண்பனாகும். இருவரும் நம் எதிரிகள்.

## சத்தத்தை வெளியேற்றுதல்

உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கும் சத்ததின் நடுவிலே இருந்து அதை கேட்காமலிருக்கும் படி உங்கள் வானொலின் சத்தத்தையோ அல்லது தொலைக்காட்சியின் சத்தத்தையோ அதிகமாக வைத்துக் கொண்ட சந்தர்ப்பம் இருக்கிறதா? நான் ஒரு எஸ்டேட் போன்ற வீட்டிலே குடியிருக்கிறேன். அது பொதுவாக மிகவும் அமைதியாக இருக்கும். ஆனால் வாரத்திற்கு ஒருமுறை மாலை வேளையிலே தெருவில் இருக்கும் உணவகம் அல்லது மது அருந்தும் இடத்திலிருந்து இசை நிகழ்ச்சி நடக்கும். அது எனக்குப் பிடிக்காது. எனக்கு அதிக கவனச் சிதறலை ஏற்படுத்துகிறது. அவர்களுக்கு ஒரு சிறிய கதவே உண்டு. எனவே எப்போதெல்லாம் அவர்கள் கதவை திறக்கின்றனரோ அப்போது இசை அலறலாக கேட்கிறது. நான் என் தொலைகாட்சியின் சத்தத்தை உயர்த்தினால் அது அந்த சத்தத்தை அமிழ்த்தி விடும்.

ஆபிரகாம் எப்படி சந்தேகத்தையும் அவிசுவாசத்தையும் தேவனைத் துதிப்பதின் மூலம் வீழ்த்தினான். அதேபோல் நானும் சாத்தானிடமிருந்து வந்த சத்தத்தை துதியின் மூலம் வீழ்த்தினேன். துதியின் ஒரு பகுதியானது தேவன் நமக்குச் செய்ததைப் பற்றிச் சொல்லும் கதை. தேவன் ஆபிரகாமையும் சாராளையும் ஒவ்வொரு அடியாக நடத்தினார். தேவனை நினைத்துப் பார்த்து பேசக்கூடிய அநேக கதைகளை அவர்களிடம் இருக்குமென்று நம்புகிறேன்.

நானும் டேவும் கூட அநேகந்தரம் அவ்வாறு செய்ததுண்டு. எங்கள் ஊழியத்தின் ஆரம்ப நாட்களைப் பற்றியும் அப்போது நாங்கள் எதிர்கொண்ட போராட்டங்களைப் பற்றியும் அதிலெல்லாம் தேவன் எவ்வாறு உண்மையுள்ளவராய் இருந்தார் என்பதைப் பற்றியும் நாங்கள் பேசி மகிழ்வதுண்டு. அந்த நாட்களை நான் நினைத்துப் பார்க்கும் போது தேவனை சந்தேகிக்க முடியாது. அப்படியெனில் நான் சந்தேகிப்பதில்லை என்று அர்த்தமில்லை, ஆனால் நான் அதை வெளியேற்றி விடுகிறேன்.

சந்தேகம் எழும்பி நம் விசுவாசத்தைத் தடுக்க முயற்சி செய்யும் என்பதை அறிந்திருங்கள். தேவன் நாம் செய்ய வேண்டும் என்று விரும்பும் காரியத்தைச் செய்யாமலிருக்கவும், பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பும் காரியத்தை பெற்றுக் கொள்ளாமலிருக்கவும் செய்யும் சாத்தானின் ஆயுதம் சந்தேகமாகும்.

ஆபத்தான நிலையிலிருந்த ஒருவரின் மகளை குணமாக்க இயேசு சென்று கொண்டிருந்த போது மற்ற மக்கள் அவரை நிறுத்தி அவர்களையும் சுகமாக்க வேண்டுமென்று கேட்டனர். அவர்களுக்கு உதவும் படி அவர் நின்றார். அப்படியான ஒரு சமயத்திலே அவர் ஒரு வியாதியஸ்தனுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்த போது அந்த மனிதனின் வேலைக்காரர்கள் வந்து இனிமேல் வர வேண்டாம் அந்த பெண் மரித்துவிட்டாள் என்று கூறினர். இயேசு அதைக் கேட்டாரென்று வேதம் கூறுகிறது, ஆனால் அதை பொருட்படுத்தவில்லை, தொடர்ந்து விசுவாசிக்கும் படி அந்த மனிதனிடம் கூறினார் (மாற்கு 5:22-43). இயேசுவும் கூட சந்தேகத்தை எழுப்பும் வகையிலே கூறப்படும் அறிக்கையைக் கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டியிருந்தது. நம்மைப் போலவே அவரும் சோதிக்கப்பட்டார், ஆனாலும் அவர் பாவம் செய்யவில்லை. (எபி 4:15)

## வழியில்லாமல் ஒருபோதும் இருப்பதில்லை

வைனின் விளக்க அகராதியிலே 'சந்தேகம்' என்ற வார்த்தைக்கு 'வழியில்லாமலிருப்பது' அல்லது 'உபகரணங்கள் இல்லாமல் இருப்பது' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் வழியில்லாமல் ஒருபோதும் இருப்பதில்லை, ஏனென்றால் இயேசு தான் வழி (யோவான் 14:6) வழியை நாம் ஒருவேளை காணாமல் இருக்கலாம். ஆனால் அப்போது தான் நாம் ஆண்டவரை நம்பவேண்டும். வாழ்க்கையிலே நாம் என்ன செய்வதென்று அறியாமலிருக்கும் பொழுதும் நமக்கு உதவ எந்த உபகரணங்களும் இல்லாமலிருக்கும் போது தான் விசுவாசமும் நம்பிக்கையும் தேவை. இயேசு வழி மட்டுமல்ல நம்முடைய ஆதாரமாகவும் இருக்கிறார். அவரால் நமக்குக் கொடுக்க முடியாதென்று எதுவும் இல்லை.

‘வழியே இல்லை’ என்று மக்கள் சொல்லலாம், பிசாசு கூட ‘வழியே இல்லை’ என்று கிசுகிசுக்கலாம். ஆனால் வழி உங்களுக்குள் வாழ்கிறார். உங்களோடு இருக்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். வெற்றி பெறும் வரை அவரை நம்புவீர்களா?

நாற்பது ஆண்டுகளுக்கு முன் தேவன் தம்முடைய வார்த்தையைப் போதிக்கும்படி அழைத்தபோது நான் ஒரு மனைவியாக தாயாக இருப்பதோடு ஒரு வாரத்திற்கு நாற்பது மணி நேரங்கள் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் போதிக்கும் படி தேவனால் நடத்தப்பட்டிருந்த வேத பாடத்திற்கு ஆயத்தம் செய்ய கால அவகாசம் போதுமானதாக இல்லாமலிருந்தது.

தேவனுடைய வார்த்தையை நான் அதிக நேரம் படிக்க விசுவாசத்தால் ஒரு பெரிய அடியெடுத்து வைத்து என் வேலையை விட்டு விட வேண்டுமென்று என் இருதயத்திலே மிகவும் உறுதியாக உணர்த்தப்பட்டேன். டேவ் ஒத்துக்கொண்டார். நான் என்னுடைய வேலையையும் வருமானத்தையும் விட்டு விட்டேன். டேவினுடைய மாத சம்பளத்திற்கும் கொஞ்சம் நிறையவே செலவுகள் இருந்தன. எப்படி தேவன் பார்த்துக் கொள்வார். என் வேலையை ராஜினாமா செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று சந்தேகமும் பயமும் என்னைத் தாக்கின என்பது என் நினைவில் இருக்கிறது.

நான் சரியான கரியத்தைதான் செய்தேனென்று என் இருதயத்தில் உணர்ந்தேன். ஆனாலும் என் அறிவானது என்னை வாதித்துக் கொண்டே இருந்தது. நான் மிகவும் நிர்பந்தமாக உணரும் அளவிற்கு துன்பத்தை அனுபவித்தேன். பின் ஒரு காலை வேளையிலே நான் என் வீட்டிலே நடந்து கொண்டிருந்த பொழுது தேவன் என் இருதயத்திலே ‘உன்னை நீயே பராமரிக்க முயன்று கொண்டு பயத்திலும் சந்தேகத்திலும் வாழலாம் அல்லது அற்புதமான வழியிலே உன்னை நான் போஷிக்கும் படி என்னை நம்பலாம்’ என்று சொன்னார். என் விசுவாசத்தின் குறுக்கு சந்திலே நான் நின்று கொண்டிருந்தேன். நான் இருமனமுள்ளவளாக இருப்பதை நிறுத்தி விட்டு தேவனை நம்பப் போகிறேனா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியதாயிருந்தது.

தேவனை நம்பும் படியான கிருபையை அவர் எனக்குக் கொடுத்தார். ஆறு ஆண்டுகளுக்கு தேவன் ஆச்சரியமான வழியிலே கொடுத்ததைக் கவனித்தோம். அந்த ஆறு ஆண்டுகளிலே என் விசுவாசம் வளர்ந்தது. தேவன் உண்மையுள்ளவர் என்பதை அனுபவத்தால் கற்றுக் கொண்டேன். நான் இன்னும் திரும்பிப் பார்த்து அந்த நாட்களை நினைவு கூறுகிறேன். அதற்காய் நான் சந்தோஷமடைகிறேன், ஏனென்றால் எப்போதும் இருந்ததற்கு மேல் அவை என்னை தேவனிடமாக கிட்டிச் சேர உதவியது.

தேவன் உங்களை ஒன்றை செய்யும் படி நடத்தியும், விசுவாசத்தால் அடியெடுத்து வைக்கும் போது சந்தேகத்தால் தாக்கப்படுகின்றீர்களா? உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. அது சவாலாக இருப்பினும் நல்லதே. அனுபவத்தின் மூலமாக நீங்கள் தேவனை எவ்வளவாக நம்பக் கற்றுக் கொள்கிறீர்களோ, பின்பு அது வெகு சுலபமாக மாறி விடுகிறது. அவருடைய உண்மைத்தன்மையை புதிய வழிகளிலே அனுபவிப்பீர். ஒவ்வொரு முறையும் அப்படிச் செய்யும்போது அது உங்களை அதிக பலவான்களாக மாற்றும்.

தோல்வியை விட சந்தேகம் அதிகமான கனவுகளைக் கொன்று போடுகிறது என்று நான் கேட்டிருக்கிறேன். சந்தேகம் உங்கள் விசுவாசத்தை தடம் புரள செய்ய அனுமதிக்காதீர்கள். அது என்னவாக இருக்கிறதென்பதை இனங்கண்டு கொண்டு விசுவாசத்திலே முன்னேறுங்கள்!

அத்தியாயம் 22

# எவ்வளவு அனுபவம் உங்களுக்குண்டு?

ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்.

நீதிமொழிகள் 3:13

நீங்கள் வேலைக்காக எங்கேயாவது விண்ணப்பம் செய்திருப்பீர்களேயென்றால் நேர்காணலில் உங்களிடம் கேட்கப்படும் ஒரு கேள்வி "ஏதாவது அனுபவம் இருக்கிறதா?" உங்கள் பதில் ஆம் எனில், அடுத்த கேள்வி என்ன அளவு உங்களுக்கு அனுபவம் என்பதே. நீங்கள் விரும்பும் ஒரு பகுதியிலே வேலைச் செய்யத்தகுந்த கல்லூரி பட்டம் உங்களுக்கிருப்பினும் கல்வியறிவு மட்டுமே ஒருவரைத் தகுதிப்படுத்துகிறதில்லை. நமக்கு எவ்வளவு தெரிந்திருக்கிறதென்று நினைத்துக் கொண்டாலும் நம்முடைய அறிவு சோதிக்கப்பட்டாலொழிய வேலையை நாம் எப்படிச் செய்வோம் என்பதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை.

தேவனும் நம்மைத் தம்முடைய மகிமைக்கென்றும் நோக்கத்திற்கென்றும் நம்மை இந்த பூமியிலே உபயோகிக்க விரும்பும் போது இத்தகைய காரியங்களை எதிர்பார்க்கிறர். இஸ்ரவேல் மக்களை நடத்திச் செல்ல தேவனுடைய வழிநடத்துதல் மோசேக்குத் தேவைப்பட்ட போது இந்த அறிவுறைகளை மக்களுக்குக் கொடுத்தார்.

> நான் உங்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, உங்கள் கோத்திரங்களில் ஞானமும் விவேகமும் அறிவும் உள்ளவர்கள் என்று பேர்பெற்ற மனிதரைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று சொன்னேன்.
>
> உபாகமம் 1:13

தேவையான காரியங்களின் பட்டியலிலே திறமை அல்லது தாலந்து என்பது குறிப்பிடப்படவில்லை. ஒரு காரியத்தைச் செய்வதிலே இயற்கையாகவே திறமை வாய்ந்தவனாக இருக்கலாம். ஆனால் விலையேறப் பெற்ற சொத்தாக அவன் மாற அவர்களுக்கு ஞானம், விளங்கிக் கொள்ளுதல் மற்றும் அனுபவங்களும் தேவைப்படுகிறது. மோசே சிலரை தலைமை பொறுப்பில் வைப்பதற்கு அனுபவம் பெற்றவர்கள் வேண்டுமென்று எதிர்பார்த்தார்.

தேவன் எங்களைக் கட்டும் படி அழைத்த ஊழியத்தைக் கட்ட நாங்கள் தொடங்கிய போது எங்களுக்கு உதவி செய்யவும் மக்கள் தேவைப்பட்டனர். இந்த மாதிரி சில தேவைகளைப் பற்றி நான் சபை போதகரிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் ‘ஜாய்ஸ் ஒருவரை எல்லாவிதமான சூழ்நிலையிலும் பார்க்கும் வரை அவரை உன்னால் உண்மையாக அறிந்து கொள்ள இயலாது’ என்றார். ஏன்? ஏனென்றால் குணமும் அறிவும் சோதிக்கப்பட்டாலொழிய ஒருவர் எப்படி இருக்கிறாரென்பது எவருக்குமே தெரியாது. நம் வாழ்விலே நாம் பல்வேறு சவால்களினூடே சென்றாலொழிய நாம் என்ன செய்வோமென்பது நமக்கே தெரியாது.

தேவனை நம்புகிறோம் என்று நினைப்பதோ சொல்வதோ கூட எளிது தான். ஆனால் அப்படிச் செய்ய வேண்டுமென்ற தேவை ஏற்படும் போது நாம் என்ன செய்கிறோம். தேவனை நம்புவதைப் பற்றிய இந்த புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கையிலே, நீண்ட காலமாக இருந்த ஒரு வேதனையான சவாலைச் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த சமயத்திலே தேவன் அதைப் பார்த்துக் கொள்வாரென்று அவரை நம்ப முடிந்தது. ஏனென்றால் அவருடன் அநேக ஆண்டுகள் அனுபவம் இருந்தது. அவருடைய உண்மைத்

தன்மையை நான் அநேகந்தரம் பார்த்திருக்கிறேன். தேவனை நம்புவதைப் பற்றிய ஒரு புத்தகத்தை நாம் படிக்கலாம். ஆனால் அதிலே சிறந்து விளங்க நமக்கு அனுபவம் தேவை. தேவனுடைய வார்த்தையை போதிக்கிறவராக நான் மக்களிடம் ஏதோவொன்றை கேட்பதும் வாசிப்பதும் தேவையானவற்றின் ஒரு பகுதி. நாம் என்ன கற்றுக் கொள்கின்றோமோ அதைச் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும்போது படிப்பதின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட அறிவையும் அதை விட அதிகமான அறிவையும் நாம் பெற்றுக் கொள்கிறோம்.

## இயேசு அனுபவப்பட்டிருந்தார்

எபி 5:8-9 சொல்லுகிறது, இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தும் பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். அவருடைய அனுபவமானது அவரை பூரணமாக்கிற்று. அவருக்குச் செவி கொடுத்து கீழ்ப்படிந்தவர்களுக்கு இரட்சிப்பின் ஊற்றாகவும் காரணராகவும் மாறினார்.

இயேசுவும் கூட தேவன் அவர் செய்யும் படி விரும்பியதை செய்ய பல காரியங்களினூடே கடந்து செல்வதின் மூலம் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு தன்னை ஆயத்தம் செய்து கொண்டார். உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் எனக்கு அது உற்சாகத்தைக் கொடுத்தது. சொல்ல போனால் நாம் கடந்து செல்ல செல்ல கற்றுக் கொள்கிறோம். இளம் கிறிஸ்தவர்களாக அவரை நம்புவது கடினமாக இருக்கலாம், ஆனால் வருடங்கள் செல்ல செல்ல நம் விசுவாசம் சோதிக்கப்படும் போது தேவன் நம்பத்தக்கவர் என்பதை அறிந்து கொள்வோம். அறிவை சார்ந்து அவரை நம்புவது ஒன்று, ஆனால் அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்வது ஆழமானது.

*அறிவை சார்ந்து அறிந்திருப்பது ஒரு விதமான அறிவு. ஆனால் ஆனால் அனுபவத்தால் அறிந்து கொள்வது ஆழமானது.*

நமக்கு கல்வி(தேவனுடைய வார்த்தை) தேவை, ஆனால் நமக்கு வெளிப்பாடும் தேவை. அது நம் அறிவானது சோதிக்கப்பட்டு நம் தனிப்பட்ட சூழ்நிலைகளிலே தேவனுடைய நன்மையும் உண்மைத்தன்மையும் அனுபவிப்பதால் தான் ஏற்படுகிறது என்று நம்புகிறேன்.

அப். பவுல் கொரிந்தியருக்கு அறிவுரை கூறி உற்சாகப்படுத்துகையிலே அவர்கள் சகித்துக் கொள்வதற்கும் அதிகமாய் எதுவும் நடக்காதென்றும் தேவன் எப்போதுமே ஒரு போக்கை ஏற்படுத்துவாரென்றும் கூறுகிறார். ஏனென்றால் அவர் தமது வார்த்தைக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். (1 கொரி 10:13) பவுல் தன்னுடைய அனுபவத்திலிருந்து பேசுகிறாரென்று நான் நம்புகிறேன். அவர் தேவனை நம்புகையிலே அநேக கஷ்டங்களினூடே கடந்து சென்றிருக்கிறார். ஒவ்வொரு முறையும் தேவன் அவரை விடுவிப்பதைப் பார்த்தார் அல்லது ஒரு வெற்றியின் மனப்பான்மையோடு அவற்றைக் கடந்து செல்ல பெலன் கொடுத்தார்.

சமீபத்திலே, தேவனை நம்புவதைப் பற்றி ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சி செய்து கொண்டிருக்கையிலே ஒரு பெண் ‘என்னுடைய கடந்த காலத்திலே நான் தேவனை நம்பியும் அது எனக்கு சாதகமாக இல்லாத போது எப்படி அவரை நம்புவது? எனக் கேட்டாள். இருபது ஆண்டுகளுக்கு முன் அவளுக்குப் பதிலளிப்பது கடினமாக இருந்திருக்கும். ஆனால் தேவனுடனான நாற்பது ஆண்டு கால அனுபவத்திற்குப் பின் பதிலை அறிந்திருந்தேன். நான் சொன்னேன். ‘ஏதோவொன்றிற்காக தேவனை நம்பி அதைப்பெற்றுக் கொள்ளவிலையெனில் உங்களுக்கென்று அவர் கொண்டிருக்கும் திட்டத்திலே இல்லாததொன்றை நீங்கள் விரும்பியிருக்கிறீர்கள்’ முதிர்ந்த விசுவாசத்திலிருக்கும் ஒருவர் ஒன்றுக்காக தேவனை நம்பலாம். அவர் அதைப்பெற்றுக் கொள்வாராயின் தொடர்ந்து நம்புவார். அவர்கள் கேட்டது தேவனுடைய சித்தமாயிருப்பின் அவர் அதை அவர்களுக்குக் கொடுத்திருப்பார் என்றும் இல்லையென்றால், அது இல்லாதது நல்லது என்றும் நம்புவார். அவர்கள் விரும்புவதைப் பெற்றுக் கொள்ளாததால் அவர்கள் தேவனுக்கு நன்றி செலுத்த கற்றுக்

கொண்டிருப்பார். பொருட்களுக்காகவும் காரியங்களுக்காகவும் மட்டும் அவர்கள் தேவனை நம்புவது இல்லை அதற்கு அப்பாற்பட்டும் அவரை நம்புகின்றனர்.

பவுல் சொன்னது:

> நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,
>
> எபி 6:11

நாம் கஷ்டங்களினூடே செல்லும் ஒவ்வொரு முறையும் அல்லது நாம் தேவையிலிருக்கும் போது நம் தேவனை நம்புவோமேயென்றால், அடுத்த முறை அதைச் செய்வது எளிதாகிறது. கொஞ்சம் கொஞ்சமாக நாம் தேவனை நம்ப கற்றுக் கொள்கிறோம். எனவே நீங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அப்படி ஆகவில்லையெனினும் சோர்ந்து போகாதீர்கள்.

## வாழ்க்கையென்னும் பள்ளி

நாமனைவருமே வாழ்க்கையென்ற பள்ளியிலிருக்கிறோம். நாம் நம் பிரயாணத்தை தொடர்கையிலே அதிகம் அதிகமாக கற்றுக் கொள்கிறோம். சங்கீதக்காரனாகிய தாவீது தேவனோடு அனுபவப்பட்டவர்களைப் பற்றி அடிக்கடி பேசியதுண்டு. அவர் சொல்லுகிறார். தேவனுடைய இரக்கத்தை அனுபவித்தவர்கள் அவரைச் சார்ந்து கொண்டு, நம்பிக்கையை அவர் மீது வைப்பார்கள் என்று சொல்லுகிறார் (சங்கீதம் 9:10) நாம் தேவனுடைய நன்மை, கருணை, இரக்கம், நிபந்தனையற்ற அன்பு மற்றும் தயாள குணத்தை நாம் அனுபவிக்கையிலே அது நாம் எந்த சூழ்நிலையிலும் அவரை நம்ப இயலும் என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. நாம் நம்பியதை

அவர் நமக்குத் தராவிட்டாலும் அவர் நமக்கு எப்போதுமே சிறந்ததைதான் கொடுப்பாரென்று நாம் நாளடைவில் காண்போம். தேவன் தாம் செய்யும் காரியங்களை அவர் எப்படிச் செய்கிறாரோ அப்படிச் செய்வதற்கான காரணத்தை நாம் புரிந்து கொள்ள இயலாததால் அவரது வழிகளெல்லாம் சரியனதல்ல என்று அர்த்தமாகாது. நாம் நாளடைவில் அதை அறிந்து கொள்ளுகிறோம். சில சமயம் அதை அறிந்துகொள்ள வாழ்நாள் முழுவதும் தேவைப்படும்.

நான் மீண்டும் இளமையாக மாறி, இப்போது அறிந்திருப்பதை அறிந்திருந்தால் நலமாக இருக்கும் என்று மக்கள் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் அது இயலாததாகும். நாம் இப்போது என்ன அறிந்திருக்கின்றோமோ அதை மட்டும் தான் அறிந்திருக்கிறோம். ஏனென்றால் நாம் வாழ்க்கையென்னும் பள்ளியினூடே கடந்து சென்று கொண்டிருக்கிறோம்.

தேவன் என்னை தம்முடைய வார்த்தையைப் போதிக்கும் படி அழைத்த போது நான் வாழ்க்கையை அப்படியே நிறுத்தி விட்டு வேதாகம கல்லூரிக்குச் செல்ல இயலவில்லை. ஆனால் நான் வாழ்க்கையென்னும் பள்ளியிலிருந்தேன். இன்னும் இருக்கின்றேன்.வேதாகமக் கல்லூரிக்குச் செல்வதால் கற்றுக் கொள்வதை விட இன்னும் அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

தாவீது ‘பரிசுத்தமாக்கப்பட்ட அனுபவங்கள்’ என்பதைப் பற்றிப் பேசுகிறார். (சங்கீதம் 119:7) அதை நான் விரும்புகிறேன். நாம் அனுபவித்த சில காரியங்கள் ஒருவேளை நாம் தெரிந்து கொண்டதாக இல்லாமலிருக்கலாம். ஆனாலும் தேவனுடைய அளவிட முடியாத ஞானத்திலே அது ‘பரிசுத்தமாக்கப்பட்ட’ அனுபவங்களாக மாறுகிறது. வேறு வார்த்தைகளிலே, நாம் தேவனை அறியவும், அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிகிறதற்கும், அந்த பரிசுத்தமாக்கப்படும் அனுபவங்கள் உதவுகின்றன.

> *சில சமயங்களிலே நமக்கு எந்த வழியும் இல்லாத போது தான் தேவனை நம்ப கற்றுக் கொள்வோம்*

நான் என் வேலையை ராஜினாமா செய்து விட்டதால் அவரை முழுவதுமாக சார்ந்திருந்த அந்த ஆறு ஆண்டுகளிலே தேவன் எங்கள் விசுவாசத்தைச் சோதித்த போது நான் ஆவிக்குரிய ரீதியாக ஆச்சரியப்படும்படி வளர்ந்தேன். நான் அந்த வழிகளைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டேன். ஆனால் அது நிச்சயமாகவே சரியான வழியாக இருந்தது.

நான், இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தினூடே சென்று வாழ்க்கையென்னும் பள்ளியிலே, தேவன் அவர்களை எவ்வாறு பராமரித்தாரென்பதை யோசித்து மகிழ்வதுண்டு. அவர்களை அவர் மன்னாவால் போஷித்தார். அது எங்கேயிருந்து வந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. அவர்கள் உண்மையாலுமே ஒவ்வொரு நாளும் தேவனை நம்ப வேண்டியதாயிருந்தது. சில சமயங்களிலே நாமும் எந்த வழியும் இல்லாத போது தான் தேவனை நம்ப கற்றுக் கொள்கிறோம்.

வனாந்திரத்தினூடே இஸ்ரவேலர் பிரயாணம் செய்த அந்த நாற்பது வருடங்களிலே அவர்களின் வஸ்திரங்கள் பழையதாகிப் போகவில்லை (உபா 8:4) அவர்கள் எந்தவொரு புதிய துணியையும் வாங்கவில்லை. ஆனால் அவர்கள் கொண்டிருந்தது ஆச்சரியமாக பல ஆண்டு காலமாய் நிலைத்திருந்தது. தேவன், அவர்கள் கற்பனைகளைக் கைகொள்ளுகிறார்களா என்பதை சோதித்தாரென்று சொல்லுகிறார். சோதனை இல்லாமல் நம்பிக்கையின் எந்த ஆதாரமும் இல்லை என்பதைப் பாருங்கள். அவருடைய நோக்கமெல்லாம் அவர்களை மிகச் சிறப்பான நிலைக்கு உயர்த்த வேண்டுமென்பதே, ஆனால் முதலாவதாக அவர்கள் தேவனைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. காரியங்களினூடே அவரோடு கடந்து சென்று அனுபவித்த பின், அவர்கள் அவரை என்றும் மறக்கவில்லை (உபா 8:2,7, 11).

வாழ்க்கையென்னும் பள்ளியிலே நல்ல நண்பர்களென்று நான் நினைத்திருந்தவர்களின் மறுதலிப்பையும், குடும்ப அங்கத்தினர், நண்பர்களின் வாழ்க்கைக்கான என்னுடைய தெரிந்து கொள்ளுதலோடு ஒத்துப் போகாததால் அவர்களின் புறக்கணிப்பையும், தவறான புரிந்து கொள்ளுதல், தவறான குற்றசாட்டுகள், உபத்திரவங்களினூடே அனுப்பப்பட்டேன். ஆனால் என்னைக் காயப்படுத்தினவர்களை மன்னிப்பதின் முக்கியத்துவத்தைக் கசப்போடும், கோபத்தோடும் இருப்பதை மறுக்கவும் கற்றுக் கொண்டேன். நான் உண்மைத்தன்மையையும், மேன்மையையும், சமாதானம், பொறுமை, சுயகட்டுப்பாடு, சரியான நண்பர்களை எப்படித் தெரிந்து கொள்வது, தேவனை என் வாழ்விலே எப்படி முதலாவதாக வைப்பது, மக்களை மதிப்பது இன்னும் ஆயிரக்கணக்கான வாழ்க்கைப் பாடங்களையும் கற்றுக் கொண்டேன். அவைகள் கற்றுக் கொள்ள எளிமையாக இருக்கவில்லை. ஏனென்றால் வருடங்கள் உருண்டோடுகையிலே தேவனை இப்போது அதிகமதிகமாக சுலபத்துடன் நம்ப வைக்கும் அனுபவங்களாக மாறிப்போனது.

## அது சுலபமாகிறது

தேவனோடு வாழ்வதைப் போன்று தேவனை நம்புவதும் சுலபமாக மாறுகின்றது என்று நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். நாம் நம்முடைய நம்பிக்கையைப் பிற காரியங்களின் மீது வைப்பதற்கு பதிலாக அவர் மீது வைக்கத் தெரிந்து கொள்ளும்போது அதில் வளர்கிறோம். நானும் என் கணவர் டேவும் திருமணம் செய்து வாழ்ந்து வரும் இந்த 50க்கும் மேற்பட்ட வருடங்களிலே, அவர் மிகவும் சுலபமாக வாழ்வதை நான் கண்டிருக்கிறேன். ஒரு சமயத்திலே அதனால் நான் சங்கடப்பட்டேன். அவருக்கு வாழ்க்கை மிகவும் சுலபமாகவும் எனக்கோ கடினமாகவும் இருப்பதாக உணர்ந்தேன். ஆனால் பின்னர் வாழ்க்கை எங்கள் இருவருக்குமே சுலபமாக இருக்கவில்லையென்றும் ஆனால் தேவனை நம்புவதின் மூலம் சுலபமாய் வாழ முடியும் என்பதையும் கற்றுக் கொண்டேன்.

என்னை விட டேவ் சீக்கிரமாக கற்றுக் கொள்கிறார். நான் கொஞ்சம் கடினமானவளாக இருக்கின்றேன். நான் கற்றுக் கொள்வதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான அனுபவங்கள் தேவைப்படுகிறது. அவர் தனது வாழ்விலே சீக்கிரமாகவே தனது கவலைகளையெல்லாம் தேவன் மீது வைக்கவும், தேவன் அவரைப் பார்த்துக் கொள்ள அனுமதிக்கவும் கற்றுக் கொண்டார்.

எங்களது திருமணம் முடிந்த ஆரம்ப நாட்களிலே நாங்கள் கஷ்டங்களை அனுபவித்தபோது அவர் என்னிடம் கவலைப்பட்டு, ஏமாற்றம் அடைந்திருப்பதால் எதுவும் மாறாது, தேவனை மட்டும் நம்பு என்று என்னிடம் சொல்லுவார். அதை நான் செய்ய விரும்பினேன். ஆனால் எப்படி என்று தான் எனக்கு தெரிந்திருக்கவில்லை. தேவனை நம்புவதிலே உங்களுக்குக் கஷ்டம் இருக்குமேயானால் நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் உங்கள் பயணத்தை நீங்கள் தொடர்கையிலே கற்றுக் கொள்வீர்களென்று நான் அறிந்திருக்கிறேன். சில சமயங்களிலே உங்களுக்குக் கொஞ்ச விசுவாசம் மட்டும் இருக்கிறதென்று உணரும் போது சோர்ந்து விடாதீர்கள். நாம் நம்முடைய கொஞ்ச விசுவாசத்தை உபயோகிக்கும்போது அது நாளடைவிலே பெரிய விசுவாசமாக மாறிவிடும்.

இயேசு புயலால் பதற்றமடைந்திருந்த சீஷர்களிடம் அவர்களுக்கு அற்ப விசுவாசமே இருந்தது என்று சொன்னார். (மாற்கு 4:40). ஆனாலும் கொஞ்ச வருடங்களுக்குப் பின் இதே மனிதர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பயங்கரமான உபத்திரவங்களின் மத்தியிலே மும்முரமாக பரப்பின போது பெரிய விசுவாசத்தைப் பயிற்சிப்பதைக் காண்கிறோம். அவர்களின் அற்ப விசுவாசம் பெரிய விசுவாசமாக வளர்ந்தது. நம்முடையதும் அவ்வாறு வளரும். அவர்கள் ஒரு நல்ல நாளிலே கடற்கரையிலே அமர்ந்து கொண்டு அதைக் கற்றுக் கொள்ளவில்லை. பெரிய புயல் அடித்த சமயத்திலே கற்றுக் கொண்டனர். முதலில் புயல் அடித்த போது நம்பத் தவறினர், ஆனால் நாளடைவில் கற்றுக் கொண்டனர். இந்த மக்கள் அனுதினமும்

மரணத்தை எதிர்நோக்கினர். ஆனாலும் தொடர்ந்து முன்னேறினர். ஏனென்றால் வாழ்வானாலும் சாவானாலும் தேவன் நம்பத்தக்கவர் என்று அறிந்திருந்தனர்.

இயேசு சிலுவையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது, தனது இறுதி மூச்சை விட இருந்த போது அவரின் வார்த்தையானது நம்பிக்கையின் வார்த்தையாக இருந்தது. அவர் பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன் என்றார் (லூக்கா 23:46). நம் இறுதி மூச்சு வரை நாம் தேவனை நம்பக் கற்றுக் கொள்வோம் என்று ஜெபிக்கின்றேன். தேவனை நம்பும் ஒரு வாழ்க்கை வாழ்வதானது நிர்ப்பந்தமாக வாழக்கூடிய வாழ்க்கையைச் சந்தோஷமாக அனுபவிக்க உகந்ததாக மாற்றுகிறது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வல்லமையான பரிசு நம்பிக்கையாகும். எனவே நாம் எல்லா வகையிலும் உபயோகிப்போமாக.

அத்தியாயம் 23

# தேவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்தல்

தேவனுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒருவனக் கொண்டு அவர் என்ன செய்யக்கூடும் என்பதை இவ்வுலகம் இன்னும் பார்க்க வேண்டியிருக்கிறது

- ட்.எல்.மூடி

மக்கள் கவலைப்படும் படியான காரியங்கள் எப்போதுமே இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நம் ஊழியங்களிலே எல்லாவற்றிற்கும் மேல் 3 காரியங்களுக்காய் அதிக விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுகிறது. பிள்ளைகளுக்காகவும் அன்பானவர்களுக்காகவும் ஜெபம், பொருளாதாரத்திற்காக ஜெபம், சுகத்திற்காக ஜெபம்.

தேவனை நம்புவதற்கான எதிரி கவலையாகும். அது நம் விசுவாசத்தைத் தொடர்ந்து திருடி நம்மை பயத்திலே வைக்கிறது. பயத்தின் மூலமாக எவருமே தாங்கள் விரும்பியதைப் பெற்றுக் கொண்டதில்லை. நிலையான விசுவாசம் மற்றும் தேவன் மேல் நம்பிக்கை வைப்பதின் மூலமாக நாம் விரும்பும் வாழ்க்கையை வாழ முடியும். நாம் விரும்பும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற முடியும். கவலையின் இந்த 3 பகுதிகளைப் பார்ப்போமாக. நாம் இங்கே காணப்போகும் அடிப்படைகளை நம் வாழ்வின் எந்தவொரு பகுதிக்கும் பொருத்திக் கொள்ளலாம்.

## 1. நம் பிள்ளைகளைப் பற்றிய கவலை

அவர்கள் எதிர் காலத்திலே எப்படி இருப்பார்கள்? நாம் நல்ல பெற்றோர்களா? தேவைப்படும் போது அவர்களை நாம் எப்படித் திருத்த வேண்டும்? நாம் மிகவும் கண்டிப்பானவர்களாக இருக்கின்றோமா? அவ்வளவு கண்டிப்பாயில்லையா? நம் பிள்ளைகள் தங்கள் இளம் வயதில் போராட்டங்களைச் சந்திக்கும் போது நாம் செய்த தவறுகள் தான் அவர்களின் பிரச்சினைக்கு வேராக இருக்கிறதா? என்று அநேகந்தரம் யோசிக்கின்றோம். சாத்தான் பெற்றோர்கள் மீது தவறான குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறான்.

டேவுக்கும் எனக்கும் 4 வளர்ந்த பிள்ளைகளும் பதினோரு பேரப்பிள்ளைகளும் உண்டு. அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலே போராடுவதைப் பார்த்திருக்கிறோம். அவர்களுடைய போராட்டங்களிலே அவர்களுக்கு உதவ நினைக்கும் போது ஜெபமே எனது பெரிய நண்பன் என்பதைத் தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அவர்களின் கவலைகளைப் பற்றி நான் கவலைப்படுவது நக்கோ அவர்களுக்கோ எவ்வித பலனையும் தராது.

நாம் நம்முடைய பிள்ளைகளோ அல்லது நாம் நேசிக்கும் பிறரோ தவறான தீர்மானங்களை எடுப்பதைக் காணலாம். அவர்கள் மாற வேண்டுமென்று அவர்களை உணர்த்த முயற்சி செய்யலாம். ஆயினும் அநேக சமயங்களிலே ஒருவருடைய பிரச்சினைக்கான பதிலை நாம் அறிந்திருந்தாலும், அவர்கள் நமக்குச் செவி கொடுக்க மாட்டார்கள். விசேஷமாக இளம் பிள்ளைகள் தவறுகளைச் செய்து நல்லது கெட்டது அவர்களாக கற்றுக் கொள்ளட்டும் என்பது போல தோன்றும்.

எனக்கும், டேவுக்கும் அநேக பேரப்பிள்ளைகள் இருப்பதால் தற்சமயம் எல்லா வயது வரம்பிலும் ஒருவராவது இருக்கின்றனர். தற்சமயம் இரண்டு இளம் வாலிபர்கள் இருக்கின்றனர். அவர்கள் இருவரும் முற்றிலும் வித்தியாசமான வழியிலே போராடுகின்றனர். ஒருத்தி பலவிதங்களிலே வெளிப்படும் பாதுகாப்பின்மையினால் கஷ்டப்படுகிறான், மற்றவள் தொடர்ந்து அளவுக்கதிகமாக

பகுத்தறிவதாலும், தவறான பொறுப்புணர்ச்சியாலும் கவலைக்கு ஊட்டமளிக்கிறாள்.

எனக்கு என்னுடைய வயதிலே எனக்கிருக்கும் அனுபவத்தால் இருவரையும் பார்க்கும் போது சீக்கிரமாகவே அவர்களுடைய பிரச்சினையின் வேரைக் கண்டுபிடிப்பது சுலபமாகவே இருந்தது. ஆனால் அவர்களுக்கு அது சுலபமாக இல்லை. ஏனென்றால் அவர்கள் இருவரும் இன்னும் தங்கள் வாழ்வில் கற்றுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களையேப் புரிந்து கொள்ள முயன்றும் தங்களுடைய சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டும் இருக்கையிலே, கூடவே அவர்களின் சிறு பிள்ளைத்தனத்தையும், வாலிபத்தின் வழிகளையும் பற்றிப் பிடித்துக் கொண்டும் இருக்கின்றனர்.

எங்களுடைய மற்ற பேரப்பிள்ளைகள் வேறே பிரச்சினைகளால் போராடி ஒரு பத்திரமான இடத்திற்கு வந்து விட்டதையும் பார்த்தோம். அவர்கள் இப்போது தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். ஒருவன் கோபத்தோடு போராடினான், மற்றொருவன் போதைப் பொருட்களால், வேறொருவன் பயங்கரமான முரட்டாடத்தால் போராடினான். நான் இப்போது திரும்பிப் பார்க்கும் போது அவர்களுக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபமே பல வருடங்களுக்குப் பின் அற்புதமான பலனைக் கொண்டு வந்திருக்கிறது. ஜெபத்தை இறுதியான தஞ்சமாக பார்க்கக்கூடாது மாறாக ஒவ்வொரு கஷ்டத்தின் போது நாம் செய்யக்கூடிய முதல் காரியமாக இருக்க வேண்டும். ஜெபமானது தேவன் கிரியை செய்ய கதவைத் திறந்து கொடுக்கிறது. நாம் தொடர்ந்து ஜெபித்து தேவனிடம் ஒப்புவித்த காரியங்களையும் நபர்களையும் பொறுப்பேற்றுக் கொண்டு பராமரிப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்தும் போது அந்தக் கதவு திறந்ததாகவே இருக்கிறது.

> *தேவன் கிரியை செய்ய ஜெபம் கதவைத் திறக்கிறது*

மற்றெல்லா பிள்ளைகளைப் போலவே எங்களது நான்கு

பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தது. ஆனால் அவர்கள் அனைவரும் இப்போது வளர்ந்த ஆண்களாகவும் பெண்களாகவும் இருக்கிறார்கள். எல்லோரும் தேவனை சேவிக்கின்றனர். நான்கு பேருடனும் நாங்கள் நல்ல உறவை அனுபவிக்கிறோம். அவர்களைக் குறித்து பெருமைப்படுகிறோம். உங்களுடைய பிள்ளைகள் ஏதோவொன்றுடன் நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கலாம். தேவனுடைய கவனம் நிச்சயமாகவே தேவைப்படும். ஒரு பிரச்சினையைச் சார்ந்ததாக அது இருக்கலாம். பெற்றோர்களுக்கான சோதனை கவலைப்படுவது தான் நாம் நம் பிள்ளைகளுக்கு உதவ விரும்புகிறோம்!. அவர்கள் கஷ்டப்படுவதற்கு பதிலாக நாமே கஷ்டப்படலாம் என்று நினைக்கலாம். இப்படியாகத்தான் தேவனுடைய அன்பு நம் பாவமான நிலையிலும் நமக்கு உதவி செய்கிறது. பெற்றோர்களாக அப்படி உணர்வது இயற்கையே. ஆயினும் வாழ்க்கையின் எல்லா கஷ்டங்களிலிருந்தும் அவர்களை நம்மால் விடுவிக்க இயலாது. சில சமயங்களிலே அவர்கள் மேல் நாம் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவர்கள் விதைத்த விதையின் பலனை அவர்கள் அறுக்க அனுமதிக்க வேண்டும்.பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியிலே நடத்து, முதிர் வயதிலும் அவர்கள் அதை விட்டு விடாதிருப்பார்கள் என்று வேதம் நமக்கு போதிக்கிறது (நீதி 22:6)

பிள்ளை ஒரு பருவத்திலே வழி தவறி போனாலும் நாம் அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்தால் ஒரு நல்ல முன் மாதிரியை அவர்களுக்கு காண்பிப்பதால் அவர்கள் மீண்டும் சரியானதைச் செய்யத் தொடங்குவார்கள்.

## யாருடைய தவறு இது?

தங்கள் வாழ்விலே பிரச்சினையோ அல்லது ஏதோவொரு உடைபட்ட நிலையோ கொண்ட பிள்ளை உங்களுக்கு இருந்தால் அது யாருடைய தவறு? இந்த பிரச்சினை அவர்களுக்கு ஏற்படும் படி பெற்றோராக தவறேதும் செய்தீர்களா? அல்லது அவர்களின் தவறான தெரிந்து

கொள்ளுதலா? அவர்கள் நண்பர்களாக அல்லது அவர்கள் இன்றைய பகுதியாக இருக்கும் சமுதாயத்தைத் தேர்வு செய்தார்களா?

யாருடைய தவறாக இருப்பினும், தேவனே பதில் என்பதை நாம் உணர எடுத்துக் கொள்ளும் நேரத்தை விட குற்றம் சுமத்த முயன்று அதிக நேரத்தைச் செலவிடுகிறோமென்று நான் நினைக்கிறேன். நான் நிச்சயமாகவே என் பிளைகளோடு தவறு செய்தேன். ஆயினும் நான் ஒரு நல்ல பெற்றோராகவும் இருந்திருக்கிறேன் என்பதிலே ஆச்சரியமடைகிறேன். நான் மிகவும் மோசமான குடும்பத்திலே வளர்க்கப்பட்டேன். எங்கள் செயலாற்ற இயலாத குடும்பத்திலே ஒன்றின் மேல் ஒன்றாக கெட்ட முன்மாதிரிகளே இருந்தது. ஆயினும் என் பிள்ளைகளை நன் நினைத்தற்கு மேல் நல்லவிதமாக வளர்க்க தேவன் கிருபை கொடுத்தார். என்னுடைய இரண்டு மகள்களும் 'அம்மா நீங்கள் வளர்த்த விதத்தையும் சகித்த பாடுகளையும் பார்க்கும் போது எங்களை நன்றாக வள்ர்த்திருக்கிறீர்கள்' என்று சொன்னார்கள்.

பெற்றோராக பரிபூரணராக இல்லாவிடினும், தேவன் அதை மேற்கொண்டு எந்தவொரு தவறையும் சரி செய்து விடுவார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். நம்மிடமிருந்து அவர் எதிர்பார்ப்பதெல்லாம் மனந்திரும்பும் இருதயமும் அவர் கிரியை செய்யும் படி அவர் மீது நம் பிரச்சனைகளை வைக்கும் ஜெபமுமேயாகும்.

உங்கள் பிள்ளைகளின் மூலம் வரும் சோதனையை நீங்கள் எதிர்கொள்ள தேவனிடம் ஜெபிக்கிறேன். மேலும் நீங்கள் அவர்களில் செய்ய முடியாத மாற்றத்தைத் தேவன் செய்ய அவரை நம்புங்கள். தேவன் மாத்திரமே மக்களை மாற்ற இயலும். நான் 'உங்கள் பிள்ளைகளைப் பற்றி கவலைப்படாதீர்' என்று சொல்லும் போது செய்வதை விட சொல்வது எளிது என்பதை அறிந்திருக்கிறேன். ஆனால் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறாரென்றும், பிறரின் தெரிந்து கொள்ளுதலை நம்மால் கட்டுப்படுத்த இயலாவிட்டாலும் நம் ஜெபமானது தேவன் அவர்கள் வாழ்க்கையிலே கிரியை செய்ய

கதவைத் திறந்து விடுகிறது. அவரால் தீர்க்க இயலாத பிரச்சினை எதுவும் இல்லை.

நாம் நம்முடைய பிள்ளைகளைத் தேவனிடம் ஒப்படைத்து விடலாம். பெற்றொராகிய நம்மை அவர் நடத்துவார். ஜீவனுக்கு நேரான குறுகிய பாதையிலே அவர்கள் நின்று நிலைக்க, வாழ்நாள் முழுவதும் அவர்களோடு கிரியை செய்வார். இல்லையென்றால் நாம் அவர்களைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டேயிருப்போம். அவர்கள் கஷ்டப்படுவார்கள் அல்லது தவறானதைத் தெரிந்து கொள்வார்கள் என்று பயந்துகொண்டே இருக்கலாம். நான் இரண்டையும் செய்திருக்கிறேன். தேவனிடம் அவர்களை ஒப்புவிப்பது மிகவும் சிறந்தது. நம்முடைய விசுவாசமும், நம்பிக்கையும் ஜெபத்தாலும் அறிக்கையாலும் வெளியாகிறது. உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள், நீங்கள் ஜெபிப்பதைச் சொல்லுங்கள். தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக இருப்பதைப் போன்ற தெரிந்து கொள்ளுதலை அவர்கள் எடுக்கும் போது தொடர்ந்து அவரை நம்புங்கள். நம்பிக்கையின் மேல் காலக்கெடுவை நியமிக்காதீர்.

*நம்பிக்கைக்கு*
*காலக்கெடு வைக்காதீர்*

நம் பிள்ளைகளுக்காகவும் நாம் நேசித்து பராமரிக்கும் மற்றவர்களுக்காகவும் பவுல் தாம் நேசித்து ஊழியம் செய்தவர்களுக்காக ஜெபித்ததைப் போன்று ஜெபிக்கலாம். மக்களை எப்படி தேவனிடம் ஒப்படைக்கலாம் என்பதற்கு இந்த வசனத்தை மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

> இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாகப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.
>
> அப். 20:32

இந்த வேத வசனத்தை எப்படி ஜெபித்து தனிப்பட்ட விதமாக எடுத்துக் கொள்வதென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. நீங்கள் யாருக்காக ஜெபிக்க விரும்புகின்றீர்களோ அவரின் பெயர் சாம் என்று வைத்துக் கொள்வோம். சாம்மைப் பற்றிக் கவலைப்பட்டு அவரை மாற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக அவரை மனமுவந்து தேவனிடம் ஒப்படைக்கும் நிலைக்கு வந்து விடுவீர்கள். அதை இந்த வார்த்தைகளின் மூலம் செய்யலாம்.

> "பிதாவே நான் சாமை உம்மிடம் ஒப்படைக்கிறேன். அவரை உம்முடைய பொறுப்பிலே முதலீடு செய்கிறேன். உம்முடைய கிருபையின் வார்த்தைக்கு அவரை ஒப்புவிக்கிறேன். நீர் சாமை பத்திரமாக வைப்பீரென்று நம்புகிறேன். உம்மோடு ஒரு தனிப்பட்ட உறவுக்குள்ளாக அவரை இழுத்துக் கொள்வீரென்று நம்புகிறேன்."

ஆக எப்போதெல்லாம் சாமைப் பற்றி கவலைப்படுகிறீர்களோ அப்போதெல்லாம் அந்தக் கவலையை ஜெபமாக மாற்றி விடுங்கள்.

இதை நான் என் வாழ்க்கையில் பின்பற்றியதால் என் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் அற்புதமான காரியங்கள் நடைபெறுவதைக் கண்டிருக்கிறேன். சில சமயங்களிலே என் பிள்ளைகள் அல்லது மற்றொருவருக்காக குறிப்பிட்ட வேத வாக்கியத்தை மாதக்கணக்காக ஜெபித்திருக்கிறேன். தேவனுடைய கிரியையைக் கண்டு பூரித்திருக்கிறேன். கவலையும் பயமும் தேவனுடைய கரத்தை அசைக்காது, ஆனால் விசுவாசம், நம்பிக்கை, ஒப்புக் கொடுத்தல் அசைக்கும்.

## 2. பொருளாதாரத்தைப் பற்றிய கவலை

நாம் வாழ நமக்கு பணம் தேவை. அது போதுமானது இருக்கிறதென்று நமக்கு ஒருபோதும் தோன்றுவதில்லை. மீண்டுமாக பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவது அதற்கான பதிலன்று. தேவன் நம்மிடம் தசம பாகங்களையும், காணிக்கைகளையும் என்னிடத்தில் கொண்டு

வாருங்கள் என்று அறிவுறுத்துகிறார். அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து அவருடைய ஆசீர்வாதங்களை ஊற்றுவார். அவர் பட்சித்துப் போடுகிறவனை நமக்காகக் கடிந்து கொள்வார் (மல்கியா 3:10-11). நாம் விதைக்காவிட்டால் அறுவடையை எதிர்பார்க்க இயலாது. எனவே உங்களுடைய கொடுப்பதிலே நீங்கள் உண்மையுள்ளவராக இருக்கிறீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் அவ்வாறு இருப்பீர்களேயென்றால், தேவனிடத்தில் ஜெபிப்பதற்கு உங்களுக்குத் தைரியம் இருக்கும். அவருடைய ஐசுவரியத்தின் படி உங்கள் தேவைகளெல்லாம் சந்திக்கப்பட எதிர்பார்க்கலாம் (பிலி 4:19). நமக்கிருக்கும் பொருளிலே நாம் ஞானத்தையும் உபயோகிக்க வேண்டும்.

நாம் விரும்பும் எல்லாவற்றையும் கொடுப்பேன் என்று வாக்களிக்கவில்லை, ஆனால் நம்முடைய தேவைகளைச் சந்திப்பார். நீங்கள் விரும்பும் எதையும் கேட்க உங்களுக்கு உரிமையுண்டு, நம் இருதயத்தின் வாஞ்சைகளைக் கொடுப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார் (சங்கீதம் 37:4). ஆனால் அந்த வாஞ்சைகளும் விருப்பங்களும் நமக்கு ஆவிக்குரிய பலனை அளிக்காமல் வெறுமனே மாம்சீக விருப்பங்களாக இருக்கக்கூடாது.

தேவன் எங்கள் தேவைகளை அநேக ஆண்டுகளாக சந்தித்ததைக் கவனித்திருக்கிறேன். பல வருடங்களிலே அவருடைய கொடுக்கும் அளவும் உயர்ந்திருக்கிறது. ஆனால் இல்லாமலிருந்த அநேக ஆண்டுகளும் இருந்தது என்பதை என்னால் நிச்சயமாக சொல்ல முடியும். தேவன் நாம் உலக காரியங்களின் மேல் கவனம் வைக்க விரும்புகிறதில்லை. அவர் தமது ஞானத்தால் இப்போது நாம் என்ன விரும்புகிறோமே அதைக் கொடுக்கிறதில்லை. ஏனென்றால் நாம் விரும்புவதை கொடுப்பதற்கு பதிலாக நமக்குச் சிறந்தவற்றை வைத்திருக்கிறார். தாமதம் மறுக்கப்பட்டதன்று. நாம் அவரது நேரத்தை நம்ப வேண்டும். உங்களுக்கு வேண்டுமென்று நீங்கள் நினைப்பதை அவர் கொடாமலிருப்பார். ஏனென்றால் அதை அச்சமயம் பெற்றுக் கொள்வதற்கான ஞானம் உங்களுக்கு இல்லாமலிருப்பதால்.

நம் பொருளாதாரத்தைப் பற்றிக் குறைவாக கவலைப்படுவதும், அதைச் சரியாக உபயோகிக்க அதிக ஞானமும் தான் நமக்கு அதிகமாக தேவைப்படுகிறது. நம் வாழ்வின் பிற்காலங்களிலே திருப்திப்படுவதை இப்போது செய்வது தான் ஞானம். ஆனால் நம் சமூகமோ நிறைய பொருட்களை வாங்க நிறைய வழிகளையும் பிற்காலம் அதற்கான பணத்தை செலுத்தாமல் தள்ளிப்போட்டுக் கொள்ளலாம் என்பதும் போன்ற சலுகைகளை அளித்து கடனைக் குவித்துக் கொள்ள நம்மை உந்தித்தள்ளுகிறது. அது கிரிக்கெட் என்று அழைக்கப்படுகிறது. அதை நாம் எவ்வளவு அதிகம் பெற்றிருக்கிறோமோ அவ்வளவு பொருளதாரப் பிரச்சினைகளை நாம் உண்டாக்கிக் கொள்கிறோம். நம்மால் உண்மையாலுமே வாங்கி உபயோகிக்க இயலாத சார்ஜ் அட்டைகளும், உபயோகிக்கும் போது நாளைய செழிப்பை நாம் இன்றே செலவிடுகின்றோம். நாளை வரும் போது நமக்குத் துயரத்தைத் தவிர வேறெதுவும் இராது.

காரியங்களுக்காகக் காத்திருக்கும் போது எதிர்காலத்திலே அதின் பயன் என்னவாக இருந்தாலும் பரவாயில்லை இப்போதே எனக்கு வேண்டுமென்று அதை அடைய என்ன வழியிலெல்லாம் அடையலாம் என்று பார்ப்பதற்குப் பதிலாக அதிக பொறுமையுடன் காத்திருக்க உங்களை வேண்டிக் கொள்கிறேன். நாம் வாங்கும் பொருட்களுக்குப் பணத்தைச் செலுத்துவது இன்னும் நாம் செய்யக்கூடியதொன்றே. ஆயினும் வெகு சிலரே அதைச் செய்கின்றனர்.

சொத்தைக் காட்டிலும் சமாதானம் விலையேறப்பெற்றது! நமக்கு நம்மையே ஒடுக்கும் அளவு கடனிருக்கும் பொழுது அது நம் சமாதனத்தைத் திருடி உறவுகள் ரீதியாக பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. எங்கே பொருளதாரம் குறைவுபடுகிறதோ அங்கே எப்போதுமே அழுத்தமும் இருக்கிறது. அது அடிக்கடி நம் உறவுகளிலே பிரச்சினைக்ளை ஏற்படுத்துகிறது.

*சொத்து, பொக்கிஷங்களைக் காட்டிலும் சமாதானம் அதிக விலையேறப் பெற்றது*

நீங்கள் ஏற்கனவே கடனில் மூழ்கி இருப்பீர்களேயென்றால் உடனடி தீர்வு என்று என்னிடம் எதுவும் இல்லை. ஆனால் நீங்கள் ஜாக்கிரதையாக தேவனுக்கு முதலாவதாக கொடுக்கும் போது, உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்காமல் உங்களை ஒழுங்குபடுத்தி உங்கள் கடனை முறையாக செலுத்த தொடங்கும் பொழுது நாளடைவிலே நீங்கள் கடனைவிட்டு மீண்டு விடுவீர்கள். பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

எல்லாவற்றிலும் எப்போதும் சில விதிவிலக்குகள் உண்டு. ஆனால் அனேக சமயங்களிலே நமக்கு பணம் இல்லாமலிருப்பது நம் பிரச்சினையன்று. ஆனால் நமக்கிருப்பதை விட அதிகமான பணத்தை செலவழிக்கிறோம். நீங்கள் சம்பாதிக்காத, பெற்றுக் கொள்ள எந்த வேலையும் செய்யாத ஆனாலும் பொருட்கள் மட்டும் கொடுக்கப்பட வேண்டும் என்று உணரும் நபராக உணராதீர். பொறுமையாக இருந்து நீங்கள் விரும்பும் காரியங்களைச் சரியான நேரத்திலே தேவன் உங்களுக்குக் கொடுக்க அவரை நம்புங்கள்!

*அனேக சமயங்களிலே நமக்கு போதிய பணம் இல்லாதது நம் பிரச்சினை இல்லை, ஆனால் நாம் வைத்துக் கொண்டிருப்பதற்கும் அதிகமாக செலவழிக்கிறோம்*

## 3. நம்மைப் பற்றியும் நம்மைச் சார்ந்த அனைத்தைப் பற்றியும் கவலைப்படுவது

இவ்வுலகிலே அநேகமாக இது தான் தலையாய கவலையாகும். நம்மைச் சார்ந்த நூற்றுக் கணக்கான காரியங்களைக் குறித்துக் கவலைப் படுகிறோம். நம் சுகத்தைப் பற்றிக் கவலைப்படுகிறோம். மருத்துவரிடமிருந்து ஒரு கெட்ட அறிக்கை கிடைக்குமென்றால், சீக்கிரமாகவே நம் மனதில் நமக்கு என்வாகும் என்ற எண்ணங்கள் தோன்றுகிறது. நாம் பாடுபடுவோமா? மரித்து விடுவோமா? தேவன்

நமக்கு நல்ல பலனளிக்கக் கூடிய மருத்துவத் தொழில் நுட்பங்களை நமக்குக் கொடுத்திருப்பினும் இயேசுவே நம் பரிகாரி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்! நாம் அவரை நம்ப வேண்டுமென்றும் நம் ஆரோக்கியத்தைப் பற்றிய அவரது அறிவுரைகளை நாம் பின்பற்ற வேண்டுமென்றும் அவர் விரும்புகிறார்.

*நாம் சுகவீனம் அடையும் போது நமக்குச் சுகத்தை மட்டும் அளிக்காமல் தேவன் நம்மை ஆரோக்கியமாக வைக்க அவரை நம்பும் சிலாக்கியம்*

எனக்கு எவ்வளவு வயதாகிறதோ அவ்வளவு ஆரோக்கியமாக நான் மாறுகிறேன். ஏனென்றால் தேவன் எனக்குக் கிருபையாய் கொடுத்திருக்கும் சரீரத்தை நான் எப்படி மதிக்க வேண்டுமென்பதைப் பற்றிய ஞானத்தை நான் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்கிறேன். உதாரணமாக நாம் தொடர்ந்து அழுத்தத்திலே வாழ்ந்து கொண்டு ஆரோக்கியமாக இருக்க எதிர்பார்க்கக்கூடாது.எனக்கு முப்பது வயது இருந்த போது எப்போதுமே சரீரத்திலே மோசமாக உணர்ந்ததுண்டு. ஆனால் இப்போது எனக்கு வயது 70-க்கும் மேலாகிறது. பெரும்பாலான சமயம் நான் நன்றாக உணர்கிறேன். பெரும்பாலான மாற்றங்கள், உணவு உட்கொள்ளும் பழக்கத்தை மாற்றியதாலும், உடற்பயிற்சியாலும், குறைந்த அளவு அழுத்தத்தோடு வாழப் பழகியதாலும், எல்லா நேரங்களிலும் இயேசு தம்முடைய குணமாக்கும் வல்லமையை என்னிலே நடப்பிக்க அவரை நம்புவதாலும் ஏற்படுகின்றது. நாம் நோய்வாய்பட்டு சுகத்திற்காகத் தேவை ஏற்படும் வரை காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. நாம் சுகவீனமடையும் போது மட்டும் தேவன் நம்மை சுகமாக்க வேண்டுமென்று கேட்பதோடு தேவன் நம்மை ஆரோக்கியமாக வைக்கும் படி அவரை நம்பும் சிலாக்கியமும் நமக்கு உண்டு.

நம்மைப் பராமரித்து பார்த்துக் கொள்வதில் தேவன் களிகூறுகிறார்.

நமக்கான எல்லாவற்றைப் பற்றியும் அவர் கரிசனையுள்ளவராக இருக்கிறாரென்று அவருடைய வார்த்தைக் குறிப்பிடுகின்றது.

> கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.
>
> சங்கீதம் 138:8

நாம் அவருடைய சிருஷ்டிகள், பிள்ளைகள். நாம் அவரை அனுமதித்தால் நம்மைப் பார்த்து பராமரிக்கவும் அவர் தம்மை அர்ப்பணிக்கிறார். தேவனை நம்புவதைப் பற்றிய காரியத்திலே எனக்கு மிகவும் பிடித்தமான வசனம் 1 பேதுரு - வில் இருக்கிறது. இந்த வசனத்தை தயவு செய்து கவனமாக வாசியுங்கள்.

> அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.
>
> 1 பேதுரு 2:23

இந்த ஒரு வேத வசனம். இந்தப் புத்தகத்திலே நான் சொல்ல விரும்பிய அனைத்தையும் கொடுக்கிறது. நாம் தேவனை எல்லா நேரங்களிலும் எல்லா வழிகளிலும் நம்ப இயலும். அவரிடம் நாம் அர்ப்பணிக்கும் எதுவும் அவருடைய கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்டு இருக்கிறதில்லை. இயேசுவை மக்கள் எவ்விதம் நடத்தியிருந்தாலும் அவர் தம்மைத் தாமே பார்த்துப் பராமரித்துக் கொள்ளவில்லை. மாறாக அவர் பிதா அதைச் செய்யும் படி தொடர்ந்து அவரை நம்பினார்.

நாம் பிறரால் சரியாக நடத்தப்படுகிறோமா என்று பார்க்கவும், எவரும் நம்மை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம். நம்மை பாதுகாத்துக்கொள்ள முயன்றும் எத்தனை அழுத்தங்களையும், சந்தோஷமின்மையையும் நம் வாழ்வில் தானே உருவாக்கிக் கொள்கிறோம். நாம் நினைத்துப் பார்க்கிறதற்கும் அதிகமாகவே

செய்கிறோம். இந்த புத்தகத்தின் முடிவை நாம் நெருங்குகையிலே, உங்களையும், உங்களுக்கான எல்லாவற்றையும் இயேசுவிடம் ஒப்புவிக்க மனமுடையவர்களாய் இருங்கள். உங்களை நீங்கள் அவரிடம் முற்றிலுமாக ஒப்படைத்து விட்டீர்களா?

## எவ்வளவு 'நீங்கள்' உங்கள் மனதிலே இருக்கிறது?

நம்மை யார் பார்த்துக் கொள்வார்கள். அவர்கள் நம்மிடம் நன்றாக இருப்பார்களா? பார்த்துக் கொள்வார்களா? என்று கவலைப்படுகிறோம். நாம் பிறரை சார்ந்திருப்போமேயென்றால் அவர்கள் நம்மை நன்றாக நடத்துவார்களா? பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படுகிறோம். அவர்களைப் பிரியப்படுத்த முயற்சிக்கின்றோம். உலகத்திலே என்ன நடக்கப் போகிறது? அது நம்மை எப்படிப் பாதிக்கும்? பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது நம் வேலையை நாம் இழந்து விடுவோமா?

"எனக்கு என்ன நடக்கும்?" என்பதே பெரும்பாலனவர்கள் பெற்றிருக்கும் பெரிய பயமாகும். ஆனால் நற்செய்தி என்னவென்றால் அந்தக் கவலையை நாம் இன்றே விட்டு விடுவோம். தேவன் நம்மைப் பார்த்துக் கொள்வாரென்று உணருவோம்.

'உங்களை' உங்கள் மனதிலிருந்து எடுத்துப் போட தேவன் உங்களுக்கு உதவ அவரிடம் கேளுங்கள். ஏனென்றால் எவ்வளவு குறைவாக உங்களைப் பற்றி நீங்கள் எண்ணுகிறீர்களோ அவ்வளவு சந்தோஷமாக நீங்கள் இருப்பீர்கள். தேவன் உங்களைப் பார்த்துக் கொள்ள நீங்கள் அவரை நம்பும் போது, பிறருக்கு உதவுவதின் மூலமாக நல்ல விதைகளை விதைக்க உறுதியாக இருங்கள். தேவையிலிருக்கும் ஒருவருக்கு ஒவ்வொரு முறையும் நீங்கள் உதவும் போது உங்கள் சொந்த வாழ்விலே தேவனின் உதவியை அறுவடை செய்ய விதைகளை விதைக்கின்றீர்கள்.

அநேக ஆண்டுகளுக்கு முன் என் வாழ்விலே, என் சந்தோஷமின்மையானது என்னை அதிகமாக நெருக்கிக்

கொண்டிருந்த ஒரு நிலையை நான் அடைந்தேன். சந்தோஷமாக இருக்க தேவன் என்னிடம் காண்பிக்கும் எதையும் செய்ய ஆயத்தமாக இருந்தேன். அது ஒரு நீண்ட கதை. அதன் சுருக்கம் என்னவெனில், நான் சுயநலக்காரியாக இருந்ததால் சந்தோஷம் இல்லாமல் இருந்தேன் என்பதைக் காண்பித்தார். பெரும்பாலான நேரங்களிலே நான் தான் என் நினைவிலே இருந்தேன். நான் நன்றாக பார்த்துக் கொள்ளப்படுகிறேனா என்பதை உறுதி செய்ய நான் எடுத்துக் கொண்ட அதிகப்படியான முயற்சியால் அவர் எனக்குச் செய்வதைத் தடுத்துக் கொண்டிருந்தார். தேவன் நம்மைப் பார்த்துக் கொள்ள விரும்புகிறர், ஆனால் நாம் நம்மை அவரிடம் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

## அனைத்தையும் தேவனிடம் ஒப்புவி

நாம் நம்மை ஒருவரிடமோ ஒரு காரியத்திற்காகவோ ஒப்புக் கொடுப்போமேயென்றால் நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கிறோம் என்று அர்த்தமாகிற்து. ஒரு நபருக்கோ வேலைக்கோ அர்ப்பணித்திருக்கலாம். குடும்பத்திற்கோ நண்பர்களுக்கோ அர்ப்பணித்திருக்கலாம். தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்கு என்னை அர்ப்பணித்திருக்கிறேன். ஆனால் எல்லா அர்ப்பணிப்புகளுக்கும் மேல் நம்மை தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். நம் வாழ்விலே அவருடைய சித்தம் மட்டுமே நிறைவேற்ற நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அர்ப்பணிப்புக்கு முடிவு எதுவும் இல்லை. ஒவ்வொரு நாளும் இத்தகைய ஜெபத்தை ஏறெடுக்க அறிவுறுத்துகிறேன்.

> “பிதாவே என்னைப் புதிதாக உம்முடைய கரங்களிலே சமர்ப்பிக்கிறேன். எல்லாவற்றிலும் எல்லா விதங்களிலும் நீர் என்னை பார்த்துக் கொள்ள உம்மை நம்புகிறேன். எப்போதும் உம்மைப் பின்பற்ற என்னை வழிநடத்தும், கிருபையைத்தாரும். நான் காயப்படும்போது என்னைச்

> சுகமாக்க உம்மை நம்புகிறேன். எனக்கு ஏதாவது தேவையிருக்குமேயென்றால் அதை நீர் சந்திக்க உம்மை நம்புகிறேன். என்ன செய்ய வேண்டுமென்று நான் அறியாமலிருக்கும் போது எனக்கு என்ன நேரிட்டிருக்கிறது என்பதைக் காட்ட உம்மை நம்புகிறேன். நான் உம்முடையவள்/ன். நீர் என்னுடையவர். உம்மை நான் நம்புகிறேன்! இயேசுவின் நாமத்தில் ஆமென்!"

நாம் நம்மையே தேவனிடம் கொடுக்கும் வரை நம்மைச் சார்ந்த எதையும் நாம் எப்படி அவரிடம் கொடுக்க முடியும்? நீங்கள் ஒருவேளை கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதினால் கிறிஸ்தவராக மாறியிருக்கலாம். ஆனால் அவருடைய பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் உங்களை முழுவதுமாக அர்ப்பணித்திருக்கின்றீர்களா?

நீங்கள் உங்கள் எல்லா கவலைகளையும் இயேசுவின் மேல் சுமத்தி அவர் உங்களைப் பார்த்துக் கொள்ளும்படி அனுமதிக்க விருப்பமுள்ளவர்களாக இருப்பீர்களென்றால் இப்போதே உங்கள் வாழ்வு சிறப்படையத் தொடங்கும்

> அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.
>
> 1 பேதுரு 5:7

இந்த புத்தகத்தை நான் அனுபவித்து எழுதினேன். இதை நீங்கள் அனுபவித்துப் படிப்பதோடு எல்லா காரியங்களிலும் எல்லா சமயங்களிலும் தேவனை நம்பும் உங்கள் அர்ப்பணிப்பை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள திரும்பத்திரும்பப் படிக்க ஜெபிக்கிறேன்!

# Notes


1. “Trust,” Webster’s Dictionary 1828-Online Edition, http://websterdictionary1828.com/Dictionary/trust.
2. “Trust,” merriam-Webster.com, www.merriam-webster.com/dictionary/trust.
3. Dr. Erwin W.Lutzer, “Who Can You Trust?,” Moody Church Media 2002, www.moodymedia.org/articles/who-can-you-trust/.
4. “Charles Dickens Quotes,” Goodreads, www.goodreads.com/quotes/18876-no-one-is-useless-in-this-world-who-lightens-the.
5. “John Bunyan Quotes,” Brainy Quote, www.brainyquote.com/quotes/quotes/s/saintaugus108487.html
6. “Saint Augustine quotes,” BrainyQuote, www.brainyquote.com/quotes/quotes/s/saintaugus108487.html
7. Lee Strobel, “Why Does God Allow Tragedy and Suffering?,” CT Pastors, http://www.christianitytoday.com/pastors/2012/july-online-only/doesgodallowtragedy.html.
8. “C.S. Lewis Quotes About Conscience,” AZ Quotes, www.azquotes.com/author/8805-C_S_Lewis/tag/conscience.
9. “Abraham Lincoln Quotes,” Goodreads, www.goodreads.com/quotes/24046-the-best-thing-about-the-future-is-that-it-comes.
10. “Charles Spurgeon Quotes,” AZ Quotes, www.azquotes.com/quote/1411293.
11. “Dietrich Bonhoeffer Quotes,” Goodreads, www.goodreads.com/quotes/328974-judging-others-makes-us-blind-whereas-love-is-illuminating-by.

## இயேசுவுடன் ஒரு உண்மையான உறவு இருக்கின்றதா?

தேவன் உங்களை நேசிக்கின்றார்! அவர் உங்களை விசஷேமாக தனித்தன்மை வாய்ந்தவராக சிருஷ்டித்திருக்கிறார். உங்கள் வாழ்க்கைக்கென்று ஒரு குறிப்பிட்ட நோக்கத்தையும் திட்டத்தையும் கொண்டிருக்கிறார். உங்கள் சிருஷ்டிகரோடு ஒரு தனிப்பட்ட உறவை கொண்டிருப்பதின் மூலம் உங்கள் ஆத்துமாவை உண்மையாக திருப்திப்படுத்தும் ஒரு வாழ்க்கை முறையை நீங்கள் கண்டு பிடிப்பீர்கள்.

நீங்கள் யாராக இருந்தாலும், என்ன செய்திருந்தாலும் இப்போது உங்கள் வாழ்க்கையிலே என்ன நிலையிலிருந்தாலும் தேவனுடைய அன்பும் கிருபையும் உங்கள் பாவத்தை விட தவறுகளை விட பெரியதாக இருக்கின்றது. இயேசு நீங்கள் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவும், அவரிலே ஒரு புதிய வாழ்வைக் கொண்டிருப்பதற்காகத்தான் மனமுவந்து தன் ஜீவனைக் கொடுத்தார். நீங்கள் அவரை உங்கள் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் அழைக்க வேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறார்.

இயேசுவிடம் உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கவும் அவரைப் பின்பற்றவும் ஆயத்தமாக இருப்பீர்களென்றால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவர் உங்கள் பாவங்களை மன்னிக்கும் படி கேளுங்கள். நீங்கள் வாழ வேண்டுமென்று விரும்பும் வாழ்க்கைக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுக்கும்படி கேளுங்கள். இந்த ஜெபத்தை ஜெபிப்பதின் மூலம் தொடங்குங்கள்...

"ஆண்டவராகிய இயேசுவே, உம்மோடு நான் ஒரு தனிப்பட்ட உறவைக் கொண்டிருப்பதற்காக உம்முடைய வாழ்க்கையை எனக்குக் கொடுத்ததற்க்காகவும், என் பாவங்களை மன்னித்ததற்காகவும் நன்றி செலுத்துகிறேன். நான் செய்த

தவறுகளுக்காக உண்மையாக வருந்துகிறேன். நான் சரியாக வாழும் படி நீர் எனக்கு உதவ வேண்டுமென்று அறிந்திருக்கிறேன். ரோமர் 10:9-ல் உம்முடைய வார்த்தை கூறுகிற படி நீர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன். நீர் என்னுடைய இரட்சரும் ஆண்டவருமாக இருக்கிறீர் என்று அறிக்கை செய்கிறேன். நான் இருக்கிற வண்ணமாகவே என்னை ஏற்றுக் கொண்டு நான் எப்படி இருக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ அப்படியாக நான் மாற நீர் என் இருதயத்தில் கிரியை செய்வீராக. உமக்காக வாழ விரும்புகிறேன். இயேசுவே உம்முடனான என்னுடைய புதிய வாழ்விலே இன்று எனக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுத்ததற்காக நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்

உம்மை நேசிக்கிறேன் இயேசுவே!

தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறாரென்று அறிந்து கொள்வது மிகவும் அற்புதமாக இருக்கிறது! நாம் அனுதினமும் அவருடன் ஜெபத்தின் மூலமாகவும் வேத வாசிப்பின் மூலமாகவும் நேரம் செலவிட்டு அழமான நெருக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கிறிஸ்துவுடனான உங்கள் புதிய வாழ்விலே உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம்.

தயவு செய்து அ என்ற இணைய தளத்திற்கு சென்று ஜாய்ஸின் புத்தகமாகிய ‘புதிய ஜீவியத்தின் மார்க்கம்’ என்ற எங்களது பரிசை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். எங்களிடம் வேறே உபகரணங்களும் இருக்கின்றன. தேவன் உங்களுக்கென்று கொண்டிருக்கும் அனைத்தையும் பெற்றுக் கொள்ள, முன்னேறி செல்ல அவை உங்களுக்கு உதவும்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் புதிய வாழ்க்கையின் புதிய தொடக்கத்திற்காக வாழ்த்துக்கள்! உங்கள் பதிலை எதிர்பார்க்கின்றோம்.

# இரட்சிப்பின் ஜெபம்

தேவன் உங்களை நேசிக்கிறார், உங்களுடன் ஒரு தனிப்பட்ட உறவைக் கொண்டிருக்க விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களென்றால், இப்பொழுதே அவ்வாறு செய்யலாம். உங்கள் இருதயத்தை அவருக்கு திறந்து இவ்வாறு ஜெபிக்கவும்.

“பிதாவே உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கின்றேன் என்பதை அறிந்திருக்கின்றேன். தயவு செய்து என்னை மன்னித்து விடும், என்னை சுத்திகரியும். உம்முடைய குமாரனாகிய இயேசுவை நம்ப உறுதியளிக்கின்றேன். அவர் எனக்காக மரித்தார் என்று விசுவாசிக்கிறேன். அவர் சிலுவையிலே மரித்த போது என்னுடைய பாவத்தை தம் மீது ஏற்றுக் கொண்டாரென்பதை விசுவாசிக்கிறேன். அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டாரென்பதை விசுவாசிக்கிறேன். இப்போதே இயேசுவிடம் சரணடைகிறேன்.

பிதாவே, உம்முடைய மன்னிப்பு, நித்திய ஜீவனாகிய ஈவுக்காக நன்றி செலுத்துகிறேன். உமக்காக வாழ எனக்கு உதவியருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.”

உங்கள் இருதயத்திலிருந்து ஜெபித்திருக்கிறீர்களென்பதால், தேவன் உங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார், சுத்திகரித்திருக்கின்றார், ஆவிக்குரிய மரணமாகிய கட்டிலிருந்து

உங்களை விடுவித்திருக்கின்றார். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேத வாக்கியங்களை வாசிக்க, தியானிக்க நேரம் ஒதுக்குங்கள். உங்களின் இந்த புதிய பயணத்தில் அவருடன்

நீங்கள் நடந்து செல்கையிலே அவர் உங்களுடன் பேசும் படி கேளுங்கள்.

- யோவான் 3:16
- 1 கொரி 15:3-4
- எபேசியர் 1:4
- எபேசியர் 2:8-9
- 1 யோவான் 1:9
- 1 யோவான் 4:14-15
- 1 யோவான் 5:1
- 1 யோவான் 5:12,13

கிறிஸ்துவுடனான உங்கள் உறவிலே நீங்கள் வளர, உங்களை ஊக்கப்படுத்த, ஒரு நல்ல வேதாகமத்தை விசுவாசிக்கும் ஆலயத்தைக் கண்டு பிடிக்க, அவர் உங்களுக்கு உதவும் படி ஜெபியுங்கள். தேவன் எப்போதுமே உங்களுடன் இருக்கின்றார். அவர் ஒவ்வொரு நாளாக உங்களை வழி நடத்தி, அவர் உங்களுக்கென்று வைத்திருக்கும் அபரிதமான வாழ்க்கையை வாழ்வது எப்படி என்பதைக் காட்டுவாராக!

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகின் முன்னிலை வேத போதனையாளர்களில் ஒருவர். அவர்களின் அன்றாட ஒளிபாப்பாகிய 'ஆனந்தம் அடைவீர் அன்றாட வாழ்வில்' என்ற நிகழ்ச்சி உலகெங்கிலும் நூற்றுக் கணக்கான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் மூலம் ஒளிபரப்பப்படுகின்றது.

ஜாய்ஸ் நூற்றுக்கும் மேலான ஆவிக்குரிய ஊக்கமளிக்கும் புத்தகங்களை எழுதியிருக்கிறார். 'வல்லமையான எண்ணங்கள்', 'மன உறுதியான பெண்', 'மேன்மையாகத் தோன்று, மேன்மையாக உணரு', 'உங்கள் நாளை சரியாகத் தொடங்குங்கள்', 'உங்கள் நாளை சரியாக நிறைவு செய்யுங்கள்', 'அங்கீகார அடிமைத்தனம்', 'தேவனிடம் எப்படி கேட்பது', 'சாம்பலுக்கு பதில் சிங்காரம்', 'சிந்தையின் ஓர் போர்க்களம்' போன்றவை சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களாகும்.

ஜாய்ஸ் உலகெங்கிலும் வருட முழுவதும் பல கருத்தரங்கங்களை நடத்துகிறார், ஆயிரக்கணக்கானவர்களிடம் பேசுகிறார்.

Joyce Meyer Ministries—India
Post Bag No. 1
Jubilee Hills, Hyderabad
India
www.jmmindia.org

**Go to tv.joycemeyer.org to watch Joyce's messages in a variety of different languages.**

**You can also request Prayer on Toll Free number: 1800 3454 007**

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகின் முன்னிலை வேத போதனையாளர்களில் ஒருவர். அவர்களின் அன்றாட ஒளிபாப்பாகிய ‘ஆனந்தம் அடைவீர் அன்றாட வாழ்வில்’ என்ற நிகழ்ச்சி உலகெங்கிலும் நூற்றுக் கணக்கான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் மூலம் ஒளிபரப்பப்படுகின்றது.

ஜாய்ஸ் நூற்றுக்கும் மேலான ஆவிக்குரிய ஊக்கமளிக்கும் புத்தகங்களை எழுதியிருக்கிறார். ‘வல்லமையான எண்ணங்கள்’, ‘மன உறுதியான பெண்’, ‘மேன்மையாகத் தோன்று, மேன்மையாக உணரு’, ‘உங்கள் நாளை சரியாகத் தொடங்குங்கள்’, ‘உங்கள் நாளை சரியாக நிறைவு செய்யுங்கள்’, ‘அங்கீகார அடிமைத்தனம்’, ‘தேவனிடம் எப்படி கேட்பது’, ‘சாம்பலுக்கு பதில் சிங்காரம்’, ‘சிந்தையின் ஓர் போர்க்களம்’ போன்றவை சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களாகும்.

ஜாய்ஸ் உலகெங்கிலும் வருட முழுவதும் பல கருத்தரங்கங்களை நடத்துகிறார், ஆயிரக்கணக்கானவர்களிடம் பேசுகிறார்.

"நாம் செய்யும் அனைத்திலும், தேவன் மீதான நம்பிக்கை என்னும் ஆரோக்கியமான பகுதியை நாம் கலக்கும் போது, அது நமக்கு கவலை, வருத்தம், பயம், பகுத்தறிதல் அல்லது நம்மை அழுத்தும் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு வாழும் வாழ்வை நமக்கு அளிக்கிறது.

"தனிப்பட்ட மனிதன் சுயத்தைச் சார்ந்தும், சுதந்திரமாகவும் வாழும் தன்மையைக் கொண்டிருப்பதால், தேவனை எப்படி நம்பியிருப்பது என்பதைக் கற்றுக் கொள்ள பொதுவாகவே கொஞ்சம் காலமாகிறது. நமது சில கடினமான அனுபவங்கள், மக்கள் எப்போதுமே நம்பத்தக்கவர்களல்ல என்பதைக் கற்றுக் கொடுத்ததின் விளைவாகவே நம்புவது நமக்குக் கடினமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய வழியோ மனிதர்களின் வழிகளுக்கும் மேலானது, அவரின் தன்மையோ, அவரால் பொய் சொல்லவோ, ஏமாற்றவோ இயலாது என்று அவரது வார்த்தை நமக்குப் போதிக்கிறது.

"இந்தப் புத்தகத்திலே எல்லைகளின்றி அவரை நம்பவும், பகுத்தறிவையும் கடந்த விசுவாசத்தையும் தேவன் பேரில் கொண்டிருக்க எப்படி உங்களால் முடியும் என்பதைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தேவன் பேரிலே முற்றிலுமான நம்பிக்கையே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். அதுதேவனைக்கனப்படுத்துகிறதுஎன்பதற்காக மட்டும் அல்ல, அதனால் நமக்கு ஏற்படும் பலங்கள் ஆச்சரி யத்துக்குள்ளாக்குகின்றதாக இருக்கின்றது."

**– ஜாய்ஸ் மேயர், முகவுரை**

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

Post Bag No. 1, Jubilee Hills,
Hyderabad - 500 033